



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வானம்
# இரு நிலவு

(நாவல்)

திருமலை இ.மதன்

அம்மா பதிப்பகம்

வெளியீடு – 27
அம்மா பதிப்பகம்
31/1, சமாது ஒழுங்கை, திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஈழத்து எழுத்தாளர்கள்,
இலக்கியவாதிகள், படைப்பாளிகள்,
பத்திரிகையாளர்கள் அனைவருக்கும்
இந்நூல் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஒரு வானம் இரு நிலவு |
| வகை | : | நாவல் |
| மொழி | : | தமிழ் |
| ஆசிரியர் | : | திருமலை இ.மதன் |
| விலாசம் | : | 19, 3ம் ஒழுங்கை, மத்திய வீதி, உவர்மலை, திருக்கோணமலை. |
| பதிப்புரிமை | : | திருமதி.அ.துஷ்சாந்தி |
| முதற்பதிப்பு | : | 03.06.2018 |
| பிரதிகள் | : | 500 |
| வெளியீடு | : | அம்மா பதிப்பகம் |
| முகப்போவியம் | : | திரு.அ.அருள்பாஸ்கரன் |
| உள்ளோவியம் | : | செல்வன்.வே.கஜேந்திரன் |
| அச்சுப்பதிப்பு | : | எஸ்.எஸ் டிஜிற்றல்'ஸ் |
| ISBN | : | 978-955-53160-1-9 |
| பக்கங்கள் | : | XXIX + 288 |
| விலை | : | ரூ 650.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

"ஒரு வானம் இரு நிலவு" என்கின்ற நாவலை இல.15, கஸ்கிசன் வீதி, திருகோணமலையைச் சேர்ந்த திருமலை இ. மதன் என்கின்ற இந்திரசூரிய பிரேமச் சந்திரன் அசோக் என்பவர் எழுதி வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவர் எழுதிய புத்தகங் களான "பாதை மாறிய பயணங்கள்" (2011), "கூ.... கூ.... காகம்" (2017) என்பவை மிகவும் பிரசித்தமானவை. மென்மேலும் பலவிதமான நாவல்களையும் சிறுகதை தொகுப்புக்களையும் எழுதி வெளியிட வேண்டும். பலரும் வாசித்து பயன் பெறவேண்டும். அவருடைய இச் சேவை களை பாராட்டி இந்நூல் வெளியிட்டு விழா சிறப்பாக அமைய எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆசிகிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ
சோ. இரவிச்சந்திரக்குருக்கள்
பிரதமகுரு, ஆதீனகர்த்தா
ஸ்ரீ பத்திரகாளி அம்மாள் தேவஸ்தானம்
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

திருமலை இ.மதன் அவர்களின் "ஒரு வானம் இரு நிலவு" என்ற நாவலை வாசிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. இது இவரது முதலாவது நாவலாக அம்மா பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ளது. ஏற்கனவே இவர் "பாதை மாறிய பயணங்கள்" என்ற தனது சிறுகதைத் தொகுப்பை 2011ம் ஆண்டிலே வெளியிட்டிருந்தார். அத்தொகுப்பிற்கு நான் ஒரு அணிந்துரை வழங்கியி ருந்தேன். பின்னர் 2017ம் ஆண்டிலே கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீ டாக "கூ...கூ... காகம்" என்ற இவரது சிறுகதைத் தொகுப் பொன்று வெளியாகியிருந்தது. இந்த வெளியீடுகள் இலக்கிய உலகிலே இவரை ஒரு படைப்பாளியாக இனங்காட்டியிருந்தன.

திருக்கோணமலை நகரத்தின் தென்மேற்காக அமைந்துள்ள தம்பலகாமம் என்ற அழகிய கிராமமே இவரது நாவலின் களமாக அமைந்துள்ளது. இந்த கிராமத்தின் இயற்கை அழகையும், தொழில் வளங்க ளையும், கோவில்கள், வேள்விகள், கூத்துக்கள் போன்ற பல்வேறு ஆன்மீக, பண்பாட்டுச் சிறப்புக்களையும் ஆசிரியர் இந்நாவலின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமம் கிராமத்திலிருந்து தனது உயர்தரக் கல்வியைப் பெறுவதற்கு திருக்கோணமலை நகருக்கு வருகின்ற நிலோஜனி என்ற மாணவிக்கு இளவயதின் கவர்ச்சியினால் ஏற்பட்ட காதலைப் பற்றியும், அக்காதல் எவ்வாறு பக்குவப்படுத்தப்பட்டது என்பதைப் பற்றியும் ஆசிரியர் தனது கதாபாத்திரங்கள், சம்பவங்கள் மூலமாக சொல்லிச் சொல்கின்றார்.

எமது அன்றாட வாழ்க்கையில் நாம் சாதாரணமாக சந்திக்கின்றவர்களைத்தான் இந்த நாவலின் கதாபாத்தி ரங்களாக தரிசிக்கின்றோம். நிலோஜனி, தயார் மரகதம், வேலைக்காரன் ராமு, சுந்தரேசன், அன்பரசி ஆகியோர் தான் இந்த நாவலின் முக்கிய கதாபாத்திரங்கள். இக்கதாபாத்திரங்களை சுற்றிக்கொண்டு இவர்கள் சிலரி டையே ஏற்பட்ட காதலை சம்பவங்கள் மூலமாகவும், உரையாடல்கள் மூலமாகவும் சித்தரிப்பதாகவே இந் நாவல் புனையப்பட்டுள்ளது.

எனினும் தம்பலகாமம் கிராமத்தினுடைய பண்பா டுகள், வழக்காறுகள், ஆன்மீக ஒழுங்குகள் என்பன இந்நாவலில் ஆங்காங்கே காத்திரமாகச் சொல்லப்பட் டுள்ளதைக் காணமுடிகின்றது. ஒரு கிராமத்தின் வரலாறு, பண்பாட்டுச் சிறப்புக்களைப் பற்றி அந்தந்த தலைப்புக் களிலே எழுதி நேரடியாக வாசகர்களுக்குச் சொல்ல முனைந்தால், அது பெரும்பாலான இன்றைய இளை ஞர்களுக்கு கவர்ச்சியாக இருப்பதில்லை. ஆகவே தான் நாவலூடாக அத்தகைய செய்திகளை சொல்லுகின்ற உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளார் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாவலிலே பிரதானமாக நான்கு பேருடைய காதல் விவகாரம் பேசப்பட்டுள்ளது. நிலோஜனி நிரோஷன் மீது கொண்ட காதல், சுந்தரேசன் நிலோஜனி மீது வைத்த காதல், அன்பரசி சுந்தரேசன் மீது கொண்ட காதல் என மூன்று காதல் விவகாரங்கள் மென்மையாகவும், கண்ணியமாகவும் சொல்லப்பட்டுள்ளது. விரசம் எதுவும் இல்லாமல் கவனமாகவும், அளவாகவும் வார்த்தைகளை ஆசிரியர் கையாண்டிருக்கின்றார்.

இளமையின் ஈர்ப்பு காரணமாக ஏற்பட்ட ஒரு காதலிலிருந்து விலகவேண்டிய சூழ்நிலையை நிலோ ஜனி புரிந்துகொள்கின்றாள். பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் தன்னை வளர்த்து ஆளாக்கிய தாயின் விருப்பத்தையும் பிரிந்திருக்கும் தங்கள் குடும்பங்கள் ஒன்றாவதற்கும் ஏற்றவிதமாக தான் நடந்து கொள்ள வேண்டியதன் தேவையை பல தடவைகள் யோசித்து கதையின் நாயகி ஒரு முடிவுக்கு வந்தது என்பது பொறுப்புக்களை உணர்ந்துகொண்டு நடக்கவேண்டு மென்ற படிப்பினையை இளவயதினருக்கு ஊட்டுவதாக அமைந்துள்ளது. நிறைவேறாத காதலினால் விபரீதமான வழிகளில் சென்று வாழ்க்கையை பாழாக்கிக்கொள்ள வேண்டியதில்லை என்பதையும், அமையக் கூடிய வாழ்க் கையை சிறப்பாக ஆக்கிக்கொள்ள முயல்வதே நல்லது என்பதையும் ஆசிரியர் தனது பாத்திரங்களூடாக வெளிப் படுத்தியுள்ளார்.

சமூகம் பின்பற்ற வேண்டிய நல்ல விடயங்களைப் பற்றி இலக்கியங்கள் பேசவேண்டும். அந்த வகையில் இந்த நாவலிலே இளவயதினர் மனதைத் தொடக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல அறிவுரைகள் கதாபாத்திரங்கள் மூலமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

எழுத்தாளர்களிடம் இயல்பாகவே காணப்படுகின்ற சமூகம் பற்றிய ஆழ்ந்த பார்வை காரணமாக சமூகத்தில் ஆங்காங்கே காணப்படுகின்ற நலிவுகளையும், அவலங்களையும், குறைபாடுகளையும் தமது படைப்புக்கள் மூலம் எடுத்துக்காட்டுகின்றனர். அவ்வகையில் இந்நாவலாசிரியர் கதையின் ஓட்டத்தோடு இடைக்கிடை சமூகப் பிரச்சனைகளைப் பற்றியும் சொல்லிச் செல்கின்றார்.

கடற்கரையில் கச்சான் விற்றுத்திரிகின்ற ஒரு சிறு பையனைப் பார்த்து, படிக்க வேண்டிய வயதில் பெற்றோர் ஏன் இவனைப் படிக்கவைக்கவில்லை, உண்மையில் பணம் இல்லையா, அல்லது பெற்றோரின் கவனக்குறைவா என்று கடற்கரைக்கு பொழுதுபோக்கச் சென்ற பவித்ரா யோசிக்கின்றாள். ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வியைப் பெறுவதற்கு உண்மையில் இன்று பணம் ஒரு தடையான காரணியாக இல்லை. எத்தனையோ வறுமைப்பட்ட குடும்பங்களும் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றார்கள். ஆனால் கல்வியின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளாத சில பெற்றோர்கள் பள்ளிக்கு செல்ல வேண்டிய பிள்ளைகளை வீதி வியாபாரத்திற்கு அனுப்புகின்ற அறியாமையை ஆசிரியர் சுட்டிக் காட்டிடுகின்றார்.

ஒரு சிறந்த சமூகத்தை கட்டி வளர்ப்பதில் பாடசாலைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாய பங்கை புறக்கணித்துவிட முடியாது. பாடசாலைகள் சமூகத்தை வழிநடத்தும் பொறுப்புள்ள நிறுவனங்களாக அமைகின்றன. நாளைய குடிமக்களாக ஆகப்போகின்ற மாணவ சமூகத்தை நேரிய வழியில் நடத்திச்செல்ல, அர்ப்பணிப்புடனும், விசுவாசத்துடனும், பணியாற்றக்கூடிய அதிபர்களும், ஆசிரியர்களுமே இன்றைய அவசிய தேவைக்குரியவர்களாக இருக்கின்றனர்.

ஆயினும் சமூக உருவாக்கத்திற்கான பாடசாலைகளின் பங்களிப்பு என்பது பல வேளைகளிலும் சரியாகப் புரிந்து கொள்ளப்படுவதில்லை. கற்பித்தல், பாடத்திட்டம், பரீட்சை, பெறுபேறுகள் என்பன மாத்திரமே பாடசாலைகளின் செயற்பாடுகளாகிவிட முடியாது. மாணவர்களை சமூகப் பொறுப்புள்ளவர்களாக ஆக்குவதற்கான மேலதிக வேலைத்திட்டங்களை பாடசாலைகள் கொண்டிருக்க வேண்டும். மாணவர்கள் மீது உண்மையான அக்கறை செலுத்தும் ஆசிரியர்களே உண்மையான ஆசான்களாக முடியும்.

ஆசிரியர்களின் பொறுப்பு பற்றி இந்நாவலாசிரியர் கவனம் கொண்டிருக்கின்றார். மீரா என்ற ஆசிரியரை உலாவ விட்டு தனது கருத்துக்களை பின்வருமாறு பதிவு செய்திருக்கின்றார். "முதல் நிலையிலிருந்து கடைநிலை வரையுள்ள மாணவர்கள்மேல் அக்கறை கொள்ளும் ஓர் அரிய ஆசிரியரான மீரா டீச்சர் தான் கற்பிக்கும் வகுப்பில் மட்டுமல்லாது அனைத்து மாணவிகள் மீதும் உண்மையான அக்கறை செலுத்துபவர். அவர்களுக்கு வெறுமனே பாடப்புத்தகத்தில் இருக்கும் பாடங்களை மட்டும் கற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்காது, தன்னம்பிக்கையையும், விடாமுயற்சியையும், மனிதப் பண்புகளையும், பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் கற்றுக்கொடுப்பவர். கல்வி என்பது வெறுமனே புத்தகத்தை ஒப்புவிப் பதல்ல. அது மாணவர்களை வளப்படுத்துவது, உடல் உள ரீதியாக மாணவர்களை எதிர்கால வாழ்க்கைக்கு தயார்படுத்துவது, வாழக்கற்றுக் கொடுப்பது".

தம்பலகாமம் திருக்கோணமலை மாவட்டத்தில் வரலாற்று பண்பாட்டுச் சிறப்புக்களுடன் திகழும் ஒரு புராதன கிராமமாகும். திருக்கோணேஸ்வரர் ஆலய வரலாற்றுடன் தொடர்புபட்டதாகவே இக்கிராமத்தின் சாதி, சமூக ஒழுங்குகள் அமைந்துள்ளன. திருக்கோணேஸ்வரத்தை புனருத்தாரணம் செய்து திருப்பணிகளை மேற்கொண்ட குளக்கோட்டு மன்னன் நாளாந்த ஆலயப் பணிகளை செவ்வையாக நிறைவேற்றுவதற்காக தமிழகத்திலிருந்து தொழும்பாளர்களை அழைத்து வந்து தம்பலகாமம், கட்டுக்குளம், கொட்டியாபுரம் ஆகிய இடங்களில் குடியமர்த்தியதுடன், அவர்கள் செய்ய வேண்டிய தொழும்புகள் பற்றியும் நேர்த்தியான ஒழுங்குகளைச் செய்திருந்தான் எனவும், இத்தொழும்பாளர்களுக்கு நெல்வயல்கள் மானியமாக அளிக்கப்பட்டிருந்தன என்பதையும் 'கோணேசர் கல்வெட்டு' என்ற நூலின் ஆதாரத்தைக் கொண்டு ஆசிரியர் விபரித்துள்ளார். காலம் காலமாக பின்பற்றப்பட்டு வந்த இந்த தொழும்பாளர் முறைமையின் அடிப்படையில்தான் இன்றைய தம்பலகாமத்தின் சாதி, சமூக ஒழுங்கமைப்பு ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி அமைப்பின் காரணமாக மனித உறவுகளுக் கிடையே ஏற்படும் சங்கடங்கள் இந்த நாவலிலே மென்மையாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அத்தோடு சுற்றிவளைப்புக்கள், கைதாகி காணாமல் போதல், உறவுகளை இழந்து அநாதரவாகுதல் போன்ற தமிழ் மக்கள் அனுபவித்த துயரங்களும் இந்நாவலில் சம்பவங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

காதலை மையமாகக் கொண்ட இந்த நாவலை எழுத முனைந்த ஆசிரியருக்கு தம்பலகாமம் என்ற கிராமத்தின் பண்பாடுகளையும், புராதனச் சிறப்புக்க ளையும் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு நோக்கம் இருந்திருக்கின்றது என்பது புலனாகின்றது. அதனால் தான் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வரலாற்றையும், தம்பலகாமத்தின் பண்பாட்டுச் சிறப்புக்க ளையும் ஆதாரங்களுடன் கதையின் ஓட்டத்தோடு ஆங்காங்கே பதிவு செய்து கொண்டு போயுள்ளார்.

இந்த நாவலின் இறுதிக்கட்ட சம்பவங்களின் களமாக அமைவது நாயன்மார்திடல் மடைவேள்வி. தம்பலகாம மரபிலே அவதானிக்கக்கூடிய மடைவேள்வி கள் பற்றியும், இவ்வேள்விகளின் நோக்கங்கள், நடைமுறைகள் பற்றியும், இவ்வேள்விகளை நடாத்தி வைப்பதிலே சம்பந்தப்படும் கட்டாடியார், வைராவியார், தானத்தார், அடப்பன்மார்கள், மறிகாரர்கள், கங்காணம் ஆகியோர் பற்றியும் ஆசிரியர் விரிவாகக் குறிப்பிடுகின் றார். இந்த வேள்வியுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் நாட்டார் கதைகளையும் குறிப்பிட்டுக்காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் சடங்குகள், சம்பிரதாயங்களை அர்த்தமற்றவை என்று ஒதுக்கி விட முடியாது. அவற்றிற்குப் பின்னால் சில உண்மைகள் மறைந்திருக்கும். இந்த சடங்குகளும் சம்பிரதாயங்களும் சில சமூக நோக்கங்களையும், ஆன்மிக நோக்கங்களையும் கொண்டிருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மழையை வரவழைப்பதற்காகவும், நிறுத்துவதற்காகவும், வேளாண்மை பாதிப்படையாமல் இருப்பதற்காகவும் மடை வைத்து தமது குலதெய்வங்களை ஆராதிக்கும் ஒழுங்கு தம்பலகாமம் முதலான பல கிராமங்களில் இன்றும் காணப்படுகின்றது.

கள்ளிமேடு ஆலடி வேள்வி வளாகத்திலே அந்தக் காலத்திலே திரளான மக்கள் மத்தியில் நடைபெற்ற கூத்துக்கள் பற்றியும், தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரரின் திருச்சூரகத்திருவேட்டை பற்றியும், இன்றும் மரபுவழியாகக் கையாளப்படும் மக்களின் நம்பிக்கைக்குரிய சடங்குகள் பற்றியும் ஆசிரியர் இந்நாவலிலே ஆங்காங்கு குறிப்பிட்டு வந்துள்ளார்.

இந்நாவலை எழுதும்பொழுது ஆசிரியர் இரண்டு நோக்கங்களை கொண்டிருந்திருக்கின்றார் என்று தோன்றுகின்றது. முதலாவது ஒரு காதல் கதையை சுவையாகவும், படிப்பினைகளோடும் சொல்வது. இரண்டாவது தம்பலகாமம் பிரதேசத்தின் பண்பாட்டுச் சிறப்புக்களையும், புராதனப் பெருமைகளையும் வாசகர்களுக்கு அறியத்தருவது. இந்த இரண்டு நோக்கங்களையும் ஆசிரியர் எட்டியுள்ளார் என்றே கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை இ.மதன் அவர்கள் வளர்ந்து வளரும் ஒரு இளம் எழுத்தாளர். ஒரு இலக்கியக்காரனின் எழுத்துக்கள் சமூகத்திற்குப் பயன்பட வேண்டும். அந்த வகையில் திருமலை இ.மதன் அவர்கள் தொர்ந்தும் எழுத வேண்டும். நல்ல இலக்கியங்களைப் படைத்திட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.சி. தண்டாயுதபாணி
முன்னாள் கல்வி அமைச்சர்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

யதார்த்த மண்வாசனை நாவல்.

தமிழில் காவியத்தின் இடத்தை உரைநடையில் நிரப்பவந்த ஆங்கில இலக்கிய வடிவமே நாவல் இலக்கியம் எனலாம்.

நாவல் இலக்கியம் தோற்றம் பெற்றது ஆங்கில மொழியில் அல்ல. ஜப்பான் மொழியில். ஜப்பான் நாட்டு விதவைத் தாய் ஒருத்திதான் நாவல் இலக்கிய வடிவத் துக்குச் சொந்தக்காரி.

கீழைத்தேசத்து எல்லாப் பெருமைகளையும் தமதாக்கிக் கொண்ட பிரித்தானிய ஆங்கிலேயர் நாவல் இலக்கிய வடிவத்தையும் தமதாகப் பறைசாற்றிக் கொண்டார்கள்.

தமிழுக்கு நாவல் இலக்கிய வடிவம் ஆங்கில மூலமே வந்து சேர்ந்தது. அதனால் ஆங்கிலமொழியே நாவல் இலக்கியத்தைத் தோற்றுவித்ததாக நாம் நம்பிக் கொண்டிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் முதல்ச் சரித்திர நாவல் மோகனாங்கி என்பது ஆய்வாளர்களின் ஏகோபித்த முடிவாகிவிட்டது. நாயக்கர் காலச் சம்பவங்களைக் கொண்டு இந்நாவல் எழுதப்பட்டது.

"மோகனாங்கி" என்ற தமிழின் முதல்ச் சரித்திர நாவலை எழுதியவர் திருக்கோணமலையைச் சேர்ந்த திரு.தி.த.சரவணமுத்துப்பிள்ளை என்பது திருகோண மலைக்குப் பெருமை சேர்க்கும் செய்தியாகும்.

இலங்கையில் முதன் முதல் மெல்லிசைப் பாடல் இசைத்தட்டை வெளியிட்டவர்கள் திருக்கோணமலையைச் சேர்ந்த பரமேஸ், கோணேஸ் ஆகியோரே. இப்படிப்பல பெருமைகளை சொல்லிக் கொண்டே போகலாம்.

வ.அ.இராசரத்தினம், பாலேஸ்வரி, அருள் சுப்பிர மணியம், கேணிப்பித்தன் ச.அருளானந்தம் என திருக் கோணமலையின் நாவல் இலக்கிய கர்த்தாக்களை நீண்ட பட்டியலாகத் தரமுடியும்.

கல்கியின் சரித்திர நாவல்களை வாசித்து இரசித்து கிட்டத்தட்ட அதேபாணியில் நாவல் இலக்கியம் படைக்க முன்வந்துள்ளார் திரு. இ.அசோக்.

திருமலை இ.மதன் என்ற புனை பெயரில் "பாதை மாறிய பயணங்கள்", "கூ.... கூ.... காகம்" ஆகிய தலைப்புக்களில் இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்ட இவர், இந்த நூல் மூலம் நாவலாசிரியராக அறிமுகமாகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு வானம் இரு நிலவு" என்ற இவரது இந்த நாவல் சம்பவங்களினூடாகவும், பிரதேசப் பேச்சு வழக்கினூடாகவும் ஒரு மண் வாசனை நாவலாக மலர்ந்துள்ளது.

அ.பாலமனோகரின் நிலக்கிளி, முல்லைத்தீவு மாவட்டத்தைக் கண்முன்னே காட்டியது. செங்கை ஆழியானின் "காட்டாறு" வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிக்குளப் பகுதியைக் காட்டியது. ஸ்ரீ ஜோன் ராஜ் இன் "போடியார் மாப்பிள்ளை" மட்டக்களப்பு மாவட்டத்தைக் காட்டியது. வ.அ.இராசரத்தினத்தின் "கிரௌஞ்சப் பறவைகள்" சரித்திரத்துக்கு முற்பட்ட அனுராதபுர மாவட்டத்தைக் காட்டியது.

அதேபோல இவரின் இந்த நாவல் திருக் கோணமலை, தம்பலகாமம் ஆகிய பகுதிகளைக் காட்டி நிற்கின்றது.

திருக்கோணமலையை சிறுகதை, நாவல்கள் மூலம் திருக்கோணமலை எழுத்தாளர்கள் பலர் அற்புதமாகக் காட்டியுள்ளனர். அவர்களில் தலையாயவர் வ.அ.இராசரத்தினம் அவர்களே என்பது எனது அபிப்பிராயம்.

திருமலை இ.மதன் அவர்கள் இந்நாவலில் பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களின் மூலம் திருக்கோணமலையின் மண் வாசனையைக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாரன்" "வரல" "தன்ட" "முன்ன" "வந்திருக்கன்" "சேத்திட்டாளுகள்" கேட்குறார்" "தந்தீங்கன்னா" முதலான பல சொற்களை உரையாடல்களில் பயன்படுத்துகிறார்.

பேச்சுமொழி மட்டும் மண்வாசனையைக் காட்டப் போதுமானதல்ல. பிரதேசத்துக்கே உரிய தனித்துவமான பழக்க வழக்கங்கள் பண்பாட்டுக் கூறுகள் மூலமே தான் உண்மையான மண் வாசனையைக் காட்ட முடியும்.

குறிப்பாக சரித்திர நாவல்களில், நியமத் தமிழில் உரையாடலை எழுதி சம்பவங்கள் மூலம் மட்டுமே மண்வாசனையை எழுத முடியும்.

இந் நாவலாசிரியர் இந்த நாவலைப் படைத்தது ஒரு கதையைச் சொல்வதற்காக அல்ல. சாதிக் கொடுமையை, சமூக ஏற்றத்தாழ்வை, தொழிலாளர் துன்பத்தை, இந்த நாவலில் கருத்தாகச் சொல்கிறாரே தவிர சம்பவங்களாக ஆக்கவில்லை.

பாத்திரங்கள் இவைபற்றிப் பேசுகின்றன. ஆசிரியர் தன் கூற்றாகச் சிலவற்றைச் சொல்கிறார். டாக்டர்.மு.வரதராசன் போல அதற்கெனத் தனிப்பாத்திரத்தைப் படைக்கவில்லை.

இந்த நாவல் ஆசிரியரின் நோக்கம், தம்பலகாமம் பற்றியும், அங்குள்ள ஆதிகோணேஸ்வரர் ஆலயத் திருவிழாவோடு கூடிய சடங்குகள், சம்பிரதாயங்களைப் பற்றியும் சொல்வதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன் நாவலாசிரியர் கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலில் அதிக ஈடுபாடு கொண்டுள்ளார் என்பதை இவர் கதை நகர்த்தல் காட்டுகிறது.

இடங்களையும் சம்பவங்களையும் விபரிப்பதிலும், இயற்கையைத் தானும் இரசித்து, வாசகர்களையும் இரசிக்கச் செய்வதிலும் இவர் தனது முழுத் திறமையைக் காட்டியிருக்கிறார் என்றே சொல்லலாம்.

உதாரணமாக அத்தியாயம்11 இல் ஒரு காட்சியை வர்ணிப்பதைப் பார்ப்போம்.

"இடையிடையே தென்னஞ் சோலைகளும், வயல் வெளிகளும் நிறைந்த "தமிழ்ப் பட்டணம்" என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட அழகிய "தம்பை நகர்" என்னும் தம்பலகாமத்தை விட்டுச் செல்ல மனமின்றி தனது பிரகாசமான ஒளியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு, மேற்கு வானை நோக்கி சிவந்த மேனியோடு தென்னை மரங்களிடையே ஒளிந்து கொண்டு செல்கிறான் கதிரவன்.

மேற்கு வானம் நாணத்தால் சிவந்து போனது. செஞ்சந்தணத்தைக் குழைத்துப் பூசியது போன்று மிக அழகாகக் காட்சியளித்தது வானம்"

இத்தகைய இயற்கை வர்ணனைகளைப் பல இடங்களில் பார்க்க முடிகிறது. கவிதை நடையில் வர்ணனைகள் அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரச் சான்றுகளுக்கு பண்டிதர் இ.வடிவேல் அவர்களையும், ஸ்ரீ தட்சண கைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு என்பவற்றையும் துணைக்கு அழைத்துக் கொள்கிறார். இரண்டு மூன்று அத்தியா யங்களை தம்பலகாமம் கோவிலுக்கே ஒதுக்கிவிடுகிறார்.

தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய இராஜ ராஜன் அந்தக் கோவிலுக்கு நிலங்களையும், சொத்துக் களையும் சொந்தமாக்கி அவற்றினை யார் யார் பராமரிக்க வேண்டும் என்னென்னவற்றை கோவிலுக்குக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகளை எழுதியது போல தம்பலகாமம் ஆதி கோணைநாதர் கோவில் நிபந்தனைகளையும் விரிவாகத் தருகிறார்.

மரகதம், நிலோஜனி, சுந்தரேசன் முதலான முக்கிய பாத்திரங்களோடு சில துணைப் பாத்திரங் களையும் இணைக்கிறார். குறிப்பாக பவித்திரா.

திருக்கோணமலைக் காளிகோவில் வாசலில் கதையை ஆரம்பிக்கும் போது அக்கோவிலின் அமைப்பு, அமைவிடம், வழிபாடு என்பவற்றை துல்லியமாகச் சொல்கிறார்.

அதேபோல தம்பலகாமம் ஆதி கோணைநாதர் கோவில் பற்றியும் சிறப்பாக விளக்குகிறார். இயற்கையை அழகான தமிழில் அற்புதமாக வர்ணிக்கின்றார்.

ஒரு அத்தியாயம் முழுவதும் திருக்குறளை வைத்தே கதை சொல்கிறார். ஒரு சரித்திர நாவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே இவரது இந்த நாவல் செல்கிறது என்று சொல்லலாம்.

நாவலாசிரியரின் சமூக சீர்திருத்தச் சிந்தனைகள் அவரின் கூற்றாகவும், பாத்திரங்களின் கூற்றுக்களாகவும் பல இடங்களில் வெளிப்படுகின்றன.

அத்தியாயம் 26இல் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "ஒவ்வொரு மனிதனையும் ஒரு பண்பாட்டிற்குரிய குழுவாக ஒன்று சேர்ப்பதில் சடங்கு களே மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. சடங்குகள் சம்பிரதாயங்கள் மூலமாகவே ஒவ்வொரு குழுவும் தங்களது தனித்துவத்தையும், அடையாளத்தையும், வெளிப்படுத்த முயல்கின்றன. இது ஆதிகாலம் தொட்டு இன்றுவரை நிகழ்ந்து வரும் ஒரு வாழ்க்கை முறை யாகும்.

அன்று குளக்கோட்டு மன்னனால் பணிக்கப்பட்ட சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் நாம் இன்றும் கடைப்பிடித்து வருகின்றோம். அதனாலேயே எமது சமுதாயம், தனித்துவமான ஒரு அடையாளத்தைக் கொண்டு திகழ்கிறது. இது குளக்கோட்டன் சமூக நம்பிக்கையாகும்."

இந்த நாவலின் நோக்கமும் இதுவே என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ளலாம். எங்களது மண் ணையும் மக்களையும் பெருமளவுக்கு இழந்து நின்று தவிக்கும் எங்களுக்கு எங்களது பூர்வீகம் பற்றியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் வாழ்ந்த முறை பற்றியும் அறிந்து கொள்ளும் போது ஒருவித பெருமிதமும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன.

கதை மூலமாக எமது பெருமைகளைச் சொன்னால் தான் இலகுவில் புரிந்து கொள்வார்கள். அதனாலே தான் திருமலை இ. மதன் அவர்கள் நாவல் என்ற வடிவத்தைக் கையாண்டு சொல்லியிருக்கிறார்.

நல்லபொருத்தமான எழுத்து நடை. குழப்பம் இல்லாமல் சீராகச் செல்லும் கதை. நல்ல வகையில் வடிக்கப்பட்ட பாத்திரங்கள். சமூகத்துக்கான புத்தி சொல்லல்கள். என நல்ல ஒரு மண் வாசனை யதார்த்த நாவலைப் படைத்த திருமலை. இ. மதன் அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள். பாராட்டுக்கள்.

இன்னும் பயிற்சி பெற்று இன்னும் சிறந்த நாவலைப் படைக்க முயல்க. நன்றி

அகளங்கன்.
*09.04.2018*
தமிழ் அதர்
90, திருநாவற் குளம்
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அம்மா பதிப்பகத்தின் 27வது வெளியீடாக திருமலை இ.மதன் அவர்களின் "ஒரு வானம் இரு நிலவு" நாவலை உங்கள் வாசிப்புக்குத் தருவதை இட்டு மகிழ்கிறோம்.

"பாதை மாறிய பயணங்கள்" என்ற இந்நூலா சிரியரின் சிறுகதைத் தொகுப்பினை எமது பதிப்பகத்தின் 12வது வெளியீடாக வெளியிட்டிருந்தோம்.

எமது பதிப்பகத்தின் ஊடாக வெளிவந்த "மானுடம்" சிற்றிதழில் சிறுகதைகள் எழுதி எம்மோடு பரீட்சையமான நூலாசிரியர் மிகவும் துல்லியமான சமூக கண்ணோட்டம் கொண்டுள்ள சிந்தனையாளர்.

சமூக சிக்கல்களை தனது பார்வையில் விமர் சிக்கும் ஆற்றலும், அமைதியாக இருந்து ஆழமான கருத்துக்களை முன்வைக்கும் திறமையும் உடையவர்.

இந் நாவல் சமூக அவலங்களோடு திருக்கோண மலை வரலாற்றுக்களையும் மீட்டிப் பார்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையை நகர்த்திச் செல்லும் இவரது பாத்திர வார்ப்பு எம்மை திகைக்க வைக்கின்றது.

நாவல் இலக்கியம் அருகி விட்ட இக்காலத்தில் திருக்கோணமலையில் இருந்து இந் நாவல் வெளிவருவதையிட்டு பெருமைப்படுகின்றோம்.

வாசக நெஞ்சங்களே நூலாசிரியரின் கதையினூடு பிரவேசித்து உங்கள் அபிப்பிராயங்களை ஆசிரியரோடு பங்கிட்டு கொள்ளுங்கள். வாசக நெஞ்சங்களுக்கும் பிரசுரம் தந்த எஸ்.எஸ் டிஜிற்றல்'ஸ் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

விரைந்து 28வது வெளியீட்டினில் சந்திப்போம்.

அன்புடன்
கலாபூஷணம்
திருமலை சுந்தர்.
(அம்மா பதிப்பகம்)

31/1, சமாது ஒழுங்கை,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது."

**- சுவாமி விபுலானந்தர் -**

என் இனிய வாசகர்களே.... ஒரு சில ஆண்டுகளின் பின்னர் மீண்டும் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடை கிறேன். காலம் யாருக்காகவும், எதற்காகவும் காத்து நிற்காது. அப்படித்தான் இந்த ஒரு சில ஆண்டுகளும் கடந்துவிட்டன. என்னில், உங்களில், எம்மண்ணில் எத்தனை எத்தனை மாற்றங்கள்.

"பாதை மாறிய பயணங்கள்", "கூ... கூ... காகம்" ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களின் பின்னர், "ஒரு வானம் இரு நிலவு" என்ற இந் நாவல் மூலமாக உங்களை சந்திக்கின்றேன்.

இது ஒரு சமூக நாவல் மட்டுமல்ல எமது இனத்தின் இருப்பை தக்கவைப்பதற்கான ஒரு முன்னேற்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மண்ணின் வரலாற்றை அறிந்திருக்க வேண்டியது எமது ஒவ்வொருவரினதும் கடமை. எண்ணிப் பாருங்கள் இன்று எம்மில் எத்தனை பேருக்கு எமது மண்ணின் வரலாறும், கலாச்சாரமும், பண்பாடும் தெரிந்திருக்கிறது.

ஒரு இனத்தின் இருப்பை உறுதிப்படுத்துவது அதன் வரலாறும், வரலாற்றுச் சான்றுகளும் தான். இன்று எம் மண்ணில் எமது வரலாற்றுச் சான்றுகள் திட்டமிட்டு அழிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்னும் ஒரு சில ஆண்டுகளின் பின்னர் எமது எதிர்காலச் சந்ததியினர் எமது பூர்வீகத்தை அறியாதவர்களாகவே தோற்றம் பெறுவார்கள். இந்நிலை நீடிக்குமானால் எமது இனத்தின் இருப்பு கேள்விக்குறியாகவே காணப்படும். இனியும் நாம் விழிப்படையாதிருப்பது மடமை. அது எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் செய்யும் துரோக மாகவே அமையும்.

எனவே இளைஞர்களே விழித்தெழுங்கள்.

நாகரிகம் என்பது உணவு, உடை, பழக்கவழக்கம் மட்டும் சார்ந்ததல்ல. நாகரிகம் என்பது மனிதம் சார்ந்தது. பசித்தவனுக்கு உணவளிப்பதும், ஆடையற்றவனுக்கு உடை கொடுப்பதும், நோயுற்றவனுக்கு சேவை செய்வ தும், இல்லாதவனுக்கு கொடுப்பதும், மற்றவனை வாழ வைப்பதுமே நாகரீகம். எமது தமிழ் இனம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நாகரீகத்தின் உச்சநிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தியிருந்தது. உலக நாடுகளுக்கு நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்தவர்கள் நாங்கள் ஆனால் இன்று .....

எனவே இளைஞர்களே விழித்தெழுங்கள்.

இலக்கியம் என்பதே அவ் இனத்தின் வரலாறு தான் என்னால் இலக்கியம் படைக்க முடியாவிட்டாலும் ஒரு சிறுதுளியையாவது அக்கடலோடு கலக்க முயற்சிக் கிறேன். எனது முயற்சிக்கு உங்கள் ஒத்துழைப்பையும் நல்கி நிற்கிறேன்.

மேலும்...

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

- **திருவள்ளுவர்** -

இந்நூலிற்கு ஆசியுரை வழங்கிய வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் ஐயா அவர்க ளுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கத்தையும், நன்றியை யும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈழத்தில் மட்டுமல்ல உலகத்தில் தமிழ்பேசும் மக்கள் வாழும் அனைத்து இடங்களிலும் பேர் சொன்னாலே அறிந்துகொள்ளக் கூடிய அளவு பிரசித்திபெற்ற இலக்கி யவாதி அகளங்கன் ஐயா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நேரடியாக அறிமுகமாகா விட்டாலும், தொலைபேசி மூலமாக தொடர்புகொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது எந்தவித மறுப்பும் தெரிவிக்காது புத்தகத்துக்கு முன்னுரை எழுத இசைந்ததோடு தனது பொன்னான நேரத்தைச் செலவழித்து ஒரு சில நாட்களுக்குள் முன்னுரையும் எழுதித் தந்த அவருக்கு நான் என்றும் நன்றிக்கடன்பட்டவனாவேன்.

என்றென்றும் என் பெருமதிப்பிற்குரிய கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் திரு.சி.தண்டாயுத பாணி ஐயா அவர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றிகள். இப் புத்தகத்தை முழுமையாக வாசித்து அதில் சில ஆக்கபூர்வமான திருத்தங்களையும் முன்வைத்த தோடு எனது எழுத்தின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு எதையும் சாராது அணிந்துரை ஒன்றை எழுதித் தந்ததற்கு நன்றிகள்.

தரமான புத்தகங்களைத் தெரிவு செய்வதோடு மட்டுமல்லாது திருமலை எழுத்தாளர்களின் புத்தகங்கள் வெளிவரவேண்டும் என்ற பேரவாக் கொண்ட எழுத்தாளர் கலாபூஷணம் திருமலை சுந்தர் அவர்கள் இம்முறையும் எனது புத்தகத்தை வெளியிடுவதற்கு ஒப்புக்கொண்ட தோடு, அதற்கு வெளியீட்டுரையும் எழுதித்தந்ததற்காக அவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

மீண்டும் ஒரு முறை எனது புத்தகத்திற்கு மிக அழகானதும், பொருத்தமானதும், எனது எண்ணத்தை பிரதிபலிக்கும் வகையிலானதுமான ஒரு அட்டைப் படத்தை வரைந்து தந்த ஆசிரியர் திரு. அ.அருள்பாஸ் கரன் ஐயா அவர்களுக்கும் எமது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சகோதரனைப் போல் என்னோடு கூட நின்று, வியாபார நோக்கம் எதுவுமின்றி எனது எழுத்து புத்தகமாக வடிவம் பெறுவதற்கான அனைத்து வேலைக ளையும் தானே முன்நின்று செய்து தந்த எஸ்.எஸ் டிஜிற்ற ல்'ஸ் உரிமையாளர் இளையவன் திரு.ச. லக்ஸ் மன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இதைவிட குறிப்பாக ஒருவரை நான் மறந்து விடலாகாது. அவர் தான் செல்வன் கஜன். நீங்கள் நாவலின் ஒவ்வொரு அத்தியாத்தையும் புரட்டும் முன் அவ் அத்தியாயத்தைப் பற்றிய ஒரு எண்ணக்கருவை உங்கள் மனக் கண்முன் ஏற்படுத்தும் அந்தப் படங்க ளுக்கு சொந்தக்காரர். அந்தச் சின்னஞ் சிறியவனுக்கும் எனது நன்றிகள்.

நன்றி எனும் வார்த்தை மட்டும் இவர்கள் செய்த உதவிக்கான பதிலாகாது. எனினும் இருக்கும் வார்த்தை அது ஒன்றே என்பதால் அதை ஓராயிரம் தடவை உச்சரிக்கிறேன்.


நன்றி... நன்றி... நன்றி...

திருமலை இ.மதன்
19, 3ம் ஒழுங்கை,
மத்திய வீதி, உவர்மலை,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 01

# ஆரம்பம்

"ஓம் சக்தி... ஓம் சக்தி... காளி ஆச்சிக்கு, அரோகரா..."

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து காளி கோயிலில் பயணிகளை இறக்கிவிட்டுச் செல்கிறது.

வானளாவிய கோபுரத்தை அண்ணாந்து பார்த்த படி காளித்தாயை மனதார வேண்டிக்கொண்டாள் மரகதம் எனும் மரகதமணி. கோபுர உச்சியில் அமைந்திருக்கும் "ஓம்" என்ற மின்னொளி எழுத்தும், நடுவில் அமைந்துள்ள சூலமும், அதன்மேல் பூத்திருக்கும் தாமரையும் அவள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தியது. முன்னே தோன்றிய பிள்ளையாருக்கு முன் நின்று தலையில் மூன்று முறை குட்டி வலமும், இடமுமாக கைமாற்றி காதுகளை பிடித்து மூன்று முறை தோப்புக்கரணம் போட்டு எழுந்து அவரை வணங்கிக் கொண்டே காளி கோயிலில் சிதறு தேங்காய் அடிக்கும் கூட்டருகே வந்து நின்றாள். வலது கைப்பக்கம் பிள்ளையார் வசந்த மண்டப வாசல். வாசற் கதவிற்கு முன்னால் சிறியதொரு மேடை அமைத்து கூரை போட்டிருந்தார்கள் அடியார்கள் நின்று வணங்குவதற்கு அமைவாக... ஒரு கையில் வைத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்த சிறிய நீல நிற "சூட்கேசை"யும், மற்றைய கையில் இருந்த பிரம்புக் கூடையையும் இறக்கி அந்த மேடை மேல் ஒரு ஓரமாக வைத்துவிட்டு,

"வா பிள்ளை...சாமி கும்பிட்டிட்டு வருவம்," என்று மகளுக்குக் கூறிக்கொண்டே முன்னே சென்றாள் மரகதம்.

அவளுக்குப் பின்னால் அவள் மகள் நிலோஜனி கையில் புத்தகைப்பையோடு நின்று அவளையே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றாள்.

அன்று செவ்வாய்க்கிழமை, அம்பாளுக்கு காலைப்பூசை நடந்து கொண்டிருந்தது. பிரதான குருக்கள் மூலஸ்தான விக்கிரகத்துக்கு பஞ்சாராத்தி காட்டிக் கொண்டிருந்தார். அந்தத் தீப ஒளி நிலோஜனி மனதிற்கு ஒரு வித மகிழ்ச்சியைக் கொடுத்தது. கல்வியிலும், வாழ்க்கைத்தரத்திலும் உயர்வதற்கான கற்றலை மேற் கொள்வதற்காக புதியதொரு இடத்திற்கு வந்திருக்கும் அவளுக்கு, மூலஸ்தான அம்மனின் திருவுருவக்காட்சியும், தீப ஒளியும் அவள் வாழ்விலும் ஒரு ஒளியை ஏற்படுத் தியதாகவே இருந்தது.

ஏழடுக்குக்கொண்ட சப்ததளக் கோபுரத்தின் அழகிய சிலைகள் அவளை வெகுவாகக் கவர்ந்தது. உமாதேவியின் வெவ்வேறு அவதாரங்களில் உக்கிரமான அவதாரமாகக் கொள்ளப்படும் காளி அம்பாளின் உருவச் சிலைகள் அங்கே அமைக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகாசுரன் வதமும், காளியின் சாந்த சொரூப உருவமும், காவல் தெய்வங்களும் அமைந்திருந்தது. கோபுர உச்சியில் ஒரு பக்கம் பிள்ளையாரும், மறுபக்கம், முருகன் வள்ளி தெய்வானையுடனும் தரிசனம் தந்தார்கள். இச்சிலைகளின் அழகைக்கண்டு வியந்தவளின் கைகள் தானாகக் கூப்பிக்கொண்டன.

"பிள்ள வா சுத்திக் கும்பிட்டிட்டு போவம் நேரமாகுது"

என்ற தாயின் அருட்டலில் அவள் பின் சென்றாள்..

காலைப்பொழுது சூரியனின் இதமான சூடும், எரியும் கற்பூரத்தின் நறுமணமும் அவளை அவ்விடத்தை விட்டு அகல விடவில்லை.

மீண்டும் தரித்து நின்றவளை தாய் கூப்பிட்டாள்...

"ஏ... புள்ள கெதியா வா..."

இரண்டாவது தடவை தாயின் ஒலி கேட்டு அண்ணாந்து பார்த்தபடி முன்னே அடியெடுத்து வைத்தவள், ஒருவரோடு மோதிக் கொண்டாள்... எதிரே மோதியவளின் கைகளில் வைத்திருந்த புத்தகப்பை கீழே விழுந்ததில் ஒரு சில புத்தகங்கள் மண்ணிலும் விழுந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென இவள் குனிந்து அந்தப் புத்தகங்களை யும், பையையும் எடுத்துக் கொண்டாள்... அதேபோல் எதிரே மேதியவளும் குனிந்து அப்பையை தானும் ஒரு கையால் பற்றி எடுத்துக்கொண்டாள்...

நிலோஜனி நிமிர்ந்து அவளைப் பார்த்து ஒரு புன்னகை புரிந்து விட்டு "மன்னிச்சிடுங்க தெரியாம இடிச்சிட்டன்" என்று மன்னிப்பு கோரினாள்.

எதிரே நின்றவள் பதில் எதுவும் சொல்லவில்லை மெல்லிய புன்னகை ஒன்றை உதிர்த்துக்கொண்டு புத்தகங்களை வாங்கி புத்தகப் பையினுள் திணித்துக் கொண்டே அவளைக் கடந்து சென்றாள். அவளது கண்களில் ஏதோ ஒரு வித சோகம் நிரம்பியிருப்பதை இவள் உணர்ந்துகொண்டாள். அந்த இளம் பெண்ணின் பின்னால் ஒரு வயதான மூதாட்டி ஒரு சிறிய பெட்டி ஒன்றையும், ஒரு பிளாஸ்டிக் பையையும் சுமந்து வந்து கொண்டிருந்தாள். அந்த மூதாட்டி அவள் தாயாக இருக்கலாம்.

அவர்களை நின்று அவதானிக்க இவளுக்கு நேரம் போதவில்லை. 'விறுவிறு' என அவள் தாயின் பின்னால் கோயிலைச் சுற்றி நடந்தாள்.

கோயிலை ஒரு சுற்று வலம் வந்து கும்பிட்டு வீழ்ந்து வணங்கி தமது பொருட்களை எடுத்துக் கொண்டு தார் வீதிக்கு இறங்கினார்கள் இருவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை நகரம் இவளுக்குபுத்தம் புதிது என்று சொல்லி விட முடியாது. எனினும், இன்றைய தினம் திருமலை நகரம் அவளுக்குப் புதிதாகவே இருந்தது. இதற்கு முன்னர் பாடசாலை அலுவலாக ஓரிரு தடவைகள் வந்து போனதாக நினைவிருக்கிறது அவளுக்கு.

கோயிலின் பின் வீதியில் மூலஸ்தானத்துக்கு இடது பக்கமாக தேர்முட்டி அமைக்கப்பட்டிருந்தது. அதன் உயரத்தைப் பார்க்கும் போது அம்மனின் சித்திரத்தேர் எவ்வளவு உயரமாக இருக்கும் என்பதை அவளால் கற்பனை செய்ய முடிந்தது. தேர்முட்டியை அடுத்து அமைக்கப்பட்டிருந்த கல்யாண மண்டபம் மூடிக்கிடந்தது. மண்டபத்திற்கு வெளியே பக்தர்கள் கை கால்களை கழுவிச் செல்வதற்காக அமைக்கப்பட்டிருந்த நீர்க்குழா யிலிருந்து 'சொட்டுச் சொட்டாக' நீர் ஒழுகிக்கொண்டி ருந்தது. அதைக் கண்ணுற்ற நிலோஜனி, விரைந்து சென்று குழாயின் திருகியின் மேற்பகுதியைத் திருகி நீர் வழிவதை நிறுத்தி விட்டாள். நீர்க்குழாயிலிருந்து ஒழுகிக்கொண்டிருந்த நீரைப் பருகுவதற்காக பறந்து வந்து கூரைமேல் நின்ற காகம் "கா..கா.." என்று கத்திக் கொண்டு அப்பால் பறந்து சென்றது.

மண்டபத்தைக் கடந்து வந்தவள் வீதியின் வளைவில் ஒரு மாடிக்கட்டடம் இருப்பதை அவதானித் தாள். அதன் பெயர்ப் பலகையை அவதானித்தவள்..... அது ஒரு தனியார் வைத்தியசாலை என்பதை புரிந்து கொண்டாள்.... அதற்கமைய அக்கட்டடத்தினுள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை ஆடை அணிந்து ஒரு சிலர் சென்றுகொண்டி ருந்தார்கள். சுவரோரமாகப் போடப்பட்டிருந்த கதிரை களில் சிலர் அமர்ந்திருந்தார்கள்... அவர்கள் நோயா ளிகள் போலும், அவர்களைப் பார்த்துக்கொண்டே கடந்து சென்றவளது எண்ணங்கள் வானில் சிறகடித்துப் பறந்தது.

சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர் தரம் கற்பதற்காக திருக்கோணமலை நகரிற்கு வந்திருப் பதை எண்ணும்போது அவளுக்குள் ஒரு வித மகிழ்ச்சி ஏற்பட்டது. அடுத்தடுத்து அமைந்திருக்கும் கட்டடங்களும், வீதி நிர்மாணிப்பும், தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் வாகனங்களும், மனிதர்களும் அவளு க்குப் புதுமையா யிருந்தது.

"என்ன பிள்ளை எங்க பார்த்துக் கொண்டு வாராய்... 'ரோட்டப்' பார்த்து நட..." என்று தாயின் அருட்டல் கேட்டு திரும்பியவள், அவள் தாய், முன்னே வீதியின் இடது பக்க வளைவில் திரும்புவதை அவதா னித்து தானும் அங்கே விரைந்து சென்றாள்.

"தெக்ஷிண கான சபா" என்று கூரையின் முன் முகப்பு பகுதியில், முன் கதவின் மேற்பகுதிச் சுவரிலே பொறிக்கப்பட்டிருந்த பெயருடைய அக்கட்டடத்தின் அருகில் நின்ற மரநிழலில் நின்று தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டாள் மரகதமணி... நிலோஜனியும் ஓடிப் போய் அவளருகே நின்றுகொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 02

## புதுவரவு

அகலமான இரும்புக்கதவைத் திறந்துகொண்டு மரகதம் உள்ளே செல்ல பின் தொடர்ந்தாள் நிலோஜனி.

அந்த வீட்டின் முன்பகுதி முற்றத்தில் அழகழ கான பூமரங்கள் வைக்கப்பட்டிருந்தன. இரண்டு பக்க மதில் ஓரங்களிலும் பூமரங்கள் நடப்பட்டிருந்தன. அவற்றின் அழகை இரசித்த வண்ணம் அவ்வீட்டு முற்றத்தைக் கடந்து உள்ளே சென்றவளை நோக்கி "வள்... வள்..." என்று குரைத்துக் கொண்டு ஒரு நாய் பாய்ந்து வந்தது.

"அம்மா நாய்..." என்று கத்திக் கொண்டே விரைந்து வெளியே வந்து கதவை மூடியவளுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. தோளில் கிடந்த புத்தகப்பை அவ்வளவினுள்ளே விழுந்து கிடந்தது. இவளைத் துரத்தி வந்த அந்த நாய் அப்பையருகில் நின்று அதனை முகர்ந்து பார்த்துக் கொண்டிருந்தது. அப்பொழுது தான் அவளுக்கு அவள் தாயின் நினைவு வந்தது.... "ஐயோ... அம்மா." என்று அவளையறியாது அவள் வாய் சத்த மிட்டது. கண்கள் தாயைத் தேடியது.... பூமரங்கள் தாண்டி வீட்டின் முன் வாசற் கதவருகே அவள் தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று கொண்டிருந்தாள். இவள் ஓடிச் சென்று வெளியே நிற்பதைக் கண்டு....

"வா புள்ள உள்ள.... அது ஒன்னும் செய்யாது..... உள்ள வா." என்று சொல்லி விட்டு அவளையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"எனக்குப் பயமாயிருக்கம்மா... இது கடிச்சாலும் கடிச்சிடும்... அதப் பிடிக்கச் சொல்லுங்க."

"ப்ச்..." சும்மா பயப்படாம வா புள்ள. அது ஒன்னும் செய்யாது...."

அம்மா தைரியமூட்டினாலும் இவளுக்குப் பயமாகத்தானிருந்தது.....

மெல்லக் கதவைத் திறந்து உள்ளே காலடி எடுத்து வைத்தாள்.

இவள் புத்தகப்பையை முகர்ந்து பார்த்து விட்டு தாயருகே போய் நின்றுகொண்டது அந்த நாய்.

மெல்ல மெல்ல அடி எடுத்து வைத்து உள்ளே சென்றாள். வழியில் வீழ்ந்து கிடந்த புத்தகங்களை பார்க்காமலே தடவி எடுத்துக்கொண்டாள். எங்கே குனிந்து எடுக்கும் வேளை நாய் வந்து கடித்து விடுமோ என்ற பயம்தான். ஆனால் அந்த நாயோ அவள் தாயின் வருடலில் அவள் தாயின் காலடியில் குழைந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல மெல்ல நடந்து தாயருகே சென்று நின்றாள் அவள். அழகான பூவேலைகளுடன் கூடிய வீட்டின் முன் வாசற்கதவு மூடிக் கிடந்தது. மரகதம் கதவில் "டொக் டொக்" என்று தட்டினாள். பின்னர் "மங்களேஸ்வரி அக்கா..... மங்களேஸ்வரி அக்கா...." என்று கூப்பிட்டாள். அதற்கிடையில் நிலோஜனி சுவரில் பொருத்தப்பட்ட அழைப்பு மணியின் அழுத்தியை இரு தடவைகள் அழுத்த, அது இனிமையான குருவிச்சத் தத்தை எழுப்பி ஓய்ந்தது. அந்தச் சத்தத்தை தொட ர்ந்து... "ஓம்.... ஓம்..... வாறன்" என்ற ஒரு ஒலி கேட்டது. சிறிது வினாடிகளின் பின் கதவு திறக்கும் ஓசையோடு அந்த மரக்கதவு அகலமாகத் திறந்துகொண்டது.

கிட்டத்தட்ட அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி வாசலில் வந்து நின்றாள். சற்றுப் பருமனா னவள், வெள்ளை நிறம், இடைக்கிடை நரைத்த முடி, சீராக்கப்பட்ட பல் வரிசை, சிகப்புக் கல் நடுவில் வைத்து சுற்றி வர வெள்ளைக் கல் பதித்த அகலமான தோடுகள், கழுத்தில் சங்கிலி, கைகளில் தங்க வளையல்கள், ஆனால் நெற்றியில் திலகம் மட்டும் இட்டிருக்க வில்லை..... கணவர் இல்லைப்போலும்.

" வா வா... மரகதம் உள்ள வா... இது தானா மகள் உள்ள வா புள்ள. வந்து உள்ள இரு. இருங்க இரண்டு பேரும்.... அடுப்பில கறி வச்சனான்.... பார்த் திட்டு வாரன்." என்று கூறிக்கொண்டே மங்களேஸ்வரி அம்மா உள்ளே சென்று விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவான வரவேற்பறை. மூன்று இருக்கைகள் கொண்ட பஞ்சு மெத்தையாலான கதிரையிலே சொகு சாக அவர்கள் அமர்ந்துகொண்டார்கள். அக்கதிரைக்கு எதிரே இதே போன்று ஒருவர் மட்டும் அமர்ந்திருக்கக் கூடிய இரண்டு கதிரைகள் போடப்பட்டிருந்தன. அவற்றிற்கு நடுவே மரத்தாலான ஒரு "டீப்போ" போடப் பட்டிருந்தது. அவர்கள் இருக்கைக்கு எதிர்ப்பக்கத்தில் ஒரு அறை காணப்பட்டது. அது சுவாமி அறை போலும்... அதன் வலது பக்கத்தில் இன்னுமொரு அறை தென் பட்டது. வலது பக்கச் சுவரின் மேற்பகுதியில் அழகான மணிக்கூடு ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது. பார்த்தால் அது வெளிநாட்டு மணிக்கூடு போல்தென்பட்டது. மணிக் கூட்டின் வலதுபக்கத்துச் சுவர்ப்பகுதியில் இரண்டு முயல் குட்டிகளின் படம் கண்ணாடியால் சட்டமிடப்பட்டு தொங்க விடப்பட்டிருந்தது. இளநீல நிற வர்ணப்பூச்சு சுவருக்கும் அப்படத்திற்கும் மேலும் அழகூட்டியது.

அடுப்பில் வைத்திருந்த கறியை இறக்கி வைத்து விட்டு மங்களம் 'அன்ரி' அவர்கள் எதிரே வந்து அமர்ந்து கொண்டாள். மங்களேஸ்வரி என்ற அந்த அம்மணியின் பெயரை மங்களம் என்று சுருக்கி, அதோடு மரியாதை நிமித்தமாக ஒரு "அன்ரி" யையும் சேர்த்துக்கொண்டாள் நிலோஜனி. நாமும் இனி 'மங்களம் அன்ரி என்றே அழைப்போம்.

அவளுடைய முதல் கேள்வி இவளை நோக்கிய தாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன புள்ள என்ன படிக்கப் போறாய்.."

"கொமர்ஸ் அன்ரி.."

"ம்... நல்லம்."

"இதுதான் நீ இருக்கப் போற இடம்...., உள்ள இரண்டு அறைகள் இருக்கு. நீ ஒன்டில தங்கிக் கொள்ளலாம். படிக்கிறதுக்கு கதிரை மேசை எல்லாம் இருக்கு, கட்டில் இரண்டு இருக்குது, அலுமாரி ஒன்று இருக்கு, 'பாத்ரூம்' 'அட்டாச்' ஒன்டு, வெளியில ஒன்டு இருக்கு. இதைவிட கிணறும் இருக்கு, கிணத்திலையும் அள்ளிக் குளிக்கலாம். எந்தக் காலத்திலயும் தண்ணி நல்லா வரும். இதுல ஒரு அறையில ஒரு புள்ள இருக் குது... கிட்டத்தட்ட பதினைந்து வருஷமா அது என்னோ டதான் இருக்குது. என்ட புள்ள மாதிரித்தான் அதுவும். ஏதோ டிப்பாட்மெண்டில வேலை பார்க்குது நல்லபிள் ளை... தானும் தன்ட பாடும்.... எனக்கும் நல்ல உதவி. இன்னும் கலியாணம் கட்டயில்ல.... உனக்கும் உதவி யாய் இருக்கும் புள்ள." என்று, அனைத்து விடயங்களை யும் சுருக்கமாக கூறி முடித்தாள் 'அன்ரி'.

தாய்க்கும் மகளுக்கும் என்ன கதைப்பதென்றே தெரியவில்லை. பேசாமல் இருந்தார்கள். 'அன்ரி'தான் தொடர்ந்தாள்.

"மரகதம்... இப்ப சாமான்களின்ட விலையெல் லாம் கூடிப்போய்டுது. முன்ன ஆறாயிரம் தான் வாங்கின னான். ஆனா அது கட்டுப்படியாகயில்ல.... நீங்க சாப்பாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்கு ஒரு ஏழாயிரமும், கரண்ட்பில், தண்ணிபில்லுக்கு ஒரு ஆயிரமும் தந்தீங்களெண்டாப் போதும். மூன்று நேரமும் சாப்பாட்டுக்குக் குறையிருக்காது..... காலை யிலயும், பின்னேரத்திலயும் 'டீ' ஊத்திக் குடிக்கலாம்.... வேற என்ன, சம்மதம்தானே..."

எட்டாயிரம் என்பது மரகதத்திற்கு அதிகம்தான் ஆனால் என்ன செய்வது..., மகள் படிப்பைப் பார்க்க வேண்டுமே.

"இல்லை அக்கா..... காசு பிரச்சனை இல்ல. நல்ல இடம் தான் முக்கியம்...." மரகதம் முடிக்கும் முன் மங்களம் 'அன்ரி' கதைக்கத் தொடங்கினாள்.

"இங்க இருந்து போனவங்க எல்லோரும் நல்லாத் தான் இருக்கிறாங்க... இவளும் நல்லா வருவாள்... நீங்க ஒண்டுக்கும் பயப்படதேவையில்லை."

"அது தான் அக்கா நானும் இங்க கூட்டி வந்த னான்." என்றாள் மரகதம்.

அதன் பின்னர் இருவரது சம்பாஷணையும் வேறு விடயங்களுக்கு மாறியது.

அவள், தனது வாழ்வின் அடுத்த கட்டத்தை ஆரம்பிக்க இருக்கும் அந்த இடத்தை கண்களால் உள்வாங்கிக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 03

# அலைஓசை

அவள் கால்களை நனைத்துக் கொண்டு குதூ கலமாக திரும்பி ஓடிச் சென்று கடலோடு சங்கமமாகிக் கொண்டது அந்த அலைகள்.

பூமியை விட்டு நழுவிச் செல்வது போன்றிருந்தது பவித்திராவிற்கு. கால்களுக்கு அடியில் இருந்த மண் 'சொர சொர'வென்று அரித்துக்கொண்டு நீரோடு அடித்துச் சென்றது. கால்கள் கடல் மண்ணில் புதைவது போன் றும், கடலுக்குள் அவளை யாரோ இழுத்துச் செல்வது போன்றும் இருந்தது. பயம் கலந்த ஒரு வித சந்தோஷம் அவளுள் பரவ இரண்டடி முன்னோக்கிச் சென்று நின் றாள். மீண்டும் அவ் அலைகள் புரண்டோடி வந்து அவள் கால்களுக்கு முத்தமிட்டுச் சென்றன.

உடுத்தியிருந்த சல்வார் முழங்கால் வரை நனைந் துவிட்டது. சிலிர்க்கும் காற்று வீசிக்கொண்டிருந்தது. மார் புக்குக் குறுக்காக கட்டிய கைகளை எடுக்காது அப்ப டியே இரண்டடி பின்னோக்கி வந்து இறுகிய மணல் பரப்பில் நின்றுகொண்டாள். அவள் மனம் போல மணலும் இறுகியிருந்தது. தூரத்தே ஒன்றிரண்டு கட்டு மரங்கள் தெரிந்தன. ஆழ்கடலில் அமைதியாக அவை அங்குமிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் ஆடியவண்ணம் மிதந்து கொண்டிருந்தன. சற்றுத் தொலைவில் இன்னும் சில படகுகள்...

படகில் இருப்பவர்கள் யாரென்று தெரியவில்லை ஆனால் அவர்கள்மேல் ஒரு இரக்கம் வந்தது அவளுக்கு. இரவு முழுவதும் ஆழ் கடலில் தத்தளித்து மீன் பிடித்து, அதை விற்று மனைவி பிள்ளைகளை, தாய் தகப்பனை, சகோதர சகோதரிகளை, உறவினர்கள், நண்பர்களைக் காப்பற்றும் இவர்களை யார் காப்பாற்றுகிறார்கள்? எது காப்பாற்றுகிறது? எல்லாம் வாழ்வதற்கான போராட்டம்தான்......, வாழ்வோம் என்ற நம்பிக்கைதான்.

நீண்ட நேரம் நின்றதில் கால்கள் வலித்தன... கால்கள் சோர்ந்துவிட்டதாக உணர்ந்தாள். திரும்பி மணலை நோக்கி நடந்தாள். ஒரு சிறு குழந்தை பலூன் விற்பவனைக் காட்டி அதன் தகப்பனிடம் அடம்பிடித்துக் கொண்டிருந்தது.

"அப்பா அந்த பலூன் வேணும்..."

"போகேக்குள்ள வாங்குவம் மகள்.."

"இப்ப வாங்கித் தாங்க..."

"இப்ப வேணாம்...போகேக்க வாங்குவம்.."

பிள்ளை சிணுங்கத் தொடங்கியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அழ வேணாம் மகள். அப்பா சொன்னனான் தானே அதஇதக் கேட்டு பிரளிபண்ணக் கூடாது என்டு..." தகப்பன் சற்றுக் கடுமையாகக் கூறினார்.

குழந்தையின் அழுகை மேலும் அதிகரித்தது... நேரே தாயிடம் சென்று முறையிட்டது. குழந்தைகள் எப்போதும் இப்படித்தான். தமக்குத் தேவையானதை ஏதோவொரு முறையில் பெற்றுக்கொள்ளத்தான் பார்ப்பா ர்கள். ஒருவர் மறுத்தால் மற்றவரிடம் சொல்வார்கள். அடம்பிடித்தோ, அழுதோ, கோபப்பட்டோ அவர்கள் தாங்கள் நினைத்ததை அடைந்து விடுவார்கள். அது அவர்கள் சுபாவம். இங்கு இந்தக் குழந்தையும் அதைத் தான் செய்கிறது. அப்பா வாங்கித் தருவதாகத் தெரிய வில்லை. அதனால் அம்மாவிடம் சென்று விட்டது.

"அம்மா பலூன்..."

"...."

"அம்மா பலூன் வாங்கித் தாங்க..."

பலூன் விற்பவன் அங்கேயே நின்று கொண்டு பலூன்களை ஒவ்வொன்றாக எடுத்து அந்தக் குழந்தைக் குக் காட்டுவதும், புதிய பலூனை ஊதி அழகிய வடிவம் செய்து அதை அக் குழந்தைக்கு முன் நீட்டுவதும், என அவன் தன் வியாபாரத்தை முன்னெடுக்கும் தந்திரோ பாயங்களைச் செய்து கொண்டிருந்தான். அவனைச் சொல்லிக் குற்றமில்லை அவன் இதை விற்றால்தான் அவன் குழந்தைக்கு சாப்பிட ஏதாவது வாங்கிச் செல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பலூனைக் காட்டக்காட்ட குழந்தைக்கு ஆசை கூடியது. தந்தைக்கோ கோபம் கூடியது.

"என்னப்பா... பலூனாம் ஒரு பலூன் வாங்கிக் குடுங்களேன்." இது குழந்தையின் தாய்.

அவரால் மேற்கொண்டு எதுவும் பேச முடியவி ல்லை. குழந்தையோடு தாயும் சேர்ந்து விட்டாள்... அவர் தனித்து விட்டார்.

பலூன்காரனிடம் பேரம் பேசி ஒரு பலூனை வாங்கி குழந்தை கையில் கொடுத்தார்.

"அப்பா... அப்பா..." என்று அக்குழந்தை பல்லெல்லாம் காட்டிச்சிரித்தது. சந்தோஷமாக அப்பால் சென்று விளையாடியது.

மணல்பரப்பில் அமர்ந்து நிமிர்ந்தவள் முன்னே ஒரு சிறுவன் கச்சான் பக்கற்றுக்களுடன் நின்று கொண்டி ருந்தான்.

அவனிடம் கச்சான் பக்கற்று ஒன்றை வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடுத்து விட்டு,

"தம்பி பெயர் என்ன." என்று வினாவினாள்.

"இமானுவேல்." என்றான் அவன்.

"எந்த ஊர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......." அவன் எதுவும் பேசவில்லை.

"பள்ளிக்கூடம் போறனியா...? என்ன வகுப்பு படிக்கிறாய்...?"

"பள்ளிக்கூடம் பேறாறேல்லக்கா.... வீட்டில கஷ்டம்...." என்று கூறிக்கொண்டே அவன் அடுத்தவரிடம் சென்று விட்டான்.

படிக்க வேண்டிய வயதில் கச்சான் விற்றுத் திரிகிறானே இவன். ஏன் இவனது பெற்றோர் இவனைப் படிக்கவைக்கவில்லை. உண்மையில் பணம் இல்லையா...? பாடசாலைக் கல்விக்கு பணம் ஒரு தடையாக இருக்கப்போவதில்லையே....? அப்படியென்றால் பெற்றோருடைய கவனக்குறைவா.....? அல்லது அறிவுக் குறைவா....? அவளது சிந்தனைகள் அவன்பால் வெவ்வேறு கோணத்தில் சிந்திக்கத் தூண்டியது. அமைதியாக சற்றுநேரம் இருப்பதற்காக வந்துவிட்டு வீணே வெவ்வேறு சிந்தனைகளில் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது என்று எண்ணியவள் அந்தச் சிறுவனின் கல்வி பற்றிய எண்ணத்தை தற்காலிகமாக விடுத்து ஆழ்கடலை நோக்கினாள்.

நீண்டநேரம் அமைதியாய் இருந்தவள், சில்லென்ற காற்று முகத்தில் தவழ பரவசமானாள். இன்னும் கொஞ்ச நேரம் இருந்து விட்டுச் செல்லலாம் என்றது மனம். எனினும் கடிகாரம் ஆறு பதினைந்தைக் காட்டி நிற்க எழுந்துகொண்டாள். வெளிச்சம் குறைந்து இருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லப் பரவத் தொடங்கியிருந்தது. கால்களிலே பாதணி களை மாட்டிக்கொண்டு வெண்மணலில் கால்கள் புதைய வீதியை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

புற்களைக் கடந்து வீதிக்கு வந்தவள், அங்கே குச்சி ஐஸ் பழம் ஒன்றை வாங்கி சுவைத்துக்கொண்டு சைக்கிள் தரிப்பிடத்துக்குச் சென்று மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு, தரித்து வைத்ததற்கான ஐந்து ரூபாய் பணத்தை அங்கே நின்ற ஊழியரிடம் கொடுத்துவிட்டு புறப்பட்டாள்.

இடது பக்க சமிக்ஞை விளக்கை ஒளிரவிட்டு இடது பக்கமாகத் திரும்பி சற்று தூரே சென்று பின் வலது பக்க சமிக்ஞை விளக்கை ஒளிரவிட்டு வலது கண்ணாடி பார்த்து வளைவால் திரும்பி சற்றுத்தூரம் சென்று வீட்டை அடைந்தாள்.

மோட்டார்வண்டியிலிருந்து இறங்கி வாசற்கதவுக் கொழுக்கியை விலத்தி கதவைத்திறந்தாள்.... இரும்புக் கதவு "கிறீச்" என்ற சத்தத்துடன் திறந்துகொண்டது. நாளை முதல்வேலையாக இதற்கு எண்ணெய் போடவேணும் என்று எண்ணிக்கொண்டே வண்டியை உள்ளே செலுத்தி னாள். நேரே போட்டிகோவில் சென்று நிறுத்தி இறங்கிய வள் காலடியில் வாலை வாலை ஆட்டிக் கொண்டு அவளையே சுற்றிச் சுற்றி வந்தது நாய்.

மோட்டார் சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கினாள். வாலை ஆட்டிக்கொண்டு அது அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையே பார்த்துக்கொண்டு நின்றது. குனிந்து அதன் தலையை வருடினாள். அது மேலும் வாலை வாலை ஆட்டியது. அதன் தாடையைப் பிடித்து அதன் மூக்கு நுனியை தன் மூக்கு நுனியோடு உரசி, மீண்டும் அதன் தலை கோதி உள்ளே சென்றாள். அது அவள் பின்னா லேயே சென்றது.

ஹோலின் ஒரு பக்க சுவரோரமாய் போடப்பட்டி ருந்த சோபா செட்டியின் தனிக்கதிரையின் விளிம்பில் அமர்ந்து கொண்டு புத்தத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள் நிலோஜனி. வாசல் தாண்டி ஹோலினுள்ளே சென்ற பவித்திரா நிலோஜனியைப் பார்த்து புன்னகைத்து விட்டு அவளது அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 04

# புதியஒளி

போர்வை சற்று விலத்தியதால் முகத்தில்பட்ட வெளிச்சம் அவள் நித்திரையை கலைத்தது. மெல்லக் கண்கள் இரண்டையும் திறந்தாள். புதிய வெளிச்சம் கண்களைக் கூசச்செய்தது. கண்களை இரண்டு, மூன்று தடவைகள் மூடித்திறந்து, அகல விரித்து வெளிச்சத்தைப் பார்த்தாள் நிலோஜனி. புதியதொரு வெளிச்சம் அவள் உடலில் பரவுவது போன்று ஓர் உணர்வு ஏற்பட்டது அவளுக்கு.

யன்னல்கள் இரண்டும் திறந்துகிடந்தது. அறைக் கதவு மூடியும் மூடாமலும் கிடந்தது. போர்வையை சுருட்டி எடுத்துக்கொண்டு நிமிர்ந்து பாயில் அமர்ந்துகொண்டாள். அருகில் இருந்த கட்டில் வெறுமையாகக் கிடந்தது. கட்டில் விரிப்பு நேர்த்தியாக விரிக்கப்பட்டு தலையணைகள் இரண்டு தலைப்பகுதியில் வைக்கப்பட்டிருந்தது. அருகில் மடிப்புக் குலையாது வைக்கப்பட்டிருந்த போர்வை.... அது அக்காவினுடைய கட்டில்.... இரவு அவள் தான் அதில் படுத்திருந்தாள்.

"இந்த ரூமில ஒரு கட்டில்தான் இருக்கு.... பக்கத்து ரூமில ஒரு கட்டில் இருக்கு.. நீ வேணுமெண்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்க போய் படுக்கலாம்...." இது இரவு படுக்கப்போகும் போது அக்கா சொன்னது.

அவள் தயங்கித் தயங்கி "இல்ல பராவாயில்ல.... நான் இந்த ரூமிலேயே படுக்கிறன்." என்றாள்.

"அப்ப நீ கீழதான் படுக்கவேணும்..... அந்த மூலையில் இரண்டு பாய் இருக்கு அத எடுத்துப் போட்டு படு. இந்தா தலையணை." என்று அவளது கட்டிலில் இருந்த ஒரு தலையணையை எடுத்துப் போட்டிருந்தாள் அக்கா.

"சரி அக்கா..." என்று அவளும் அதை வாங்கிக் கொண்டு பாயில் ஒன்றை எடுத்து உதறி கீழே விரித்துப் படுத்துக்கொண்டாள்.

அவள் படுக்க முன் பவித்திரா படுத்துவிட்டாள்.

நீண்ட நேரமாக இவளுக்கு நித்திரை வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தாள். புது இடம் எத்தனை மணிக்கு நித்திரை கொண்டாளோ தெரியவில்லை... இப்பொழுதுதான் எழுந்துள்ளாள்.

"நேரம் காலை ஆறு மணி நாற்பத்தைந்து நிமிடம்... சூரியன் எப்.எம் செய்திகள் வாசிப்பது....." சூரியன் எப்.எம் வானொலியில் செய்தி சொல்ல ஆரம்பித் திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரம் அமர்ந்திருந்தவள் எழுந்து பாயைச் சுற்றி ஒரு மூலையில் போட்டுவிட்டு போர்வையை மடித்து தலையணை மேல் வைத்து அதனைக் கட்டிலில் வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

மெல்லிய காற்று வந்து அவள் மேனியைத் தழுவிச்சென்றது... அவள் ஆடைக்குள் புகுந்து அவளை நாணச் செய்தது. இரு கைகளாலும் சட்டையை அழுத்திப் பிடித்துக்கொண்டு முற்றத்தில் காலடி எடுத்துவைத்தாள் நிலோஜனி. அங்கே முன் பக்க சுவரோரமாக இருந்த தண்ணீர்க் குழாயில் நீண்ட மெல்லிய இறப்பர் குழாயை சொருகி அதன் மூலமாக மரங்களுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தாள் பவித்திரா.

முற்றத்தின் நடுப்பகுதியில் கம்பியால் செய்யப் பட்ட வளைந்த கூடு அமைக்கப்பட்டு அதன் ஒருபக்கம் முல்லைக் கொடியும், மறு பக்கம் குண்டு மல்லிகைக் கொடியும் படரவிடப்பட்டிருந்தது. இரண்டு செடிகளும் ஓரளவான உயரத்திற்கு வளர்ந்து கிளைகள் பரப்பி பூப்பதற்கு ஆயத்தமாய் நின்றன. அச்செடிகளின் பின் னால் ஒரே வரிசையில் வெள்ளை, சிகப்பு, இளஞ்சிகப்பு நிறங்களிலான ரோசாச் செடிகள் நடப்பட்டிருந்தன. அனேகமான மரங்கள் பூத்திருந்தது. அவைகளைச் சுற்றி செம்பரத்தம் பூ மரங்கள் சற்றே உயரமாகவும் பரந்தும் வளர்ந்திருந்தது. அவற்றில் நிறையப் பூக்கள் பூத்தி ருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபக்கச் சுவரின் இரு மருங்கிலும் நித்திய கல்யாணி மரங்கள் குறிப்பிட்ட இடைவெளியில் நடப்பட்டு அழகாகவும், நேர்த்தியாகவும் வெட்டப்பட்டு பூக்கள் நிறைந்து காணப்பட்டது. வலப்பக்க சுவரின் ஓரமாக இடைக்கிடை வாழை மரங்களும், இடப்பக்கச் சுவரோர மாக இடைக்கிடை கமுகு மரங்களும் நடப்பட்டிருந்தன. வீதியோரமான வலப்பக்கச் சுவர் மூலையில் விளாட்டு மரக்கன்று ஒன்று நடப்பட்டிருந்தது. அது பத்தடி உயரத் திற்கு மேல் வளர்ந்து நின்றது. இன்னும் ஒரு வருடத்தில் அது காய்க்கத் தொடங்கிவிடலாம்.

பூமரங்களுக்கு நீர் ஊற்றிக்கொண்டு அப்படியே வாழை மரப்பக்கமாகத் திரும்பிச் சென்றாள் பவித்திரா. இவளும் ரோசாச் செடிகளையும், பூக்களையும் பார்த்துக் கொண்டே அப்படியே பவித்திரா நின்ற பக்கமாக வந்தாள். நிலோஜனி வருவதைக் கண்ட அவள் மெல்லத் திரும்பி மெல்லிய புன்னகை ஒன்றை உதிர்த்துவிட்டு மீண்டும் மரங்களுக்கு தண்ணீர் ஊற்றுவதில் மும்முர மானாள்.

சற்று நேரம் அக்கா மரங்களுக்கு நீர் ஊற்றுவ தையே பார்த்துகொண்டு நின்றவள் உள்ளே சென்று குளிப்பதற்கான ஆயத்தங்களோடு வெளியே வந்தாள்.

தற்பொழுது அக்காவோடு அன்ரியும் சேர்ந்திருந் தாள் மரங்களுக்கு நீர் ஊற்றுவதற்காக. இவளைக் கண்டதும்....,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வா புள்ள.... இப்பதானா எழும்பி வாறாய்.... இரவு நல்லா ரெஸ்ட் எடுத்தியா.?" என்று வினாவினாள்.

"ஓம் அன்ரி... கொஞ்ச நேரம் நித்திரை வரல தான்.... ஆனா பிறகு நல்லா நித்திரை கொண்டிட்டன். அது தான் எழும்ப லேட்டாயிட்டுது."

"இடம் பிடிச்சிருக்கா."

"ம்...."

"சரி போய்க் குளிச்சிட்டு வா. கிணத்தடில குளிக்கி றதெண்டாலும் குளிக்கலாம், இல்லாட்டி பாத்ரூம் இரு க்கு... எதுல வேணுமெண்டாலும் குளிக்கலாம்."

"இல்ல அன்ரி.... நான் கிணத்தடியிலயே குளிக் கிறன்." என்று கூறிக்கொண்டே கிணத்தடிக்குப் போனாள் நிலோஜனி.

அக்கா அவள் வேலைகளில் மும்முரமாய் இருந்தாள்.

துலாக் கயிற்றில் தண்ணீர் அள்ளிப் பழகியவளு க்கு கப்பிக் கயிற்றில் அள்ளுவது ஒரு புதிய அனுபவ மாக இருந்தது. முதல் இரண்டு வாளிகள் அள்ளுவதற்கு கஷ்டப்பட்டாள். பின்னர் சரியாகி விட்டது. எனினும் வேகமாக நீரை அள்ளி எடுப்பதற்குத் தெரியவில்லை. இன்னும் இரண்டு, மூன்று நாட்களுக்குள் சரியாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் முதற் தடவை செய்வது தான் கஷ்டமாயிருக்கும்... பழகப்பழக எல்லாம் சரியாகிவிடும்.

ஒரு முப்பது முப்பத்தைந்து அடி ஆழமாக இருக்கலாம் அந்தக் கிணறு. இருபத்தைந்து அடியிலேயே தண்ணீர் வந்துவிட்டது. கிணற்று நீரிற்குள் .அமிழ்ந்திருக்கும் உட்பாறைகள் தெளிவாகத் தெரிந்தன. வாளியை மெதுமெதுவாக உள்ளே இறக்கி நீரை வாளியினுள் நிரப்பி மெல்லமெல்ல இழுத்து வெளியே எடுத்து வாளியின் மேற்பகுதியில் ஒரு கையையும் அடிப்பகுதியில் ஒரு கையையும் பிடித்து தலைக்கு மேல் உயர்த்தி வாளித் தண்ணியை உச்சந்தலையில் ஊற்றினாள்.... "ஜில்" என்ற சிலிர்ப்பு உள்ளே இறங்கி உயிரைத் தொட்டு வந்ததுபோல் இருந்தது.... தண்ணியும் சற்று குளிர்ச்சியாயிருந்தது. பிசுபிசு என இருந்த உடம்பு புத்துயிர் பெற்றது போன்றிருந்தது. குளித்து முடித்து வேறு ஆடை மாற்றிக் கொண்டு வீட்டிற்குள் வந்தாள்.

குசினிக்குள்ளிருந்து அன்ரியின் குரல் கேட்டது.

"புள்ள.... உடுப்பு மாத்திட்டு சாப்பிட வா...."

அறைக்குள் இருந்த கண்ணாடி முன் போய் நின்று பவுடர் பூசி தலையை வாரிக் கொண்டு குசினிக்குள் வந்தாள்.

இரண்டு பக்கச் சுவரைச் சேர்த்தாற்போல் இடுப்பளவு உயரத்திற்கு அமைக்கப்பட்டிருந்தது மாபிள் பதிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட இரண்டடி அகலமான தொடர் மேடை. அம்மேடை மேல் பலதரப்பட்ட அடுக்களைப் பொருட்கள் வைக்கப்பட் டிருந்தன.

கோப்பை பீங்கான்கள் அடுக்குவதற்கான அடுக் களை ஒரு பக்கம், சமைப்பதற்கான அடுப்பு ஒரு பக்கம், பாத்திரங்கள் கழுவுவதற்கான நீர்க்குழாய் தொட்டியுடன் ஒரு பக்கம் என பலதரப்பட்ட விடயங்கள்... ஒரு பக்கத் தில் காலை உணவுக்காக இடியப்பமும் சொதியும் வெவ் வேறு பாத்திரங்களில் வைக்கப்பட்டிருந்தன.

இவள் அடுப்படிக்குள் வருவதைக் கண்ட மங்களம் அன்ரி, "ஆ.... வந்திட்டியா புள்ள.... அங்க ஒரு கோப்பைய எடுத்துவந்து போட்டுச்சாப்பிடு. இடியப் பமும் சொதியும் இருக்கு, சீனியும் வாழைப்பழமும் இருக்கு, எத வேணுமெண்டாலும் எடுத்துச் சாப்பிடு. இண்டைக்கு லீவு நாள் தானே மற்ற நாள் இதெல்லாம் செய்ய முடியாது. இதயும் அந்த புள்ள தான் செய் தது...." என்று கூறிக்கொண்டே அன்ரி வெளியே சென்று விட்டாள்.

ராக்கையில் கொழுவியிருந்த தட்டை எடுத்து சிங்கினுள் வைத்து பைப்பைத் திறந்தாள்..... நீர் சோ எனக் கொட்டியது. சில்வர் கோப்பையையும், கையையும் கழுவிக்கொண்டு திரும்பினாள். பெரிய தட்டில் வைக்கப் பட்டிருந்த இடியப்பங்களில் நான்கையும், சொதியையும் விட்டு எடுத்துக்கொண்டு, மறு கையில் வாழைப்பழம் ஒன்றையும் எடுத்துக்கொண்டு சுற்றும் முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாள்..... இருப்பதற்கு இடம் தேடினாள்..... அருகே இருந்த துருவலையை எடுத்துப்போட்டுக்கொண்டு அமர்ந்து கோப்பையுள் கை வைத்து இடியப்பத்தைப் பிசைந்தவளுக்கு அவள் தாயின் ஞாபகம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 05

## தோட்டி

"அம்மா... அம்மா..."

.......

"அம்மா... அம்மா..."

......

"அம்மோய்..."

சத்தம் கேட்டு, சோபாவில் அமர்ந்திருந்து தொலைக்காட்சியில் 'யூனியர் சுப்பர் சிங்கர்' மறு ஒலிபரப்பை பார்த்துக் கொண்டிருந்தவள் திரும்பி யன்னலூடாக வெளியே பார்த்தாள்.

இரும்புக் கதவிற்கு அருகில் ஒரு உருவம் நிற்பது தெரிந்தது. காலை பத்து மணிதான் என்றாலும் அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் அந்த ஏரியாவே அமைதியாயிருந்தது. எழுந்து வெளியே சென்று பார்ப்பதற்கு சற்று பயமாகத்தான் இருந்தது அவளுக்கு. திரும்பிப் பார்த்த வண்ணம் இருந்தாள்.

சிறிது நேரத்தில் அந்த உருவம் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வருவது தெரிந்தது. வீட்டுக் காவலாளி 'பிறவுணி' இருப்பதனால் பயமில்லை. எவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும் அது பார்த்துக்கொள்ளும், என்று தைரியமடைந்தாள்.

ஆனாலும் சிறிது நேரமாகியும் சத்தம் எதனையும் காணவில்லை. 'பிறவுணியின்' சத்தத்தையும் காணவில்லை, அந்த நபரின் சத்தத்தையும் காணவில்லை. மெல்ல எழுந்து யன்னல் அருகே வந்து திரையை விலக்கி வெளியே பார்த்தாள்.

அவரது வருடலில் கிறங்கிப் போய்க்கிடந்தது 'பிறவுணி'. அவர் காலடியில் தலைதாழ்ந்து நின்றது. அது அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

திரையை மூடிவிட்டு 'அன்ரியை' அழைத்து வர அடுப்படிக்குள் செல்ல முயன்றவளை அந்த அழைப்புக் குரல் மீண்டும் நிறுத்தியது.

"அம்மோவ்..."

வீட்டு முகப்புக் கதவருகே சத்தம் கேட்பது போல் இருக்க, கதவருகில் வந்து... "யாரது" என்று கேட்டாள்.

"தாயி... ராமு வந்திருக்கன்... அம்மா இருக்காங்களா."

'அன்ரி'யைத்ததான் கேட்கிறார் என்று புரிந்து கொண்ட அவள், "அன்ரி' உள்ளுக்குள்ள வேலையா இருக்கிறாங்க..." என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி தாயி... அம்மாட்ட நான் ராமு வந்திருக்கன் எண்டு சொல்லுங்க, அம்மா வேல முடிஞ்சு வரும்வரைக்கும் நான் வெளியில நிற்கிறன் தாயி..." என்றான் அவன்.

அவள் விரைவாக உள்ளே சென்று 'அன்ரி'யிடம் விஷயத்தை தெரியப்படுத்திவிட்டு வந்தாள்.

'ரிமோட் கொன்ரோலை' எடுத்து தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு வந்து வாசற் கதவைத் திறந்தாள்.

பழுப்பேறிய வெள்ளை நிற அரைக்கை சட்டையும், அரைக் காற் காற்சட்டையும் அணிந்த ஒரு அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவர் நின்றுக்கொண்டிருந்தார். வெற்றிலை சப்பி பழுப்பேறிப்போன பற்கள்..., இன்னமும் வெற்றிலையை வாய் மென்றுக்கொண்டுத்தான் இருக்கிறது. சிகரட்டோ, சுருட்டோ புகைப்பார் போலும், உதடுகள் உள்வாங்கி கறுத்திருந்தது, கன்னங்கள் குழிவிழுந்திருந்தன. நெற்றியில் சுருக்கம், நிறைந்த தலைமுடி, அனேகமான முடி வெளிறியும், பழுப்பு நிறமாயும் இருந்தது. மெலிந்த உடல்... நரம்புகள் புடைத்துக்கொண்டிருக்கும் உரமேறிய கைகளும், கால்களும். இவளைப் பார்த்து 'ஈ' என இளித்தார்.

அவளும் பதிலுக்கு மெல்லிய புன்னகை ஒன்றை உதிர்த்துக்கொண்டே அவரையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னதாயி அப்பிடிப் பாக்குறீங்க... அழுக்கா இருக்கிறனேண்ணா... சட்டதான் தாயி அழுக்கு... மனசு வெள்ள" என்று சொல்லிச் சிரித்தார் ராமு.

அவளும் சிரித்தாள்.

அவர்கள் சிரிப்பைக் கேட்டுக்கொண்டே உள்ளிருந்து 'அன்ரி' வெளியே வந்தாள்.

"ஆ... ராமு வா வா என்ன கனகாலமா ஆளயே காணோம்..."

"ஆமா அம்மா. உடம்பு சரியில்ல அதுதான் வரமுடியல்ல..."

"சரி... அதுல இரு. எனக்கு கிணத்தடியில கொஞ்சம் வேல இருக்கு. வந்திடுவன் போயிராத என்ன..."

"சரிம்மா" என்ற ராமு நாயுடன் மீண்டும் விளையாடத் தொடங்கிவிட்டார்.

'அன்ரி' ராமுவை இருக்கச் சொல்லிச் சொன்னதைக் கேட்ட நிலோஜனி உள்ளே ஓடிச் சென்று ஒரு பிளாஸ்டிக் கதிரையை எடுத்து வந்து விறாந்தையில் போட்டுவிட்டு அவனை நோக்கி,

"இதுல இருங்க... அம்மா வந்திடுவாங்க." என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்ல தாயி நான் இந்தக் குந்தில இருகிறன்" என்று போட்டிக்கோ ஓரமாக இருந்த குந்தில் அமர்ந்து கொண்டான் ராமு. நாயும் அவனருகில் அமர்ந்து கொண்டு வாலை வாலை ஆட்டியது.

"சின்னம்மா இல்லீங்களா தாயி..."

சின்னமாவா... யாரது... என்று யோசித்தவள் சட்டெனத் தெரிந்து கொண்டாள். ம்... இவர் அக்காவைத் தான் கேட்குறார் என்று.

"இல்ல... அக்கா வெளியில போயிருக்காங்க."

"நீங்க யாரு தாயி...? புதுசா வந்திருக்கிறிங்களா? அம்மாட சொந்தக்காரங்களா? படிக்கிறீங்களா...?

ராமுவின் கேள்விகளுக்கு அவள் பதில் சொல் லிக்கொண்டிருக்கையில் மங்களம் 'அன்ரி' வந்துவிட்டாள்.

"வா... ராமு... என்ன நடந்தது உனக்கு... இப்ப வேலைக்குப் போறதில்லையா?"

"இல்லம்மா நான் பென்சனுக்கு எழுதிக்குடுத் திட்டன். இப்ப பென்சன் காசும் வருது... கொஞ்ச நாளா உடம்புக்கு முடியல்ல... அதுதான் வர முடியல்ல. இல்லாட்டி அம்மாட்ட வராம இருப்பனா... ஐயாவும், அம்மாவும் எனக்கு எவளோ செய்திருக்கீங்க அத மறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமா தாயி..." என்று ஒரு தடவை அவளையும் பார்த்தார்.

"ம்... பிள்ளைகள் என்ன செய்யிறாங்க." இது 'அன்ரி'

"மூத்த ரெண்டு பொம்புளப் புள்ளைங்களையும் கட்டிக் குடுத்திட்டன் தாயி. அவங்களுக்கு குழந்தை குட்டிகளும் இருக்குது. இவன் மூணாவது பையன்தான் சரியா படிக்கல தாயி... என்ட வேலைய அவனுக்கு எடுத்துக் குடுப்பம்ணு பாத்தா வேணாணுட்டான். குப்ப அள்ளுறதெல்லாம் ஒரு வேலையாண்டு கேக்கிறான்... எனக்கும் அவங்களுக்கும் சோறு போட்ட தொழில் தாயி அது... அந்த வேலைய கேவலம் என்டு நினைக்கிறான் கழுத..."

அவரது கண்களின் ஓரமாக கண்ணீர் கசிந்தது. தொடர்ந்தார்... அன்ரியும், அவளும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அதாம்மா... பென்சன்காசு கொஞ்சம் வந்தது, அத எடுத்து அவனுக்கு ஒரு 'ஆட்டா' வாங்கிக் குடுத்தன். இப்ப அதத்தான் ஓட்டிக்கிட்டு திரியிறான். வயதும் போய்கிட்டு இருக்கு." என்று கவலைப்பட்டார்.

"கடைசி மகள் ஒருத்தி இருந்தாளே அவள் என்ன செய்யிறாள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவளும் படிச்சிக்கிட்டு இருந்தாப்போல லவ்வு கிவ்வுண்ணு திரிஞ்சு ஒருத்தனோட ஓடிப்போய்ட்டா... எங்க சாதிப்பையன்தான். நா... கத்தியத் தூக்கிட்டு துரத்தி திரிஞ்சனான் வெட்டுறதுக்கு... பிறகு மனிசி புள்ளைகள் கத்தி குளறி கழுதய வீட்டில சேத்திட்டாளுகள். இப்ப அதயும் வச்சி நான்தான் காப்பாத்திறன் தாயி... என்ன செய்யிற பெத்த புள்ளயாச்சே. எனக்கும் முன்ன மாதிரி ஓடியாடி வேல செய்ய முடியிறதில்ல", என்று பெருமூச்சு விட்டார்.

அன்ரியின் முகமும் கவலைபடிந்து காணப்பட்டது.

"சரி சரி இரு சாப்பாடு கட்டித்தாறன் கொண்டு போ..."

"ஏன் அம்மா உங்களுக்கு சிரமத்த."

"பரவால்ல இரு."

"தாயி ஏதாவது வேல இருக்கா."

"உனக்குத் தான் உடம்பு முடியல்ல என்றியே பிறகுபாப்பம்"

"இல்ல தாயி... உங்களுக்கு ஏலான்டு சொல்லுவனா... என்ன செய்யனும் செல்லுங்க."

" 'பாத்துறூம்' கழுவுற வேலதான் இருக்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி தாயி... எரிதண்ணியையும், புரஸ்ஸையும் எடுத்து வையுங்க... வேலைய கிளீனா முடிச்சுத்தாரன்." என்று சிரித்துக்கொண்டே எழுந்தான் ராமு.

"சரி... இரு தேத்தண்ணி ஊத்திறன் குடிச்சிட்டு வேலையைச் செய்." என்று கூறிக்கொண்டே அன்ரி அடுக்களைப் பக்கம் போனாள்.

ராமு, நிலோஜனியுடன் உரையாடினான்.

"நீங்க எங்க தாயி படிக்கிறீங்க..."

அவள் தான் படிக்கும் விபரம் பற்றிச் சொன்னாள்.

"என்ட மகள் வயித்துப் பேத்தியும் நல்லாப் படிப் பாள் தாயி... ஏதோ 'ஏயலோ, கீயலோ' படிக்கிறாளாம். இப்பதான் கிட்டடியில ஏதோ பரீட்ச 'பாஸ்' பண்ணின வளாம். அவங்க இருக்கிறது வேற இடத்தில, என்ன அடிக்கடி வந்து பாப்பாள்... அவள் தான் சொன்னாள்... இங்கன பக்கத்தில இருக்கிற பொம்பளப் பள்ளிக்கூடத் திலதான் படிக்க வரப் போறாளாம், பெரிய பள்ளிக் கூடமாம், நீங்களும் அங்கதானா தாயி படிக்கப்போறீங்க." ஆச்சரியமும், சந்தோஷமும் அவர் கண்களில் மின்னியது.

"ஓம், ஓம், உங்கட பேத்திட பேர் என்ன..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவ பேரு தாயி... 'வதனலோஜினி...', ஏதோ 'மொடன் பேராம். வாய்க்குள்ளயே நுழையாத பேரெல் லாம் வைக்குதுகள். என்ன கறுமமோ... நான் அத சின்னாத்தா எண்டுதான் கூப்பிடுறனான். உங்கட பேர் என்ன தாயி."

"நிலோஜனி"

"ம்... நல்ல பேரு தாயி"

....

"அம்மா தங்கமானவங்க தாயி" என்று மங்களம் 'அன்ரி' பற்றி பேச ஆரம்பித்தார் ராமு.

"ஐயா இருக்கும் போது அம்மா என்ன 'பவுசா' இருந்தாங்க தெரியுமா... நகையென்ன, நட்டென்ன நேரத்துக்கு ஒரு உடுப்பு, கார் கூட இருந்தது... அது ஒரு காலம்."

"அப்பேலருந்து நான்தான் ஐய்யா வீட்டில வேல செய்யிறது. ஐயாவும், அம்மாவும் அள்ளி அள்ளி கொடுப்பாக. துப்பரவு செய்யிறதிலருந்து, கக்கூஸ் கழுவுற வரைக்கும் செய்வன். இப்பபோல 'மாபிள் கக்கூஸ் இல்லவே... வாளிக் கக்கூஸ்தா. நீங்கெல்லாம் கேள்விப்பட்டிருக்கவே மாட்டீக தாயி."

அவளுக்கு சற்று அருவருப்பாவே இருந்தது. ஆனால் ராமு தொடர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூக்கப் பொத்திக்கிட்டு அந்த நாத்தத்த அள்ளிக்கிட்டுப்போய் கொட்டுவம்... ஆனா சுத்தமா வேலைய முடிச்சிடுவன் தாயி. அம்மாக்கு சுத்தமா இருக்கோணும் எல்லாம்.

தோட்டி வேலைபற்றி அவளும், அவள் தாத்தா சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறாள்... மனித மலத்தை இன்னொரு மனிதன் அள்ளும் அல்லது துப்பரவு செய்யும் ஒரு அருவருக்கத்தக்க செயல் ஒரு காலத்தில் இருந்துதான் இருக்கிறது. மனிதனை மனிதன் அடிமை யாக எண்ணும் குணமும், வர்க்க பேதமுமே இதற்கு காரணம். இன்றும் இவ்வாறான குணங்கள், செயல்கள் வெவ்வேறு வடிவங்களில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

சுடச்சுட அம்மா கொண்டுவந்து கொடுத்த பால் போடாத தேனீரை 'உவ், உவ்' என்று ஊதி ஊதிக் குடித்துவிட்டு வாளியையும், விளக்குமாற்றையும் எடுத்துக் கொண்டு வீட்டின் பின்புறமாகச் சென்றான் ராமு.

சிறிது நேரம் கழித்து கைகால்களை நன்கு கழுவிக்கொண்டு கைத்துண்டால் முகத்தையும் துடை த்துக் கொண்டு முன்வாசல் பக்கமாக வந்தான்.

அங்கே நிலோஜனி நின்றிருந்தாள்.

"தாயி வேல முடிஞ்சுது நான் போய் வரட்டா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் பதில் சொல்லுமுன் உள்ளிருந்து வந்த 'அன்ரி' சொன்னாள்.

"ராமு இந்தா... வராம இருந்திராத அடிக்கடி வந்து எங்களையும் பார்த்திட்டுப் போ." என்று அவன் கைகளில் சிறு தொகைப் பணத்தையும், சாப்பாட்டுப் பாசலையும் கொடுத்தாள்.

"என்னத்துக்கம்மா துட்டு" என்று அவன் சங்கோஜப்பட்டான்.

"வச்சுக்கொள்ளு... ஐயா இருந்திருந்தா இன்னும் நிறைய தந்திருப்பன்... இதக் கொண்டு போய் குடிகாம வீட்டுக்கு ஏதாவது வாங்கிட்டுப் போ என்ன." அம்மா கட்டளையிட்டாள்.

"நான் இப்ப குடிக்கிறேல்ல தாயி..." என்று அவன் உடனடியாக மறுத்தான்.

"சரி போய்ட்டு வா..." என்று அம்மா விடைகொடுத்தாள்.

"போய்ட்டு வாறன் தாயி" என்று கூறிக்கொண்டே கையிலிருந்த பணத்தை காற்சட்டை பைக்கற்றுக்குள் செருகிக்கொண்டு காலில் போட்டிருந்த தேய்ந்த செருப்பு இன்னும் தேயத்தேய நடந்து சென்றான் ராமு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலோஜனிக்கு வதனலோஜினி என்ற பெயர் பிடித்திருந்தது. அந்தப் பெயரை ஒரு தடவை உச்சரித்துப் பார்த்தாள்.

'பிறவுணி' அவள் கைகளை நக்கி நக்கி நனைத்துக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 06

## தனிமை

"கொக்... கொக்... கொக்கொக்..."

"கொக்... கொக்..."

இரண்டு கால்களாலும் மாறி மாறி குப்பையைக் கிளறிக்கொண்டிருந்தது சேவல்... குப்பையைக் கிளறு வதும் அலகினால் கொத்துவதும் தலையை பக்கத்து க்குப் பக்கம் திருப்புவதும் நிமிர்ந்து அங்கும் இங்கும் பார்ப்பதும்... மீண்டும் குப்பையைக் கிளறுவதுமாக பர பரப்பாக இருந்தது.

கூட்டிக் குமித்து வைத்திருந்த குப்பையை ஒருவாறு பிரித்துப் பரப்பி வைத்தது. பின் கத்திக் கத்தி ஏனைய கோழிகளை அழைத்தது. அதன் சத்தம் கேட்டு அங்கும் இங்கும் இரை தேடிக்கொண்டிருந்த ஏனைய கோழிகளும், குஞ்சுகளும் விரைந்து வந்து கிளறிப்பரப்பி வைத்திருந்த குப்பையினுள் தமக்குத் தேவையான உணவை அலகினால் கொத்திக் கொத்தி விழுங்கியது. சேவல் அவ்விடத்தை விட்டு அடுத்த குப்பை மேட்டிற்குச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசினிக்குள் இருந்து வெளிப்பட்ட மரகதம், காலையில் கூட்டி ஒதுக்கி வைத்திருந்த குப்பைகளை கோழிகள் கிளறுவதைக் கண்டு "சூய்... சூய்... ஓடுங்க எல்லாரும் அங்கால." என்று அவற்றைத் துரத்தினாள்.

கோழிகளும் சிறகை அடித்துப் பறக்க முயன்று முடியாது போக... கால்களை எட்டி வைத்து நாலா பக்கமும் ஓடிச் சென்றன.

அதிகாலை ஐந்து மணிக்கு பிள்ளையார் கோவில் மணியோசையோடு எழுந்துகொள்வாள் மரகதம். இவ்வளவு நாளும் துணைக்கு மகள் இருந்தாள். இப்பொழுது அவளும் படிக்கவென்று டவுணுக்குப் போய் இரண்டு கிழமையாகுது. வீட்டில் தனியாகத்தான் இருப்பு. இரவில் துணைக்குப் பக்கத்து வீட்டு நிர்மலா வந்து கிடப்பாள். விடிந்தது விடியமுதல் அவளும் எழுந்து போய் விடுவாள். அவள் போய்க் கொஞ்ச நேரத்தில் மணியும் அடிக்கும். அதுவரைக்கும் பாயில் புரண்டு புரண்டு படுப்பவள் எழுந்து வேலைகளைச் செய்யத் தொடங்குவாள்.

இன்றும் அதிகாலையிலேயே எழுந்து விட்டாள். என்றாலும் உடம்பு அவ்வளவாக நன்றாக இருக்கவில்லை.

வர வர உடம்பு அவளுடன் ஒத்துழைப்பதில்லை. எந்த வேலையைச் செய்வதற்கும் சற்றுப் பின் நிற்கிறது, சோம்பல்படுகிறது. உடல் மட்டுமல்ல மனமும் உற்சாகம் இழந்துதான் காணப்படுகிறது அவளுக்கு. அதற்கு அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதும், மகளின் தற்காலப்பிரிவும் தான் காரணம். என்ன இருந்தாலும் அவள்தானே அவளது வேலைகளைச் செய்தாக வேண்டும்.

காலைக் கதிரவன் கிழக்கு வானில் சற்றே உயர்ந்து மாமரத்துக் கிளைகளினூடாக தன் செங்கதிர்களை அவள் முற்றத்தில் பரப்பிக்கொண்டிருந்தான். குளிர் மெல்ல மெல்ல விலகி மெல்லிய சூடு பரவியிருந்தது... உயர்ந்து நெடுத்து வளர்ந்திருந்த தென்னைமரக் கீற்றுகளினூடாகவும் கதிரவன் ஒளி ஊடுருவிக்கொண்டிருந்தது... அந்த அழகிய காட்சி மனதிற்கு சற்று இதத்தைத் தர விளக்குமாற்றை எடுத்து சிதறிக்கிடந்த குப்பைகளை மீண்டும் கூட்டி ஒன்று சேர்த்தாள் மரகதம்.

கோழிகளை அடைத்துவிட்டால் நல்லது என்று அவற்றை கூவி அழைத்தாள்.

" ப்பா..பா...ப்பா..பா.."

கோழிகளும் குஞ்சுகளும் ஒன்றன் பின் ஒன்றாக தத்தித்தத்தி வந்தன.... மரத்தாலான கோழிக் கூட்டின் சிறிய கதவை குனிந்து திறந்து விட்டாள். அவை ஒவ்வொன்றாக உள்ளே சென்றன. குஞ்சுகள் சில உள்ளே செல்லாமல் மீண்டும் "கீச்.. கீச்.." என்று கத்திக் கொண்டு அப்பால் சென்றன.

"சூய்.. சூய்.." என்று சிறிய குச்சி ஒன்றை எடுத்து அவற்றையும் கூட்டினுள் அனுப்பினாள். சேவல் மட்டும் வருவதாக இல்லை... கிணற்றடியில் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வாய்க்காலின் சேற்றுப்பகுதியை கொத்திக் கிளறிக்கொண்டிருந்தது. அதன் பின்னால் அவளுக்கு செல்ல முடியவில்லை. சரி அதனைப் பிறகு அடைத்துக் கொள்வோம் என்று விட்டுவிட்டு அடுக்களைக்குள் வந்தாள்.

கேத்தலால் ஆவி பறந்து கொண்டிருந்தது... அடுப்பு விறகை சற்று வெளியே இழுத்து அதனை அணைத்தாள், தணித்தாள். சீனச் சட்டியால் செய்யப்பட்ட கேத்தலின் கைப்பிடியை கவனமாகப் பிடித்து கீழே இறக்கி வைத்துவிட்டு கைகளை சேலைத் தலைப்பில் துடைத்துக்கொண்டாள். பல வருடங்களாகப் பாவிக்கப் பட்டுவரும் மூக்குக் கேத்தல் அது. அதன் கைப்பிடி "லொட லொட.." வென்று எந்நேரமும் ஆடிக்கொண்டே இருக்கும். கேத்தல் செய்யப்பட்ட உலோகத்தின் நிறம் என்னவென்று கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு கன்னங்கரேலென்று கரி படிந்து கறுத்த நிறத்தில் இருந்தது. அவளது திருமணத்தின் போது வாங்கிய அடுப்படிச் சாமான்களில் இதுவும் ஒன்று.

பித்தளையும் அல்லாத, அலுமினியமும் அல்லாத ஒரு வித உலோகத்தால் செய்யப்பட்ட தேனீர்க் கோப்பை ஒன்றில் போடப்பட்ட தேயிலையினுள் சுடு நீரை ஊற்றி அதே போன்றிருந்த இன்னுமொரு கோப்பை யினால் அதை மூடி வைத்துவிட்டு எழுந்து வெளியே வந்தாள். அந்தக் கோப்பைகள் அந்தக் காலத்தில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக அவள் தகப்பனார் அவளுக்குச் சொல்லியதாக ஒரு ஞாபகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே சற்று வெளிச்சம் பரவியிருந்தது. குசினி மூலையில் எரிந்துகொண்டிருந்த மின்குமிழை அணைத்து விட்டு, மின் ஆளி பொருத்தியிருந்த சுவரின் மேற் பகுதியின் ஒரு மூலையில் கையை விட்டுத் துழாவி பற்பொடிப் பைக்கற்றை எடுத்துக்கொண்டாள். "அண்ணா பற்பொடி.." என்ற வாசகமும் அதன் வாசமும் மனதை புத்துணர்ச்சிக்குள்ளாக்கியது... பற்பொடிப் பக்கற்றை கவிழ்த்து இடது உள்ளங்கையில் ஒரு ரூபாய் அளவிற்கு பற்பொடியை கொட்டி எடுத்து வலது ஆள் காட்டி விரலால் தொட்டு பற்களைத் தேய்த்தாள்.

முன் மேற்பற்கள் நான்கும், கீழ்ப்பற்கள் இரண் டும், கடவாய்ப்பற்கள் ஒரு சிலதுமே அவளிடம் எஞ்சியி ருந்த பற்கள். அதனை நன்கு தேய்த்துக்கொண்டு கிணற் றடிக்கு வந்தாள். துலாக் கம்பியை எட்டிப் பிடித்து கிணற்றினுள் அமிழ்த்தி வாளியினுள் நீரை நிரப்பி மேலே இழுத்தாள். "கிரீச்...கிரீச்..." என்ற சத்தத்துடன் துலாக்கம்பி மேலே உயர்ந்தது. துலாக்கம்பியின் பிடிமா னத்தில் பூட்டப்பட்டிருக்கும் ஆணிகளில் ஒன்று நெகிழ்ந்து விட்டது.... அதனை மீண்டும் சரி செய்ய வேண்டும். சுந்தரேசன் வருவதாகச் சொல்லியிருக்கின்றான்.... அவ னுக்கும் ஊர்ப்பட்ட வேலைகள் என்று தனக்குள் எண்ணிக்கொண்டாள்.

கிணற்று வாளியை இழுத்து எடுத்து கிணற்றுக் கட்டிற்குக் கீழே வைத்து விட்டு இரண்டு கைகளாலும் நீரை அள்ளி வாயைக் கொப்பளித்தாள். குளிர்ந்த அந்த நீரை முகத்தில் விசிறி அடித்து முகத்தை நன்கு கழுவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள். குளிர்ந்த நீர் முகத்தில் பட்டதில் மேலும் உற்சாகம் ஏற்பட்டது. மிகுதி நீரை கால்களில் ஊற்றி முன்னங்கால்களையும், பின்னங் கால்களையும் நன்கு தேய்த்துக் கழுவிக்கொண்டாள்.

இதற்கிடையில் நாம் சுந்தரேசன் பற்றிச் சொல்லி யாக வேண்டும்.

சுந்தரேசன் வேறுயாருமல்ல மரகதத்திற்கு மரு மகன் முறையானவன். அதாவது மரகதத்தின் கணவன் கோணாமலையின் தங்கை பார்வதியின் மகன்தான் சுந்தரேசன். மாமி...மாமி... என்று மரகதத்தின் மீது அவனுக்கு விருப்பம்தான். அதை விட நிலோஜனி மீது அவனுக்கு அளவு கடந்த அன்பு.

கோணாமலையின் தகப்பன் அதாவது மரகதத் தின் மாமன் கனகசுந்தரத்திற்கு இவள் மேல் உள்ள கோபம் இன்னும் தீரவில்லை. தனது மகனை தன்னிட மிருந்து பிரித்துக்கொண்டு சென்றதுமில்லாமல் தனது கௌரவத்திற்கும் கேடு விளைவித்து விட்டாள் என்ற கோபம்... ஆனாலும் அவர் குடும்பத்தில் மற்றைய அனைவரும் இவளோடு அவ்வளவாக விரோதம் பாராட்டுவதில்லை. அது ஒரு விதத்தில் இவளுக்கு ஆறுதல் தான். அவர்களுடனான உறவை பலப்படுத்த ஒரு துருப்புச்சீட்டை கைவசம் வைத்திருக்கிறாள் மரகதம்.

சுந்தரேசன் உயர்தரம் படித்து விட்டு அரசாங்க உத்தியோகம் வேண்டாம் என்று விவசாயம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து விட்டான்.... நல்ல உழைப்பாளி.... சமூகத்தின் மீது அக்கறையும், மனித நேயமும் கொண்டவன்.

துலாவைச் சரி செய்து தருவதற்கு இன்று வருவ தாகச் சொல்லியிருந்தான். சேலைத் தலைப்பால் முகத் தைத் துடைத்துக்கொண்டு முன்முற்றத்தைக் கடந்து படலைக்கு வந்தாள்.

வீதி வழியாக இவள் வீட்டு முன் வாசலைக் கடந்து தங்கராசா மாஸ்டர் நடந்து போய்க்கொண்டி ருந்தார். அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து அவ்வீதி வழியாக நடந்து செல்வது அவர் வழக்கம், இன்றும் நடந்து வரும் போது மரகதத்தைக் கண்டுகொண்டார்.

"என்ன மரகதம் உடம்புக்கு முடியல்ல எண்டு சொன்னாங்க இப்ப எப்படி....?"

"பரவால்ல ஐயா... இப்ப கொஞ்சம் நல்லா யிருக்கு."

"ம்... சரி சரி... உடம்பப் பார்த்துக்கொள்ளு.. மகளும் பக்கத்தில இல்ல...." என்று கூறிக்கொண்டே அவர் நடையை விரைவுபடுத்தினார்.

தங்கராசா மாஸ்டர் என்டால் அவ்வூரில் தெரியாத வர்களே இல்லை. இவர் ஒரு பட்டதாரி ஆசிரியர், அதோடு ஆதிகோணேஸ்வரா வித்தியாலயத்தில் முதலாந்தர அதிபராகவும் கடமை புரிந்து இளைப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியவர். பல சிறந்த மாணவர்களையும் உருவாக்கியவர். "கலாபூசண" விருது பெற்ற ஒரு எழுத்தாளர். சிறந்த பத்திரிகையாளர். இவரது தகப்பன் வேலாயுதத்தைப் போல் இவரும் தான் பிறந்து வளர்ந்த ஊரான தம்பல காமத்தையும், அவ்வூர் மக்களையும் மிகவும் நேசிப்பவர், சிறந்த கல்விமான்.... எல்லாவற்றையும் விட சிறந்த மனிதர்.

இவரது மனைவியும் ஒரு ஆசிரியைதான். முத்தான மூன்று பிள்ளைகள்.... இரண்டு ஆண்பிள்ளை களும் வைத்தியக் கலாநிதிகள், தமது பெண் பிள்ளையையும் ஊருக்குச் சேவை செய்வதற்காக வென்றே பிரதேச செயலாளர் ஆக்கியுள்ளார்கள் போலும்.

மரகதத்தை தனது சொந்த சகோதரி போலவே பார்த்து வருகிறார்கள்.... ஒருவிதத்தில் அவளுக்கு உறவினர்களும் கூடத்தான். இன்று அந்தப் பரிவினாலேயே விசாரித்துச் செல்கிறார். அவள் வீட்டிலி ருந்து நான்கு வீடு தள்ளியே அவர் வீடும் இருந்தது.

அவரைப் பற்றிய எண்ணங்களோடு சென்றவள் "தொப்" என்ற சத்தம் கேட்டு திடுக்கிட்டாள். தென்னை மரத்திலிருந்து பழுத்த தேங்காய் ஒன்று அவளுக்கு சற்று அருகில் வந்து வீழ்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 07
## சிலிர்ப்பு

"தொப்..." என்று திடீரெனக் கேட்ட சத்தத்தில் சற்று திடுக்கிட்டுப் போனாள் நிலோஜனி. மிக அருகாமை யில் சத்தம் கேட்டதனால் சட்டென திரும்பிப் பார்த் தாள்... பத்தடி தொலைவில் நின்றிருந்த தென்னை மரத்திலிருந்து தேங்காய் ஒன்று விழுந்து ஓடியது.... பலமாக வீசிய காற்று அந்தத் தேங்காயை வீழ்த்தியிருக்க வேண்டும். இது அடிக்கடி நிகழ்வதுதான்.

அதிகாலை ஐந்து மணி முப்பது நிமிடமாயிருந் தது. வைகாசி மாதம் காலைப் பொழுது நேரத்துடனேயே விடிந்துவிடும். அதனால் வெளிச்சம் போதியதாகவே இருந்தது. அந்த வெளிச்சத்தில் நடந்து வந்து கிணற்ற டியை அடைந்தாள். தோளில் கிடந்த துவாயையும், உடுப்புக்களையும் கிணற்றுக் கொடியில் போட்டுவிட்டு, கழுவ வேண்டிய உடுப்புக்களையும் அகலமான துணி துவைக்கும் பிளாஸ்டிக் வாளியினுள் போட்டாள். பற்பசை யைப் பிதுக்கி ஒரு அங்குல நீளத்திற்கு பற் தூரிகையில் இட்டு அதனை வாய்க்குள் திணித்துக்கொண்டாள். மெல் லிய காற்று வீசிக்கொண்டிருந்தது.... முற்றாகத் தூக்கம் கலையாததால் துணி துவைக்கும் கல்லில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு பல் துலக்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாடைகளையும், வேறு சில உடுப்புக்களை யும் துவைத்துப் பிழிந்து வைத்துவிட்டு வாய் கொப்பளித் துத் துப்பினாள். பற்பசையின் சுகந்தம் வாய் முழுவதும் பரவியது. மெல்ல மெல்ல கயிற்றை விட்டுக் கொடுத்து வாளியை கிணற்றுள் இறக்கி நீரை மொண்டு இழுத்தாள். மேலே வந்த நீர்வாளியை பற்றி எடுத்து சரேலென மேனியில் ஊற்றிக்கொண்டாள். ஒரு சில வினாடிகள் குளிர் உடல் முழுவதும் பரவியது.... என்றாலும் மேலு க்கு இதமாயிருந்தது. மளமளவென இரண்டு மூன்று வாளிகள் அள்ளி ஊற்றி சந்தனத்தால் செய்த சவற்கா ரத்தை மேனி முழுவதும் தேய் தேய் என்று தேய்த்துக் கரைத்து.... மேலும் பல வாளி நீரை அள்ளி ஊற்றி குளித்து முடித்தாள். பட்டுப் போன்ற துவாயினால் உடல் முழுவதையும் சுற்றிக்கொண்டு நனைந்த ஆடையைக் கழற்றி அலசி பிழிந்து எடுத்துக்கொண்டு பாதணிகளை அணிந்து கொண்டு "சலக்.. சலக்.." என நடந்து வந்து அறையை அடைந்தாள். நேரம் ஆறுமணி இருபது நிமிடத்தைக் காட்டியது.

இன்று உத்தியோகபூர்வமாக பாடசாலையின் உயர்தர வகுப்பு ஆரம்பிக்கும் நாள். அவளுக்கு புதிய பாடசாலை, புதிய வகுப்பு, புதிய பாடங்கள் ஆரம்பிக்க இருக்கும் நாள். அவளைப் பொறுத்தமட்டில் ஒரு பொன்னான நாளாக அமையப் போகும் ஒரு நாள். அதற்கான ஆயத்தங்கள் செய்யவே இன்று வேளைக்கு எழுந்து குளித்து வந்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடி முன் நின்று கதை பேசுவதும், தமது அழகை தாமே இரசிப்பதும், மேலும் மேலும் அழகை அழகுபடுத்துவதும் பெண்களின் தனித்தன்மை.... அவளும் அதற்கு விதிவிலக்கல்லதானே.

புதிய சீருடையை கையில் எடுத்து அதன் வாசத்தை முகர்ந்து பார்த்தாள். அதுவே ஒரு புத்துணர்ச் சியைக் கொடுத்தது போலிருந்தது. அதனை மார்போடு இறுக அணைத்துக்கொண்டாள். பின் அதனை உடுத்தி மேனியோடு உறவாடவிட்டாள். நெஞ்சுப்பகுதியில் பொறிக்கப்பட்டிருந்த பாடசாலைச் சின்னத்தை தொட்டுப் பார்த்து மகிழ்ச்சியடைந்தாள். சீருடையின் கீழ்ப்பகுதியில் சீராக, அழகாக அமைக்கப்பட்ட மடிப்புக்களை தடவித் தடவிப் பார்த்தாள்..... இடுப்புப் பட்டியை இணைத்து ஊசி குத்திக்கொண்டு மீண்டும் மீண்டும் அவை சரியாக இருக்கிறதா என்று கண்ணாடியை பார்த்துக்கொண்டாள். தலை முடியை நடு உச்சிவைத்து இரண்டாகப் பிரித்து அழகான கத்தரிப் பின்னல்கள் இரண்டு போட்டுக் கொண்டு அதன் நுனிப் பகுதியை மடித்து கறுப்பு நாடா கட்டி சுருக்கிட்டுக் கொண்டாள். நெற்றியில் சிறிய கறுப்புப் பொட்டு மூக்கு ஆரம்பிக்கும் இடத்திற்கு சற்று மேலாக இட்டுக்கொண்டு மீண்டும் தன்னை சரி பார்த்துக் கொண்டாள். எல்லாம் சரியாகத் தான் இருக்கிறது ஆனாலும். அவளுக்குப் பூரண திருப்தியில்லைத்தான்.

நேரம் ஏழு மணி பதினைந்து நிமிடத்தைக் காட்டியது இன்று முதல் நாள் என்பதனால் அவர்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக எட்டு மணிக்கு வரச் சொல்லி அறிவுறுத்தப் பட்டிருந்தது. எனவே நேரம் இன்னும் இருக்கிறது தான்.

'அன்ரி' காலைச் சாப்பாட்டை தயார்படுத்திவிட்டு இவளை அழைத்தாள். இதற்கிடையில் அக்கா இரண்டு மூன்று தடவைகள் அறைக்குள் வந்து போனதை இவள் கவனித்ததாகத் தெரியவில்லை.

முன்னமே தயார்படுத்தி வைத்திருந்த புத்தகப் பையை எடுத்துக்கொண்டு 'ஹேறாலுக்கு' வந்தாள்.... அதை கதிரை ஒன்றின் மேல் வைத்து விட்டு அடுக்களை க்குள் சென்றாள்.

நீண்ட நாட்களின் பின் 'அன்ரி' தோசை சுட்டு வைத்திருந்தாள். இரண்டு தோசைகளை எடுத்து சில்வர் கோப்பையினுள் போட்டுக்கொண்டு, அரைத்து வைத்த சம்பலையும் கரண்டியால் அள்ளி அதன் மேல் போட்டு, அதனைப் பிட்டு சம்பலில் தொட்டு வாய்க்குள் திணித்துக் கொண்டு முன் முற்றத்திற்கு வந்தாள் நிலோஜனி.

வழமை போல் அக்கா மரங்களோடும், செடிக ளோடும், பூக்களோடும் கதை பேசிக்கொண்டிருந்தாள்.... ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் அக்காவினு டைய வேலைகளில் இதுவும் ஒன்று. 'மரங்களும் மனிதர்கள் போலத்தான்' என்று சொல்லுவாள். எந்த நாளும் அவைகளுடன் கதைத்துப் பேசினால் அவை மகிழ்ச்சியாக இருக்குமாம், நன்றாக வளருமாம், பூக்கள் பூத்துக் காய் காய்க்குமாம், அதன் ஆயுளும் நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் நிலைத்து நிற்குமாம், அவளும் அவதானித்திருக் கிறாள்தான். அக்கா வரும்போதெல்லாம் வாசலில் நிற்கும் ரோஜாச்செடி மலர்வதும்...., ரோஜாப்பூ தலை சாய்த்து வரவேற்பதும் நடப்பதுதான்.

சாப்பிட்டுமுடித்து கோப்பையை கழுவி வைத்து விட்டு கைகளைத் துடைத்துக்கொண்டு மீண்டும் ஹோலு க்கு வந்தாள். நேரம் ஏழு நாற்பதைக் காட்டியது. புறப்பட நேரம் சரியாயிருந்தது. அன்ரியிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு, அக்காவிடம் சொல்லிவிட்டு முற்றத்துக்கு இறங்கினாள்.

நாய் வாலை வாலை ஆட்டி ஆட்டி அவளையே சுற்றிச் சுற்றி வந்தது. ஆறேழு நாட்களாக வீட்டிலேயே இருந்தவள் இன்று புதுப் பொலிவுடன் காலையிலேயே புறப்பட்டு விட்டாளே.... என்ற எண்ணம் அதற்கு. எங்கே அவள் தன்னை விட்டு விட்டுச் செல்கிறாள் என்ற கவலை அதற்கு. அவளைப் பார்த்துக் குரைத்தது. மெல்லக் குனிந்து தலையைத் தடவிக் கொடுத்தாள். "நான் ஸ்கூலுக்குப் போய்ட்டு வாறன் நீ போய்ப் படு.... என்ன....." என்று கூறிக்கொண்டே சென்றாள். அது அவள் பின்னாலேயே சென்றது. "உள்ளே ஓடு...." என அதட்டி விட்டு கேட்டைத் திறந்து வீதிக்கு வந்தாள்.

கதிரவன் தென்னை மரங்களின் பின்னால் ஒளிந்து கொண்டு இளமஞ்சட் கதிர்களை அவள்மேல் எறிந்து கொண்டிருந்தான். அந்தக் கதிர்கள் அவள்மேல் பட்டு நாணி தெறித்து ஓடியது. அவளைச்சுற்றி ஒளிக்கீற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவி ஒரு புதிய காட்சியையும் அனுபவத்தையும் கொடுத்தது. நெற்றிக்கு மேல் கைகளை உயர்த்தி குடை போல் கண்களை மறைத்துக்கொண்டு கதிரவனைப் பார்த்துக் கண்சிமிட்டிச் சென்றாள்.

குறுக்கு வீதியைக் கடந்து வித்தியாலம் வீதியை எட்டும்போது அவளைப்போல் வெள்ளைச் சீருடையோடு மூவர் புத்தகங்களைக் காவிக்கொண்டு அவள் எதிரே வந்தார்கள். அவர்கள் அணிந்திருக்கும் புதிய சீருடையும் மினுமினுக்கும் காலணியும், கிழிந்து போகாத புத்தகங்களும் அவர்களும் புதிய உயர்தர வகுப்பு மாணவர்கள் என்பதைக் காட்டியது. அவர்கள் காளி கோயில் பக்கம் நோக்கி வருவதைப் பார்த்தால் இந்துக்கல்லூரி மாணவர்கள் போலத்தான் தெரிகிறது.

மூவரும் தமக்குள் ஏதோ பேசிக்கொண்டு வந்தவர்கள் அவளைப் பார்த்ததும் வாயடைத்துப் போனார்கள். அவள் குனிந்த தலை நிமிராது நடந்தாள். ஆனாலும் ஓரக்கண்ணால் அவர்களைப் பார்க்கத் தவறவில்லை. அவர்களுள் இருவர் சுதாகரித்து மீண்டும் தமது சம்பாஷணையை தொடர்ந்தார்கள்..... ஆனால் மூன்றாமவன் மட்டும் எதுவும் பேசாமல் தலை குனிந்தே வந்தான். அவன் பார்ப்பதற்கு அழகாகவும், சாந்தமாகவும் காணப்பட்டான். அவள் வரும் பக்கத்தாலேயே அவர்களும் நடந்து வந்தது அவளுக்கு சங்கோஜத்தை ஏற்படுத்தியது. அவள் இனி மறு பக்கம் மாறவும் முடியாது.... அவர்களும் மிக அருகில் வந்து விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவரோரமாக சற்று ஒதுங்கி மெல்ல அடி எடுத்து வைத்தாள். அவளது கண்கள் அவர்களைப் பார் பார் என்றது..., நாணம் தடுத்தது..., இறுதியில் புலன் வென்றது. கண்ணிமைக்கும் பொழுதில் அவர்களை நிமிர்ந்து பார்த்தாள். அவள் பார்க்கும் வேளை அந்த மூன்றாமாவனும் நிமிர்ந்து அவளது கண்களைப் பார்த் தான். அடுத்த கணம் இருவரும் தலையைத் தாழ்த்திக் கொண்டு குறுக்கறுத்துச் சென்றார்கள். அவளைக் கடந்து சென்றவுடன் அதில் ஒருவன் "அப்பா.... என்ன அழகுடா இது....." என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டு சென்றான்.

நடையைச் சற்று விரைவுபடுத்தி பாடசாலை வாயிலை அடைந்தாள்.

நீல நிறப் பலகையில் வெண்ணிற எழுத்துக் களால் பாடசாலையின் பெயர் அழகாகப் பொறிக்கப்பட்டி ருந்தது. கீழே தேசிய பாடசாலை என்ற பாடசாலையின் தரமும் பொறிக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்த்து உள மகிழ்ச்சியோடு உள்ளே சென்றாள். முன்னர் ஓரிரு தடவைகள் வந்திருந்தாலும் இன்று உள்ளே செல்வது ஒரு உவகையையும், பதட்டத்தையும் கொடுத்தது. பயம் கலந்த மகிழ்ச்சி என்றே சொல்லலாம்... அறியாத வயதில் முதலாம் வகுப்பிற்கு முதன் முதலாக பாட சாலை சென்றது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தியது அவளுக்கு. அவளைப் போல் பலர் அதிபர் அறையின் முன்னே காத்து நின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளைத் தொடர்ந்து பிரதான மண்டபத்திற்குள் அனைவரும் அழைக்கப்பட்டு அதிபரினால் பாடசாலை பற்றியும், ஒழுக்கம் பற்றியும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. பின்னர் ஆசிரியர் களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நடைபெற்று பாடப் பிரிவுகளும், வகுப்புகளும் வேறுபடுத்தப்பட்டன. பின் அந்தந்த வகுப்புகளுக்கான வகுப்பாசிரியர்கள் பின்னால் மாணவிகள் அணிவகுத்துச் சென்றார்கள்.

அவளுக்கு எல்லாம் புதிதாகவும், மிரட்சியாகவுமே இருந்தது. ஆசிரியர் உட்பட சக மாணவிகள் அனைவருக் கும் ஒரு "ஹலோ" சொல்லி! புன்னகை புரிந்தாள்... ஏனோ அந்தவேளை காலையில் பார்த்த அந்தப் பைய னின் முகம் ஞாபகம் வந்தது.

அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி அமர்ந்துகொண்டார்கள். வகுப்பாசிரியர் வரவு இடாப்பை பதிந்து விட்டு அன்றைய நாளுக்காக சிறிது நேரம் பாடம் எடுத்து விட்டு "இருங்க பிள்ளைகள் வாரன்.." என்று கூறிக்கொண்டு சென்றுவிட்டார். ஏனைய பாடவேளைகள் அதிகமாகப் பாடம் எதுவும் நடக்க வில்லை. மாணவிகள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொண்டார்கள்.

அதில் ஒரு சிலரை அவள் பிரத்தியேக வகுப்புக் களில் பார்த்திருந்ததனால் அவர்களோடு அதிக நேரம் பேசிக்கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று முப்பதுக்கு இறுதிப்பாடவேளை மணி ஒலித்தது. அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கத்தை முடித்துக்கொண்டு பாடசாலை விட்டுச் சென்றார்கள்.

அவளும் சற்றுக் களைப்புடன் இருப்பிடம் வந்து சேர்ந்தாள். வரும் வழியில் அந்தப் பையனைக் காண்போமா என்று அவள் கண்கள் ஏங்கியதை அவளால் தவிர்க்கமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 08

# ஏக்கம்

ஏக்கம் நிரம்பிய அந்த ஒரு சோடிக் கண்கள் அவளையே பார்த்துக்கொண்டிருந்தன. அவளை என்று சொல்வதை விட அவள் கையில் வைத்து சுவைத்துக் கொண்டிருக்கும் குளிர்களியையே பார்த்துக் கொண்டிருந்தன. அவளும் அந்த ஒரு சோடிக் கண்களைப் பார்த்துவிட்டாள். தானும் கண்களால் பேசினாள். கையில் வைத்திருந்த குளிர்களியை தன் முன்னே நீட்டி, அதனை அந்த ஒரு சோடிக் கண்களுக்கு காட்டி வேண்டுமா என்று கண்களால் வினவினாள். அதற்கு அந்த அழகான மான்விழி போன்ற கண்களுக்கு சொந்தக்காரியான மூன்று வயதுடைய குட்டிக் குழந்தை அருகில் நின்ற தனது தாயை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் ஏக்கத்தோடு கண்களைத் தாழ்த்திக்கொண்டது.

அக் குழந்தையைப் பார்க்கப் பாவமாயிருந்தது அவளுக்கு... "அடியேய் ஒரு இருபது ரூபா இருந்தாத் தாவன்." என்று அருகில் நின்ற தோழியிடம் கேட்டாள் நிலோஜனி.

"ஏன்டி கையில ஒரு ஐஸ்கிரீம் வச்சிருக்கிறாய் தானே... அத முதல்ல சாப்பிடு. பிறகு இன்னொன்டு வாங்கலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய்.... உன்னட்ட காசு இருக்கா இல்லையா....?"

"இருக்கு.... பொறு தாறன்." என்று அவள் தோழி வதனலோஜினி கைப்பையைத் திறந்து இருபது ரூபாய்த் தாள் ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினாள். அதை வாங்கிக்கொண்டு அருகில் இருந்த கடைக்குள் நுழைந்த நிலோஜனி கையில் இன்னுமொரு குளிர்களியுடன் வெளியே வந்தாள்.

"ஏன்டி இரண்டையும் ஒன்டா சாப்பிடப்போறியா, இல்ல.... உன் ஆளுக்கு குடுக்கப்போறியா?" என்று அவள் அருகில் நின்ற மற்றைய தோழி கிண்டல் செய்தாள்.

அவர்களது கிண்டலையும் பொருட்படுத்தாது அந்த ஐஸ்கிரீமைக் கொண்டு ஐஸ்கிரீம் போன்று இருந்த அந்த அழகான குழந்தையிடம் நீட்டினாள்.

அது ஆசையாக கையை நீட்டியது.

உடனே அக் குழந்தையின் தாயார் பதட்டத்துடன் "ஐயய்யோ.... வேண்டாம்... அவள் இதெல்லாம் சாப்பி டுறதில்லை." என்று நெளிந்தாள்.

"இல்ல 'அன்ரி' பரவாயில்ல.... குழந்தப்பிள்ள தானே சாப்பிடட்டும் குடுங்க." என்று கூறிக்கொண்டே அத் தாயின் பதிலுக்குக் காத்திராமல் அக் குழந்தையின் கையில் அக்குளிர் களியைக் கொடுத்துவிட்டு அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னத்தில் ஒரு முத்தமிட்டுவிட்டு கையசைத்து அக் குழந்தைக்கு விடை கொடுத்து வந்தாள்.

அக்குழந்தையின் கண்களும், உதடுகளும் மலர்ந்தன. அவசர அவசரமாக ஆனால் இரசித்துச் சுவைத்து வாய் முழுவதும் பரப்பி தேய்த்து, பின் கடித்து என்று அக்குழந்தை அக்குளிர்களியை சாப்பிட்டது. அதன் கைகளால் வழிந்து முழங்கை வரை வந்துவிட்ட உருகிய குளிர்களியை நாக்கால் நக்கி சுவைத்தது அக் குழந்தை. இவை அனைத்தையும் தூரத்தே நின்று பத்து நிமிடத் திற்கு மேலாக பார்த்து இரசித்துக் கொண்டிருந்தாள் நிலோஜனி அக் குழந்தைக்குத் தெரியாமல்.

அவளுக்கும் தெரியாமல் இன்னுமொரு சோடிக் கண்கள் அவள் ஐஸ்கிரீம் சாப்பிடுவதைப் பார்த்து இரசித்துக்கொண்டிருந்தது... இது அவளுக்குத் தெரி யாது. அப்படி நிலோஜனியைப் பார்த்து இரசித்துக் கொண்டிருப்பது யாரென்று எண்ணுகிறீர்கள்....?

அவள் பாடசாலைக்கு முதன் முதலாகச் செல்லும் பொழுது அவளுக்கு எதிராக மூவர் வந்தார்களே உங்க ளுக்கு ஞாபகம் இருக்கிறதா....? அதில் நடுவில் ஒருவன் அமைதியாக வந்தானே... அவனது கண்களும் அவளது கண்களும் ஒரு வினாடி சந்தித்துத் தாழ்ந்தனவே, அதைக் கூட நாம் அவதானித்தோமே. அந்தப் பையன் தான் இவன். அவன் பெயர் நிரோஷன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய அவர்களது சந்திப்பு அவள்பால் அவனுக்குள் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அன்று அதை அவன் அறிந்துகொள்ளவில்லை... எதை யும் ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாக செய்யும் அவன் அவள் மீதான அந்த ஈர்ப்பையும் தன்னுள்ளே வைத்து அமைதி காத்துக்கொண்டான். எனினும் அவளைப் பார்க்கும்போதெல்லாம் அவனுள் அளவில்லாத ஆனந்தம் ஏற்படும். ஆரம்பத்தில் அவளைப் பற்றிய எந்த சிந்தனையும், எண்ணமும் அவனிடம் இருக்கவில்லை. ஆனால் நாள் செல்லச் செல்ல அவளது அழகும், அவ ளது நடவடிக்கைகளும் அவனுள் ஒரு தீப் பொறியை ஏற்படுத்தியிருந்தது.... நாளாக நாளாக அது பெரும் தீயாகி அவன் உள்ளத்துள் வளர்ந்து அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக எரித்துக் கொண்டுவருகிறது. இவை எதையும் அவன் அவ்வளவாக வெளிக்காட்டிக் கொள்வதில்லை. இனியும் வெளிக்காட்டப்போவதில்லை.

பிரத்தியேக வகுப்புக்களிலேயே அவர்கள் இருவ ரும் சந்தித்துக்கொள்வார்கள். அதற்காகவே அவன் காத்துக்கொண்டிருப்பான்.

இன்றும் அப்படித்தான், பிரபல பொருளியல் ஆசிரியரான சின்னவன் மாஸ்டரின் வகுப்பு முடிந்து வருகிறார்கள்..... நேரம் இப்பொழுது மதியம் ஒரு மணி கடந்திருந்தது. காண்டாவனக் காலமிது... வெய்யில் மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. இந்தவேளை ஐஸ்கிரீம் சாப்பிட்டால் நன்றாக இருக்கும் என்று தோழி கள் சேர்ந்து பாடசாலைக்கு முன்னால் இருக்கும் குளிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானக் கடைக்குள் வந்திருந்தார்கள். அங்குதான் இந்தச் சம்பவம் நடந்திருந்தது. அதைத்தான் அந்தப் பெண்கள் குழாத்திற்குப் பின்னால் வந்த இந்தப் பையன்கள் அவதானித்துக்கொண்டிருந்தார்கள். அதில் நிரோஷனோடு அவனது நண்பர்களான பார்த்தீபன், டிக்ஷன் மற்றும் ஓரிருவர் நின்றிருந்தார்கள்.

இப்பொழுது நாங்கள் மீண்டும் அந்தப் பெண்கள் குழாத்திற்குள் நுழைவோம்.

"அடியேய் அங்க பாரன் அவனுகள் நின்டு பார்த்துக்கொண்டிருக்கிறானுகள்." இது வதனா.

"அவனுகள ஏண்டி நீ பார்க்கிறாய்..... நீ உன் பாட்டில நில்லு....." இது அவர்களது இன்னுமொரு தோழி இலக்கியா.

"கெதியா முடியுங்கடி பசி எடுக்குது..... வீட்ட போவம்" இது வதனா

"ஏண்டி அவசரப் படுறாய் கொஞ்சம் நிண்டுட்டு போவமே.." இது காவியா

இவர்களது சம்பாஷனைகள் எதிலும் கலந்து கொள்ளாது நிலோஜனி அந்தக் குழந்தையையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

இதை அவதானித்த காவியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடியேய் அங்க பார்த்தது போதும்.... வா போகலாம்...." என்று சொல்ல மற்றைய எல்லோரும் "கொல்" எனச் சிரித்துவிட்டனர்.

அதன் பின்தான் அவளுக்குப் புரிந்தது தான் அந்தப் பையன்களைப் பார்த்துக்கொண்டு நிற்பதாக தோழிகள் எண்ணிவிட்டார்கள் என்றும், அதனால்தான் கேலி பண்ணிச் சிரிக்கிறார்கள் என்றும், அதனால் உடனேயே அதற்கு மறுப்புத் தெரிவித்தாள்.

"சும்மா இருங்கடி.... நான் ஒன்னும் அவனுகளப் பார்க்கயில்ல..... அந்தச் சின்னக் குழந்தையைத் தான் பார்த்துக்கொண்டு நின்டனான்." என்றாள்

"சரி... சரி... நாங்க நம்பிட்டம்..." என்று கோரசாகக் கத்தினார்கள்.

"நீங்க நம்பினா என்ன நம்பாட்டி என்ன" என்று பொய்க் கோபம் காட்டினாள் நிலோஜனி

"உன்ட ஆள் அங்க நிக்கிறான் தானே... அது தான் பார்த்திருப்பாய்... எங்களிட்ட கத விடாத..." என்றாள் காவியா

அதற்கு நிலோஜனி எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை மௌனமாக நின்றாள். அவளது மனமும் அவனைப் பார்க்க வேண்டும் என்று எண்ணியது.... ஆனாலும் அவள் அவனைப் பார்க்கவில்லை. கொஞ்ச நாட்களாக அவள் மனம் சொல்வதை அவள் புத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்வதாய் இல்லை. புத்திக்குத் தெரிந்ததை மனம் ஏற்றுக்கொள்வதாய் இல்லை. இரண்டும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டே நிற்கிறது. ஒன்று பார் என்கிறது, ஒன்று பார்க்க வேண்டாம் என்கிறது.

முதன் முதலாக அவனைப் பார்த்தபோது அவ ளுள் ஏற்பட்ட மாற்றத்தை அவள் அறிந்திருந்தாள். எனினும் தொடர்ந்து பார்க்கவோ, பழகவோ வேண்டும் என்ற எண்ணம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் கொஞ்ச நாட்களாக அவளுள் பல குழப்பங்கள். அவன் தன்னை நெருங்கி வருவதாக உணர்கிறாள்..... அவன் தன்னிடம் எதையோ செல்ல நினைப்பதாக எண்ணுகிறாள். அதே போல தனது உள்ளமும் அவனை நெருங்க முயற்சிப் பதாகவும், அவனிடம் எதையோ பேச முனைவதாகவும் உணர்கிறாள்.

சட்டென தனது எண்ண அலைகளை மாற்றிக் கொண்டவள் "வதனா.... போகலாம் வா...." என்று அவள் சைக்கிள் அருகில் சென்றாள். அவளைத் தொடர் ந்து மற்றவர்களும் புத்தகப்பைகளையும், புத்தகங்களை யும் எடுத்துக்கொண்டு பின் தொடர்ந்தார்கள்.

அந்தக் கடையே வெறிச்சோடிப் போனது போல் இருந்தது.

வதனாவின் சைக்கிளின் பின் கரியரில் ஏறி அமர்ந்து கொண்டாள் நிலோஜனி... 'சைக்கிளை மிதித் துப் புறப்பட்டாள் வதனா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையைக் கடந்து சாரதா வீதியினுள் திரும்பி வீடு வந்து சேர்ந்தார்கள் இருவரும்.... இவர்கள் திருப்பத்தில் திரும்பும் போதே மற்றைய தோழிகள் சைகைகள் செய்து, 'பாய்' சொல்லி விடைபெற்றுச் சென்றார்கள். அந்தப் பையன்களும் அவர்கள் பின்னால் சைக்கிளை ஓட்டிக்கொண்டு வந்தார்கள்.

வீட்டு வாசலில் வந்து இறங்கிய நிலோஜனி வதனாவிற்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு அவள் போகும் வரை வாசலிலேயே காத்து நின்றாள் அவன் தன்னைப் பார்க்க வருகிறானா என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 09

## தம்பைநகர்

அதிகாலையில் எழுந்து வேலைகளை முடித்து விட்டாள் என்றாலும் மனது அவ்வளவாகச் சரியாக இல்லை... கோயிலுக்குப் போய்வந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டாள் மரகதம்.

அறைக்குள் சென்று மர அலுமாரியைத் திறந்தாள். அடுக்கி வைத்திருக்கும் சேலைகளைப் பார்த்ததும் கண்களில் நீர் முட்டியது. அவர் உயிரோடு இருந்திருந்தால் இந்த சேலைகளைக் கட்டச் சொல்லி அழகு பார்த்திருப்பார். மரகதமணி என்ற பேரிற்கேற்ப அவளை மரகதம் போல் ஜொலிக்கச் செய்திருப்பார். "ஹ்ம்.." என்ற பெருமூச்சோடு அலுமாரியின் கதவை மூடி திறப்பை எடுத்து மேல் தட்டில் வைத்தவிட்டு பூக்கூடையை எடுத்துக்கொண்டு முற்றத்திற்கு வந்தாள்.

வேலியோரம் நின்ற பொன்னொச்சி மரம் காற்றில் அசைந்து இவளை வா.... வா.... என்று அழைப்பது போல் இருந்தது. சுவரோரம் சாத்தி வைத்திருந்த கொக்கைத்தடியை எடுத்துக்கொண்டு மரத்தின் அருகே வந்து, அதன் கொப்புகளை கவனமாக இழுத்து, வளைத்து பூக்களைக் கொய்தாள். எவ்வளவு கவனமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைத்தாலும் அதன் கிளைகள் முறியத்தான் செய்தன. முறிந்த கிளைகளில் இருந்த பூக்களைப் பறித்து பூக்கூடைக்குள் போட்டுக்கொண்டு முறிந்த கிளையை வேலியோரமாக எறிந்துவிட்டு வந்தாள். பறித்த பூக்களை சுத்தமான நெகிழிப்பை ஒன்றினுள் போட்டு எடுத்துக் கொண்டு படலையைத் திறந்து வீதிக்கு வந்தாள்.

பொதுக்கிணற்றில் யாரோ குளிக்கும் சத்தம் கேட்டது... அது நிர்மலாவின் கணவன் குமரேசனாகத் தான் இருக்க வேண்டும். வயல் விதைப்பு ஆரம்பித்து விட்டதால் அவன் வயலுக்குச் செல்வதற்காக ஆயத்தமாகிறான் போலும், என்று எண்ணிக்கொண்டே வீதியில் அடி எடுத்து வைத்தாள்.

எதிரே, பரந்து விரிந்த வயல்வெளி விதைப்புக்காக காத்துக்கொண்டிருந்தது. ஓரிருவர் மாடுகளில் கலப்பையைப் பூட்டி அதனை விரட்டிக்கொண்டிருந்தார்கள். சிலர் வரம்புகளை சரிசெய்துகொண்டிருந்தார்கள்.... வயல்வெளியைத் தாண்டி மேற்குப்பக்கமாக தென்னை மரங்கள் நிறைந்த கரைச்சத்திடல் தென்பட்டது. வடமேல் பக்கமாக கறுத்த, தடித்த கோடு வரைந்தது போன்று பிரதான வீதி மேற்குப்பக்கமாகச் சென்றது. திருக்கோணமலைக்குப் போகும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து சனங்களை ஏற்றிக்கொண்டு ஊர்ந்து சென்றது.

இன்று வெள்ளிக்கிழமை சிலவேளை மகள் வரக்கூடும்.... அவன் பிரபா டவுனுக்குப் போனால்

கேட்டுவரச் சொல்லவேணும். என்று முணுமுணுத்துக் கொண்டே தெற்குப்பகுதி நோக்கி நடையைக் கட்டினாள்.

ஒருகாலத்தில் சலவைத் தொழிலாளர்கள் குடியிருந்த ஒரு மேட்டுப்பகுதியாக அப்பகுதி விளங்கியிருக்க வேண்டும். ஏனெனில் வண்ணார்திடல் என்று அப்பகுதி முன்னர் அழைக்கப்பட்டதாக அவள் பாட்டனார் கூறக் கேள்விப்பட்டிருக்கிறாள். தற்போது அப் பிரதேசம் வர்ணமேடு என அழைக்கப்படுகின்றது. அவளுடைய வீட்டுப் பிரதேசம் சின்னவர்ணமேடு என்று அழைக்கப்படுகிறது.

வர்ணமேட்டில் அமைந்துள்ள சமயம்பாள் கோயில் அங்குள்ள மிகப் பழமையான கோயில்களில் ஒன்று. அதன் கட்டட அமைப்பைப் பார்த்தாலே அது தெரிந்துவிடும். கோயிலின் வெளிவாசற் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றாள். பூசகர் பூசைக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார். இவளைக் கண்டதும்......

"என்ன மரகதம் அம்மா... எப்படி இருக்கிறீங்க... நீண்ட நாளா காணேல்லயே...." என்று நலம் விசாரித்தார்.

"ஓம் ஐயா.... மகளும் இல்ல, உடம்பும் முன்னப் போல இல்ல, அது தான் வாரது குறைவு...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்... சரி சரி..... உடம்பக் கவனமாப் பார்த்துக் கொள்ளுங்கோ." என்று கூறிக்கொண்டே அவர் மடப்பள் ளிக்குள் போய்விட்டார்.

கையில் கொண்டுவந்த பூக்களில் ஒன்றிரண்டை எடுத்து அம்மன் வாசலில் வைத்து கும்பிட்டு, பஞ்சாங்க நமஸ்காரம் செய்து எழுந்து, திருநீறு பூசிக்கொண்டு திரும்பினாள்.

கரைச்சத்திடல் தாண்டி கூட்டாம்புளி செல்லும் கொங்கிரீட் பாதையின் இரு பக்கத்திலும் வயல் காணி கள். கதிர்வெட்டு நேரத்தில் நெல்மணிகளை அந்தப்பாதை யில் போட்டுத்தான் காயவைப்பார்கள். இப்பொழுது விதைப்புக்காலம் என்பதனால் பாதை வெறுமனே கிடந்தது. அவள் அவ் வழியாக நடந்து கூட்டாம்புளியை அடைந்தாள்.

'சில்' என்ற சுத்தமான புதிய காற்று உடலை வருடிச்சென்றது. உள்ளம் பூரித்தது.... காரணம், அது அவள் வாழ வந்த பிரதேசம்.

கால்கள் நடந்தனவே ஒழிய அவளது எண்ணங் கள் எங்கோ சென்றன. காதுகளில், காங்கேயன் காளை கள் இரண்டு பூட்டிய, இரும்புக் கவசம் அடித்த கருங் காலியால் ஆன சில்லுகள் கொண்ட, வெயிலும் மழையும் தாக்காத மூடப்பட்ட அழகிய வண்டில் உருண்டோடும் "கட கட" என்ற சத்தம் ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் அந்த வழியால் செல்லும் போது அவள் பல தடவைகள் பார்த்திருக்கிறாள். கோணாமலை அந்தக் கரத்தை வண்டியில் பின்னால் அமர்ந்து கொண்டு செல்வதை.... அவன் படிப்பதற்கு பாடசாலை சென்று வருவது அந்த வண்டிலில் தான். முன் இருக்கையில் சிலவேளைகளில் அவனது தகப்பன் அமர்ந்திருப்பார். அவர் அவ் வழியால் போகும் போது பலர் அவரைக் கையெடுத்துக் கும்பிடுவதையும், சிலர் தலையில் கட்டிய துண்டையும், தோளில் போட்டிருக்கும் துண்டையும் எடுத்து அக்குள் பகுதியில் வைத்துவிட்டு, அவரை வணங்குவதையும் பார்த்திருக்கிறாள். சிலவேளைகளில் அவனையும் கும்பிடுவார்கள். அவனும் பெருமிதமாக அதைப் பார்த்து மகிழ்ந்து செல்வதையும் அவள் அவதானித்திருக்கிறாள்.

உயர்ந்த குலத்தில் பிறந்தவர்கள், செல்வச் செழிப்பு மிக்கவர்கள், மற்றவர்களுக்கு படியளக்கும் முதலாளி வர்க்கத்தினர் அப்படித்தான் செல்வார்கள். அவன் அப்படிச் சென்றதில் ஆச்சரியமில்லைதான்.

சிறுபராயத்திலிருந்து இளமைப் பருவத்தை எட்டியபோதுதான் தெரிந்தது அவளுக்கு.... தான் திரு மாலை நோக்கி தவமிருக்கும் ஆண்டாள் என்று. சிறுவய திலிருந்தே அவன் மீது அவளுக்கு ஒரு ஈர்ப்பு.... நாள் செல்லச்செல்ல அது அன்பாக மாறியிருந்தது. இருவரும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பிலேயே படித்து வந்தா ர்கள். பாடசாலையும், கல்வியும் எந்தப் பிரிவினையும் பார்ப்பதில்லைதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதிலிருந்து ஒன்றாகவே விளையாடித் திரிந்தவர்கள் பருவ வயதை எட்டியதும் மெல்ல விலத்திக்கொண்டார்கள். கதைபேச்சுக்களும், விளையாட்டுக்களும் குறைந்தது.... ஆனாலும் அவன் மீதான அன்பு அவளுக்குக் குறையவில்லை. பள்ளிப்படிப்பை இடையிலேயே நிறுத்திக்கொண்டாலும், அவன் நினைவுகள் மட்டும் மனதிலிருந்து அகலவில்லை.

"என்ன மாமி.., எங்க கோயிலுக்கா..." என்ற குரல் கேட்டு சற்றுத் திடுக்கிட்டுத் திரும்பியவள் அருகே சுந்தரேசன் மோட்டார் சைக்கிளில் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

"ஓம் மருமகன் கோயிலுக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறன்.... நீங்க எங்க போறீங்க."

"வயல்ல கொஞ்சம் வேலை இருக்குது மாமி... அது தான் போய்க்கொண்டிருக்கிறன்."

"சரி சரி... நீங்க புறப்படுங்க... நான் போறன்."

"சரி மாமி... இப்ப துலா நல்லா வேலை செய்யுதா மாமி."

"ஓம், ஓம் நீங்க செய்து தந்ததுக்குப் பிறகு நல்லா இருக்குது."

"அப்படியா மாமி..... வீட்ட தனியாத்தான் இருக்கிறீங்களா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்ன என்ன செய்யுறது.... உங்கட மாமனும் என்ன தனியா விட்டுட்டுப் போயிட்டார். அவளும் படிக்கப் போறன் எண்டு மலைக்குப் போயிட்டாள், ம்.... தனியாத் தான் கிடக்கிறன்."

"எப்ப மாமி நிலோஜி வருவா.?" அவளைப் பற்றி விசாரிப்பதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந் தவன் சட்டெனக் கேட்டுவைத்தான்.

அவனது எண்ணத்தைப் புரிந்து கொண்ட மரகத மும் "வாரகிழமை வருவாளெண்டு சொன்னாள்..... வகுப் புகள் இருக்குதாம்... அது தான் வரயில்லையாம்."

"ஓம்.... அது சரிதான் மாமி..... வகுப்புகளக் கட்பண்ண முடியாதுதானே." என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டு "சரி மாமி எனக்கு நேரமா குது. நான் வாரன்." என்று மோட்டார் வண்டியை 'ஸ்டாட்' செய்து புறப்பட்டான்.

நல்ல பையன். என் எண்ணம் மட்டும் நிறைவேறிட் டெண்டா. கோணேசர் பெருமானே.... என்று தம்பை நகரின் முழுமுதற் கடவுளான கோணேசரை மனதிற்குள் வணங்கிக்கொண்டாள்.

பலவிதமான எண்ண ஓட்டங்களோடு நடந்து வந்த மரகதம் ஆலடிப் பிள்ளையார் மணியோசைகேட்டு தலையில் மூன்று முறை குட்டிக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் கோயில் காலைப்பூசை ஆரம்பமாகி யிருந்தது. இரண்டு மூன்று பேர் அங்கே நின்றிருந்தார் கள். மரகதமும் உள்ளே சென்று, பூசைக்காக பூக்கள் வைக்கப்பட்டிருந்த குடலியினுள் தான் கொண்டுசென்ற பூக்களைப் போட்டு விட்டு, மீண்டும் ஒருமுறை மூலஸ்தா னப் பிள்ளையாரை வணங்கி வெளிவீதியைச் சுற்றி வந்தாள். கோயிலின் கிழக்குப்பக்கமாகக் காணப்பட்ட சிதிலமடைந்த மேடைப்பகுதி அவளது எண்ண ஓட்டத்தை பழைய காலத்துக்கு கொண்டு சென்றது.

'கள்ளிமேடு ஆலடி வேள்வி வளாகம்,' ஒருகாலத் தில் திருக்கோணமலையில் மட்டுமல்லாது இலங்கையின் பல இடங்களிலும் பேசப்பட்ட ஒரு பிரசித்திபெற்ற இடமாக விளங்கியது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற பல இடங்களிலிருந்தும் கலைஞர்கள் பலர் வந்து நாடகங்களை மேடையேற்றியும், நாடகங்க ளில் நடித்தும் புகழ்பெற்றிருக்கிறார்கள்.

திடல் திடலாக அமைந்த இருபத்தியிரண்டு ஊர்களும், சங்கிலித் தொடராக அமைந்த நெல்வயல் களையும், தென்னஞ்சோலைகளையும் கொண்ட ஒரு தொகுதியாகவே அமைந்து காணப்படுகிறது தம்பலகாமம் எனும் பிரசித்திபெற்ற பேரூர். முன்னைய காலத்தில் திடலாக அமைந்திருக்கும் சில ஊர்ப்பகுதிகளில், குறிப்பாக கூட்டாம்புளி, சிப்பித்திடல், நாயன்மார்த்திடல் போன்ற இடங்களில் கொட்டில்கள் அமைக்கப்பட்டு நாடகங்கள் பழக்கப்பட்டன. அவை கள்ளிமேட்டு ஆலடி வேள்வி வளாகத்திலேயே மேடையேற்றப்பட்டன. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களைப் பார்ப்பதற்கான நுழைவுச் சீட்டுக்கள் கோயிற் குடியிருப்புப் பகுதியிலேயே விற்பனை செய்யப் பட்டும் வந்தன.

தம்பலகாமப் பகுதியிலிருந்து மட்டுமல்லாது திருககாணமலையிலிருந்தும் பார்வையாளர்கள் வாகனங் களில் வந்து குவிந்து, இங்கு மேடையேற்றப் படும் நாடகங்களையும், கூத்துக்களையும் கண்டு களித்துச் செல்வது வழக்கம்.

கோணாமலையும் அந்தக் காலத்தில் ஒரு சிறந்த நடிகனாகவும், கூத்துக் கலைஞனாகவும் திகழ்ந்திருக் கிறார்.

கூட்டாம்புளியிலிருந்து மேடையேற்றப்படும் நாடக ங்களுக்கும், கூத்துக்களுக்கும் அப்பிரதேச மக்களிடையே தனி வரவேற்பே இருந்திருக்கிறது. அந்த நாடகங்களைப் பார்ப்பதற்கென்றே பெருந்திரளான மக்கள் கூடிவிடு வார்கள். அதிலே அவளும் ஒருத்தி. பெண்கள் நாடகக் கொட்டகைக்குப் போவதென்பதை அவ்வளவாக விரும் பாத காலமது... எனினும் அவளது தகப்பன் கொஞ்சம் முற்போக்குச் சிந்தனையுடையவர். அதனால் சில நிபந்த னைகளுக்கு அமைவாக அவளும், அவள் வீட்டாரும், தோழிகளும், நாடகம் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள். அவளும், அவளது தாயாரும், ஒருசில தோழிகளும், உறவினர்கள் சிலரும் நாடகம் பார்ப்பதற்கு அடிக்கடி வேள்வி வளாகத்திற்கு வருவதுண்டு. நாடகங்கள் அனேகமாக இரவு வேளைகளில் தான் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அவளது வயது பதினெட்டு... அவள் நாடகம் பார்ப்பதை விட அவனைப் பார்ப்பதற்காகவே அங்கு வந்து போவாள்.

கோணாமலை, திருக்கோணமலை நகரத்திற்குச் சென்று உயர் படிப்புக்களைப் படித்து வந்திருந்தாலும், விவசாயத்தில் இருந்த நம்பிக்கையும், ஊர் மேல் இருந்த பற்றும், கலையின் மேல் இருந்த ஆர்வமும், அவள்மேல் இருந்த காதலும் அவனை தம்பலகாமத்திற்கே கொண்டு வந்து சேர்த்தது.

எப்பொழுது, எங்கே அவர்களது அன்பு காதலாக மாறியது என்று தெரியாது... ஆனாலும் இருவரும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளாமலேயே அன்பு செய்தார்கள். நாடகங்கள் பார்க்க வரும்போது ஒருவரு க்கும் தெரியாமல் இருவரும் ஜாடைகளால் பேசிக்கொள் வார்கள். சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது வார்த்தைக ளால் பேசிக்கொள்வதும் நடந்தது.

வயல்வெளிகளிலும், வரப்புமேட்டிலும் இருவரும் சந்தித்துக்கொண்டார்கள்... அவர்கள் இருவரும் வாழ்க் கையில் ஒன்றிணைந்து வாழத் தீர்மானித்திருந்தாலும் ஊரும், சாதிசனமும் அவர்கள் இணைவதைத் தடுத்தது.

"சாதிகள் இல்லையடி பாப்பா....."

என்று, ஆயிரம் பாரதிகள் வந்து பாடினாலும் ஒருசிலர் மாறுவதாய் இல்லை... அப்படித்தான் இவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது இணைவும் பிரிக்க முயற்சிக்கப்பட்டது. கோணா மலையின் தந்தை அவனைப் பலமுறை எச்சரித்தார்..., அவனை மிரட்டினார். ஆனாலும் அவளும் அவனும் தங்களது அன்பு உண்மையானது என்று நிரூபித்தார்கள், அது சாதி மதத்திற்கு அப்பாற்பட்டது என்று வாதிட்டார் கள். இறுதியில் ஒரு சிலரது ஆதரவோடும், பலரது எதிர்ப்போடும் திருமண பந்தத்தில் இணைந்து கொண் டார்கள்.

அதில் கோணமலையின் சகோதரி, அதாவது சுந்தரேசனின் தாயார் பார்வதி அவர்களுக்கு ஆதரவு வழங்கியதோடு, அவர்கள் திருமணத்தை தந்தையின் எதிர்ப்பையும் மீறி நடத்தியும் வைத்தாள். இதற்கு அவளது கணவன் சண்முகமும் ஆதரவு தெரிவித்தி ருந்தான். ஆனாலும் பிற்காலத்தில் தந்தையின் சுகயீனம் காரணமாக அவர்களுடனான நெருக்கத்தைக் குறைத்துக் கொண்டாள்.

கோணமலையும், மரகதமணியும் திருமண பந்தத்தில் இணைந்து ஒரு சில வருடங்கள் மகிழ்ச்சி யாகத்தான் சென்றது. எனினும் ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்டது என்று ஒன்று இருக்கிறதே...

"அக்கா... என்ன இதில நிண்டுகொண்டிருக் கிறீங்க... பூச முடியப்போகுது வாங்க." என்ற நிர்மலா வின் குரல் கேட்டு அன்றை பொழுதுக்கு வந்தவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்.... பழைய நினைவுகள் வந்திட்டுது... அது தான்.... அது சரி நீ எப்ப வந்தனி."

"இப்பதானக்கா வாறன்.... வாங்க உள்ள போவம்." என்று இருவரும் சன்நிதானத்துக்குள் நுழைந் தார்கள்.

அங்கே பூசகர் மூலஸ்தான பிள்ளையாருக்கு பஞ்சாராத்தி காட்டிக்கொண்டிருந்தார்.

எல்லோரும் தலைக்குமேல் இரு கைகளையும் கூப்பி வணங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 10

## கொண்டல் காற்று

தங்கத்தைக் கரைத்து வார்த்துவிட்டாற்போன்று பரந்து விரிந்த வயல்வெளி காட்சி தந்தது. தனது ஏழரை ஏக்கர் வயலுக்கு நடுவே நிற்கும் மருத மரத்துக்குக் கீழ் வரப்பு மேட்டில் நின்று கொண்டு முற்றிய கதிர்கள் கொண்டல் காற்றுக்கு தலையை அசைத்து ஆடும் அழகைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான் சுந்தரேசன்.

வடகீழ் திசையிலிருந்து 'ஜிலு ஜிலு' வென வீசிய கொண்டல் காற்று உடலுக்கும், மனதிற்கும் இதத்தைத் தந்தது. புழுக்கத்தில் அவதிப்படும் மனிதர்களுக்கு பெரிய தொரு ஆறுதலாக வீசும் இந்தக் காற்று அவர்களுக்கு அளவிலா ஆனந்தத்தைக் கொடுக்கும் என்பதில் ஐய மில்லை. வானத்தில் வடகீழ்த்திசை வெளுத்திருந்தாலே கொண்டல் காற்று வீச ஆரம்பிக்கப்போகிறது என்று அவ்வூர் மக்கள் அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்து போவார்கள்.

சுந்தரேசனுக்கும் மகிழ்ச்சியாயிருந்தது... கொண் டல் காற்று வந்தது மட்டுமல்ல, அவன் அத்தை மகள் நிலோஜனி ஊருக்கு வந்திருக்கிறாள் என்பதும்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டல் வந்தாலே விளைச்சல் கண்டவர்களுக்கு சந்தோஷம்தான். சூடு மிதிப்பில் ஈடுபடுபவர்கள் கொண்டல் காற்று வரும் திசையையே ஆவலுடன் பார்த்துக்கொண்டிருப்பார்கள். மற்றைய சோளக்காற்று, வாடைக்காற்று போலல்லாது கொண்டல் காற்று சீராக, ஒரே அளவில் வீசக்கூடியது. இந்தக் காற்றில் நெல்லைத் தூற்றினால் அது தூசு, பதர் இன்றி சுத்தமாக இருக்கும் என்று விவசாயிகள் சொல்லுவார்கள். காலம் காலமாக கொண்டல் காற்று அவர்களது வாழ்வோடு இணைந்ததாகவே வந்திருக்கிறது.

இந்தக் காற்றைப் பற்றி தம்பலகாமத்து மூத்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான அமரர்.க.வேலாயுதம் அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்.

"சோளகக்காற்று, கோடைக்காற்று சூடானது, வாடைக்காற்று, மழைக்காற்று குளிரானது இந்த இரு பெரும் காற்றுக்கும் இல்லாத சிறப்பும், சுகமும் உடையது கொண்டல் காற்று. தென்னிந்தியாவில் காதலர்களையும், கவிஞர்களையும், தனது குளிர்ச்சியான ஸ்பரிசத்தால் கவர்ந்து இலக்கியப் புகழ் பெற்றது தென்றல் காற்று. இந்தியாவின் தெற்கு சமுத்திரத்தில் இக்காற்று தென்றல் என்று பெயர் பெற்று குளிர்ச்சியாக தமிழ் இனத்திற்குச் சுகமூட்டும் சிறப்பைப் பெற்றுள்ளது. இக் காற்றை தமிழர் காற்று என்று கூடச் சொல்லலாம். தென்றல் காற்றைப் புகழ்ந்து பாடாத தமிழ்ப் புலவர்கள் இல்லை என்றே கூறலாம். கல்வியில் பெரியவரான கம்பர்கூட "தென்றலே ஏன் வந்தாய் செப்பு..?" என்று கூறுவதைக் காணமுடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. பெரும்பாலும் காதலர்களை மகிழ்வித்து ஆனந்தத்தில் ஆழ்த்தும் தென்னிந்திய தென்றலுக்கு உள்ள சிறப்பும், மகிமையும் இலங்கையில் வீசும் கொண்டலுக்கு உண்டு என்றால் அது மிகையாகாது." என்று கூறும் அவர்....

"துரதிஷ்டவசமாக இலங்கை எழுத்தாளர்களும், கவிஞர்களும் நமது நாட்டுக் கொண்டலின் புகழ் கூறாது தென்னிந்தியத் தென்றலையே தங்கள் எழுத்தில் எடுத்து ஆள்கிறார்கள்..." என்று ஆதங்கப்படுகிறார்.

அடுத்து அவர் கொண்டல் காற்றின் மகிமை பற்றி ஒரு கதையும் சொல்கிறார். அதாவது...,

"கானக சஞ்சாரியான குரங்கு, ஒன்றைப் பற்றிப் பிடித்தால் அது விடாது. 'குரங்குப் பிடி, இரும்புப் பிடி' என்றொரு பழமொழியும் உண்டு.... இத்தகைய குரங்கை தனது குளிர்ச்சியான வீசுதலால் மயங்கித் தூங்கச் செய்து இரும்புப் பிடியாக மரக்கிளையை பற்றியிருக்கும் பிடியைத் தளரச் செய்து குரங்கைத் தள்ளிக் கீழே வீழ்த்தி விடச் செய்யும் இனிய சாமர்த்தியம் கொண்டது, இந்தக் கொண்டல் காற்று". என்று கூறுகிறார்.

"இனிமையும், குளிர்மையும் உள்ள கொண்டல் காற்று வடகீழ் மாகாணத்தில் வதியும் தமிழ்பேசும் இனத்திற்கே சொந்தமானது" என்றும் "குளிர்ச்சி மிக்க கொண்டல் காற்று அமிழ்தினும் இனிய தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்ட தமிழ்மக்களை தேடித்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனவோ.... என்று எண்ண வேண்டியுள்ளது" என்றும் குறிப்பிடுகின்றார்.

எமது மறத்தமிழனும் கொண்டல் காற்றின் இனிமையில் மயங்கி சற்று அயர்ந்து விட்டான் போலும்.... அருகில் வந்து நின்ற மாணிக்கராசா அண்ண னையும் கவனிக்கவில்லை.

மாணிக்கராசாவிற்கு வயது ஐம்பதைத் தாண்டியி ருக்கும் இவனுடைய தகப்பனது பால்ய சினேகிதர்.... இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள், ஒன்றாகத் திரிந்த வர்கள், ஒன்றாகவே விவசாயம் செய்தவர்கள், இறுதி வரை ஒன்றாகவே, ஒற்றுமையாகவே இருந்தவர்கள்.

"என்ன தம்பி.... வாரிக்காலன் கலங்கள் பெருகு வதையே பார்த்துக்கொண்டிருக்கிறீங்க."

குரல் கேட்டு திரும்பியவன்.

"இல்ல மாமா.... நாளைக்கு வயல் வெட்டுக்கு 'சப்பித்துப்பி' ஒண்ட பேசி முடிக்கவேணும்... அது தான் யோசிச்சுக்கொண்டிருக்கிறன்."

"அது ஒண்டும் பிரச்சனை இல்லத்தம்பி. நான், இவன் முஸ்தபாவ கண்டு பேசினனான்... அவன் இரவைக்கு டெலிபோன் பண்றதா சொல்லியிருக்கிறான்." என்றவரின் நினைவுகள் கடந்த காலத்தை நோக்கிச் சென்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தக் காலத்தில நானும் உங்கட அப்பாவும் சின்னப் பிள்ளைகளா இருக்கேக்குள்ள உங்கட அப்பப்பா வோட, அவர ஐயா எண்டுதான் நாங்க கூப்பிடுறனா ங்க... வயலுக்கு அடிக்கடி நாங்களும் வாரனாங்கள். அப்ப இந்த சப்பித்துப்பியும் இல்ல... ஒரு மெசினும் இல்ல தம்பி.... எல்லா வேலைகளையும் ஆட்களப் போட்டுத்தான் செய்வாங்கள்."

"வயல் விதைப்புக்கு முதலும், அறுவடைக்குப் பிறகும் பொங்கல் பொங்கி, படையல் படைச்சு... அது ஒரு பெரிய விழா போலத்தான் நடக்கும்.

"ஆறேழு வாரிக்காலன்கள்ள ஏர் பூட்டி வயல் முழுக்க ஓட்டிக்கொண்டு போவாங்கள்... வாரிக்காலன் களும் மண்ணக்கிளறி புழுதி எழுப்பிக்கொண்டு ஓடுங்கள். உழவுப் பூமியும் புதுசா பிறந்த மாதிரி பச்ச மண்ணா இருக்கும்."

"வயல் வேலைக்கெண்டு கிண்ணியா, மூதூர், மட்டக்களப்பில இருந்தெல்லாம் கூலி ஆட்கள் வருவா ங்கள். இப்பெல்லாம் ஒருவரைக்கூட கூலிக்குப் பிடிக் கிறது கஷ்டமாயிருக்கு." என்று கூறிக்கொண்டே ஒரு பெருமூச்சை விட்டுக்கொண்டு அவனிடம் வினவினார்.

"அது சரி தம்பி நாளைக்கு வெட்டுக்கு மெசின் வருமெண்டாலும் ஒரு இரண்டு பேராவது வேணுமே.... சொல்லிவிட்டிருக்கிறீங்களா.?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்ல மாமா.... அது தான் யோசிக்கிறன்."

"ம்.... அப்படியா... சரி பாப்பம்.... அவன் சின்னராசிட்ட சொல்லுவம். இரண்டு பேர கூட்டிக்கொண்டு வருவான்."

அப்படியே நடந்து சிறிது தூரம் சென்றவர் ஓரிடத்தில் நின்று மீண்டும் பழைய நினைவுகளை பேச ஆரம்பித்தார்.

"முந்தி இந்த இடத்திலதான் களத்துமேடு இருந்தது. கொஞ்சம் தள்ளி அங்கால ஒரு பரண்.... மேலே ஏறி நிண்டு காவல் காக்கிறதுக்கு. அப்படியிருந்தும் குருவிகள், கொக்குகள் எல்லாம் வந்து நெற்கதிர்கள சாப்பிடத்தான் செய்யும். எனக்கும் உங்கட அப்பாக்கும் அதுகள கலைக்கிறதுதான் வேல. காலையில வந்த மெண்டா ஐயா மாலையில வீடு திரும்பும் வரைக்கும் வயல்லயே சுத்தித்திரிவம். மத்தியானம் உங்க அப்பம்மா கட்டுச்சோறு கட்டி அனுப்புவா, காலையில பிட்டும், கருவாட்டுக்குழம்பும் கட்டிக் கொடுத்திருப்பா, அத வயல்ல இருந்து சாப்பிடுவம். பின்னேரம் அந்திசாயிற நேரம் பலகாரமும், தேத்தண்ணியும் வந்திடும்... பிறகென்ன எங்களுக்கு கொண்டாட்டம்தான். சாப்பாடும், விளையாட்டுமா திரிவம். வயல் வெட்டு நேரத்தில ஒரு கிழமைக்கு பள்ளிக்கூடப் பக்கமே போகமாட்டம். நாங்க எண்டில்ல ஊர்ல பல பிள்ளைகள் வயல்வெட்டு நேரத்தில வயலுக்கு உதவிக்கு வந்திருவாங்க. பிள்ளைகள் மட்டுமல்ல பல வாத்திமாரே வயல்ல தான் நிப்பாங்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிக்கொண்டே சிரித்தார் மாணிக்கராசா அண் ணன்.

அவர் கூறுவது பழைய கதை என்றாலும் சுந்தரேசனுக்கு அவற்றைக் கேட்பதில் ஆர்வமிருந்தது.... அதனால்,

"பிறகு என்ன மாமா நடக்கும்.." என்று அடிக்கடி கேட்பான். இப்பொழுதும் கேட்டான். அவர் தொடர்ந்தார்.

"உழவில் இருந்து நாத்து நடுறது முதல், கதிர் அறுக்கிறது, சூடுமிதிக்கிறது எண்டு தொடர்ந்து வயல்ல வேலையாத்தான் இருக்கும்... அந்த வேலையாட்கள் எல்லாம் ஆறு, ஏழு மாதத்திற்கு இங்கேயே தங்கியிருந்து தான் போவாங்க. அவங்க தங்கிறதுக்கு களத்து மேட்டுலேயே குடிசைகளை அமைச்சுக் கொடுத்திருப் பாங்க."

"அறுத்தெடுத்த நெற்கதிர்கள சூடு வைப்பாங்க, பிறகு வாரிக்காலனக் கொண்டு சூடுமதிப்பாங்க. அதில வாற பொலிய வேறாவும், மிதிஞ்சான வேறாவும் குவியல் குவியலா குவிச்சு வச்சு சாக்குப்பையில பொலிய மூட்ட மூட்டயாக் கட்டி குடோனுக்கு கொண்டு போய்டுவாங்க..... ஐயா வீட்டிலயே இரண்டு மூண்டு குடோன் இருக்கும். நாங்க அங்கெல்லாம் போய் பொலி மூட்டைகள்ள ஏறி குதிச்சு விளையாடுவம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் மௌனமாய் பழைய நினைவுகளை மீட்டிப்பார்த்து விட்டு தொடர்ந்தார்.

"எத்தனை ஆயிரம் பொலி மூட்டைகளைத்தான் இந்தப் பூமித்தாய் எங்களுக்கு தந்திருக்கா தெரியுமா. அப்ப ஒரு நோயில்ல, நொடியில்ல.... ஒரு பசளையில்ல, கிருமிநாசினி இல்ல... எல்லாத்தையும் அந்த கோணேசர் பார்த்துக்கொள்வார். இந்த ஊரும், நாங்களும் செழிப்பாத் தான் இருந்தனாங்கள்." அவருடைய கண்கள் அண்ணா ந்து பார்த்து குத்திட்டு நின்றது.... அவருடைய எண்ணங் கள் எங்கோ சென்றிருக்க வேண்டும். மீண்டும் ஒரு பெருமூச்சுடன் நிகழ்காலத்துக்கு வந்தார்.

அவனுக்கும் மனத்தாங்கலாய்த்தான் இருந்தது.... ஒன்றும் பேசாது சும்மா நின்றான். அவரே தொடர்ந்தார்.

"அந்தக் காலத்தில ஒழிவுக்களம் நாளன்னைக்கு களப்பலி கொடுக்கிறது வழக்கமாயிருந்தது. வயல் தெய்வங்களுக்கு நேத்தியா சேவல நேந்து விட்டிருப் பாங்க. அத ஒழிவுக்களம் அன்னைக்கு தெய்வத்துக்கு பலி கொடுத்து வயல் களத்திலேயே சமைச்சு எல்லோ ருக்கும் குடுப்பாங்க. இப்பெல்லாம் அது அருகிப் போயிட்டுது. அதனால தான் இந்த நோயும் நொடியும்..." என்று அவர் விசனப்பட்டார், பின்

"சரி தம்பி.... நேரமாகுது நானும் புறப்படுறன். நாயன்மார்திடல் வேள்வியும் நடக்க இருக்கிறதால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் வேலைகள் இருக்கு... வாரன்... என்ன..." என்று புறப்பட்டார்.

"சரி மாமா... அந்த வேலையோட அப்படியே இருந்திடாதிங்க, நான் சொன்ன விசயத்தையும் கொஞ்சம் பாருங்க...." என்று கூறி அவரை அனுப்பி வைத்தான் சுந்தரேசன்.

இப்பொழுது அவனது நினைவுகளெல்லாம் அவள் அத்தை மகள் நிலோஜனி மேல் சென்றது. கொண்டல் காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 11

## குடமுருட்டி ஆறு

இடையிடையே தென்னஞ் சோலைகளும், வயல்வெளிகளும் நிறைந்த 'தமிழ்ப் பட்டணம்', என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட அழகிய 'தம்பைநகர்' எனும் தம்பலகாமத்தை விட்டுச்செல்ல மனமின்றி தனது பிரகாசமான ஒளியை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக்கொண்டு மேற்கு வானை நோக்கி சிவந்த மேனியோடு தென்னை மரங்களிடையே ஒளிந்துகொண்டு செல்கிறான் கதிரவன்.


மேற்கு வானம் நாணத்தால் சிவந்து போனது, செஞ்சந்தணத்தைக் குழைத்து பூசியது போன்று மிக அழகாகக் காட்சியளித்தது வானம்.

கதிரவன் விட்டுச்சென்ற வெப்பத்தை தணிப் பதற்காக மென்மையான, குளிர்ச்சியான காற்று வடகிழக் குத் திசை வழியாக ஊருக்குள் வீசிக்கொண்டிருந்தது.

தமது பகல் நேர வேலைகளை முடித்துக் கொண்டு பறவைக் கூட்டங்கள் இனிய இசையை மீட்டிய வண்ணம் தமது கூடுகளை நோக்கி பறந்து கொண்டி ருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சல சல' வென மகிழ்ச்சிப் பிரவாகத்தில் ஓடிக் கொண்டிருந்தது குடமுருட்டி ஆறு. அதன் மகிழ்ச்சிக்குக் காரணம், அவளது பாதங்களை தழுவிச் செல்லும் பாக்கியம் கிடைத்துவிட்டது, என்பதாகத்தான் இருக்கும்.

அவை தமக்குள் முட்டிமோதி ஓடி வந்தன.

அவளது பாதங்களை பாதாபிஷேகம் செய்வதற்காகத்தான் அவை தமக்குள் சண்டையிட்டு ஓடிவருகின்றனவோ என்னவோ....! அதிலும் பாருங்களேன், அவளது பாதத்தோடு மட்டும் நின்றுவிடாது அவை சற்று மேலே எழுந்து அவளது முழங்கால்வரை முத்தமிட்டுச் செல்வதற்காய் அலைமோதுகின்றனவே...

அவளது பாதத்தால் கழுவப்பட்ட குடமுருட்டி ஆறு மோட்சம் பெற்று விட்டது போல் அமைதியாய் அவளைக் கடந்து சென்றது.

வரும் வழியில் பறித்துக்கொண்டு வந்த எருக்கலம் பூவை இருகைகளிலும் ஏந்தி அதன் வாசத்தை நுகர்ந்துகொண்டே கையடக்கத் தொலைபேசியில் இசைத்துக் கொண்டிருந்த இளையராஜாவின் பாடல் ஒன்றை ஆலாபணை செய்து கொண்டிருந்தாள் நிலோஜனி.

கல்கியின் பொன்னியின் செல்வனில் வரும் குந்தவை தேவியின் அழகை ஒத்தவளாக அவள் இருந்தாள். என்று சொன்னால் எவரும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறு, பதினேழு வயதிற்கான உடல் செழிப்பும், நிமிர்ந்த நெஞ்சத்து எழில்களின் வனப்பும் அவள் அழகை மேலும் மெருகூட்டியது.

தன்னை மறந்து இராகதேவனின் இசையில் அவள் மூழ்கியிருந்தாள்.... அது மட்டுமல்லாது அப் பாடலை சத்தமாக இசைத்துக் கொண்டுமிருந்தாள்.

அவளது குரலின் இனிமையைக் கேட்டு பறந்து சென்ற பறவைகள் மீண்டும் வந்து கிளைகளில் அமர்ந்து கொண்டன. அவை, அவள் பாடுவதைக் கேட்டு வந்தனவா....?, அல்லது கையடக்கத் தொலைபேசியில் இசைக்கும் இளையராஜாவின் இசையைக் கேட்டு வந்தனவா...? என்பது விவாதத்திற்குரியதுதான்.

ஒரு பக்கம் இவ்வாறிருக்க....., அவளுக்குப் பின்புறமாக ஆற்று ஓரமாக நீண்டு செல்லும்பாதை வழியே எமது தம்பை நகரின் நாயகன் சுந்தரேசன் தனது மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான்.

இதமான காற்று வீசியதால் வேகமாக ஓடாமல், மிதமான வேகத்தில் உந்துருளியை செலுத்திக் கொண்டு வந்தான்.

அவன் அதில் அமர்ந்து வரும் அழகு மீண்டும் எமக்கு பொன்னியின் செல்வனில் வரும் இன்னொரு கதாபாத்திரமான வந்தியத்தேவனை நினைவுபடுத்தியது என்றால் அது கருத்துப்பிழையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டையின் மேற்பொத்தான்கள் இரண்டு பூட்டப் படாமல் இருந்ததனால் வீசிய காற்றுக்கு அவை அகல மாகத் திறந்துகொண்டன.

தேக்கு மரத்தால் செய்தது போன்று இருந்தது அவனது மார்பு, உருண்டு திரண்ட புஜங்கள் இரண்டு, கருங்காலிக் கட்டையைப் போன்ற கைகள், மடித்துக் கட்டிய வேட்டி, முழங்காலிலிருந்து கணுக்கால் வரை யாக சிலிர்த்துக் கொண்டு நிற்கும் உரோமம், உந்து ருளியின் விசையை ஏற்றி இறக்கும்போது இயங்கும் பின்னங்கால் தசைப்பகுதியின் அசைவைப் பார்க்கும் போது நிச்சயமாக எவரும் அவனிடம் வம்பிழுக்கத் தயங்குவார்கள்.

ஆனாலும் எமது நாயகன் எவரிடத்திலும் வம்புக்குப் போவதில்லை, வந்த வம்பை சும்மா விடுவதுமில்லை.

மெல்லிய சீரான காற்றும் மிதமான வேகமும் அவனுக்கும் மயக்கத்தை ஏற்படுத்தியது. அதோடு காற்றில் மிதந்து வந்த இசை வெள்ளமும் அவன் மயக்கத்தை மேலும் அதிகரித்தது. 'கல கல' வென ஓடும் குடமுருட்டி ஆற்றின் நீரோட்டத்தின் அழகையும், ஆற்றின் எதிர்ப்புறம் தெரியும் தென்னஞ் சோலை களையும், திடல் திடலாய்க் காணப்படும் செழிப்பான ஊரின் அழகையும் இரசித்துக்கொண்டே உந்துருளியை செலுத்தியவன்...., அந்த இனிய இசை மிக அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பது போல் இருக்கவே ஆற்றின் ஓரமாகப் பார்வை யை செலுத்தினான்.

ஆற்றின் ஒரு வளைவில், மருதமரத்து நிழலில், வெண்மணல் பரப்பில் அவள் அமர்ந்திருப்பதைக் கண்டு பரவசப்பட்டான். மெதுவாக உந்துருளியை வீதியின் மற்றைய ஓரத்தில் நின்ற தென்னை மரத்துக்குக் கீழ் நிறுத்தி விட்டு இறங்கி மெல்ல நடந்து, அவளுக்கு அருகில் சென்று நின்றுகொண்டான்.

அவள், அவன் வந்ததை கவனித்ததாகத் தெரிய வில்லை. அவள் பாட்டுக்கு பாட்டுப்பாடிக் கொண்டி ருந்தாள்.

அவளைக் குழப்ப அவன் விரும்பவில்லை.... ஒரு திடமான ஆண்மகன் என்றாலும் அவனது நெஞ்சம் படபடத்தது....., கை கால்கள் சற்று நடுங்கின....., உதடுகள் உலர்ந்து போயின....., இதற்கு முன்னர் அவளுடன் பல தடவைகள் கதைத்திருந்தாலும் இன்று இந்தத் தனிமையும், அவள் அழகும் அவனைப் பயப்ப டுத்தியது. அதைவிட அவள் மேல் அவன் கொண்ட அன்பு....

தொடர்ந்து அவ்வாறு சத்தமின்றி அவள் பின்னால் நிற்பது அவ்வளவு நாகரீகமாகப் படவில்லை அவனுக்கு. எனவே தன்னைத் தயார்படுத்திக்கொண்டு தொண் டையைச் செருமினான், "இங்க தானா இருக்கிறீங்க..." என்று அவளது முதுகைப் பார்த்துக் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலேயே, முதுகுக்குப் பின்னால் ஒரு வன் நின்றுகொண்டிருப்பதை அறிந்து சற்றே மிரண்டு தான் போனாள் அவள்... அருகில் இருந்த தோழியும் சற்று முன் தான் எழுந்து சென்றிருந்தாள்.

பயத்தில் சட்டெனத் திரும்பிய அவளைக் கண்டு அவன் பயந்து போனான்.

"நான் தான்... பயப்படாதீங்க... எப்ப வந்தீங்க.... ஏன் இதில வந்து இருக்கிறீங்க...." அடுக்கடுக்காக கேள்விகளைக் கேட்டு தனக்கு ஏற்பட்ட பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்க முயற்சி செய்தான்.

பின்னால் நிற்பது தனது அத்தான் சுந்தரேசன் என்பதை அறிந்த பிறகு தான் அவள் சற்று துணிவு கொண்டாள். மேலும் அவனது அடுத்தடுத்த கேள்விகள் அவளுக்குள் சிரிப்பை ஏற்படுத்தியது. அவளது கண்க ளில் அது பிரதிபலித்தது. அதை அவனும் கண்டு கொண்டான்.

"வந்து இரண்டு நாளாகுது.... ஏன் நீங்கதான் நேற்று கோயில்ல பார்த்தனீங்கதானே..." என்றாள்.

"ஓம்... ஓம்... மறந்திட்டன் என்ன..." என்று சமாளிக்க முயன்றான்.

அவள் கொடுப்புக்குள் சிரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கேட்ட கேள்வியின் தவறை சமாளிக்க அடுத்த கேள்வியைத் தொடுத்தான்.

"படிப்பெல்லாம் எப்படிப் போகுது."

"பரவாயில்ல அத்தான்... டியூசன் போறதால படிக்கக் கூடியதா இருக்கு."

"ஸ்கூலுக்கு நடந்தா போறனீங்க."

"ஸ்கூல் பக்கத்தில தானே நடந்து தான் போறனான்."

"ஆ... டியூசனுக்கு."

"சைக்கிள் இருக்குத்தானே... அதில போய் வருவன்."

"கவனமாப் போகவேணும்.... சரியான சனமா யிருக்குமே."

"ஓம் அத்தான் நான் பார்த்துத்தான் போறனான்..."

"எப்ப போறீங்க."

"நாளைக்கு காலையில."

அவனது முகம் சட்டென வாடியது.

"இரண்டு நாளைக்கு நிண்டு போகலாமே."

"இல்ல அத்தான் டியூசன் இருக்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு மீண்டும் ஏமாற்றம்...எதுவும் பேசாமல் நின்றான். அவளே தொடர்ந்தாள்.

"சரி அத்தான்... நேரமாகுது நான் வீட்ட போகப் போறன்."

"நான் கொண்டே விடட்டா."

"இல்ல... உங்களுக்கு ஏன் சிரமம். நான் நடந்தே போறன்."

எவ்வளவு ஆசையாய்க் கேட்டான்... அவளை உந்துருளியின் பின் இருக்கையில் ஏற்றிக்கொண்டு இதமான காற்று மேனியைத் தழுவ... ஒரு வலம் வரலாம் என்று எண்ணியிருந்தான். 'ப்ச்...' சரிவரவில்லை. மனம் சோர்ந்து போனாலும் முயற்சியை கைவிடவில்லை அவன்.

"சரி நடந்தே போவம் வாங்க..." என்றான்

"மோட்டார் சைக்கிளை என்ன செய்யப் போறீங்க."

"உருட்டிக் கொண்டே போவம்."

அவள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை, தன் மீது அவன் அளவில்லா அன்பு கொண்டுள்ளான் என்று அவளுக்குத் தெரியும்.

அவன் தன்னோடு சேர்ந்து வருவதை அவள் தடுக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே அவளை நடக்கவிட்டு உந்துருளியை தள்ளிக்கொண்டு பின்னே சென்றான் சுந்தரேசன். இடைக் கிடை வேகத்தில் ஏற்பட்ட சீரின்மை காரணமாக இருவ ரும் அருகருகே செல்லவேண்டியும் ஏற்பட்டது. அவள் அதை சட்டை செய்யவில்லை. ஆனால் அவனுக்கோ....., வாடைக் காற்று ஒட்டுமொத்தமாக அவனுக்கு மட்டுமே வீசுவது போன்று இருந்தது. குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்தெடுத்த குச்சி ஐஸ் போல் 'குழு குழு' என இருந்தது.

பத்து நிமிடங்களுக்கு மேலாக நடந்திருப்பார்கள். ஆனால் அவனுக்கோ பத்து வினாடிகள் மட்டுமே நடந்து வந்தது போல் இருந்தது. வீடும் வந்து விட்டது. சே... இந்த வீடு இன்னமும் இரண்டு கிலோ மீற்றர் தொலை வில் இருந்திருக்கக் கூடாதா என்று எண்ணினான். அவ னது எண்ணத்தைக் கலைத்தது அவள் பேச்சு.

"சரி அத்தான்.... நான் போறன். நீங்க போங்க." அவளுக்குத் தெரியும் அவனை உள்ளே அழைக்கும் நிலமையில் உறவுகள் இல்லை என்று.

மாலை ஆறு மணி... இருள் மெல்ல சூழ்ந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 12

## எதிர்பாராதது

மாலை ஐந்து மணி... பிரத்தியேக வகுப்புகள் முடிந்து மாணவ மாணவிகள் வீடுகளுக்கோ, அடுத்த வகுப்புகளுக்கோ செல்லும் நேரம்.... அவளும் அலுவல கத்தை விட்டு வீடு செல்லும் நேரம்.

எல்லோரும் நான் முந்தி நீ முந்தி என்று சென்று கொண்டிருக்க இவளும் பின்தொடர்ந்து கொண்டி ருந்தாள். இன்றுமட்டுமல்ல பல தடவைகள், பல நாட்கள் இப்படிப் பின்னாலேயே செல்லவேண்டிய நிலை அவளு க்கு ஏற்பட்டிருக்கிறது.

"பீப்... பீப்... பீப்..." என்று மோட்டார் சைக்கிளின் 'ஹாரனை' விட்டு விட்டும், தொடர்ந்தும் அழுத்திப் பார்த்தாள். ஆனால் முன்னால் துவிச்சக்கர வண்டியில் செல்லும் பையன்கள் வழி விடுவதாக இல்லை. அவர்கள் சாதாரண தரமோ, உயர்தரமோ படிக்கும் மாணவர்க ளாகத்தான் இருப்பார்கள். மூன்று நான்கு பேர் ஒன்றாக அருகருகே வரிசையாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். பையன்கள் தான் அப்படியென்றால் அவர்களுக்கு முன்னால் பெண் பிள்ளைகளும் ஜோடி போட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுதான் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அவளுக்குக் கோபமும் வந்தது. கிட்டத்தட்ட அரைக் கிலோமீற்றர் வரை அவர்கள் பின் 'ஹாரன்' அடித்துக்கொண்டுதான் வருகிறாள். அந்தச் சத்தம் அவர்கள் காதில் விழுந்த மாதிரித் தெரியவில்லை. அல்லது அவர்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை போலும்...

சற்று வேகமெடுத்து அவர்கள் முன்னே சென்று நிறுத்தி அவர்களுக்கு இரண்டு அறை கன்னத்தில் கொடுக்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

முதலில் இவர்களைப் பெற்றவர்களை அழைத்துக் கண்டிக்க வேண்டும், பிறகு பாடசாலை ஆசிரியர்களை கண்டிக்க வேண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக பிரத்தியேக வகுப்புக்களை நடத்தும் ஆசியர்களையும், மற்றவர்களையும் கண்டித்தே ஆக வேண்டும் என்று அவள் மனம் வெதும்பியது.

ஆனால் அவர்கள் மிகவும் குதூகலமாக எதிரே வரும் பெண்பிள்ளைகளுக்கு வார்த்தைகளாலும், சைகைகளாலும் கதை சொல்லிக் கொண்டும், நகைத்துக் கொண்டும் சென்றார்களே ஒழிய பின்னால் வருபவர்களையோ, எதிரில் வருபவர்களையோ, வாகனங்களையோ கவினித்ததாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் பிள்ளைகளும் இலேசுப்பட்டவர்கள் அல்ல... பையன்களுக்கு பதிலுக்குப் பதில் கதை சொல்வதும், அவர்கள் பார்க்காத வேளையில் ஓரக்கண் ணால் பார்ப்பதும், அதை அவர்கள் பார்த்து விட்டால் நாக்கைக் கடிப்பதும், பழிப்பதும் என்று அவர்களும் எவரையும் கவனித்து நடந்ததாகத் தெரியவில்லை.

இதற்கிடையில் ஒருசில பையன்கள் கையடக்கத் தொலைபேசியை காதில் வைத்துக்கொண்டு ஏதோ 'குசு குசு' வென கதைத்துக்கொண்டு சைக்கிளை ஓட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள்.

திடீரென துவிச்சக்கர வண்டியில் செல்பவனை இன்னொருவன் வழிமறித்து ஏதாவது கதைத்துக் கொண் டிருப்பான். இன்னொருவன் திடீரென முன்னே சென்ற வனை பிடித்து இழுத்து வீதியின் மத்தியிலே நிறுத்தி விடுவான். இன்னொருவன் திடீரென திரும்பி எதிர்ப் பக்கமாக வந்துவிடுவான். அப்பப்பா... இவர்கள் வீதி யால் போய் வரும்வரை மற்றையவர்கள் எவரும் அவ்வீ தியால் போய் வரமுடியாது போலும்.

இந்த துவிச்சக்கர வண்டியில் போகிறவர்களை விட மோட்டார் சைக்கிளிலும், ஏன் ஆட்டோக்களிலும் கூட மாணவர்கள் போக்குவரத்துச் செய்கிறார்கள். எப்படி இவர்கள் இவ்வாறான வண்டிகளை ஓட்டுகிறார்கள். இவர்களுக்கெல்லாம் யார் ஓட்டுவதற்கு அனுமதி கொடுத் தது. அதுதான் பதினாறு வயதிற்கு மேற்பட்டவர்கள் பெறமுடியும் என்றாலும், இவர்களுக்கெல்லாம் யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாகனங்களைக் கொடுப்பது. இது இவர்களுடைய சொந்த வாகனங்களா....? அப்படியானால் யார் இதை வாங்கிக் கொடுத்தது...? அப்படியில்லையாயின் இது இவர்களுடைய தாய், தகப்பனுடையதா அல்லது அண் ணன், அக்காமாருடையதா...? யார் இதை இவர்கள் கையில் கொடுத்தது...? இப்படியான வாகன ஓட்டுனர்க ளால்தானே அதிகமான விபத்துக்கள் நடைபெறுகின்றது. ஏன் இதை பெற்றோர்களும், ஆசிரியர்களும், மற்றவர் களும் கவனிக்கிறார்கள் இல்லை. அனைவர் மேலும் அவளுக்கு கோபம் வந்தது.

உலகம் தொழில்நுட்பமயமானதிலிருந்து கலாச்சா ரமும், பண்பாடும் சீரழிந்து கொண்டு வருகிறது. யார் இதை கருத்திற்கொள்கிறார்கள்.

கிடைத்த சிறிய இடைவெளியைப் பயன்படுத்தி, அந்தப் பையன்களைக் கடந்து சென்று அவர்களுக்கு முன் நிறுத்தி அவர்களை மறித்தாள்.

"ஏன் நீங்கெல்லாம் இப்படிவரிசையாப் போறீ ங்க... மற்றாக்கள் ரோட்டில போறதில்லையா... ஒன்றொ ன்றா போறது தானே...." என்று கடுமையாகக் கூறினாள்.

அவள் திடீரென எதிரே வந்து நின்றதும், அவர் கள் சற்று மிரண்டுதான் போனார்கள். ஆனாலும் சற்றைக் கெல்லாம் சுதாகரித்துக் கொண்டவர்கள் ஒன்றொன்றாக அவளைக் கடந்து துவிச்சக்கர வண்டியை நகர்த்திச் சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் ஒருவன்

"டேய் அந்த அக்கா கோபமா இருக்கா... வாடா." என்று மற்றையவனை இழுத்துக்கொண்டு சென்று விட்டான். சிறிது தூரம் சென்ற பின் மீண்டும் அவர்கள் வரிசையாகத்தான் சென்றார்கள்.

அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இக்காலப் பிள்ளைகளை திருத்தவே முடியாது... என்று முணு முணுத்துக்கொண்டே மோட்டார் சைக்கிளை இயக்கினாள்.

எதிர்காலத்தைப் பற்றிய எந்தவொரு பயமுமின்றி இன்றைய சமுதாயம் இவ்வாறு பொறுப்பின்றி திரிகிறதே என்று அவள் மனம் வெதும்பியது.

'பட.... பட..." வென மனம் அடித்துக்கொண்டது. அமைதியின்றி அது தவித்தது. மனதை சாந்தப்படுத்த எங்கே செல்லலாம் என்ற யோசனையுடன் வண்டியை செலுத்தினாள்.

பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் திருக்கோணமலை. என்று அழகிய வெள்ளி நிற எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகையை தாங்கிய வண்ணம் காணப்பட்ட பிரதேச செயலக கட்டடத்தைக் கடந்து, வலப்பக்க சமிக்ஞையை ஒளிரச் செய்து வலப்பக்கம், இடப்பக்கம், மீண்டும் வலப்பக்கம் பார்த்து வாகனங்கள் வரவில்லை என்பதை உறுதிப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பிரதான சுற்று வளைவை சுற்றி உட்துறைமுக வீதியை அடைந்தாள் பவித்திரா. அமைதியின்றி தவித்த மனம் சற்று அமைதியடைந்திருந்தது.

முன்னொரு காலத்தில் திருக்கோணமலைக்கும் மூதூருக்குமான கடல் வழிப்பாதை மட்டுமே இருந்த காலத்தில் மிகவும் பரபரப்பாகவும், பிரசித்திபெற்றும் இருந்த துறைமுகப்பகுதி தற்பொழுது சத்தம் சந்தடி யின்றி அமைதியாகக் காணப்படுகிறது. துறைமுகத்தினுள் இருந்த துறைமுக காவல் நிலையத்திற்குள் ஒருசில காவலர்களும், சிவிலியன்களும் சென்று வருவது தெரிந் தது... தூரத்தே துறைமுகக் கட்டின் ஓரமாக ஒரு சிலர் தூண்டில்போட்டு மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

கிண்ணியாப்பாலம் புதிதாகக் கட்டப்பட்டதனாலும், உப்பாறுபாலம், இறால்குழிப்பாலம், கங்கைப்பாலம் என்பன நிர்மாணிக்கப்பட்டதனாலும் இக்கடல் வழிப்பாதை பிரயாணம் அற்றுப் போய்விட்டது.

இப்பொழுதெல்லாம் சுற்றுலாப் பயணிகளும், ஒரு சில உள்ளூர்வாசிகளும் மட்டுமே கடல் பிரயாணத்தை மேற்கொள்கிறார்கள்.

அந்நாட்களில் 'லோஞ்' என்று அழைக்கப்படுகின்ற சிறிய கடற்பயணக் கப்பலே மூதூர் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. காலை, மதியம், மாலை என மூன்று வேளைகள் அது போக்குவரத்தை மேற்கொள் ளும். பயணிகள் துறைமுக வாசலுக்கு வெளியே வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோரம் அமைக்கப்பட்டிருந்த தடுப்புக்கு முன்னால் நீண்ட வரிசையில் சிலமணி நேரங்கள் காத்திருப்பார்கள்... 'லோஞ்' வந்து கரையில் கட்டப்பட்ட பின்னர் பயணிகள் ஒவ்வொருவராக உள்ளே அனுமதிக்கப்படுவார்கள். உள்ளே செல்லும் முன்னர் அவர்களின் அடையாள அட்டையும், பயணப் பொதிகளும் காவலாளர்களால் முற்றாக பரிசோதிக்கப்பட்டு அவை பதியப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுவார்கள். உள்ளே 'லோஞ்'சினுள் ஏற்றப்படக்கூடிய அளவு பயணிகள் வந்ததும் ஏனைய வர்கள் உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்கள்... பின்னர் அவர்கள் அடுத்த தடவை 'லோஞ்' புறப்படும் வேளையி லேயே உள்ளே விடப்படுவார்கள். அதுவரை பலர் அங்கேயே காத்து நிற்பதும் உண்டு..... ஒரு சிலர் திரும்பிச் சென்று விடுவார்கள். அவளும் இதே போன்று ஒரு சில நாட்கள் காத்திருந்ததாக ஞாபகம்.

உந்துருளி துறைமுக வாசலைக் கடந்து உட்து றைமுக வீதியினுள் உள்ளிட்டது... அவளது கண்கள் தன்னிச்சையாக சமுத்திரத்தை நோக்கியது.

கரையிலிருந்து நூறு மீற்றர் தொலைவில் இயற் கையாக அமைந்திருக்கும் காக்கைத்தீவு மேட்டுப்பகுதி அழகாகக் காட்சியளித்தது. அதிலுள்ள மரங்களின்மேல் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளி அதனைப் பிரகாசப்படுத் தியது. அதனூடாகத் தெரியும் 'பிறீமா' மா ஆலை கடலுக்கு நடுவே மலைகளின் மத்தியில் முளைத்த செதுக்கப்பட்ட கொங்கிறீட் குன்று போல காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் போல் அல்லாது தற்பொழுது கடற்கரை ஓரம் பாதுகாப்பான கம்பிவேலிகள் அமைக்கப்பட்டு அதற்கு வெள்ளை வர்ணம் பூசப்பட்டு அழகாகவும், நேர்த்தியாகவும் காணப்படுகிறது. மாலை நேரமானால் இளைஞர்கள், வயதானவர்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என பலர் அந்த நடைபாதையில் ஓடிக்கொண் டிருப்பதையும், உடற்பயிற்சி செய்து கொண்டும், பாடல் கள் கேட்டுக்கொண்டும், நடை பயின்றுகொண்டும் இருப் பதை காணக்கூடிய தாயிருக்கும். இன்றும் பலர் அவ் வாறு அங்கும் இங்குமாக திரிந்து கொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் தாங்கள் அழகாகவும், ஆரோக்கிய மாகவும் இருக்க வேண்டும் என்ற ஆசைதானே... ஆனால் எம்மில் பலர் அழகும், ஆரோக்கியமும் குறைந் துபோகும் பொழுதுதான் அதை நிவர்த்தி செய்ய இயற் கையை நாடுகிறார்கள். அதுவரை இயற்கையை மறந்து அனைத்து வகையான செயற்கையான கவர்ச்சியான ஆரோக்கியமற்றவற்றையே விரும்புகிறார்கள். அது உண வாகட்டும், உடையாகட்டும், கல்வியாகட்டும், விளையா ட்டாகட்டும், பண்பாடாகட்டும், பழக்கவழக்கமாகட்டும். அனைத்தும்... "வருமுன் காப்போம்..." என்பதையே மறந்துவிடுகிறார்கள். நோயும் நொடியும் வந்தபின் அவதிப்பட்டுத் திரிகிறார்கள்.... 'ஐயோ பாவம்..' என்பதை விட என்ன சொல்வது.

உந்துருளியை செலுத்திக்கொண்டே அந்த இயற் கை அழகை இரசிக்க இவளால் முடியவில்லை. அதனை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கிவந்து கம்பித்தடுப்புக்கு முன்னால் நின்றுகொண்டு தூரத்தே நோக்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கடுக்கான தொடரான மலைகள் முன்னும் பின்னுமாக, சிறிதும்பெரிதுமாக காட்சியளித்தது. செஞ்சந் தணத்தைக் குழைத்து வானமாதேவிக்கு திலகம் இட்டாற் போன்று சிவந்த பொன்னிற மாலைக் கதிரவன், இருட்ட ஆரம்பித்ததும் மலைகளுக்கிடையில் போய் ஒளிந்து கொண்டுவிடுவான், பின்னர் மறுநாள் காலை விடிந்ததும் மீண்டும் மலைகளுக்கிடையிலிருந்து பிரகாசமாக எழுந்து வருவான். மலைகளுக்குப் பின்னால் ஒளிந்து விளையா டுவதே அவனுக்கு பொழுது போக்காயிருக்கும்.

அன்றும் அப்படித்தான், ஆறுமணியாகிவிட்டதை உணர்ந்த பகலவன் தனது ஒளிக் கதிர்களை தனக் குள்ளே இழுத்துக்கொண்டு நாணி முகம் சிவந்து மலைக ளின் பின்னால் மறைந்து கொள்ள விரைந்து செல்கின் றான்.... அவன் செல்லும் போது சிந்தும் செஞ்சந்தணக் கதிர்களினால் அந்தச் சமுத்திரமே அழகுபெறும், மலை கள் மயங்கும், அலைகள் அடங்கும்.. அந்தக் கண்கொள் ளாக் காட்சியைக் காணக் கண்கள் கோடி வேண்டும். ஆனால் எத்தனை பேர் அதை நின்று இரசிக்கின்றோம்.? குறைந்த பட்சம் திரும்பியாவது பார்கிறோமா...?

அனைவருக்கும் அவசரம்... இந்த உலகில் எல்லோரிற்கும் எல்லாவற்றிற்கும் அவசரம். இயற்கையை நாம் திரும்பிப் பார்க்காததால்தான் அதுவும் எம்மை கண்டுகொள்வதில்லை.

அவள் கண்களில் பிரகாசம், மனதில் புத்துணர்ச்சி, எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அந்த அழகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசித்துக் கொண்டிருக்கலாம் போலிருந்தது. ஆனால் நேரம் தான் போய்விட்டது. கைக்கடிகாரம் மாலை ஆறு முப்பதைக் காட்டியது. கதிரவனும் மெல்ல மறைந்து விட்டான்... அவன் சென்றாலும் அவனது உதவியாளன் சந்திரன் வெளிச்சம் தரும் வேலையை ஆரம்பிக்க இன்னும் சற்று நேரத்தில் வந்து விடுவான்... அவனோடு நட்சத்திரங்களும் கூடவே வந்து விடும்.

அந்த இயற்கை அழகே கண்களையும் மனதையும் நிறைத்திருந்தது அவளுக்கு. நிறுத்தி வைத்திருந்த உந்துருளியை இயக்கிக்கொண்டு புறப்பட்டாள்.

கடற்காட்சி வீதியூடாக செல்வது இலகுவானது என்று கருதியவள் வலப்பக்க சமிக்ஞை விளக்கை ஒளிரவிட்டு மெது மெதுவாக வீதியின் நடுக்கோட்டிற்கு வந்தாள்.

வந்தவள் திரும்ப எத்தணிக்கையில் இடப்பக்கமாக சரேலென ஒரு உந்துருளி கடந்து சென்றது.... உந்துருளியை ஓட்டிச் செல்பவன் அவளை ஒருமுறைக்கு இருமுறை திரும்பிப்பார்த்துச் சென்றான். உந்துருளியின் பின் இருக்கையில் ஒரு அழகிய பெண் அமர்ந்திருந்தாள். அவர்கள் இருவருக்கும் இடையில் ஐந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண் குழந்தையும் இருந்தது. அது அவர்களின் குழந்தையாகத்தான் இருக்க வேண்டும்.

ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்துள் அவளது மூளை அந்த உருவத்தை தன் செல் அணுக்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிப்பார்த்தது. மனது அந்த உருவம் பற்றிய நினைவுகளை மீட்டுப்பார்த்தது. மூளையின் தேடலையும், மனதின் மீட்டலையும் பெற்றுக்கொண்டபின் அவளால் அவ்விடத்தை விட்டு அசைய முடியவில்லை.... உடலின் எந்தப்பாகமும் இயங்கவில்லை. அவளது கண்கள் மட்டும் அந்த மோட்டார் சைக்கிளின் பின் பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்தது. அவனது முகமும் அந்தப் பார்வையும் கண்திரைவழியே சென்று மூளையில் பதித்துக் கொண் டது.

அவள் பின்னால் நின்ற 'கார்' ஒன்றின் 'ஹோரன்' ஒலி அவள் காதுகளில் விழுந்த பின்னரே அவளது அங்கங்கள் இயங்க அரம்பித்தன... எந்தப்பக்கம் போவதற்காக சமிக்ஞை விளக்கை ஒளிரவிட்டாள் என்பதோ, எங்கே போகிறேன் என்பதோ நினைவில் வரவில்லை. கடற்காட்சி வீதி வழியாக திரும்பியது மட்டும் தான் தெரியும், வீடுவந்து சேர்ந்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 13

## தனிமரம்

எவரைப் பார்க்கக் கூடாது என்று எண்ணியிருந்தாளோ அவனே இன்று அவளை திரும்பித் திரும்பிப் பார்த்துச் சென்று விட்டான். அவளாகப் பார்க்கவில்லை, அவள் பார்க்கவும் விரும்பவில்லை. ஆனால் அவனல்லவா திரும்பத் திரும்ப பார்த்துச் சென்று விட்டான்.

குளித்துவிட்டு வந்தவளுக்கு மேனியெல்லாம் வியர்த்தது. இதயம் படபடவென அடித்துக்கொண்டது. உடல் இலேசாக நடுங்கியது. அதிக கோபமோ, அதிக கவலையோ ஏற்பட்டால் அவளுக்கு இப்படித்தான் ஆகிவிடும்.

இரவு உடையை மாற்றிக்கொண்டு பாலகுமாரனின் நாவல்கள் இரண்டையும், 'பனசொனிக் வானொலிப் பெட்டியையும் எடுத்துக்கொண்டு விறுவிறுவென மொட்டை மாடிக்குச் சென்றாள்.

அவளது வேகமான நடையைப் பார்த்த 'அன்ரிக்கு' விளங்கிவிட்டது. அவளுக்கு இன்று 'மூடவுட்' ஆகிவிட்டதென்று. அதனால் அவளிடம் எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசவில்லை அவர். சாப்பாடெல்லாம் எடுத்துவைத்த மாதிரியே சாப்பாட்டு மேசையில் இருந்தது. அதைப்பற்றி அவளிடம் இப்பொழுது எதுவும் கதைக்க முடியாது என்று 'அன்ரி'க்கு நன்கு தெரியும். 'அன்ரி' தொலைக் காட்சியில் போகும் நாடகத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்திருந்தாள்.

இரண்டு இரண்டு படிகளாகத் தாண்டி மொட்டை மாடிக்கு வந்தவள் பாய் ஒன்றை விரித்து அதிலே அமர்ந்து கொண்டாள். வானொலிப் பெட்டிக்கு மின்சார இணைப்பை வழங்கி அதனை உயிர்ப்பித்தாள். பண்ப லையை சீர்செய்வதற்காக அதன் காதைப் பிடித்து திருகி னாள். அடுத்தடுத்து இரண்டு மூன்று பண்பலை வரிசை கள் வந்து போயின... அதனைத் தொடர்ந்து சூரியன் எப்.எம் பண்பலை வரிசை வந்ததும் அதிலே நிறுத்தி னாள். அன்று புதன் கிழமையாதலால் பொற்காலப் புதன் போய்க்கொண்டிருந்தது.

"பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது" என்று சொல்வார்கள்... இப்பொழுது அப் பழமொழியை மாற்றி 'பொன் கிடைத்தாலும் பொற்காலப் புதன் கிடைக்காது' என்று சொல்லுமளவிற்கு நேரத்திற்கும், ஒவ்வொருவரின் மனநிலைக்கும் ஏற்ப நல்ல நல்ல இடைக்காலப் பாடல்களை தந்துகொண்டிருக்கிறான் முதல்வன் சூரியன். நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது புதன் வசந்தம்." என்று மிக நீண்ட ஆரம்பமொன்றை மிக அமைதியாக வழங்கிக்கொண்டிருந்தார் அறிவிப் பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பாளரின் இதமான பேச்சு செவிகளை வந்தடைந்திருந்தாலும் மனதைச் சென்றடையவில்லை... கையில் எடுத்து வந்த பாலகுமாரனின் புத்தகங்களில் ஒன்றை எடுத்து அதன் அட்டையை தடவிப்பார்த்தாள். அதன் தலையங்கத்தை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் வாசித்தாள். பின் அதுவரை வாசித்து முடித்து அடையாளம் வைக்கப்பட்ட புதிய பகுதியைப் புரட்டினாள். கண்கள் பக்கங்களிலும், எழுத்துக்களிலும் பதிந்தனவே ஒழிய மனது அதில் இலயிக்கவில்லை... எழுத்துச் சித்தரின் மாயாஜால எழுத்துக்களில் சரணடைந்து கிடப்பவள் அன்று ஏனோதானோ என்று புரட்டினாள்... அதற்குக் காரணம் அவளது மனம். அவளது கண்களிலிருந்து கண்ணீர்த் துளி ஒன்று உடைந்து புத்தகத்தின் மீது வீழ்ந்து பக்கங்கள் எங்கும் பரவியது. மனது அவளது பழைய வாழ்க்கையை எண்ணி ஏங்கியது.

அம்மா, அப்பா, அண்ணன், அவள் நான்கு பேர் கொண்ட அழகான, அளவான குடும்பம். அவளுடைய அப்பாவின் வருமானத்தில் குறை ஏதுமின்றி அவர்களது வாழ்க்கை சீராகச் சென்று கொண்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரமும், குழப்ப நிலையும், ஆயுதப்போராட்டமும் பலரது வாழ்க்கையை தடம்புரளச்செய்திருந்தது. அதில் அவர்களது குடும்பமும் ஒன்று.

அப்பொழுது அவளுக்கு பதின்மூன்று வயதிருக்கும் தொண்ணூறாம் ஆண்டுக் குழப்பத்தில் அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரைவிட்டு ஓடிச்சென்று சிலகாலம் வெவ்வேறு இடங்களில் தங்கியிருந்து மீண்டும் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள்.

அப்பா அரசாங்க உத்தியோகம் என்பதனால் ஒரு துணிவிலே மீண்டும் ஊருக்குவந்து வீட்டைத் துப்பரவுசெய்து குடியேறினார்கள். அவர்களைப் போல் இன்னும் ஒரு சில குடும்பங்களும் அயல் பகுதிகளில் குடியேறியிருந்தார்கள். ஆனாலும் அப்பகுதி இளைஞர், இளைஞியரும் ஓரளவு வயதானோரும் மீண்டும் வீடுக ளுக்கு வந்திருக்கவில்லை. அவளுடைய தகப்பன் அரசா ங்க உத்தியோகத்தர் என்ற துணிவில் அங்கு மீண்டும் வந்து சேர்ந்திருந்தார்கள்.

காலம் 'சுற்றி வளைப்பு' எனும் பெயரில் அவர் களை சூழ்ந்து கொண்டது.

ஒரு நாள் அதிகாலை ஐந்து மணியளவில் இராணுவ வீரர்களால் திருக்கோணமலை நகரம் சுற்றிவ ளைக்கப்பட்டது. வீடுகளில் இருந்த எழுபது வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் மற்றும் பன்னிரெண்டு வயதுக்கும் குறைவான சிறுவர்களைத்தவிர அனைவரும் 'மக்கெய்சர் முற்றவெளிக்கு அனுப்பப்பட்டார்கள்...., துரத்தப்பட்டார் கள் என்று சொன்னாலும் பிழையில்லை.

பல்வேறு சலசலப்புகளுடனும், பீதியுடனும், நடுக்கத்துடனும் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் ஏன் சில வயோதிபர்கள் கூட திரள் திரளாக ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியிலிருந்தும் அள்ளுப்பட்டுக்கொண்டு முற்றவெளியை நோக்கிச் சென்றார்கள்.

ஒருசிலர் ஒருவரோடு ஒருவர் எதுவும் பேசிக் கொள்ளவில்லை, மௌனமாகவே வந்தார்கள், சிலர் தங்கள் பயத்தை மறைக்க மற்றவரோடு அதிகம் பேசிக் கொண்டு வந்தார்கள், சிலர் சோகமாகவும், கவலை யாகவும் காணப்பட்டார்கள், கணவனுக்கு மனைவியைப் பற்றியும், மனைவிக்கு கணவனைப் பற்றியும், பெற்றோ ருக்கு பிள்ளைகளைப் பற்றியும், பிள்ளைகளுக்கு பெற்றோரைப் பற்றியுமே கவலையாயிருந்தது. யார் யாரைப் பிடிக்கிறார்களோ...., யார் யாருக்கு என்ன நடக்கிறதோ... என்று எல்லோரும் கவலைப்பட்டார்கள், சிலர் மகிழ்ச்சியாகவும் சென்றார்கள். அவர்கள் மகிழ்ச் சிக்கு காரணம் 'நடக்கிறது தான் நடக்கும் நாம் கவலைப் படுவதால் எதுவும் மாறிவிடப்போவ தில்லை' என்ற எண்ணமாக் கூட இருந்திருக்கலாம்.

கொஞ்சம் கொஞ்சமாக முற்றவெளிக்கு ஒரு பெரும் திரளான மக்கள் வந்திருந்தார்கள் அல்லது வரவழைக்கப்பட்டார்கள். சுற்றி வளைக்கப்பட்டு முற்றவெ ளிக்கு அனுப்பப்பட்டார்கள். வயது அடிப்படையில், அரசசேவையில் உள்ளவர்கள், ஏனையவர்கள், ஆண்கள், பெண்கள் என வேறுபடுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவின ருக்கும் வெவ்வேறு வரிசைகள் அமைக்கப்பட்டன.

ஆயுதம் தாங்கிய இராணுவ வீரர்கள் அவர்களை மேற்பார்வை செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு முன்னரும் பகுதி பகுதியாக அவ்வாறான கெடுபிடிகள் நடந்திருந்தாலும் இம்முறை அனைவரினது கண்களிலும் பயம் அதிகமாகத் தெரிந்தது.

பலர் பயத்திலும் கலக்கத்திலும் காணப்பட்டாலும் ஒரு சிலர் தைரியமாகவே இருந்தார்கள்... அவர்களில் ஒரு பகுதியினர், நாம் தான் எதுவும் செய்யவில்லையே பின்னர் ஏன் நாம் பயப்படவேண்டும் என்ற தைரியத் திலும், மற்றைய பகுதியினர் பிடித்தால் வெளியே வர வேறு வழிகள் இருக்கின்றன என்ற தைரியத்திலும் இருந்திருக்கலாம்.

அவர்கள் பயந்தது போல் வரிசையாக வேறுபடுத் தப்பட்டவர்கள் முகமூடி அணிந்த ஐந்தாறு பேர் கொண்ட குழுவினருக்கு முன்னால் அனுப்பப்பட்டார்கள். அவரவர் செய்த பாவ புண்ணியங்களிற்கு ஏற்ப கடவுள் தண்டனை கொடுப்பது போன்று, இவர்கள் செய்யாத பாவங்களுக் குமாகச் சேர்த்து அங்கே தண்டனை கொடுக்கப்பட்டது.

முகமூடியைக் கடந்து வருவதற்கிடையில் பல ருக்கு உயிர் போய் வந்தது. பலர் வேண்டாத தெய்வங்க ளில்லை, பலர் வைக்காத நேர்த்திக்கடன்களில்லை... நாஸ்திகர்கள் கூட ஏதோவொரு கடவுளை வணங்கத்தான் செய்தார்கள். முகமூடியைத் தாண்டி தலையாட்டுப் படாமல் வந்தவர்களின் மகிழ்ச்சி இருக்கிறதே, மரணத்தை வென்று வந்தவர்கள் எவரேனும் இருந்தால் எப்படி மகிழ்ச்சியாக இருந்திருப்பார்களோ அப்படிக் காணப்பட் டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகமாக அரச உத்தியோகத்தர் வரிசையில் இருந்த பலரும் முகமூடியின் தலையாட்டுதலிலிருந்து தப்பித்துக்கொண்டார்கள்... அவளது அப்பாவும் அதைக்கடந்து வந்துவிட்டார். எனினும் அவளது அண்ணன் வந்து சேரவில்லை. விசாரித்துப் பார்த்ததில் அவனை தலையாட்டி பிடித்து வைத்திருக்கிறது என்று அறியக்கிடைத்தது.

அவளது தகப்பனுக்கு வயிற்றைக் கலக்கியது.... தாய் மயங்கி வீழ்ந்தே விட்டாள். இவளுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் அண்ணா... அண்ணா.... என்று அழுது கொண்டிருந்தாள்.

பிள்ள நீ அழுதுகொண்டிருக்காம அம்மாவப் பார். நான் அண்ணாவ எங்க வச்சிருக்கிறாங்கள் என்று பார்த்திட்டு வாரன், என்று கூறிக்கொண்டே இராணுவ வீரர்களின் பெரிய பதவியில் இருப்பவர்கள் நிற்கும் இடத்தை நோக்கிச் சென்றார்... அவள் தகப்பன்

பிடித்து வைத்திருப்பவர்களைப் பார்வையிட எவரும் அனுமதிக்கப்படவில்லை. அவர்களில் சிலர் பேரூந்தில் ஏற்றப்பட்டிருந்தார்கள், சிலர் கூடாரங்களுக் குள் கொண்டுசெல்லப்பட்டிருந்தார்கள். எத்தனையோ பேரிடம் கெஞ்சியும், கால்களில் விழுந்தும்... எதுவும் நடக்கவில்லை.... ஆனால் மகனை நிச்சயமாகப் பிடித்து விட்டார்கள் என்பதை மட்டும் அறிந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டநேரமாக மகனைத் தேடிச்சென்ற தகப்பனையும் காணவில்லை... மயக்கம் தெளிந்து எழுந்த தாய் 'ஓ...' எனக் கதறிக் கொண்டிருந்தாள்.

"அம்மா.... அண்ணாவப் பார்க்கப் போன அப்பாவையும் காணயில்ல."

"இந்த மனுசன் ஏண்டி அங்க போனவர்... ஐயோ அவரையும் பிடிச்சு வைச்சிட்டாங்களோ தெரியாது." என்று சத்தமாகக் கத்திக்கொண்டு எழுந்து கொண்டாள் தாய்.

பின் தாயும், மகளும் அங்கும் இங்குமாக ஓடித் திரிந்தார்கள்... ஒவ்வொருவரும் அங்கு போயப்பார், இங்கு போயப்பார் என்று அலைக்கழித்தார்களே ஒழிய சரியான பதில் தரவில்லை. அழுதழுது, அலைந்தலைந்து ஓய்ந்து போய் 'மெக்கெய்சர்' விளையாட்டு மைதானத்திலேயே விழுந்துவிட்டார்கள் இருவரும்.

இவர்கள் மட்டுமல்ல இவர்களைப் போன்று பல நூற்றுக்கணக்கான அம்மாமார்களும், அப்பாமார்களும், தம்பிமார்களும், தங்கைமார்களும், அண்ணன்மார்களும், அக்காமார்களும், மனைவிமார்களும், கணவன்மார்களும் அங்கே இருந்து கதறிக்கொண்டிருந்தார்கள்.

பிடித்துவைத்தவர்களில் பலரை ஏன் பிடித்தார்கள், எதற்குப் பிடித்தார்கள் என்றே தெரியவில்லை... அவர்கள் பிடிபடுவதற்கு பிரத்தியேகமான காரணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் தேவைப்படவில்லை.... தமிழன் என்ற ஒரு காரணமே போதுமானதாயிருந்தது.

பலநீண்ட மணித்தியாலங்களுக்குப் பின்னர். அவளுடைய தகப்பனையும், தமையனையும் இராணுவத்தினர் பிடித்து வைத்திருப்பதாகவும்..., விசாரித்து விட்டு அனுப்புவதாகவும், அவர்களை வீடு செல்லுமாறும் பணிக்கப்பட்டது. அவர்களிடமும் விசாரணைகள் செய்யப்பட்டு சில தகவல்கள் எடுக்கப்பட்டன. அவர்கள் எவ்வளவோ கெஞ்சியும் கூத்தாடியும் பயனில்லை, மேற்கொண்டு அங்கு நின்றால் மகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற பயத்தில் அவள் தாயார் அவளையும் அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

அவளைப் போல் பலரும் அவ்வாறான நிலையிலேயே வீடு வந்து சேர்ந்தார்கள். பிள்ளைகளை, கணவனை, அண்ணன், தம்பியை, அக்கா, தங்கையை விடுவித்தால் தான் வீடு செல்வோம் என்று ஒரு சிலர் அந்த முற்றவெளியிலேயே படுத்துக்கிடந்ததாகவும்... ஆனால் பிடிக்கப்பட்ட எவரும் விடுவிக்கப்படவில்லை என்றும் அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஆகின.... அவள் அப்பாவும், அண்ணனும் விடுவிக்கப்படவில்லை. ஒரு கட்டத்தில் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை... ஆரம்பத்தில் 'பூசா' முகாமில் வைத்திருப்பது தெரியவந்தது. ஓரிரு தடவைகள் சென்று பார்த்தும் வந்தார்கள். பணத்தைக் கொடுத்தாவது அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே எடுப்பதற்கான முயற்சிகளையும் செய்து பார்த்தார்கள். எதுவும் பயனளிக்கவில்லை.

சில மாதங்களின் பின்னர் அப்பா, அண்ணன் இருவரும் இருக்குமிடம் கூட அறியமுடியாமல் போய் விட்டது அவர்களுக்கு. கணவனையும், மகனையும் பிரிந்ததனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் தாய் நோய்வாய்ப் பட்டுப் போனாள்.... ஒருசில காலத்தில் நோய் அதிகரித்தனால் இவளைத் தனியாக விட்டு விட்டு அவள் தாய் இறைவனிடத்தில் சேர்ந்துவிட்டாள்.

அப்பாவும், அண்ணனும் என்ன கதி ஆனார்களோ தெரியாது... தாயும் அவளை விட்டுப் பிரிந்து விட தனிமரமானாள் பவித்திரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 14

## பிரிவு

தனி மரம் ஒன்று அந்தப் பரந்த வெளியில் தனித்து நின்றிருப்பதையே பார்த்துக்கொண்டிருந்தாள் பவித்திரா. தன்னைப் போன்று அதுவும் தனித்துவிடப்பட்டிருப்பதாக உணர்ந்தாள். அதன்மேல் அவளுக்கு கழிவிரக்கம் ஏற்பட்டது.

அந்த உயர்ந்து, பரந்து விரிந்த விருட்சத்தின் அடியில் சில நாணல்கள் இளம்பச்சை நிறத்தில் காற்றிற்கு அங்கும் இங்குமாக அசைந்து குதூகலமாய் காணப்பட்டது. இந்த விருட்சம் இருக்கும் வரை தனக்கு எந்த ஆபத்தும் வரப்போவதில்லை என்ற நம்பிக்கையில் வந்த மகிழ்ச்சியில் அது குதூகலமாய் காற்றின் திசைக்கேற்ப ஆடி அசைந்து கொண்டிருந்ததாக அவளுக்குப்பட்டது.

அந்த நாணலின் மகிழ்ச்சியைவிட அந்த தனிமரத்தின் சோகமே அவளைப் பற்றிக்கொண்டது. தன்னைப்போல் அதுவும் யாருமற்று தனியாக நிற்பதாக அவள் கருதினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த எண்ணம் அவளது பழைய நினைவுகளை மீட்டிப்பார்த்தது...

அந்தச் சிறுவயதில் அம்மா, அப்பா அண்ணனை இழந்து ஆறுதலற்று, செய்வதறியாது இருந்த அவளுக்கு, அவளின் பெரியம்மா ஒருவரே சற்று ஆறுதலாயிருந்தார். எனினும் தங்களோடு அவளை தொடர்ந்து வைத்திருக்க முடியாத ஒரு நிலை ஏற்பட அவர்கள் அவளை பெண்கள் விடுதி ஒன்றிலே சேர்த்து விட வேண்டியதாயிற்று.

இரவு வந்தால் பகல் வரத்தானே வேண்டும் துன்பத்துக்குப்பின் இன்பம்தானே...

அவளுக்கும் தொடர்ந்தும் பல துன்பங்களுக்குப் பின் சற்ற மன ஆறுதலாய் இருந்தது அந்தப் புனித மரியாள் கல்லூரி விடுதி வாழ்க்கையே.

வயது, வகுப்பு, இனம், சமயம், நிறம் என்று பல வேறுபாடுகள் இருந்தாலும் மனிதர்கள் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றாகவே இருந்தார்கள். ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு வலி, ஒவ்வொரு துன்பம், ஒவ் வொரு சந்தோஷம்....

சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர் தர வகுப்புக்குள் நுழைந்தாள்... பாடங்களோடு சேர்த்து ஆசிரியர்களும், வகுப்பறைகளும், மாணவிகளும் மாறிப் போனார்கள். அவள் மட்டும் மாறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமனதில் இருந்த வலி.... அப்பாவும், அண்ண னும் இருக்கிறார்களா இல்லையா எனத் தெரியாத அவல நிலை... தாயை இழந்த தனிமை.... சாதாரண மகிழ்ச்சி கூட அவளை சந்தோஷப்படுத்துவதில்லை. உதடுகள் விரிய... பற்கள் தெரிய... அவள் சிரித்தது இல்லை. எவரோடும் அளவளாவுவதில்லை. தேவையற்ற நிகழ்வுக ளில் கலந்துகொள்வதில்லை. கூட்டம், கூட்டமாகத்திரிவ தில்லை. எப்பொழுதும் தனிமை..., எதிலும் தனிமை..., நண்பிகள் என்று சொல்லிக்கொள்ளக்கூட அவள் எவரை யும் நெருங்கவிட வில்லை. அது அவள் சுபாவமாகிப் போனது.

எதையும் இலேசில் விட்டுக்கொடுக்கமாட்டாள், அனியாயத்தைப் பொறுத்துக்கொள்ளமாட்டாள், உண் மையை பேசத்தயங்கமாட்டாள், தன் சுயத்தை இழக்க மாட்டாள், நேர்மையானவள்.

அதனாலேயே பலர் அவளோடு சேரத்தயங்கு வார்கள். அவளை முற்றாகத் தெரிந்தவர்கள் மட்டுமே பழகுவார்கள். ஆனாலும் அவள் திமிர் பிடித்தவளல்ல..., கௌரவம் பார்ப்பவளல்ல..., ஈகோ கொண்டவளல்ல..., கொடுமைக்காரி அல்ல..., மிகவும் இரக்க சுபாவம் கொண்டவள், தன்னம்பிக்கை அதிகம் உள்ளவள், எவரையும் மதித்து நடப்பவள், புரிந்துணர்வு உள்ளவள்.

எவரோடும் அதிகம் பேசாதவள், யாரோடும் அதிகம் பழகாதவள், அவனோடு மட்டும் எப்படிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகினாள் என்பது இன்றுவரை அவளுக்கே புரியாத புதிர்தான்.

அவன் பெயர் 'ரொபின்சன்.' அவளுக்கு நேர் எதிரானவன். எதிர் எதிர் முனைக் காந்தம் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்வது போல் அவர்கள் இருவரும் சேர்ந்து கொண்டார்கள்.

அவன் அதிகம் கதைப்பான், நிறைய நண்பர்கள், நண்பியர்களும் கூட. எந்நேரமும் மகிழ்ச்சியாக இருக்க எண்ணுபவன். தான் இருக்கும் இடத்தை கலகலப்பாக வைத்திருப்பான், மற்றவர் மனமறிந்து பேசப் பழகக் கூடியவன், அதிகம் கோபப்படமாட்டான்.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் பல்கலைக் கழகம் செல்வதற்கு போதியதாக இருக்கவில்லை. மேற் கொண்டு உயர்தரப் பரீட்சை எடுக்கும் விருப்பமும் வசதி யும் அவளுக்கு இருக்கவில்லை. அவளது நன்நடத் தையும், மற்றவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவையும், அவர்களை பொறுப்பாக பார்த்துக்கொள்ள வேண்டிய தேவையும் இருந்ததனால் மேலும் ஒரு வருடகாலம் அவள் அந்த விடுதியிலேயே தங்கியிருக்கலாம் என்று நிர்வாகம் பெரிய மனதுடன் வழங்கியிருந்தது. அதனால் அங்கேயே தங்கியிருந்து வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொண்டாள். அப்பொழு துதான் அவனை சந்திக்க வேண்டி வந்தது. அவன் அவ்வெளிவாரிப் பல்கலைக் கழகத்தில் அவளைவிட இரண்டு வருடம் 'சீனியர்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் அவனும் அவளைக் கண்டுகொள்ள வில்லை..., அவளும் அவனைக் கண்டுகொள்ள வில்லை..., ஆனாலும் காலம் அவர்களுக்கு ஒருவருக்கு ஒருவரைக் காட்டிக் கொடுத்தது.

அங்கே உள்ளவர்களிலிருந்து அவன் வேறுபட்டு நிற்பதை அவள் கண்டுகொண்டாள். அதேபோல மற் றைய அனைவரிலும் அவள் வேறுபட்டுத் தெரிந்தாள் அவனுக்கு. அது ஒன்றே அவர்களை ஆரம்பத்தில் நண் பர்களாக்கியது.

நட்புக்கும் காதலுக்குமான இடைவெளி, ஒரு மைக்ரோ மீற்றரிலும் குறைந்தது.... அவர்களது நட்பும் பின்னர் காதலாய் கண்டறியப்பட்டது. அவளைப் பற்றி முழுமையாக அறிந்தபின் அவள்மேல் ஓர் இரக்கம் ஏற்பட்டது அவனுக்கு. பின் அதுவே காதலாகவும் மாறியிருந்தது. காதல் எப்பொழுது தோன்றுகிறது..., எங்கே தோன்றுகிறது..., என்று துல்லியமாக இதுவரை எவரும் கணிக்கவில்லை. காதலிப்பவர்கள் கூட அதை, அந்தத் தருணத்தை சரியாகச் சொல்லிவிட முடியாது.

ஒரு பெண் ஒருவனை முழுமையாக நம்பிவிட் டால் அவனுக்காக அவள் எதையும் செய்வாள். அவளும் அப்படித்தான்.... அவனை முழுமையாக நம்பினாள்.

இரண்டு வருடங்கள்... அவளது தாய், தந்தைய ரோடு இருந்ததைப் போன்று ஒரு மகிழ்ச்சியான நிம்மதி யான, நம்பிக்கையான காலமாக இருந்தது அவளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிந்தால் மீண்டும் இரவு வரத்தானே வேண்டும்.

ஆரம்பத்தில் இருவருக்கிடையிலும் சின்னச் சின்ன ஊடல்கள்...., காதலர்களிடையே பிரச்சனைகள் ஏற்படுவதும், பின்னர் அது தானாகவே சரிசெய்யப் படுவதும் சகஜம் தானே.... அவர்களது ஆரம்பகாலப் பிரச்சனைகளும் தானாகவே சரிசெய்யப்பட்டன... ஆனா லும் காலப்போக்கில் இருவரில் ஒருவர் அப்பிரச்ச னையை சரிசெய்ய வேண்டியிருந்தது.

இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து வெளியேறி யவனுக்கு நல்லதொரு வேலையும் கிடைத்திருந்தது. அதன் பின்தான் அவனது போக்கில் சின்னச் சின்ன மாற்றங்கள் ஏற்பட்டது.

தன்னம்பிக்கைக்கும் தலைக்கணத்துக்கும் சிறிய வித்தியாசம் தான். 'என்னால் முடியும்.' என்பது தன்னம் பிக்கை, 'என்னால் மட்டும் தான் முடியும்' என்பது தலைக்கணம்.

அவளுக்கு ஒரு நாளும் தலைக்கனம் இருந்த தில்லை.... அவனது தன்னம்பிக்கை தலைக்கனமாக மாறியிருந்தது.

காதலிக்கும் அனேகமான ஆண்களிடம் இருக்கும் ஒரு நல்ல பழக்கம் என்ன தெரியுமா...? உண்மையை சொல்லி விடுவது. அதுவும் காதலில் பிளவு ஏற்பட்ட பின் தான் அவர்கள் உண்மையைச் சொல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தனது இரண்டு தங்கைகளை கரைசேர்க்கும் பொறுப்பு இருப்பதனால், ஒன்றுமில்லாத அவளை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அதற்கு அவன் பெற்றோர் ஒருக்காலமும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள், என்றும் சொன்னான்.

அவன் சொன்னது உண்மைதான். ஆனாலும் இரண்டு வருடத்திற்கு முன்னர் இந்த உண்மை அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை போலும்....

அவன் மீது வைத்திருந்த அன்பின் மிகுதியால் அவனோடு வாதிட்டுப் பார்த்தாள். அப்பொழுதுதான் மேலும் சில உண்மைகள் அவளுக்குத் தெரிய வந்தது. அது அவன் பற்றிய உண்மையான உண்மைகள்.

"நான் இப்படித்தான் என்று தெரிந்துதானே என்னை விரும்பினீங்க... என்னட்ட காசு பணம் இல்லை யெண்டு இப்பதான் உங்களுக்குத் தெரிஞ்சதா...?" காதலனால் கைவிடப்பட்டவர்கள் வழமையாகக் கேட்கும் கேள்விதான் இது.

அதற்கு அவன் கொடுத்த விளக்கங்கள்தான் அதிகம்.

"பவித்திரா யோசிச்சுப் பாருங்க.... 'பிரக்டிக்கலா' நாங்க சேர்ந்து வாழ்றது சரிவராது...." இது அவன் இறுதியாகச் சொன்னது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை தான்.... இனி அவனோடு வாழ்வது சரிவராத ஒன்றுதான்.... அவன் சொன்னது போல் இனி 'பிரக்டிக்கலாக' அது சாத்தியப்படாத ஒன்று தான்.

அவனுக்கு இரண்டு தங்கச்சிமார் இருப்பது பற்றியும் அவர்களுக்கு திருமணம் செய்துவைப்பது பற்றியும் அவனை விட அவள் அதிகமாக யோசித்திருக்கிறாள். அவன் தங்கைமாரின் திருமணத்திற்குப் பின்னரே தமது திருமணம் என்று கூட அவள் தனக்குள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தாள். அதை ஓரிரு தடவைகள் அவனுக்குத் தெரியப்படுத்தியும் இருக்கிறாள்.

ஆனாலும் அவளை விட்டுப் பிரிவதற்கான வலுவான காரணங்களை அவன் தேடி வைத்திருந்தானே அதன் பின்னர் என்ன செய்வது.

அவனது எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்று அவனுக்கு வாழ்த்துக் கூறிவிட்டு விலகிவிட்டாள்.

மற்றப் பெண்களைப் போல் அவள் அழுது கொண்டிருக்கவில்லை. ஓரிரு நாட்கள் மனதிற்கு கஷ்டமாகத்தான் இருந்தது. அவள் விரும்புபவர்கள் எவரும் அவளோடு நீண்டகாலம் இருப்பதில்லை. அப்பா..., அம்மா..., அண்ணா... இப்பொழுது அவன்.

"இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தான் தேவன் அன்று.... கடவுள் அமைத்து வைத்த மேடை...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணதாசனின் வரிகளை எஸ்.பி.பாலசுப்பரமணியம் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தார்... சூரியன் எப்.எம். வானொலியில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 15

## வரலாறு

திருந்து திரிகயிலை வெற்பிற் சிவாலயமும்
கோபுரமும் சிறக்க நாட்டிப்
பரிந்துலகோர் பவமறுக்கும் பாவநாசச்
சுனையும் பரிவாய்ச் செய்து
தெரிந்த புகழ்த் திருக்குளமும் வயல் வெளியும்
திருத்தி அரர்க்கென்ன ஈந்து
பரிந்தவரன் தொழும்பு செய்ய ஆள்வேண்டுமென
நடந்தான் ரிதிவேந்தன்.

**- கோணேசர் கல்வெட்டு -**
**- நான்காம் பாடல் -**

திரிகயிலையென்று போற்றப்படும் திருக் கோணமலையில் கோணேசப் பெருமானுக்குச் சிவாலயத்தையும், கோபுரத்தையும் சிறப்பாக அமைத்து உலக மக்களுடைய பாவங்களை அழிக்கவல்ல பாவநாசச் சுனையும் செய்து நிறைவேற்றிய குளக்கோட்டு மன்னன், ஆற்றுநீரும், வேற்றுநீரும், ஊற்றுநீரும் தங்கி நிறைந் திருக்கத்தக்க குளங்களையும், காடுகளைத் திருத்தி வயல்வெளிகளையும், அமைத்து இவை யனைத்தையும் கருணாமூர்த்தியாகிய கோணேசப் பெருமானுக்கு என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணம் செய்து, கருணா மூர்த்தியான கோணேசர் பெருமானுக்கு தொழும்பு செய்வதற்கு மக்கள் வேண்டும் என்று சிந்தித்த சூரியகுலத்தில் உதித்த குளக்கோட்டு மன்னன் மேற்கொண்டு காரியங்களை செய்தான். என்கிறது இக் கோணேசர் கல்வெட்டுப் பாடல்.

'திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றுச் சங்களையும், திருக்கோணமலை வன்னிமைகளின் வரலாறு பற்றிய சில செய்திகளையும், சமூதாய வழமைகளையும் ஒருங்கு சேர்த்து இணைத்துக்கூறும் அரிய நூல் கோணேசர் கல்வெட்டு, இலங்கை வரலாற்றின் பிரதான மான அத்தியாயம் ஒன்று இதிலே பொதிந்துக்கிடக்கிறது, என்று பண்டிதர் இ.வடிவேல் அவர்கள் "கோணேசர் கல்வெட்டு" எனும் நூலின் பதிப்புரையில் கூறுகிறார்.

திருக்கோணேஸ்வரத்தின் ஸ்தலபுராணமாகிய ஸ்ரீ தெட்சணகைலாய புராணத்தில் அடங்கியுள்ள பாடல் களில் காணப்பட்ட கோணேஸ்வர பர்வதம் பற்றிய குறிப் புக்களினால் கவரப்பட்ட குளக்கோட்டு மன்னன் திருக்கோ ணமலைக்கு வந்து ஆலயத்தை புனருத்தாரணம் செய் தான் என்று வரலாறு கூறுகிறது.

திருக்கோணமலை மாவட்டத்தில் மகாவலி கங் கைக் கரையில் கங்குவேலி எனும் கிராமத்தில் அமைந்த அகத்தியர் ஸ்தாபனத்தின் ஸ்தலபுராணமாக விளங்கும் 'திருக்கரைசைப் புராணத்தின்' கங்கை சருக்கம் எனும் பகுதியில் 22 தொடக்கம் 53 வரைக்குமுள்ள பாடல்களில் கோணேஸ்வரப் பெருமான் பூசிக்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1491 செய்யுள்களைக்கொண்ட திருக்கோணேசர புராணமும் திருக்கோணேஸ்வரம் தொடர்பான மரபுவழிக் கதைகளின் மிக வளர்ச்சி பொருந்திய நிலையினைக் காட்டுகிறது இதில் கோயில் மூலக்கதைகளும், மரபுகளும் திருக்கோணமலையின் தேசத்து வரலாறாக விரிவாக்கம் பெற்றுள்ளது. இது கோணேசர் கல்வெட்டில் இடம்பெற்ற விடயங்களை விரிவுபடுத்திக் கூறும் ஓர் இலக்கியப் படைப்பாகும்.

திருக்கோணேஸ்வரத்துடன் மிக அன்யோன்ய மாய் இணைந்திருப்பது குளக்கோட்டு மன்னனின் பெயர். திருக்கோணேஸ்வரத்தை புனருத்தாரணம் செய்து அதன் வளத்திற்கு மெருகூட்டிய குளக்கோட்ட மன்னனின் ஆற்றலையும், அரும்பணிகளையும், கீர்த்தியையும் மிக அழகாக முன்னிறுத்தி நிற்கிறது 'கோணேசர் கல்வெட்டு' எனும் நூல்.

கோணேசர் கல்வெட்டு எனும் கோணேசர் சாசன மாகிய இந்நூல், குளக்கோட்ட மன்னன் கோணேஸ்வரம் கோயிலில் செய்த திருப்பணிகளையும், அவன் ஏற்படுத் திய நியமங்களையும், அவனது தீர்க்க தரிசன யோசனை களையும் உள்ளடக்கிய ஒன்று. இதனை கவிராஜ வரோதயர் என்பவர் பாடியுள்ளார்.

குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோவில் பற்றியும் அதனை நிர்வாகம் செய்யும் முறைகள், அதன் சட்டதிட்டங்கள் பற்றியும் விரிவாகக் கூறியுள்ள விஷயங்கள் செப்பேட்டுப் பெரியவளமைப் பத்ததியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறித்து வைக்கப்பட்டிருந்ததாக அறியப்படுகிறது. அவ்விடயங்களாவன,

கட்டுக்குளப்பற்றில் கனகசுந்தரப் பெருமாள் என்பவரை நிர்வாக பொறுப்பதிகாரியாக நியமித்த குளக்கோட்டு மன்னன் அவர் கோணேஸ்வரம் கோயிலில் செய்ய வேண்டிய தொழும்புகள் எவை என்பதை நியமனம் செய்து செப்பேட்டு பெரியவளமைப் பத்தியும் கொடுத்தான். அது போல் காஞ்சிபுரத்திலிருந்து அழைத்து வரப்பட்ட புலவன் ஒருவனை கொட்டியாபுரப் பற்றிலுள்ள சம்பூரில் இருக்கச்செய்து அவன் கோணேசப் பெருமா னுக்கு திருமுறை ஓதும் பாடல் தொழும்புகளையும், ஏனைய தொழும்புகளையும் கூறும் செப்பேட்டுப் பிரதியையும் கொடுத்தான்.

கோணேஸ்வரம் கோயிலின் பராமரிப்புக்காக உருவாக்கப்பட்ட நிலங்கள், கிராமங்கள், அங்கே குடிய மர்த்தப்பட்ட மக்களின் கடமைகள், கோயிற் தொழும்புக ளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள், கோயிலுக்குரிய திரவியங்கள், தானியங்கள், களஞ்சியப் பொருட்கள் என்பவற்றை எவ்வாறு மன்னனால் திட்டம் பண்ணியபடி செயற்படுத்த வேண்டும் என்பதை பெரியவளமைப் பத்ததியில் குறிப்பிட்டு, அதனை செயற்படுத்தும் பணிகளை கனகசுந்தரம் பெருமாள் என்பவரிடம் ஒப்படைத்ததாக தெரியவருகிறது.

சோழநாட்டிலுள்ள கோயில்களில் பணியாற்று பவர்களுக்கு அரசாங்க நன்கொடையாக மன்னர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்களை வழங்கியிருக்கின்றார்கள். அதுபோல் குளக்கோட்டு மன்னனும் திருக்கோணேஸ்வரத் தொழும் பாளர்களுக்கு நிலங்களை வழங்கியிருந்தான்.

மன்னன் கோயில் திருப்பணிகளை நிறைவேற்றிய பின் அக்கோவில்களைப் பராமரிப்பதற்காக 27 அவணம் நெல்விதைப்புத் தரைகளை உண்டாக்கினான் என்றும், அவற்றிக்கு நீர் பாய்ச்சுவதற்காக எல்லைக்குளம், வெண்டரசன் குளம், கந்தளாய்க் குளம் போன்ற குளங்க ளையும் கட்டுவித்து, விளைநிலங்களில் குடியிருத்து வதற்காக மருங்கூர், காரைக்கால் திருநெல்வேலி, மதுரை, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் இருந்து குடிமக்களை அழைத்து வந்து கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப்பற்று போன்ற இடங்களில் குடியமர்த்தி, அவர்களுக்கு மானியங்களும் வழங்கி, அவர்களின் கடமைகளும், உரிமைகளும் எவையென் பதையும், அவர்களின் தொழும்புகளையும், கோயிலை பராமரிக்கவேண்டிய முறைகளையும், மக்களின் வாழ்வு தாழ்வுக்குச் செய்ய வேண்டிய சமூகப் பணிகளையும் பத்ததியில் குறித்து வைத்துள்ளான் என்று கோணேசர் கல்வெட்டு நூற்பாக்கள் கூறுகின்றது.

குளங்களையும், வயல்வெளிகளையும், கோணே சர் பெருமானுக்கு கோயிலையும் அமைத்த குளக்கோட்டு மன்னன் ஆலயத்திற்கு தொழும்பு செய்வதற்கு மக்கள் வேண்டும் என்று எண்ணி பங்குனி உத்தர நன்நாளில் பதினைந்தாம் திகதி அன்று சகல சீர்வரிசைகளுடனும் சோழநாடு சென்று அங்கு மருங்கூர் எனும் ஊருக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் நல்லொழுக்கமும் ஆசாரமும் நிறைந்த முப்பது குடிமக்களை மரக்கலங்களில் ஏற்றிக்கொண்டு வந்து சேர்ந்தான்.

கோயிலின் திருவறைகளில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த பொருட்களையும், தினமும் வரும் பொருட்களின் வரவுகளையும், பூசைக்கு செலவாகும் பொருட்களின் செலவு விபரங்களையும் எழுதி கணக்கிட்டு வைப்பதற்கு குருகுலக் கணக்கரை நியமனம் செய்தான். அத்துடன் இறைவனுக்கு ஆரத்தி எடுக்க தானத்தார் குலத்தைச் சேர்ந்த பெண்களையும், நடனமாடவும், பன்றிகுத்தவும், இறைவனுக்கு பட்டாடை இடவென்றும் இக்குடியிலிருந்து ஏழு குடிகளுக்கு இராயர் என்ற உயர்ந்த பட்டத்தையும் கொடுத்தான்.

மருங்கூரிலிருந்து அழைத்துவரப்பட்ட குடி மக்களாகிய தானத்தாருக்குரிய ஆலயப் பணிகளை (தொழும்புகள்) நியமம் செய்த மன்னன், மேலும் ஆட்கள் போதாதென நினைத்து இந்தியாவிலுள்ள சகல வளங்களும் நிறைந்த காரைக்கால் எனுமிடத்திலிருந்து பரம்பரை பரம்பரையாக ஆலயத்தொழும்பு செய்துவரும் நற்குடிகளிலிருந்து வரிப்பத்தார் எனப்படும் இருபத்தியொரு குடிகளைச் சேர்ந்த மக்களை அழைத்துவந்தான்.

அவர்களுக்கும் அவர்கள் செய்யவேண்டிய பின்வரும் தொழும்புகளை நியமனம் செய்தான். அவையாவன பட்டுவஸ்திரங்களை கொய்து பிடித்தல், பத்திரம் புஷ்பங்கள் எடுத்தல், விளக்கேற்றுதல், தட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டு சாமான்களை பூசி விளக்குதல், தினமும் நெல்லுக் குத்தி அரிசி சேர்த்தல், சாணிதெளித்தல், விறகு சேர்த் தல், நடனமாடும் பெண்களுடைய நடனத்திற்கு இசைக் கருவி வாசித்தல், பாடுதல், சுற்றுப்பலிக்கு பாவாடையிடு தல், திருப்பொற்சுண்ணம் இடித்தல், கொடியேற்றுதல், இறக்குதல் முதலிய நேரங்களில் கொடிகளை சுமந்து செல்லல், சந்தனம் அரைத்துக் கொடுத்தல் என்பன போன்ற தொழும்புகளைச் செய்வதற்கு தொழும்பாளர் களை தேர்ந்தெடுத்து நியமித்தான்.

இவ்வரிப்பத்தாரில் சிறந்த ஐந்து குடிகளுக்கு பண்டாரத்தார் எனும் கௌரவப் பட்டத்தையும் வழங்கி னான்.

அத்தோடு இவர்களுக்கு நீர்பாய்ச்சலுள்ள பள்ள வெளி எனும் நெல்வயல்களையும் மானியமாகக் கொடுத் தான் என்று கோணேசர் கல்வெட்டின் பாடல்கள் கூறுகின்றது.

மேலும் அதில் கூறப்பட்டுள்ளதாவது... இவ்வாறு தொழும்பு செய்யும் தானத்தார், வரிப்பத்தார்களுக்கு இடையில் பிணக்குகள் ஏற்படின் அதனை எவ்வாறு தீர்த்துவைப்பது என்று குளக்கோட்டு மன்னன் சிந்தித்தான் என்றும் அதனால் மன்னன் மதுரைக்குச் சென்று ஒழுக்க சீலனாகிய தனியுண்ணாப் பூபாலன் என்பவரை அழைத்து வந்து திருக்கோணமலை நகரத்தை ஆட்சிசெய்யும் படி நியமித்ததான் என்றும் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் கட்டுக்குளப்பற்று, கொட்டியாபுரப் பற்று என்று பகுக்கப்பட்ட பிரிவிலுள்ள குடிமக்கள் கோணேசர் பெருமானுக்கு தொழும்புகள் செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

கட்டுக்குளப்பற்றில், நிலாவெளியூரில் வாழ்ந்த மேன்மைக்குரிய பெரியவர்கள் காப்பணிந்து திருவிழாக் களை நடத்துதல் ஆறு அவணம் சுத்தமான நெல்லை ஆலயத்தில் ஒப்படைத்தல், பால், தயிர், நெய் கொடுத் தல், சுங்கத் தீர்வை, கடற் பிரயோசனத்தின் இலாபங்கள் என்பவற்றை கோணை ஈசனுக்கு கொடுக்கவேண்டும் என்றும்,

கொட்டியாபுரப்பற்றில் உள்ளவர்களுக்கு காடுக ளைத் திருத்தி விளைநிலங்களை உண்டாக்கிக் கொடுத்த தோடு, அவர்கள் கோணேசர் கோயிலுக்கு பாக்கு, வெற்றிலை, வாழைப்பழம், சந்தனம், குற்றமற்ற பால், தயிர், நெய், நூறு ஆவணம் அரிசி, என்பவற்றோடு இலுப்பை, புன்னைப் பருப்புக்களை இறையாத்தீவில் உள்ளவர்களிடம் ஒப்பிவித்து அவைகளை அவர்கள் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் வகைகளை தனித்தனியே எடுத்துச் சென்று கெவுளிமுனையிலுள்ள ஓடக்காரர் களிடம் கொடுக்கவேண்டும் என்றும் அதை அவர்கள் ஓடங்களில் ஏற்றிவந்து கோணேசர் கோவிலில் ஒப்படைக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

கோயிலிலே அப்பொருட்கள் நீதியாகப் பதிவு செய்யப்படும் கருகுலக்கணக்கிற் பதிவு செய்யப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வகை எண்ணெயும் அவை சேர்த்து வைப்பதற்குரிய கிணறுகளில் சேர்த்து வைக்கப்பட வேண்டும் என்றும் மன்னன் கூறியிருந்ததாக கல்வெட்டின் பாடல் கூறுகிறது.

இவ்வாறு குளக்கோட்டன் கட்டளைப்படி சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்த திருக்கோணேஸ்வரம் ஆலயம் 1624ம் ஆண்டு சித்திரைப்புத்தாண்டு தினத்தில் போர்த்துக்கீசரால் முற்றாக அழிக்கப்பட்டது. அதன் பின்னர் தம்பலகாமத்தில் இந்த மானியமுறை காலத்திற்கும், இடத்திற்கும், பொருளாதாரத்திற்கும் ஏற்ப மாற்றம் பெற்று வழங்கப்பட்டு வந்திருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. மன்னர்காலத்தில் கட்டுக்குளப்பற்று, கொட்டியாபுரப்பற்று, தம்பலகாமப்பற்று ஆகியவற்றில் குடியமர்த்தப்பட்ட குடிமக்களில் ஒருசாரர் கோயிற் தொழும்பாளர்களாகவும், மறுசாரர் குடிமக்களின் தொழும்பாளர்களாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். எனினும் கோணேசர் கோயிலை போத்துக்கீசர் அழித்த பின் கட்டுக்குளப்பற்று, கொட்டியாபுரப்பற்று பிரதேசங்களில் வாழ்ந்த தொழும்பாளர்கள் கோணேசர் கோயிற் தொழும்பு செய்யும் வாய்ப்பை இழந்த படியால் அவர்களுடைய மானிய உரிமையும் காலக்கிரமத்தில் மறைந்துவிட்டது என்பதே உண்மை.

போத்துக்கீசரால் கோயில் அழிக்கப்பட்ட வேளை கோயிலிலிருந்த விக்கிரகங்களை குருமார்களும், தொழும்பாளர்களும் எடுத்துச் சென்று குளங்களிலும், நிலத்தில் புதைத்தும் மறைத்து வைத்துள்ளார்கள். அதில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில விக்கிரகங்கள் தம்பலகாமத்திற்கு எடுத்து செல்லப் பட்டு அங்கு சுவாமிமலையிலும் வேறு இடங்களிலும் வைத்து வழிபட்டு வந்தபடியால் அங்கு வாழ்ந்த தொழும்பாளர்கள் கோயிற் தொழும்புகளையும் குடிமக் களின் தொழும்புகளையும் முன்போல் செய்து வந்துள் ளார்கள், இதனால் அங்கிருந்த வயல்நிலங்களை அத் தொழும்பாளர்கள் பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வருகிறார்கள்.

கோணேசர் கல்வெட்டின்படி தம்பலகாமம் கோணேசர் கோயிலில் பின்வரும் தொழும்புகள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அவையாவன அடம்பன் தொழும்பு, புலவன் தொழும்பு, வைராவியார் தொழும்பு, மாலைகட்டித் தொழும்பு, இராசமேளம் அடிக்கும் தொழும்பு, பண்டாரியார் தொழும்பு, பண்டாரவன்னியன் தொழும்பு, மண்ணுடையான் தொழும்பு (குயவன் தொழும்பு) நாவிதன் தொழும்பு, மூப்பன் தொழும்பு, ஆசாரியார் தொழும்பு, குடும்பன் தொழும்பு, (மரமேறும் தொழில்), எனப் பல்வேறு தொழும்புகள் அங்கு காணப்படுகின்றன.

இத் தொழும்பாளர்களுக்கு முறையே எலிய டப்பன் வயல், புலவன் வயல், வைராவியார் கீத்து, மாலைகட்டிக் கீத்து, மேளகாரன் கீத்து, பண்டாரி கீத்து, பெரியவண்ணான் வயல், குயவன் கீத்து, அம்பட்டன் வெட்டுக்காடு, தம்பட்டக்காரன் கீத்து, தட்டான் கீத்து, பள்ளன் வயல் எனும் பெயர்களில் வயல்கள் மானியங் களாக இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோணேசர் கோயிலுக்குரிய விவசாய நிலங்கள் பெருமளவில் தம்பலகாமத்தில் இருந்தாலும், கோணேசர் கோயிலின் தொழும்பாளர்கள் அங்கும் வாழ்ந்து வந்தாலும் குளக்கோட்டு மன்னனுடைய திட்டத்தின்படி அங்குள்ள நிலங்கள் அவர்களுக்கு மானியமாக வழங்கப் பட்டிருந்ததாலும் நான்கு நூற்றாண்டு காலமாக கோணே சர் கோயிலுக்கு உரித்தாயிருந்த விவசாய நிலங்கள் தம்பலகாமம் கோணேசர் கோயிலுக்கும் உரியது போலா கிவிட்டது' என்று 'கோணேஸ்வரம் தொன்மையும் வன் மையும்' என்ற நூலிலே ஞான சிரோன்மணி சைவப் புலவர் பண்டிதர் இ.வடிவேல் ஐயா அவர்கள் ஆதங்கப் படுகிறார்.

**ஆதியாம் கோணநாதன் ஆலயம் அழிந்திட்டாலும்**
**நீதியிற் சிறந்த குளக்கோட்டனின் தருமம் குன்றா**
**சோதியாய்த் தம்பை நாட்டில் துலங்கிடும் ஆலயத்தில்**
**மாதுமை பங்கன் கோண நாயகன் குடியிருந்தான்.**

-ஆதிகோணநாயகர் வரலாறு -
-திரு.க.வேலாயுதம் -

திருக்கோணமலை கோணநாதர், தம்பைநகர் ஆதிகோணேஸ்வரர் கோயிலில் குடிபுகுந்து விட்டார் என்று திரு.க.வேலாயுதம் அவர்கள் விபரித்ததின்பால் நாமும் மாதுமை பங்கன் கோணைநாதனை தரிசிக்க ஆதிகோணேஸ்வரர் ஆலயம் செல்வோம். நாம் செல்லும் நேரம் அங்கே திருவிழா ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 16

## நரபலி

இளஞ்செங்கதிர்களை உமிழ்ந்து கொண்டு கிழக்கு வானிலிருந்து மெல்ல மேலே எழுந்து கொண்டிருந்தான் கதிரவன். அவன் பரப்பிய இளம் கதிர்கள் வானளாவி உயர்ந்து நிற்கும் ஆதிகோண நாயகரின் ஐந்துதள இராசகோபுரத்தில் பட்டு மோட்சமடைந்தது தங்கநிறத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கும் இராசகோபுரத்தின் எழிலை அது மேலும் பிரகாசப்படுத்தியது. நான்கு பக்கமும் ஆதவனின் ஒளிபட்டுத் தெறித்து அப்பிரதேசத்தையே ஜொலி ஜொலிக்க வைத்தது.

தூரத்தே கோயிலை நோக்கி வந்துகொண்டிருக்கும் அடியவர்கள் அந்த ஒளிப்பிழம்பைக்கண்டு பரவசமடைந்தார்கள். அதோ தங்கத்தை கரைத்து வார்த்துவிட்டார்களா! என்று அவர்கள் வியந்துகொண்டே சிரம்மேல் கரம்கூப்பி ஹம்சஹமனாம்பிகா எனும் மாதுமை சமேத ஆதிகோணநாயகரை வணங்கினார்கள்.

63 அடி 3 அங்குல உயரமும் 3 அடி 27 அங்குல விட்டமுடைய அடித்தளத்தைக் கொண்ட இராஜ கோபுரத்தின் நுழைவாயில் 16 அடி உயரமும் 8 அடி அகலமும் கொண்டது. அந்த இராஜ கோபுரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசித்து கோயில் வளாகத்தின் பிரதான வாயிலின் வலது பக்கத்தில் அமைந்திருக்கும் திருக்கிணற்றில் நீர் எடுத்து கைகளையும் கால்களையும் அலம்பிக்கொண்டு 'சிவசிவா' என்று சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள் மரகதம். மரகதத்தை நாம் நீண்டநாட்களாக சந்திக்கவில்லை வாருங்கள் அவளுடன் சேர்ந்து நாமும் திருக்கோயிலினுள் நுழைவோம்.

நுழைவாயிற் படிக்கட்டை தொட்டு வணங்கி அதனை கடந்து உள்ளே சென்றால் கருவறை எனும் கற்பக்கிரகம் காட்சிதரும். அங்கே கரியாலிங்கம் பிரதிஷ்ட்டை செய்யப்பட்டுள்ளது.

இலிங்கத்திற்கு அவயம் இல்லாததால் அது அருவம் எனவும் தூண்போல் அமைந்திருப்பதால் உருவம் எனவும் நோக்கப்படுகிறது. ஈசன் அருவுருவானவன் என்பதை உணத்துவதாகவே இது அமைகிறது. மானுட ஆக்கை வடிவமே சிவலிங்கம் இதன் அடிப்பாகம் பிரம்மபாகமாகவும் மத்தியிலுள்ளது விஷ்ணுபாகமாகவும் மேற்பரப்பில் உள்ளதை உருத்திரபாகமாகவும் கொள்வார். இது இறைவனின் ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் குறித்து நிற்கிறது.

கருவறையில் பூஜிக்கப்படும் சிவலிங்க திருமேனியை தரிசித்துக்கொண்டே உள்ளே சென்ற மரகதம் கோயிலின் உள் அமைப்பைக் கண்டு வியந்து நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பக்கிரகம், உபசோபன மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம் என்பனவும் அம்பாளுக்கு கருவறையும், அர்த்த மண்டபமும், உபசோபன மண்டபமும் உடைய தனிப்பீடமும் விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் என்பவர்களுக்கு தனித்தனி ஆலயமும், அர்த்த மண்டபத்தில் கதிர்காம சுவாமியும், மகா மண்டபத்தில் சோமஸ்கந்தர், பிள்ளையார், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், அஸ்திர தேவர், பாலம்போட்டாறு அம்மன், சந்திர சேகர முகூர்த்தம் ஆகிய எழுந்தருளி விக்கிரகங்களும் உள்ளன. புராண இதிகாச சம்பவங்களை விளக்குகின்ற சிற்பங்கள் தூபியிலே அங்கங்கே காணப்படுகின்றது.

இவற்றையெல்லாம் பார்த்தும் வணங்கியும் கொண்டு உள்வீதியை வலம்வந்து கொண்டிருந்தாள் மரகதம். பக்கச்சுவர்களிலே எழுதப்பட்டிருந்த கோணேசர் கல்வெட்டுப் பாக்கள் கோயிலின் தொன்மையை பறை சாற்றியது.

வசந்த மண்டபத்திற்கு முன்னால் இரு பக்கங்களும் பக்தர்கள் வரிசையாக நின்றும் அமர்ந்து கொண்டும் பூஜையை பார்த்து இறைவனை தரிசித்துக் கொண்டிருந்தார்கள்.

மரகதமும் வசந்த மண்டப சுவாமியை தரிசித்து திரும்பியவள் சற்றுத் தொலைவில் வெளிவீதிக்குச் செல்லும் வாசலின் முன்பகுதியில் உட்புறமாக பார்வதியும், அவள் மகள் இளவேணியும், இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில உறவினர்களும் நிற்பதைக் கண்டாள். அடியவர் களைக் கடந்து அவர்களை நோக்கி வந்தாள், புன்னகை புரிந்தாள். அவர்களும் பதிலுக்கு புன்னகை புரிந்தார்கள். பார்வதி மரகதத்தை உற்று நோக்கினாள்...., மரகதமும் சில வினாடிகள் பார்த்துவிட்டு தலையைத் தாழ்த்திக் கொண்டாள்... மீண்டும் நிமிர்ந்து பார்த்தவள், பார்வதி தன்னை பரிவோடு பார்ப்பதும், வாருங்கள் என்று அழைப்பதும் தெரிந்தது. பதிலுக்கு மரகதமும் பார்வ தியை கனிவோடு பார்த்தாள். அவளுடன் பேசுவதற்கான விருப்பத்தை கண்களால் தெரிவித்தாள் பின் சற்றுத் தயக்கத்துடனேயே அவர்கள் அருகில் சென்றாள்.

மதினியைக் கண்டதும் பார்வதி அவள் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

"என்ன மச்சாள் எப்படி இருக்கிறீங்க...." என்று கேட்டாள் பார்வதி.

"நான் நல்லா இருக்கிறன் நீங்க எப்படி இருக்கிறீங்க..." என்று பதிலுக்கு வினவினாள் மரகதம்.

"நாங்களும் எல்லோரும் நல்ல சுகம்...."

"மாமா எப்படி இருக்கிறார்....."

"அப்பாக்குத்தான் உடம்பும், மனசும் சரியில்லை, நல்லா நோய்வாய்ப்பட்டுட்டார், இப்ப எழுந்து சரியா நடக்கவும் முடியாது, கண்பார்வையும் குறைஞ்சிட்டுது, பேச்சும் தெளிவில்லாமல் போய்ட்டு, அடிக்கடி உங்களப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி விசாரிப்பார். அண்ணாவ நினைச்சு வருத்தப்ப டுவார்."

மரகதத்துக்கு கண் கலங்கியது பேச நா எழவில்லை.

பார்வதிக்கும் கண்கள் பனித்திருந்தன. புடவை யின் தலைப்பால் கண்களின் ஓரத்தை துடைத்துக் கொண்டே கேட்டாள்.

"என்ன மச்சாள் மருமகளக் காணோம்."

"ஓம்... அவள் இப்ப மலைக்கு படிக்க போனதுக் குப் பிறகு இங்க வாறது குறைவு. ஒரே ஏதாவது வகுப்புக்கள் இருந்துகொண்டே இருக்காம்.... அதுதான் வரமுடியாது என்று சொன்னாள்."

"ஓம்... ஓம்... நானும் கேள்விப்பட்டனான் 'ஏ.எல்' படிக்கிறதெண்டா அப்படித்தான். கனநாள் அவளப் பார்த்து."

"பின்னேரம் திருவிழாக்கு வந்தாலும் வருவாள்." என்று கூறிக்கொண்டே மரகதம் அருகில் நின்ற பார்வதி யின் மகளின் தாடையை பிடித்து வருடிக்கொண்டே,

"இது யாரு குமர்....." என்று சிரித்தாள்.

பதிலுக்கு இளவேணியும் புன்னகைத்துக் கொண்டே,

"என்னத் தெரியல்லயா மாமி..." என்று கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரு... நம்மட வேணியா... நான் யாரோ சீமையில இருந்து வந்த பிள்ள ஒன்டு நிக்குதாக்கும் எண்டல்லோ நினச்சன்." என்று சொல்லி 'கலகல' வென சிரித்தாள் மரகதம்.

"அம்மா.... பாரம்மா.... மாமிய பகிடி பண்ணுதா." என்று சிணுங்கினாள் இளவேணி.

மரகதம் அவளை தன்னோடு அணைத்து உச்சிமுகர்ந்தாள். பின் அவளிடம் "எங்கடி என் மருமகன்" என்று கேட்டாள்.

"அண்ணா வரயில்ல ஏதோ வேலையா வயல் பக்கம் போய்ட்டுது....." என்றாள் இளவேணி.

அவனுக்கு எப்பபார்த்தாலும் உங்களப்பற்றியும், நிலோவப் பற்றியும்தான் கதையாயிருக்கும். ஏதோ நீங்க எண்டா அவனுக்கு ஒரு விருப்பம்." என்று கூறிக் கொண்டே பார்வதி மரகதத்தை பார்த்தாள்.

"என்ன ஏன் மதினி அப்படிப் பார்க்கிறீங்க... ஆண்டவன் என்ன நினச்சிருக்கானோ..." என்று பெருமூச்சு விட்டாள் மரகதம்.

"ஆண்டவன் எப்பவும் நல்லதுதான் நினைப்பான் என்று பதிலுரைத்தாள் பார்வதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிலும், நாதஸ்வரமும் உச்சஸ்தாயியில் இசைக்க வசந்தமண்டப எழுந்தருளிக்கு பஞ்சதீபம் காட்டப்பட்டது. எல்லோரும் 'அரோகரா' என்று தலைக்கு மேல் கைகூப்பி வணங்கினார்கள்.

இவர்களும் கண்களை மூடி வணங்கினார்கள். இறைவா எல்லோருக்கும் நல்லதே நடக்க வேண்டும் என்று வேண்டினார்கள். பூஜை முடிந்து சுவாமி வீதி உலா வருவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டது.

அடியவர்கள் பலர் சுவாமியை தூக்கிச் செல்வதற்காக முன்வந்து நின்றார்கள். பூஜை முடிந்ததும் பூசகர்கள் சுவாமியை மண்டபத்திலிருந்து வெளியே கொணர அதை பக்குவமாக அடியவர்கள் நான்கு திசைகளிலும் நின்று பெற்றுக்கொண்டு தோள்களில் ஏற்றினார்கள். இராஜ மேளமும், நட்டுவாங்க மேளமும், நாதஸ்வரமும் இசைக்க இறைவன் மங்களகரமாக வீதியுலா வந்தார். அந்த அழகுக் காட்சியைப் பார்த்து பரவசமடைந்த பக்தர்கள் 'அரோகரா, அரோகரா' என்று கோஷமிட்டுக்கொண்டே சென்றார்கள். மரகதம், பார்வதி மற்றும் இளவேணி ஆகியோரும் கோணநாதர் சமேத ஹம்சஹமனாம்பிகா தேவி எழுந்தருளியோடு பின்சென்றார்கள்.

மங்களகரமாக சென்றுகொண்டிருந்த நாதரின் ஊர்வலம் வடக்கு வீதிக்கு வந்ததும் அங்கே நிறுத்தப்பட்டது. கோயிலின் முக்கிய தொழும்பாளர்களில் ஒருவரான வைராவியார் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியின் உச்ச நிலையில் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது அவருக்கு. அலகு குத்தப்பட்டு கந்தனின் வேல் ஒருபக்கமும், சூலம் ஒருபக்கமும் இணைக்கப் பட்டிருந்தது. நெற்றி நிறைய திருநீறும், மத்தியில் சந்தனமும் குங்குமமும் இடப்பட்டிருந்தது. கையிலே காப்பு கட்டியிருந்தார். ஏதோ ஒரு நிகழ்வுக்காகவே அவர் அங்கே வந்திருக்கிறார் என்று தெரிகிறது.

வடக்கு வீதியில் நிறுத்தப்பட்ட ஊர்வலம் சிறிது நேரம் அங்கேயே நின்றது மங்கள வாத்திய இசைகள் நிறுத்தப்பட்டிருந்தன... இராசமேளம் மட்டும் நெஞ்சை உருக்கும் வகையில் ஆக்ரோசமாக அடிக்கப்பட்டது. எல்லா அடியார்களும் மௌனமாக இருக்கும்படி கேட்கப் பட்டார்கள்... அதற்கு கட்டுப்பட்டு அனைவரும் மௌனமா னார்கள்.

சற்று நேரத்தின் பின், இந்து ஆலய மரபுகளுக்கு புறம்பாக சுவாமி ஊர்வலம் இடப்பக்கமாக வெளிவீதி யைச் சுற்றி வந்து கோயிலை அடைந்தது இது அமங்கல மான ஒரு நிகழ்ச்சியை பிரதிபலிப்பதாக இருந்தது. அங்கே வடக்கு வீதியில் காட்சிப்படுத்தப்பட்ட சடங்குகள் முன்னொரு காலத்தில் நடைபெற்ற நரபலியை பிரதிபலிப் பதாக அமைந்திருப்பதாகவே பக்தர்கள் பரவசமடைந் தார்கள்.

இவ்விடத்தில் நரபலி பற்றி நாம் சற்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு காலத்தில் தம்பலகாமத்தில் நரபலி கொடுக்கப்பட்டதாக கூறப்படும் பல நாட்டார் கதைகள் உண்டு.

தானம், வைராவியார் என்ற சிரேஸ்ட தொழும்பாளர்கள் குடும்பத்திலிருந்து முறைவைத்து பன்னிரெண்டு வருடங்களிற்கு ஒருமுறை வரும் ஆலய உற்சவ கடைசி விழா அன்று சுவாமி எழுந்தருளி மாகியா மூலை என்ற வடக்கு வீதியில் நிற்கும்வேளையில் நரபலியிடும் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

அன்றைய தினம் நரபலிக்கு முறையாக தெரிவு செய்யப்பட்ட தொழும்பாளரின் வீட்டுப் பருவப்பெண்ணை கோயிலுக்குள் வைத்து நீராட்டி, பட்டாடை அணிவித்து, பெண்ணுக்குச் செய்யும் கிரியைகள் எல்லாம் செய்வித்து, கோயிலினுள் இருந்து நிலப்பாவாடை மேற்கட்டி, சீர்களுடன் இராசமேளம் 'தாம் தாம்' என்று பயங்கரமாக முழங்க தொழும்பாளர்கள் சோகத்துடன் சூழ்ந்து வர கோயில் வெளிவீதியில் தென்மேற்கிலுள்ள பலிமேடைக்கு அப்பெண்ணை அழைத்துச்சென்று கரும்பாவாடை விரித்து இருக்கச் செய்வார்கள்.

அவ்வேளை திருவிழாவுக்கு இசைக்கவந்த நாதஸ்வர வித்துவான்களும், தவில் மேதைகளும் சுவாமி எழுந்தருளி இருக்கும் ஊர்த்திக்கு முன்னால் வரிசையாக அமர்ந்திருக்கும் மக்களுக்கு முன்னால் வரிசையாக அமர்ந்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெண்ணை அழைத்து வரும்வேளை அப் பெண்ணின் உறவுப் பெண்கள் வரமுடியாவிட்டாலும், தந்தை மற்றும் சுற்றத்தார் வந்திருப்பார்கள்.

அப் பலிபீடத்திற்கு முன் இருபான்மை முதன்மை குருக்கள்மாரும், உதவியாளர்களும் மடைபரப்பி ஒவ் வொரு கிரியைகளாக நடத்தி இறுதியாக விழாவை நடத்தும் குருக்கள் வந்து பலியேற்பு மந்திரங்களை உச்சரித்து அப் பெண்ணின் மீது தீர்த்தம் விசிறித் தெளிப் பார், அப் பெண் மயங்கி இருக்கையில் சாய்வாள்..., சுற்றியிருப்பவர்கள் அழுவார்கள், அவ்விடத்தில் விம்மல் கள், விசும்பல்கள் வெளிப்படும்.

வீழ்ந்து கிடக்கும் அப் பெண்ணின் நாடியை பலமுறை பரிசோதித்து அவள் உயிர் நீங்கியதை உறுதி செய்வார் இராச மருத்துவர். அதன் பின் மிக விரைவாக காரியங்கள் நடைபெறும். அங்கே கட்டிவைக்கப்பட்டி ருக்கும் பாடையில் பெண்ணின் உடல் கிடத்தப்பட்டு அதை தூக்கிச்சென்று பக்கத்திலுள்ள வென்பு மயானத் தில் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் விறகுக்குவியலில் அதைக் கிடத்தி தீ மூட்டுவார்கள்.

தீ எரிதலை கவனிக்க நான்கைந்து பேர்களை அங்கே விட்டுவிட்டு மற்றையவர்கள் திரும்பி வந்து கோயில் ஆற்றில் மூழ்கி கோயில் வண்ணான் தரும் சலவை செய்த ஆடைகளை உடுத்திக்கொண்டு மிகுதி திருவிழாவை நடத்தி முடிப்பார்கள். என்று மரபுவழிக் கதைகளின் மூலமாக கூறப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நரபலி நூறோ, இருநூறோ ஆண்டு களுக்கு முன் நடந்திருக்கத்தான் வேண்டும் என்று க.வேலாயுதம் அவர்கள் கூறுகிறார்.

மேலும் காலப்போக்கில் நரபலிக்குப் பதிலாக வைராவியாருக்கு அலகு பாய்ச்சுதல் நிகழ்வதாகவும், ஊர்வலத்தின் போது நரபலியை நினைவுபடுத்தும் சடங்குகளும், அமங்கல நிகழ்வுகளும் நடைபெறு வதாகவும் அவர் கூறுகிறார்.

சிவனுக்கு நரபலி கொடுக்கும் மரபு இந்து வழக்கில் ஒரு போதும் இருந்திருக்கவில்லை எனக் கூறும் வேலாயுதம் அவர்கள், இந் நரபலி நிகழ்வானது கந்தளாய் குளக்கட்டுப் பணியை நிறைவேற்றிய பூதங்க ளாக வர்ணிக்கப்படும் நீலாசோதயன் படைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கச் சாத்தியம் உண்டு எனவும் தெரிவிக்கிறார்.

மரகதம், பார்வதி மற்றும் ஏனைய அடியவர் களும் நரபலியை நினைவுபடுத்தும் சடங்குகளை கண்டு உளம் பூரித்து ஸ்நானம் செய்ய வீடு நோக்கி செல்ல ஆயத்தமானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 17

## ஆடகசௌந்தரி

கரிய குவளை மலர் மேய்ந்து
கடவாய் குதட்டித் தேனொழுக
எருமை கிடந்து மூச்செறியும்
எழிலார் தம்பை வளநாட்டின்
உரிய கோணை ஈசனுக்கு
ஆங்குற்ற தொழும்பு முறை பூஜை
பரிவால் புரிந்து விண்ணவர் போல்
பாரில் வாழ்வுற்று இருந்தனரே

இவ்வாறான சிறப்புமிக்க தம்பை நகரின் நாயன்மார் திடலினுள் நாம் இப்பொழுது நுழைகின்றோம்.

பிரதான வீதியிலிருந்து வலப்பக்கமாகப் பிரிந்து செல்லும் வீதி வழியாக உள்ளே சென்றால் மிகப்பெரிய ஆலவிருட்சம் எம்மை வரவேற்று பிரமிக்கவைக்கிறது. அதனருகே பழைய கூட்டுத்தாபன கட்டடம், அதன் முன்னே பிரசித்திபெற்ற நாயன்மார் வேள்வித்திடல், அதனை அண்டி ஐயனார் கோயில்.

இவற்றைக் கடந்து ஒரு கிலோமீற்றர் தூரம் சென்றிருப்போம், ஒரு ஓட்டு விட்டினுள்ளிருந்து இனிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான குரலொன்று சினிமாப் பாடலொன்றை இசைத்துக் கொண்டிருப்பதை கேட்கக்கூடியதாய் இருந்தது. இயற்கையாகவே ஆர்வம் தூண்ட, அந்த இனிமையான குரலுக்கு சொந்தக்காரர் யார் என்பதைப் பார்க்கும் ஆவலில் உள்ளே சென்றோம்.

அந்த வளவின் படலையைத் திறந்து உள்ளே சென்றால் வீட்டின் வடக்கு மூலையில் அமைந்திருக்கும் அறைப்பகுதியின் யன்னல் வழியாகவே அந்த இனிமையான கானம் காற்றில் அசைந்துவந்து எமது காதுகளில் தேன்பாய வைக்கிறது என்பதை அறிந்து மேலும் ஆவல் கொண்டு யன்னல் அருகில் சென்றோம். வாருங்கள் நீங்களும் எங்களுடன்.

அகலமான முதிரை மரத்திலே செய்யப்பட்ட வேலைப்பாடமைந்த பழைய காலத்து யன்னல் புதிய மெருகுடன் காட்சிதந்தது. அதன் இரண்டு கதவுகளில் ஒன்று மூடப்பட்டும், ஒன்று திறந்தும் வைக்கப்பட்டிருந்தது. சீரான இடைவெளிகளில் நெட்டாங்காக இரும்புருக்காலான கம்பிகள் போடப்பட்டிருந்தன. அதற்கு அழகிய வர்ணமும் பூசப்பட்டிருந்தது மேலும் அதற்கு அழகை கொடுத்தது.

அந்த திறந்த யன்னலூடாக தயங்கித் தயங்கி உள்ளே பார்த்தால்... என்ன அதிசயம், முன்னொரு காலத்தில் அனுராதபுர அரசை ஆண்ட அழகி ஆடக சௌந்தரியே வந்து ஆளுயரக் கண்ணாடி முன் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிம்பத்திடம் தன் அழகை பிரஸ்தாபித்துக் கொண்டிருப்பது போலல்லவா இருக்கிறது.

சராசரிக்கும் சற்று அதிகமான உயரம், பாம்புப் பின்னல் பின்னப்பட்ட நீண்ட சடாமுடி, அதிலே சூடப்பட்ட அன்றலர்ந்த சிவப்பு ரோஜா, முதுகிலே முத்துமுத்தாய் வியர்வைத் துளி, அவள் உடுத்தியதாலோ என்னவோ அழகு பொருந்தி நிற்கும் சேலை, இருக்கிறதோ இல்லையோ என சந்தேகிக்கும் அளவிற்கு ஓர் இடை, உலகை ஆளும் சக்கரவர்த்தி கூட அவன் அனைத்து இராஜபோகங்களையும் இதற்காகவே விட்டுக்கொடுத்து விடுவானோ என்று அஞ்சும் அளவிற்கு அவள் பின்னழகு.

அப்படியும் இப்படியுமாக தங்கத்தேர் உடலைத் திருப்பி கண்ணாடி முன் சரிபார்க்கும்போது தெரிந்த முன்னழகு, அப்பப்பா.... அவள் இடையளவைப் பார்த்து பிரம்மசிருஷ்டி கஞ்சனோ என்று எண்ணியதை அது உடனடியாக மறுக்கவைத்தது. சட்டென அவள் திரும்பி கண்களை அகல விரித்து ஆச்சரியம் காட்டி சற்று அச்சப்பட்டதும், பின் கோபப்பட்டதும் எமது மனதில் திகிலை ஏற்படுத்தியது. நாம் யன்னலின் பின் மறைந்தி ருந்து அவளைப் பார்த்ததை அவள் பார்த்து விட்டா ளோ...? ஐயய்யோ.... எமைப் பிடித்து மரத்தில் கட்டி வைத்து அடிக்கப்போகிறார்களே..., என்று பயந்து ஓடோடி ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்டோம். ஓடிவந்ததில் மூச்சிரைத்தது. சிறிது நேரமாக எந்தச் சத்தத்தையும் காணவில்லையே.... ஒரு வேளை ஆட்க ளைச் சேர்த்துக்கொண்டு வரச் சென்றுவிட்டாளோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் எட்டிப் பார்ப்போம் என்று எண்ணி செடிகளின் இலையை விலத்திப் பார்த்தால், அந்த அழகி யன்ன லுக்கு வெளியே நின்ற மரத்தின்மேல் வந்து அமர்ந்திருக் கும் மயிலிடம் சைகையால் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. தினமும் அவள் அழகை ஆலாபிக்க வரும் வழமையான மயில்போல அது... அவர்களிடையே காரசாரமான வாதம் போய்க்கொண்டிருந்தது.

அந்த ஆண்மயில் இவ்வளவு நாட்களாக தான் தான் அழகு என்று எண்ணியிருக்கும். இன்று இந்தப் பெண் மயிலைக் கண்டதும் பொறாமையில் வாதத்தில் இறங்கியிருக்கலாம். பாவம் ஆண்மயில்.

மயிலுக்கே பாவனைகளைச் சொல்லிக் கொடுத் துக்கொண்டிருக்கும் வேளை அவள் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

"என்னபுள்ள... இன்னும் வெளிக்கிட்டு முடியல் லையா. பூச தொடங்கப் போகுது. கெதியா வா...." என்று அரட்டிவிட்டுச் சென்றாள் அன்பரசியின் தாயார்.

"இதோ.... வாறன் அம்மா....." என்று கூறிக் கொண்டே மீண்டும் கண்ணாடி முன் வந்து தன்னை ஒருமுறை சரிபார்த்துக்கொண்டு மேசையில் இருந்த கையடக்கத் தொலைபேசியையும், கைக்குட்டையையும் எடுத்துக்கொண்டு புள்ளி மான் போல் துள்ளி ஓடினாள் அன்பரசி. அவள் போவதை அந்தக் கண்ணாடி எட்டிப் பார்த்தது. அந்த மயில் பறந்து வந்து கூரைமேல் அமர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தது. வாருங்கள் நாமும் அவள் பின்னால் சென்று பார்ப்போம்.

வாசலில் அவள் தகப்பன் மாணிக்கராசாவும், தாய் இலட்சுமிப்பிள்ளையும் ஆயத்தமாக நின்றிருந் தார்கள். மூவருமாக அங்கே நின்ற முச்சக்கரவண்டி ஒன்றில் ஏறி கோயிலை நோக்கிப் புறப்பட்டார்கள்.

கோயிலுக்கு அருகாமையில் சக்தி பல் பொருள் அங்காடிக்கு முன்னால் வண்டியை நிறுத்தச் சொல்லி மூவரும் இறங்கிக்கொண்டார்கள்.

அவர்கள் இறங்கி வருவதைக்கண்ட அங்காடி உரிமையாளர் மகேஷ்வரன், "வாங்க அண்ணே... வாங்க, வாங்க." என்று அவர்களை வரவேற்றார். மூவருமாக இறங்கி கடைக்குள் நுழைந்தார்கள். பதினெட்டாம் திரு விழா என்றதனால் கடை நன்கு அலங்கரிக்கப்பட்டி ருந்தது. வாசலில் தேங்காய் குவியல் ஒன்றும் காணப் பட்டது.

மகேஷ்வரனும், மாணிக்கராசா அண்ணனும் கோயில் நிர்வாகக் குழுவில் இருப்பதனால் கோயில் திருவிழா பற்றிய விபரங்களை பேசிக்கொண்டார்கள்.

தேங்காய், கற்பூரம், பத்தி, பழம் போன்ற பூசைப்பொருட்களை வாங்கிய இலட்சுமிப்பிள்ளை, அவற்றை தான் கொண்டு வந்த 'சில்வர்' தட்டினுள் அடுக்கி வைத்து மகளிடம் கொடுத்தாள். பக்குவமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பெற்றுக்கொண்ட அன்பரசி கடை உரிமையாளரிடம் விடைபெற்றுக்கொண்டு பெற்றோர் பின்னால் சென்றாள்.

மூவரும் கோயிலை நோக்கிச் சென்றார்கள், இடையில் முற்சந்தியில் அரசமரத்தடியில் வீற்றிருந்த பரிநிர்வாண கௌதம புத்தரை மனதில் நினைத்துக் கொண்டு கோயில் வீதியில் இறங்கியவர் அங்கே ஒரு படை இளைஞர்களுடன் சுந்தரேசன் நிற்பதைக் கண்டார்.

மாணிக்கராசா அவனைக் காணும் முன்னே கடைதாண்டி வரும் பொழுதே அன்பரசி அவனைப் பார்த்துவிட்டாள்.

திருவிழா நாட்களில் கோயிலுக்கு ஒவ்வொரு நாளும் வரமுடியாவிட்டாலும், முடிந்த நாட்களிலெல்லாம் தாய் தகப்பன் வராவிட்டாலும் தோழிகளுடனாவது அவள் வந்து விடுவாள், அவனைப் பார்ப்பதற்காக.

இன்றும் அவனைப் பார்த்த மாத்திரத்தில் அவளுள் இனம்புரியாத ஒரு கிளர்ச்சி.... மனதுக்குள் பட்டாம் பூச்சிக் கூட்டமே பறந்து திரிந்தது, கண்கள் அங்கும் இங்கும் அலை மோதியது, அவன் தன்னைக் காணவில்லை என்று அறிந்து அவனது கருத்தைக் கவருவதற்காய் அவனையே உற்று நோக்கிக்கொண்டு வந்தாள்.

சுந்தரேசனைக் கண்ட மாணிக்கராசா அவனுடன் பேசுவதற்காய் அவனருகில் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அவள், தகப்பனுக்கு வலப்பக்கத்தில் இருந்து இடப்பக்கமாய் மாறி தாய்க்கு அருகில் வந்து நின்றாள்.

ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள்.... தற்செய லாக அவன் அவளைப் பார்க்கும்போது தனது முகவா யைத் திருப்பிக்கொண்டாள். நெஞ்சு படபடத்தது, மூச்சுக் காற்று உஷ்ணமாய் வீசியது. நீண்ட நாட்களாக அவனிடம் சொல்ல நினைத்ததை சொல்லாமல் மனதிலேயே பூட்டி வைத்திருந்தாள். ஆனால் இன்று புறப்படும் பொழுதே தனது விருப்பத்தை அவனிடம் தெரியப்படுத்திவிட வேண்டும் என்று தீர்மானித்தே வந்திருந்தாள். ஆனால் அதற்கு இது தருணமல்ல என்று அவளுக்குத் தெரியும். அந்த எண்ணத்திலும், பதட்டத்திலும்தான் அங்கே நின்று கொண்டிருந்தாள். அவளது பதட்டத்தை தணிக்கும் வகையில் இருந்தது மாணிக்கராசா அவனிடம் பேச்சுக் கொடுத்தது.

"என்ன தம்பி எல்லா ஆயத்தங்களும் முடிஞ் சுதா..."

"ஓம் மாமா.... "லைட் போடக்கிடக்கு. போய்ப் பாத்திட்டு வாறன்." என்று கூறிக்கொண்டே,

"சங்கர்..... பாலனக் கூட்டிக்கொண்டு வா." என்று அருகில் நின்றவனுக்கு கட்டளையிட்டு விட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாறன் மாமா... வாறன் 'அன்ரி'..." என்று அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்து ஒரு புன்முறுவல் பூத்துச் சென்றான்.

நண்பர்கள் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

மகள் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருப்பதை மாணிக்கராசா கவனிக்கத் தவறவில்லை. அவருக்கு மகள் அவனை விரும்புவது பற்றித் தெரியும், எனினும் மகளின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதில் பல சமூகச் சிக்கல்கள் இருப்பதை அவர் அறிந்திருந்தார். தானே இதுபற்றி மகளிடம் பேச வேண்டும் என எண்ணியிருந்தார். அதற்கான சந்தர்ப்பம் அவருக்கு இன்னும் வாய்க்கவில்லை.

"டேய் மச்சான்.... நீயும் நானும் சாகும் வரைக்கும் இப்படியே நண்பர்களாகவே இருக்கவேணும், உனக்கு மகளும் எனக்கு மகனும் பிறந்தா அவங்க இரண்டு பேரையும் கட்டிவைக்கவேணும், எங்கட நட்பு தொடர வேணும்..." இப்படி அவன் பால்ய நண்பன் சண்முகம் அறியா வயதிலும், நட்பின் மகத்து வத்திலும், நண்பன் மேல் கொண்ட பாசத்திலும் உணர்ச்சி ததும்ப பேசிய வார்த்தைகள் இவை.

ஒரு வேளை சண்முகம் உயிரோடு இருந்திருந்தால் அவர்கள் இரண்டு பேரும் சம்பந்திகள் ஆகியிருக்கலாமோ? சேச்சே..... அப்படி நடக்கச் சாத்தியமில்லை. இந்த சமுதாயம் அதற்கு ஒத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்காது. "அவங்க சாதி என்ன எங்க சாதி என்ன..." என்று சாதியம் பேசியே அவர்களை பிரித்து வைத்துவிடும்.

மகள் அவன்மேல் கொண்ட அன்பைப்பற்றியும், நிறைவேறாத அந்த எண்ணத்தைப்பற்றியும் கவலை கொண்டார் மாணிக்கராசா. அவளிடம் பக்குவமாக இதை எடுத்துச் சொல்லவேண்டும் என எண்ணிக்கொண்டார். ஆனால் அவள் நவீன யுகத்துக் கண்ணகியாகிற்றே... அவளிடம் எப்படி இதைப் புரிய வைக்க முடியும்.

அவளுக்கு இருபத்து மூன்று வயது கடந்து விட்டது. வீட்டில் திருமணப் பேச்சை எடுத்தாலே 'அதுக்கு என்னப்பா இப்ப அவசரம்' என்று சொல்லுவாள். அவள் அவனை நினைத்துத்தான் இப்படிச் சொல்கிறாள் என்பது அவருக்குத் தெரியும்... என்ன செய்வது.

அருச்சுணன் வந்து வில்லை வளைத்து நாணில் அம்பைத் தொடுத்து தன்மீது எய்வான் என்று அவள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள். ஆனால் இந்த அருச்சு ணனோ பாணத்தை வேறு திசை நோக்கியல்லவா குறி பார்க்கிறான்.

மகள் பற்றிய யோசனையோடு கோயில் முன் வாசலை அடைந்தார் அவர்.

மிகப் பிரமாண்டமாக காட்சியளித்தது ஆதி கோணநாதனின் கோபுரம். அழகிய பலவர்ண நிற மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகளால் அது அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்த ஒளி ஒன்றே போதுமாய் இருந்தது தம்பலகாமத்து நகரையே வெளிச்சமாக்குவதற்கு.

வீதியிலிருந்து முன் வாசல்வரை வழியெங்கும் கடைகள் போடப்பட்டிருந்தன.... உள்ளூர் வாசிகளும், பல வெளியூர்க்காரர்களும் பலதரப்பட்ட கடைகளைப் போட்டிருந்தார்கள்.

ஆடைகள், மற்றும் துணிவகைகள் நிறைந்த கடைகள், அணிகலன்கள், ஆபரணங்கள் நிறைந்த கடைகள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் நிறைந்த கடைகள், குளிர்பானக்கடைகள், சாப்பாட்டுக் கடைகள் எனப் பல்வகைப்பட்டவை. அதைவிட குளிர் களி விற்கும் வாகனங்களும், நொறுக்குத் தீனிகள் விற்கும் வண்டிகளும் காணப்பட்டன. சிறுசிறு பொருட்கள் விற்கும் நபர்கள் கைகளிலும், கூடைகளிலும் பொருட்க ளுடன் அங்கும் இங்குமாகத் திரிந்து கொண்டிருந்தார்கள்.

அந்தக் கடைத்தெரு எங்கும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆடவரும், பெண்டிரும், குமரர்களும், குமரிகளும், சிறுவர்களும், சிறுமிகளும், பெரியவர்களும் என நிறைந்து காணப்பட்டார்கள். அவர்களுக்கிடையில் சில வயோதிபர்களும் நின்றிருந்தார்கள்.

அனேகமான ஆண்கள் வேட்டி சட்டையுடனும், பெண்கள் சேலையுடனும், பாவாடை தாவணியுடனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களில் பலர் வேட்டி சட்டை, பாவாடை சட்டையுடன் காணப்பட்டது மனதிற்கு நிறைவைத் தந்தது.

ஆபரணக் கடைகளைச் சுற்றி தாவணி அணிந்த பெண்களும், சேலை கட்டிய மகளிரும், சிறுமியரும் நின்றிருக்க, அவர்களைச் சூழ்ந்து இளைஞர் கூட்டம் நின்றிருந்தது. குமரிப் பெண்கள் தெரிவு செய்யும் ஆபரணங்களுக்கும், வாங்கும் பொருட்களுக்கும் ஏதாவது குறையோ, நிறையோ சொல்லிக்கொண்டும், அப் பெண்களின் அழகை வர்ணித்துக்கொண்டும், அவர்களுக்கு கேலி பேசிக்கொண்டும், அவர்களுடன் விவாதித்துக்கொண்டும் நின்றார்கள் அவ்விளைஞர்கள். அப்பெண்களுடன் வந்திருந்த பெற்றோரும், பெரியவர்களும் இவர்களைப் பார்த்து முறைத்துக்கொண்டும், சிலர் ஏசிக்கொண்டும் சென்றார்கள். ஆனால் பெண் பிள்ளைகளில் பலர் இவற்றையெல்லாம் இரசித்துக் கொண்டும் கல கலவென சிரித்துக்கொண்டும் சென்றார்கள். நமது இளைஞர்களோ இவை எதையும் பொருட்படுத்தாது நமது பெண் பிள்ளைகளின் பின்னால் திரிவதையே வாடிக்கையாகக்கொண்டிருந்தார்கள். இதனால் அக்கடைவீதியெங்கும் ஒரே சலசலப்பும், சிரிப்பும் கும்மாளமுமாகவே இருந்தது.

மாணிக்கராசாவும் அக்கூட்டத்திலிருந்து ஒருவாறு மனைவியையும், மகளையும் அழைத்துக்கொண்டு கோயிலை நோக்கிச் சென்றார். சில இளைஞர்கள் அவர்கள் பின்னாலேயே வருவதை அன்பரசி கவனிக்கத் தவறவில்லை. அவர்கள் அவள் பற்றியும், அவள் அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் பிரஸ்தாபித்துக் கொண்டு வந்தார்கள். சில வேளை அவர்களைத் தாண்டிச் சென்று அவர்கள் முன்னால் வந்து அவளைப் பார்ப்பதும் செல்வதுமாக இருந்தார்கள். இவற்றையெல்லாம் அவள் இரசித்துக் கொண்டே வந்தாள்.

கோபுரவாசலைத் தாண்டி உள்ளே வந்த மாணிக் கராசா மேற்சட்டையைக் கழட்டி இடுப்பிலே கட்டிக் கொண்டு, மகளிடம் இருந்து பூசைத்தட்டை வாங்கிக் கொண்டு வாசற்படியை மிதிக்காது கடந்து அர்த்தமண்ட பத்தினுள்ளே சென்றார். மகளும், மனைவியும் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

நேராக மூலஸ்தான மூர்த்தியை நோக்கிச் சென்றவர் அங்கே நின்ற பூசகரிடம் பூசைத்தட்டை ஒப்படைத்துவிட்டு நிலத்தில் வீழ்ந்து அட்டாங்க நமஸ்காரம் செய்துகொண்டார். அதேபோல் தாயும், மகளும் பஞ்சாங்க நமஸ்காரம் செய்து எழுந்து இறைவனை வணங்கி உள்வீதி வலம்வந்து வசந்த மண்டபத்தை அடைந்தார்கள். அங்கே சுவாமி திருச்சூரக வேட்டைக்குச் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டி ருந்தார்.

பிரதம குருக்கள் பூசையை முடித்து சுவாமியை வழியனுப்பிவைக்க, பக்தர்கள் புடைசூழ எம்பெருமான் திருச்சூரகவேட்டைக்கு பரிவாரங்களுடன் கிளம்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவீதிக்கு வந்த சுவாமி கோயிலுக்கு எதிரே இருக்கின்ற மைதானத்திற்குள் நுழைந்து அங்கே ஆலமரத்திற்கு கீழ் அமைக்கப்பட்டிருந்த வேட்டைத் தளத்திற்கு வந்து சேர்ந்தார்.

தானத்தார், வரிப்பத்தார், மற்றும் ஏனைய தொழும்பாளர்கள் புடைசூழ, மங்கல வாத்தியங்கள் இசைக்க, இராஜ பறை கம்பீரமாக முழங்க வேட்டைத் தளத்தை வந்தடைந்த கோணநாதன் வேட்டையை ஆரம்பித்தார்.

காட்டுக்குள் அங்கும் இங்குமாக, அலைந்து திரிந்து, ஒளித்து மறைத்து, ஓடிக் களைத்து, சற்று இளைப்பாறி, பின் மீண்டும் வெறிகொண்டு திரிந்து, தேடிக் குறிபார்த்து சற்றும் பிசகாமல் ஈட்டியை எய்து....

சூரக வேட்டை இனிதே நிறைவு பெற்றது. சற்றுக் களைப்படைந்த நாதன் கானகத்தின் எழிலை இரசித்த வண்ணம் காற்று வாங்கிக்கொண்டு மீண்டும் படைகள் சூழ கோயிலை வந்தடைந்தார்.

வேட்டைத் திருவிழாவிலே, பிரதம குருக்கள் வேட்டையாடும் அழகை அடியவர்கள் பார்த்துக் கொண்டிருக்க, அன்பரசி சுந்தரேசனின் அழகையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் அங்கும் இங்கும் ஓடித் திரிந்து ஒரு தொண்டனைப் போல் வேலைகள் செய்வதையும்,

கட்டளைகளை பிறப்பித்துக்கொண்டு ஒரு அரசனைப் போல் கம்பீரமாகத் திரிவதையும் அவள் பார்த்து இரசித்துக்கொண்டிருந்தாள்.

சூரகவேட்டை முடிந்து கோயிலை நோக்கி வரும் வழியில் வீடுகளிலும், கடைகளிலும் வைக்கப்பட்டிருந்த நிறைகுட ஆலாபனைகளை ஏற்றுக்கொண்டும் கம்பீரமாக வந்து கொண்டிருந்தார் கோணைநாதர்.

சக்தி அங்காடிக்கு முன்னால் நூற்றி எட்டுத் தேங்காய் உடைத்தும், பிரசாதங்கள் வழங்கியும் சுவாமியை தரிசித்துக்கொண்டார்கள்.

விண்ணை முட்டும் வாண வேடிக்கைகளும், காதைப் பிளக்கும் வெடி ஓசைகளும் மக்களின் ஆராவாரத்தையும், குதூகலத்தையும் அதிகரித்தது.

அவளுக்கும் மகிழ்ச்சி, அவனைப் பார்க்கக் கிடைத்ததை எண்ணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 18

# திருவிளையாடல்

நீண்ட நாட்களின் பின் அவளைப் பார்க்கக் கிடைத்ததை எண்ணி அவனுள் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

அவள் திருமலை நகரத்திற்கு படிக்கப்போனதன் பின் அவளை அடிக்கடி பார்க்கவோ பேசவோ கிடைப்பதில்லை. எப்போதாவது நிலோஜனி ஊருக்கு வந்தால் மாத்திரமே, அதுவும் அவன் அறிந்தால் மாத்திரமே, மரகதம் அத்தையை பார்க்கப் போவதுபோல் அவள் வீட்டிற்குச் சென்று அவளைப் பார்த்து வருவான். அந்த வேளையிலும் அவளைப் பார்ப்பது அவ்வளவு சுலபமல்ல, ஏனென்றால் அவள் இலேசில் வெளியில் எங்கும் போக மாட்டாள். பார்ப்பதே பெரும் பாடு என்றால் கதைப்பது எம்மாத்திரம்.... அத்தி பூத்தாற்போல் எப்பொழுதாவதுதான். அதுவும் ஒன்று இரண்டு வார்த்தைகள்தான் பேசுவாள். அதுவே அவனுக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு போதுமானது. அந்த ஓரிரு வார்த்தைகளோடும், அந்தப் பார்வைகளோடும் நாட்களை ஓட்டிவிடுவான். இன்றும் அப்படித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜ கோபுரத்துக்கு இடப்பக்கமாக அமைக்கப் பட்டிருக்கும் மேடைக்கு அருகில் நிலோஜனி, அவள் தாய் மரகதம், அவள் பள்ளித் தோழி வதனலோஜினி, இன்னும் சில நண்பிகளும் அமர்ந்திருந்தார்கள். அவர்க ளுக்கு சற்றுத் தள்ளி பத்தடி தூரத்தில் அன்பரசியும் அவள் தாயாரும் அமர்ந்திருந்தார்கள். மாணிக்கராசா அண்ணன் கோயில் தொழும்புகள் செய்வதற்காய் உள்ளே சென்றிருந்தார்.

கோபுரத்திற்கு முன்னால் பரந்து விரிந்திருக்கும் வெளிவீதியெங்கும் சனத்திரள் குவிந்து காணப்பட்டது.

பிரதான வாயிலிலிருந்து கோயிற் கோபுரத்தை நோக்கி வருகின்ற அகன்ற நடை பாதையின் இருமருங் கிலும் குறித்த சீரான இடைவெளிகளில் கம்புகள் நடப் பட்டு குமிழ் மின் விளக்குகளும், குழாய் மின்விளக்கு களும் பொருத்தப்பட்டிருந்ததோடு, மேற்பகுதி கூரை போன்று அழகாக பலவர்ண மின்விளக்குகளாலும், வர்ணக் கடதாசிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக் கப்பட்டு அழகாக காட்சியளித்தது.

பெண்கள் பலவர்ண நிறங்களில் சேலைகளும், சுடிதாரும், பாவாடை தாவணியும், அணிந்து கொண்டும், அழகாக தம்மை அலங்கரித்துக்கொண்டும் வந்திருந் தார்கள். அந்த மின் விளக்குகளின் வெளிச்சத்தில் அவர்கள் ஆடைகளும், ஆபரணங்களும் ஜொலி ஜொலித்தன. பெருந்திரளான பக்தர்கள் உள்ளே வந்தும் போயும் கொண்டிருந்தார்கள். அவர்களின் ஒழுங்குகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி கோணேஸ்வரர் ஆலய தொண்டர்கள் கவனித்து வந்தார்கள். அத் தொண்டர்களின் தலைவனான சுந்த ரேசன் அவற்றை மேற்பார்வை செய்துகொண்டிருந்தான்.

ஆண்களும், இளைஞர்களும், வயோதிபர்களும், வேட்டி சட்டை அணிந்திருந்தார்கள். சிலர் நீளக் காற்சட்டையும், மேற்சட்டையும் அணிந்தும் வந்திருப் பதைக் காணக்கூடியதாயிருந்தது.

திருச்சூரகவேட்டை முடிந்து சுவாமியும் பிரதான வாயிலை வந்தடைந்தார். கோயில் வாயிலை வந்தடைந்த ஆதிகோணநாத சுவாமி நேரே கோயிலுக்குள் செல்லாமல் வாசலிலேயே நின்றுகொண்டு தனது திருவிளையாடலை ஆரம்பித்தார்.

சுவாமி பின்வருமாறு தேவிக்கு தூது சொல்லி அனுப்பினார்.

"திருக்கைலாய பருவத நேசரும் முப்புரம் எரிய விழித்தெழுந்த உதாரணரும் ஆயிரம் கோடி அண்ட காடாகங்களிலும் உள்ள ஆன்மா வர்க்கம் அனைத்திற்கும் உயிருக்கு உயிராய் இருக்கும் பராபரனும் செகம் புகழும் குளக்கோட்டு மகாராசன் அடிபரவும் ஆதியானவரும் ஆகிய கோணநாதேஸ்வர சுவாமி "திருச்சூரகத் திருவி ளையாடல்" முடிந்து இந்திரராசனது இரத்தின மாமணி மண்டபத்தில் மந்திரசிம்மாசனத்தே இருந்து மாளிகைக்கு எழுந்தருளுவதற்கு பிடியன்ன நடைப் பிராட்டியாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியை கேட்டுவரச்சொல்லி ஆதியாகிய கோணநா தேஸ்வர சுவாமியாலே உத்தரவாகிறது".

என்று தேவதூதனிடம் தூது சொல்லி அனுப் பினார்.

அதை அப்படியே உள்வாங்கி இறைவியினிடத்து ஒரு சொல் பிசகாமல் ஒப்புவித்தார் தேவதூதர். இங்கே தேவதூதராக காரியப்பரே தூதை ஒப்புவித்தார்.

அத்தூதை செவியுற்ற தேவிக்கு சிறிது சந்தேகம்.....

"பராபரன் திருச்சக்கரத் திருவிளையாடல்" முடிந்து மாளிகைக்கு வர வேண்டியது தானே! அதுவல்லாது இந்திரராசனது இரத்தினமாமணி மண்டபத்தில் மந்திர சிம்மாசனத்தில் வீற்றிருந்து தேவியிடம் தேவதூது அனுப்பியபடியால் ஏதோவொரு களவு நடந்திருக்கிறது போல் தோற்றப்படுகிறது. ஆகையால் அதனைத் தீர விசாரித்தேயல்லாமல் மாளிகைக்கு எழுந்தருள வேண்டிய தில்லை..." என்று பதில்தூது சொல்லி அனுப்பினாள்.

தேவியின் பதிலைக் கேட்ட இறைவன் சிறிது மிரண்டு தான் போனார்.

"ஆயிரம் கோடி அண்ட கடாகங்களிலும் உள்ள ஆன்மா வர்க்கம் அனைத்திற்கும் படியளக்கும் மலை மகள் நாயகியாகிய ஹம்சஹமனாம்பிகா தேவி திருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி அறையில் சயனம் பண்ணும் வேளையில் முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் கோடி ரிஷிகளும், அட்டவசுக்கள், கிருடர், கின்னரர், காந்தருவர், சுந்தரமூர்த்தியும் வந்து நின்று திருச்சூரக வேட்டைக்கு எழுந்தருள வேண்டுமென்று அரிபிரமாதி முதலானவர் யாவரும் மன்றாட்டம் செய்தபடியால் அவ்விடம் போய் "திருச்சூரக திருவிளையாடல்" செய்ததே அல்லாமல் அவ்விடத்தே யாதொரு ஆடல், பாடல், அதிவித லீலாவி னோதங்கள் ஆகிய காரியங்கள் ஒன்றும் நடக்கவில்லை". என்று சொல்லி அனுப்பினார்.

தூது சொல்லும் படலம் அங்கே நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்க பக்தர்கள் அனைவரும் அமைதியாயிருந்து அதை சுவாரஸ்யமாகக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

சுந்தரேசனும் நிமிடத்திற்கு ஒரு தடவை அவளைக் கவனித்துக்கொண்டிருந்தான். அவளது ஒவ்வொரு அசை வும் அவனால் உணரப்பட்டது. அவளருகில் சென்று கதைக்கவென்று ஆவல் கொண்டான். எனினும் அச்சம் அவனைத் தடுத்தது. தூரத்தே நின்றுகொண்டே அவளு டன் உணர்வுகளால் உரையாடினான்.

அவனைப்போல் அவளும் மறுபுறத்தே இருந்து சுந்தரேசனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அப்படிப் பாரத்துக்கொண்டிருந்தது நிலோஜனி அல்ல அன்பரசி என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவதற்கில்லைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பரசியும் அவனது ஒவ்வொரு அசைவையும் இரசித்துக்கொண்டிருந்தாள். அவ்வளவு பெரிய கூட்டத்திற்குள் அவன் ஒருவன் மாத்திரம் அவள் கண்களுக்கு தென்பட்டது ஒன்றும் புதுமையில்லைதான். இப்பொழுதே எழுந்து சென்று அவனிடம் தன் எண்ணத்தை சொல்லிவிட வேண்டும் என்று எண்ணினாள் ஆனால் அச்சம் அவளைத் தடுத்தது.

அச்சம் கொண்ட கோணைநாதன், திருச்சூரக வேட்டைத் திருவிளையாடலில் ஆடல், பாடல் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னதை தேவி ஏற்கவில்லை. சற்று சினம் கொண்ட ஹம்சஹமனாம்பிகா தேவி இவ்வாறு உத்தரவிடுகிறாள்.

"முன்னொரு காலத்திலே குருகுல சம்பந்த பருவத கோமான் அதி அரசன் திருமகளாகிய திருச்சேர் மடந்தையைத் திருமணம் செய்ய நினைத்து மகா பெருமையான மாறாட்டமான வார்த்தைகள் பேசி கைலாய அதி அரசன் என்று தீராநாமமும் சொல்லித் தேவவலையினால் மகரமும் பிடித்துக் கரையேறி திருச்சேர் மடந்தையை திருமணம் புணர்ந்த தெட்சண திருக் கைலாய பருவதாச நேசராகிய கோணநாதேஸ்வர சுவாமி மறுவசனம் ஒன்றும் தேவியிடம் பேசவேண்டிய தில்லை என்றும், தமக்கு இஷ்டமான இடங்களுக்குச் செல்லலாம்" என்றும் கூறினாள்.

அதற்கு இறைவன் சில சாக்குப்போக்குகளைச் சொல்லி பதில்தூது அனுப்பிப் பார்த்தார். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையோ சுவாமி மீது பிழை இருக்கிறதா இல்லையா என்பதை விசாரணை செய்த பின்பே எதுவும் சொல்ல லாம் என்று பின்வருமாறு தூது சொல்லி அனுப்பினார்.

"திருச்செஞ்சடையையுடைய எமது நாயகராகிய ஆதி கோணேஸ்வரரை நாம் இன்றைக்கு வேறொன்று நினைத்து விடுவதானது தவறு சுவாமியிற் பிழையில்லை. சுவாமிக்கு உண்டு இல்லாதவைகளைச் சொல்லி சுந்தர மூர்த்தியும் வேறு சிலரும் கொடி, குடை, சாமரம் முதலா கிய ஆபரணங்களையும் கோவில் விசாரணைப் பிரதானி மார்களையும், ஆலாத்திப் பெண்ணையும் கூட்டிக் கொண்டு போய்விட்டார்கள். அவ்வாலாத்திப் பெண்களை தேவியிடம் அனுப்பினால் அவர்களிடம் சில வசனங்க ளைக் கேட்டறிந்ததன் மேல் சுவாமியைச் சிறிதும் தடை தாமதம் இல்லாமல் மாளிகைக்கு வரவேற்றுக்கொள் வோம் என்று இமாசல புத்திரியாகிய ஹம்சஹமணாம்பிகா தேவியால் உத்தரவாகின்றது".

தேவியின் கட்டளைக்கு பணிந்து ஆலாத்திப் பெண்கள் மாளிகைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். அவர்களை தீர விசாரித்து அறிந்துகொண்ட பரமேஸ்வரி இறைவன் மீது எந்தப் பிழையுமில்லை, இவையனைத் தும் செட்டியார் செய்த வேலையே என்று கூறி இறை வனை மாளிகைக்கு எழுந்தருளச் சொன்னார்.

ஆதியாகிய கோணநாதேஸ்வரர் சுவாமி கோயில் பிரதான வாயிலினூடாக உள்ளே செல்ல பக்தர்கள் எழுந்து அவர் பின் சென்றார்கள். அழகாக அலங்கரிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட இறைவன் வசந்த மண்டபத்தைச் சென்றடைய பூசைகள் ஆரம்பமாயின.

சுந்தரேசன் அர்த்தமண்டபத்தைக் கடந்து வெளியே வந்தான். அங்கே அன்பரசி நின்றிருந்தாள். அவளுடன் சில தோழிகளும் அங்கே நின்றிருந்தார்கள். அவர்களைப் பார்த்து புன்முறுவல் பூத்துக்கொண்டே கடந்து சென்றவனை அவள் குரல் திரும்பிப் பார்க்க வைத்தது.

"எதுவுமே கதைக்காமப் போறீங்களே...." அவள் குரல் சற்று அம்மலாகவே ஒலித்தது.

மாணிக்கராசா அண்ணனின் மகள் அன்பரசிதான் தன்னை வினவுகிறாள் என்பதை ஊகித்தவன் சற்று சங்கோஜத்துடன் திரும்பினான்.

அவளை இடைக்கிடை பார்ப்பவன்தான் என்றாலும் இன்று அந்த மின் விளக்குகளின் வெளிச்சத்தில் அவள் அழகாகவே தெரிந்தாள். அவனையும் அறியாது அவளை மேலிருந்து கீழாக ஒருமுறை உற்று நோக்கியவன், பின் தனது செயலை எண்ணி வெட்கித்து கண்களை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்.

அவன் அவளைப் பார்க்கும்வேளை அவள் கண்கள் அவள் பாதங்களை பார்த்துக்கொண்டிருந்ததனால் அவன் தன்னை இரசித்துப் பார்த்ததை அவள் பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென அவள் கேட்ட கேள்வியிலும், அவள் அழகிலும் அச்சம் கொண்டவனாய், "இல்ல சும்மாதான் போறன்..." என்றான் எதுவும் பேசவராமல்.

அவளும் மேற்கொண்டு எதுவும் பேசாமல் மௌனமானாள். வார்த்தைகள் தொண்டை வரை வந்து அடைத்துப்போனது அவளுக்கு. இன்றைக்கு எப்படியாவது தன் விருப்பத்தைச் சொல்லிவிடவேண்டும் என்று ஆயத்தமாக வந்திருந்தாள், அதற்காகவே பூசைகள் முடியும் வரை இத்தனை நேரமும் காத்திருந்தாள். ஆனாலும் அவனைக் கண்டதும் எதுவும் பேச வரவில்லை. மூச்சுக்காற்றும் சற்றுப் பலமாகவும், உஷ்ணமாகவும் வெளிவந்தது அவளுக்கு.

மீண்டும் முறுவலித்துவிட்டு செல்ல எத்தனித்தவனின் கண்களை உற்று நோக்கினாள். அவன் கண்களுக்குள் அவள் எண்ணங்கள் பிரதிபலித்தன, அதிலே ஏக்கங்கள் நிரம்பியிருந்தன.

அவளது கண்களை நேருக்கு நேர் பார்க்க முடியாது அவன் திணறினான். அவள் தன்னை விரும்புகிறாள் என்பது ஓரளவிற்கு முன்பே அவனுக்குத் தெரிந்திருந்தாலும் தானாக அவளை நிராகரிக்கக்கூடாது என்று எண்ணியிருந்தான். எப்பொழுதுமே அவள் பார்வையை அவன் தவிர்த்து வந்திருந்தான், அவளோடு அதிகம் பேசுவதை தவிர்த்திருந்தான். ஆனால் இன்று அவளாக நிறுத்திப் பேசியபோது சட்டென வெட்டிக் கொண்டு செல்லமுடியவில்லை அவனால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேர மௌனத்தின் பின் ஒரு அடி எடுத்துவைத்து அவனருகில் வந்து அவளே பேசினாள்.

"எனக்கு உங்கள பிடிச்சிருக்கு... நான் உங்கள விரும்பிறன்... வயசுக்கு வந்த நாள்ளேருந்து உங்கள விரும்பிறன் நான். அத நீங்க அறியாம இல்ல. ஆனா... என்ன நீங்க ஒதுக்கிக்கொண்டு வாரதுக்கு என்ன காரணம் எண்டுதான் தெரியேல்ல." சிறிது நேரம் அவள் எதுவும் பேசவில்லை. மௌனமானாள். அவள் கண்கள் கலங்கி யிருந்தன. பின் அவளே தொடர்ந்தாள்.

"ஏன் நான் அழகா இல்லையா.... அல்லது உங்களுக்கு பொருத்தமா இல்லையா..."

வழமையாக அதிகமான பெண்கள் தாங்கள் காதலிக்கும் ஆணிடம் கேட்கும் கேள்விகளையே அவளும் கேட்டாள்.

அவனுக்கு உடனடியாக பதில் ஏதும் சொல்ல முடியவில்லை. மௌனமாகவே இருந்தான்... அவள் கண்களிலிருந்து கண்ணீர் சிந்துவதைப் பார்த்ததும், இத்தனை நாளைப்போல் இனியும் தான் பேசாமல் இருப்பது அவளின் எதிர்காலத்தைப் பாதிக்கலாம், அவளே வந்து தன் நிலமைபற்றிச் சொல்லும்போது நான் ஏன் தயங்கவேண்டும், நேரடியாகச் சொல்லி விடுவோம். இனியும் அவள் தன்னை நேசிப்பதை தொடரவிடுவதில் அர்த்தமில்லை என்று எண்ணினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்க பாருங்க அன்பரசி.... எனக்கு உங்கள பிடிக்காம இல்ல. ஆனா அது நீங்க நினைக்கிற மாதிரி காதல் இல்ல... நான் உங்களோட பழகினது உங்களுக்கு அப்படி ஒரு எண்ணத்த ஏற்படுத்தியிருந்தா அதுக்காக என்ன மன்னிச்சிடுங்க...."

இதற்குமேல் தொடர முடியாமல் அவள் அழுகை அவனை நிறுத்தியது. பூசை முடிந்து அனேகமானோர் வீடு திரும்பியதனால் ஒரு சிலரே கோயிலில் நின்றிருந் தார்கள். எனினும் அவர்களைக் கடந்து செல்பவர்கள் திரும்பி ஒருமுறை அவர்களைப் பார்த்துதான் சென்றார் கள். அது அவனுக்கு சங்கடமாயிருந்தது.

"அன்பரசி தயவுசெய்து அழாதைங்க. நான் சொல்லுறதக் கேளுங்க... நான் நிலோஜனிய விரும்பி றது உங்களுக்கு தெரியாம இருக்கலாம். ஆனா நான் நிலோஜனிய உயிருக்குயிரா விரும்பிறன். நீங்க உங்கட நிலமையில இருந்து மாறோணும்.... உங்களுக்கு என்னவிட நல்ல ஒருவர் கிடைப்பார். வீணா மனதப் போட்டு அலட்டிக்கொள்ளாம சந்தோஷமா இருங்க..."

அவளது அழுகை சற்றுக் குறைந்திருந்தது. அவன் ஒருத்தியை விரும்புகிறான் என்று அறிந்ததி னாலோ என்னவோ...., அவள் அழுகை சற்றுக் குறைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவர்கள் இருவரிற்கும் அவர்கள் மனதிலிருந்த பாரம் சற்றுக் குறைந்தது போல் இருந்தது. அந்த சில நிமிட மௌனத்தை அவனே கலைத்தான்.

"தயவு செய்து என்னைப் புரிஞ்சுகொள்ளுவீங்க எண்டு நினைக்கிறன்...." என்று கூறிக்கொண்டே ஒரு முறை தைரியமாக அவள் கண்களை நிமிர்ந்து பார்த்து விட்டு விறு விறு என நடந்து சென்றான்.

அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தவள் கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்... காற்றை உள்ளிழுத்து சுவாசித்தாள். இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் சிறிய வலி ஒன்றை உணர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 19

# விடுமுறை

ஒன்றரை வருடங்கள் எப்படிப் போனதென்றே தெரியவில்லை அவளுக்கு. ஆவணி விடுமுறை விட்டு பாடசாலையும் தொடங்கிவிட்டது. நீண்ட நாட்கள், கிட்டத்தட்ட பதினைந்து நாட்களுக்கு மேல் சக தோழி களைக் காணாததால் வகுப்பிலுள்ள அனைவரும் ஒருவரோடு ஒருவர் ஏதோ கதைத்துக்கொண்டே இருந்தார்கள். வகுப்பறை 'கலகல' வென்றிருந்தது. காலைக்கூட்டம் முடிந்து முதலாம் பாடமும் ஆரம்பமாகி விட்டது. வகுப்பறையை ஒரு சில மாணவிகள் முன்னை நாளே வந்து துப்பரவு செய்ததனால் அது ஓரளவிற்கு துப்பரவாயிருந்தது. எனினும் காலையில் வந்தவுடன் அனைவரும் ஒன்று சேர்ந்து மீண்டும் ஒருமுறை வகுப்பறையை சுத்தம் செய்தார்கள். தூசுகளைத் தட்டிக் கூட்டியதனால் புழுதிமணம் எங்கும் பரவியிருந்தது. சாமிப்படத்திற்கு முன் இரண்டு மூன்று சந்தனக் குச்சிகளையும் யாரோ ஏற்றி வைத்திருந்தார்கள். அந்த இரண்டு மணங்களும் சேர்ந்து புதியதொரு வாசத்தைத் தோற்றுவித்திருந்தது. ஆரம்பத்தில் வகுப்பறை முழுவ தும் பரவியிருந்த அந்த மணம் எல்லோர் நாசித்து வாரங்களையும் அடைத்திருந்தது. ஆனால் தொடர்ந்த அவர்களின் அரட்டைகளுக்கும், கேலிப்பேச்சுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷச் சிரிப்புகளுக்குமிடையில் அது காணாமல் போயிருந்தது.

முதலாம் பாடவேளை ஆரம்பித்து சிறிது நேரத் திற்கு பின் வகுப்பாசிரியர் உள்ளே நுழைந்தார்.

அனைவரும் எழுந்து 'குட்மோர்னிங்' சொன்னார் கள். பதிலுக்கு ஆசிரியையும் 'குட்மோர்னிங்' சொன்னார். அனைவரும் ஒன்றாக எழுந்ததனால் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் அவர்களுடைய கதிரைகள் பின்னால் தள்ளும் சத்தம் சீராகக் கேட்டது. அதே போல் பின் அவர்கள் ஒவ்வொருவராக இருக்கும்போது கதிரையை முன்னால் இழுக்கும் சத்தம் ஒரு சீராக இல்லாவிட்டாலும் கேட்டுக் கொண்டிருந்தது. அவர்களுடைய கதிரைகளின் சத்தமும், அவர்கள் சத்தமும் அடங்கும் வரை அமைதியாக இருந்த ஆசிரியை வரவு இடாப்பை எடுத்து பெயர்களை வாசிக்கத் தொடங்கினார்.

"அபினயா..., அக்ஷயா...., உதயகுமாரி..."

"பிரசண்ட் டீச்சர்...."

"வந்திருக்கன் டீச்சர்...."

மாறி மாறி வெவ்வேறு திசைகளிலிருந்து சத்த ங்கள் வந்தன... ஒரு சிலர் பதிலேதும் சொல்லாமல் கையை மட்டும் உயர்த்தி சைகை காட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியை அடிக்கடி நிமிர்ந்து பார்த்து அவை களை அறிந்து கொண்டார்.

வரவு இடாப்பு பதிவு முடியவும் முதலாம் பாடம் நிறைவு மணி அடிக்கவும் சரியாயிருந்தது. "இருங்க பிள்ளைகள் வாரன்..." என்று கூறிக்கொண்டே வகுப்பா சிரியர் வெளியே சென்று விட்டார்.

அன்றைய நேர அட்டவணையின் படி இரண்டாம் பாடம் பொருளியல் பாடம். மீரா டீச்சருடையது.

"மீரா டீச்சர்" அந்தபாடசாலையிலேயே அதிக மான மாணவிகளுக்கு பிடித்த ஆசிரியர்களின் வரிசை யில் பத்து இடங்களுக்குள் வந்துவிடக் கூடிய ஒருவர். வயது நாற்பதைக் கடந்து சில மாதங்களே... ஐந்தரை அடி உயரம், மாநிறம், அளவான உடல்வாகு, மடிப்புக் குலையாத சீராக உடுத்திய சேலையும், மடித்துக் கொண்டை போட்ட தலைமுடியும் அதில் சூடியிருக்கும் மல்லிகைப் பூவும், தோளிலே தொங்கும் கைப்பையும், கைகளில் ஒரு சில புத்தகங்களும், சற்றே குதிப்பகுதி உயர்ந்த நவீன அழகிய பாதணிகளும் அவரது அடையா ளங்கள்.

நல்ல மனிதர்களை இந்த நாட்களில் காண்பது அரிது அதிலும் முதல் நிலையிலிருந்து கடைநிலை வரையுள்ள மாணவர்கள் மேல் அக்கறை கொள்ளும் ஆசிரியர்களை பார்ப்பது அரிதிலும் அரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீரா டீச்சர் அந்த அரியவர்களில் ஒருவர். தான் கற்பிக்கும் வகுப்பில் மட்டுமல்லாது அனைத்து மாண விகள் மீதும் உண்மையான அக்கறை செலுத்துவார். அவர்களுக்கு வெறுமனே பாடப் புத்தகத்தில் இருக்கும் பாடங்களை மட்டும் கற்றுக் கொடுக்காது, அவர்களுக்கு தன்னம்பிக்கையையும், விடா முயற்சியையும், மனிதப் பண்புகளையும், பாரம் பரியத்தையும், கலாச்சாரத்தையும், வாழ்க்கையையும் கற்றுக்கொடுப்பவர்.

சக ஆசிரியர்களில் பலருக்கு அவரைப் பிடித் திருந்தாலும், ஒரு சிலருக்கு அவரைப் பிடிப்பதில்லை. ஏனெனில் அவர் மாணவிகளில் அதிகம் அக்கறை செலுத்துவதும், வேலைகளை ஒழுங்காகவும், சரியாகவும் செய்வதும், நேரத்தை இறுக்கமாக கடைப்பிடிப்பதும், எந்நேரமும் புன்னகைத்துக் கொண்டிருப்பதும் காரணங்க ளாக இருக்கலாம். ஆனால் இவற்றை விடவும் இன்னு மொரு காரணமும் இருக்கிறது... அது, அவ பணத்துக் காக பிரத்தியோக வகுப்புகள் நடத்துவதை ஆதரிப்பதி ல்லை என்பதே.

பாடசாலை மட்டுமே மாணவர்களுக்கான முழுமை யான அறிவூட்டலைக் கொடுக்கின்றது. வெறுமனே புத்தங்களில் உள்ளதை மட்டுமே கற்பிக்கும் பிரத்தியேக வகுப்புகளாலும், அந் நிலையங்களாலும் மாணவர்களுக் கான கல்வி அறிவை ஊட்ட முடியாது. கல்வி என்பது வெறுமனே புத்தகத்தை ஒப்புவிப்பதல்ல... அது மாண வர்களை வளப்படுத்துவது, உடல், உள ரீதியாக மாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களை எதிர்கால வாழ்கைக்குத் தயார்படுத்துவது, வாழக் கற்றுக்கொடுப்பது.

ஆதிகாலத்தில் இருந்த குருகுலக் கல்வி முறையே ஒரு சிறந்த மனிதனை உருவாக்கவல்லது. இன்றைய படசாலைகள் அந்தளவுக்கு சிறந்த மனிதனை உருவாக்க முடியாவிட்டாலும் ஓரளவேனும் ஒரு நல்ல மனிதனை உருவாக்க முயற்சி செய்கிறது. ஆனால் இந்த பிரத்தியேக வகுப்புகளும், நிறுவனங்களும் அதனை முற்றாக இல்லாமல் செய்வதோடு அதன் எதிர்விளைவையே ஏற்படுத்துகிறது. என்பதே மீரா ரீச்சருடைய வாதம். இதனாலேயே சில ஆசிரியர்கள் அவருடன் முகம் கொடுத்து கதைப்பதில்லை... ஆனால் அவருடன் பழகும் பாடசாலை மாணவிகள் அனைவருக்கும் அவ ஒரு 'ரோல் மாடல்'தான்.

இன்றைய மூன்றாம் தவணை பாடசாலை ஆரம்பமாகி முதல்நாள் மீரா ரீச்சர் பாடத்திற்கு வரவில்லை என்றதும் அனைத்து மாணவிகளும் கவலைகொண்டார்கள், சோர்ந்து விட்டார்கள்... ஆளாளுக்கு கேள்விகளைத் தொடுத்தார்கள்.

"என்னடி இன்டைக்கு மீரா ரீச்சரக் காணோம்"

"நானும் காலையில காணயில்லத்தான்டி..., காலைக் கூட்டத்திலயும் நிக்கேல்ல.,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்டி... சந்திரமதி வீட்டுக்குகிட்டத்தானே 'ரீச்சர்' இருக்கிறா. அவளுக்குத் தெரியாதாமா.?"

"அவளிட்ட கேட்டுப் பாருங்கடி..."

முன்னால் இருந்த ஒருத்தி திரும்பி பின் மேசையில் இருந்த சந்திரமதியைப் பார்த்து சத்தமாகக் கேட்டாள்.

"அடியேய் சந்திரமதி ஏன் மீரா 'ரீச்சர்' வரல்ல... உனக்கு ஏதாவது தெரியுமா... அவவக் காணேல்லையா நீ."

அதற்கு அவள்...

"இல்லடி நான் ஒரு கிழமையா அவவக் காணேல்ல..."

யாருக்கும் விபரம் தெரியவில்லை.

மீரா 'ரீச்சர்' ஏன் வரவில்லை என்று... ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக எண்ணினார்கள்... ஒவ்வொன்றும் சொன்னார்கள். இறுதியாக ஏகமனதாக முடிவெடுத்தார்கள்.

'ரீச்சருக்கு சுகயீனம் போல...' இன்று பாடசாலை விட்டதும் அவ வீட்ட போய் விசாரிக்கவேணும், என்று.

அதிலும் சில குழப்பங்கள் ஏற்பட்டது, பாடசாலை விட்டதும் போவதா, அல்லது மாலை போவதா என்று. பின்னர் பலரின் கருத்துகளுக்கமைய மாலை போவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அனைவரும் எங்கே சந்திப்பது என்றும் தீர்மானித்துக்கொண்டார்கள்.

இவர்களின் சம்பாஷணைகளில் கலந்து கொண்டிருந்தாலும் நிலோஜயின் எண்ணங்கள் அங்கு இருக்கவில்லை அது முழுவதும் அவன் பற்றியதாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 20

## காதல்மொட்டு

அன்றைய முதல் நாள் ஒரு சில பாடங்களே நடந்தன என்றாலும் நேரம் போனது அவளுக்குத் தெரிய வில்லை. இறுதிப் பாடவேளை முடிந்து தேவாரம் ஓதி, பாடசாலை விட்டு வெளியே செல்வதற்கான மணியும் ஒலித்தது. அனைவரும் வரிசையாக படிகளில் இறங்கி பிரதான வாயிலை அடைந்து வெளியே வந்தார்கள். ஆயிரத்து இருநூறு மாணவிகளும் குறுகிய நேரத்துக் குள் வெளியேற வேண்டுமென்றால் எப்படித்தான் முடி யும்.. அதிலும் பல மாணவிகளை அழைத்துச் செல்வதற் காக அவர்களுடைய பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள், வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்கள், சாரதிகள் என்று அந்த வித்தியாலயம் வீதி அல்லோல கல்லோலப் பட்டுவிடும், மதியம் ஒன்றேமுக்கால் மணியிலிருந்து இண்டரை மணிவரை.

கனிஷ்ட மற்றும் உயர்தர மாணவிகள் பலர் துவிச்சக்கர வண்டிகளிலும், சிலர் உந்துருளியிலும் வந்திருப்பார்கள். இதைவிட ஆசிரியர்களின் வாகனங்கள் என அனைத்தும் ஒன்றோடு ஒன்று நெரிபட்டு, ஆளாளு க்கு ஏசிக்கொண்டும், பேசிக்கொண்டும் செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவுதான் வீதிக்கட்டுபாடுகளை ஏற்படுத்தி யிருந்தாலும் ஒரு சில சாரதிகள் அவற்றையெல்லாம் அனாயாசமாக மீறிக்கொண்டுதான் செல்வார்கள். போக்கு வரத்து காவல்துறையினர் கடமையில் ஈடுப்பட்டிருந்தால் ஓரளவுக்காவது ஒழுங்காகச் செல்வார்கள், இல்லையென் றால் அவர்கள் வைத்தது தான் சட்டம். அதிலும் இந்த முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் இருக்கிறார்களே...

இதைவிட மற்றொரு அவஸ்தை என்னவென் றால், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியும் இவர்களு க்கு சற்று நேரம் முந்தியே பாடசாலையை விட்டுவிடுவது தான். அப்பாடசாலை மாணவர்களில் அனேகமானோரின் போக்குவரத்து பாதை இந்த சிறிய வீதியாகவே இருப் பது ஒன்றும் ஆச்சரியப்படுவதிற்கில்லைதான்.

இவைகளை விட பெண்பிள்ளைகளைப் பார்ப்ப தற்கும், அவர்களுக்கு தங்கள் திறமைகளைக் காண்பிப்ப தற்கும் என்று ஒரு கூட்டம் அந்த வீதியால் அங்கும், இங்கும் துவிச்சக்கர வண்டிகளிலும், உந்துருளிகளிலும், முச்சக்கர வண்டிகளிலும் ஓடித்திரிவார்கள்.

இந்தக்காலப் பெண்பிள்ளைகள் இவர்களது இவ்வாறான திறமைகளைப் பார்த்து, அவையாவன... துவிச்சக்கர வண்டி, அல்லது உந்துருளியை ஒரு கை யால் ஓட்டிச் செல்வது, சிலர் இரண்டு கைகளையும் விடுத்து எந்தப் பிடிமானமும் இல்லாமலும் ஓட்டிச் செல்லும் திறமை வாய்ந்தவர்கள்..., முச்சக்கர வண்டியை கூட இரண்டு சில்லில் ஓட்டிச் செல்வது..., எந்தவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமிஞ்ஞைகளும் இல்லாமல் திரும்புவது, 'யு' வளைவு எடுப்பது, அருகாமையில் வேகமாகக்கொண்டு சென்று நிறுத்துவது, சத்தமாகப் பாடல்களை ஒலிக்கவிடுவது, 'ஹாரனை' அழுத்தி சத்தமாக ஒலி எழுப்புவது, என்று இன்னோரன்ன சாதனைகளை நிகழ்த்திக்கொண்டு செல் வார்கள், அவர்களை 'சர்கஸ்' கூடாரங்களில் இருக்கும் கோமாளிகள் போலும் என்றே அப்பெண்கள் எண்ணு வார்கள் என்று நினைக்கிறேன்.

ஆனாலும் நூற்றில் ஒரு பெண் இந்த சாகசங்க ளுக்கு மயங்கிவிடுவதாகவும் தெரிகிறது. பாவம் அறி யாத வயது.

இந்த வேடிக்கை விநோதங்களைக் கடந்து சாரதா வீதியினுள் திரும்பியவள் நேரே வீடு செல்லாமல் தரித்து நின்றாள். பிரபல தனியார் வைத்தியசாலை வளைவால் திரும்பி வித்தியாலயம் வீதி வழியாக இவள் பாடசா லையை நோக்கி இவளது வகுப்பு மாணவர்கள் வந்துக் கொண்டிருப்பதை கண்டதனாலேயே அவள் அந்த திருப்பத்தில் நின்று விட்டாள்.

பதினைந்து நாட்களுக்கு மேலாக அவனைப் பார்க்க முடியவில்லை. இறுதியாக பிரத்தியேக வகுப்பு ஒன்று முடிவடைந்து வெளியே வரும் போது, அவனிடம் முன்னைய நாள் வாங்கிய குறிப்பு புத்தகத்தை திரும்பக் கொடுப்பதற்காக நின்ற போது பார்த்துக்கொண்டது... அந்த நினைவுகள் அவள் மனக்கண் முன் வந்து போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சனிக்கிழமை, மாலை நான்கு மணி. பிரபல கணக்கீட்டு ஆசிரியர் கொலின் அவர்களின் வகுப்பு ஆரம்பித்திருந்தது. வழமையான வகுப்பறை களிலே பொதுவாக ஆண்கள் ஒரு பக்கமாகவும், பெண்கள் ஒரு பக்கமாகவும் அமர்ந்திருந்து கற்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் கொலின் ஆசிரியரது பிரத்தியேக வகுப்பின் வகுப்பறை அவ்வாறல்ல... எவரும் எப்பக்கமும், எங்கும் அமர்ந்திருந்து பாடங்களை அவதா னிக்கலாம், படிக்கலாம்.

ஆணையும், பெண்ணையும் தூரத்தூர வைப்ப தனாலேதான் பல பிரச்சனைகள் உருவாகின்றன... அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வதில்லை..., ஒரவரோடு ஒருவர் பேசிக்கொள்வதில்லை..., ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதில்லை..., இருபாலாரும் எப்படிப் பழக வேண்டும் என்று அறிந்து கொள்வதில்லை..., எவரும் அவற்றை அவர்களுக்கு கற்றுத்தர முன்வருவ தில்லை அல்லது விரும்புவதில்லை. பெற்றோர் முதல், ஆசிரியர்கள், பெரியவர்கள் வரை இருபாலாரும் இணை ந்து செயற்படுவதை அனுமதிப்பதில்லை. பலர் அதை ஒரு பிழையான செயலாகவே கருதுகிறார்கள். இந்த சமுதாயமும் அப்படியான ஒரு கட்டுப்பாட்டை மறைமுக மாக இருபாலார் மீதும் திணித்து வருகிறது.

இப்படியே இருந்தால் அவர்கள் எப்பொழுது தான் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது. பால் வேறுபாடு என்பது இயற்கையால் விதிக்கப்பட்ட ஒன்று. இயற்கையின் சமநிலையை குழப்பாது அது சீராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கிக்கொண்டிருப்பதற்காக எல்லா வேறுப்பட்ட ஜீவராசிகளுக்குமாக பொதுவாக ஏற்படுத்தப்பட்ட வேறு பாடே இந்த ஆண், பெண் என்ற வேறுபாடு. அதை ஏன் இந்த மனித இனம் மட்டும் இத்தனை பெரிய அளவில் வேறுபடுத்தி வைத்திருக்கிறது என்பது விளங்காத ஒன்றுதான். அதிலும் எங்கள் சமுதாயம் இருக்கிறதே... ஆண்பாலும், பெண்பாலும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டாலே... கேட்கவாவேண்டும்.

கொலின் ஆசிரியர் இயற்கையோடு இணக்கம் ஏற்படுத்திக்கொண்டவர். பால் வேறுபாட்டை இயற்கை ஒருசில நியதிகளுக்காக மட்டுமே வேறுபடுத்தி வைக்கி றது என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டவர். அத னால் அவர் வகுப்பில் இப்படியான ஒரு ஏற்பாடு.

இருந்தும் பல ஆண் மாணவர்கள் பெண் பிள் ளைகளுக்கு அருகில் இருக்க கூச்சப்படுவார்கள், அதே போல் பல பெண் மாணவிகள் பையன்கள் அருகில் செல்வதை தவிர்த்துவிடுகிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக எமது 'டி.என்.ஏ' நிறமூர்த்த ங்களுக்கு கற்பிக்கப்பட்ட அந்த வேறுபாட்டை இலகுவில் சீர் செய்துவிட முடியாதுதான்.

ஆணும், பெண்ணும் எப்பொழுது அருகருகே இருந்து கற்றுக்கொள்கிறார்களோ... அப்பொழுதுதான் எமது சமுதாயத்தில் பல பிரச்சனைகள் முடிவுக்கு வரும் என்று அவர் அடிக்கடி ஆதங்கப்படுவார். இதனாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பெற்றோர்களின், பெரியவர்களின் எதிர்ப்பையும் அவர் சம்பாதித்து வருகிறார். இருபாலாரையும் சேர்ந்தே செயற்படவிடுவதில் ஏற்படும் உடனடிப்பிரச்சனைகளை மட்டுமே பெற்றோர்களும், பெரியவர்களும் கருத்திற் கொள்கிறார்கள். அனால் எமது ஆசிரியர் இன்னும் பல நூற்றாண்டுகளின் பின்னர் இதனால் எமது சமுதாயம் அடையப்போகும் மிகப்பெரிய வளர்ச்சியையே கருத்திற் கொண்டு செயற்பட்டுவருகிறார்.

அன்றைய பொழுதும் அப்படித்தான்... ஒரு சில மாணவ மாணவிகள் அருகருகே இருந்து பாடங்களை அவதானித்தார்கள். எனினும் பலர் இரண்டு வெவ்வேறு பிரிவாக பிரிந்திருந்தார்கள். அதில் அவளும் ஒருத்தி.

கிராமத்திலிருந்து வந்ததனால் இயல்பாகவே கூச்சசுபாவமும், வெட்கப்படும் தன்மையும் சற்று அதிகம் கொண்டிருப்பவள் அவள்.

அனேகமான ஆண்கள் அமரும் ஒரு பக்க இருக்கைகளின் முன்வரிசை இருக்கையில் அமர்ந்து கொள்வது அவன் வழக்கம். அவளோ மற்றைய பகுதியின் இடைப்பட்ட பகுதியில் அவனைப் பார்ப்பதற்கு ஏதுவாக ஓரிடத்தில் அமர்ந்துகொள்வாள். ஆசிரியரின் கற்பித்தலை முழுமையாக அவதானித்து வந்தாலும் இடைக்கிடை அவனையும் அவதானித்துக்கொள்வாள். அவனும் ஒரு சில வேளைகளில் அவளைத் திரும்பி பார்த்துப் புன்னகைத்துக்கொள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் அப்படித்தான் அவர்களது அமர்வுகள் அமைந்துகொண்டன.

அன்றைய வகுப்பு முடிந்து அனேகமான மாண வர்கள் வகுப்பறையை விட்டு வெளியேறியிருந்தார்கள். ஒரு சிலர் ஆசிரியரிடம் பாடங்கள் பற்றிய சந்தேகங்களை யும், விளக்கங்களையும் கேட்பதற்காக நின்றிருந்தார்கள். அவனும் நின்றிருந்தான். அவளும் நின்றிருந்தாள்... அவனைச் சந்திப்பதற்காக.

அவளது நெஞ்சம் படபடத்துக்கொண்டிருந்தது... இதற்கு முன்னர் சில தடவைகள் அவனுடன் ஓரிரு வார்த்தைகள் கதைத்திருந்தாலும் அன்று ஏனோ அவளு க்கு பதட்டமாயிருந்தது. கைகள் சற்று நடுங்கியது, உதடு கள் காய்ந்து போயின, கஷ்டப்பட்டு எச்சிலை விழுங் கினாள்..., கண்கள் ஓரிடத்தில் நிலைத்து நிற்க மறுத்தது... இவற்றிற்கெல்லாம் காரணம் ஏதுமில்லாமல் இல்லை...

அவனிடம் திரும்பக் கொடுக்கப்போகும் அவனது குறிப்பு புத்தகமே அதற்கு காரணம். குறிப்பு புத்தகம் என்று மொட்டையாகச் சொல்லிவிட முடியாது. அதற்குள் அவள் வைத்திருக்கும் குறிப்பு ஒன்றுதான் அதற்குக் காரணம். அவள் கைப்பட எழுதிய ஒரு குறிப்புக் கடதாசி அது. எழுதிய என்பதை விட வரைந்த என்று சொல்ல லாம். அது ஒரு கடிதம், கவிதை, வாழ்த்து..., அல்லது வேண்டுகோள்..., வெளிப்பாடு..., ஏதாவதாக இருக்கட்டும், ஆனால் அந்த கடதாசியில் இருக்கும் எழுத்துக்களும், வரைந்த சித்திரமும் அவள் எண்ணத்தை அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தும் ஒரு முயற்சியாகவே அமைந்திருந்தது. எண்ணங்களை வெளிப்படுத்த எத்தனையோ நவீன ஊடகங்கள் வந்திருந்தாலும் கடிதம் ஒன்றே எண்ணங் களை வெளிப்படுத்தும் உயிருள்ள ஊடகமாக இன்று வரை இருக்கிறது.

அவளும் தனது எண்ணங்களை கவிதையாக, பந்தியாக, ஓவியமாக எழுதி அவனது அந்தக் குறிப்புப் புத்தகத்துக்குள் வைத்திருந்தாள். அதனாலேயே அவள் இதயம் வழமைக்குமாறாக அடித்துக்கொண்டது, கைக ளில் நடுக்கம் ஏற்பட்டது.

ஒருவாறு அவனும் சந்தேகங்களைக் கேட்டு தெளிவுப்படுத்திக்கொண்டு அவளைக் கடந்து வந்தான்.

"உங்களுக்காகத்தான் நிற்கிறன்..." இது அவள் முழுமையாக தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவ னுடன் பேசினாள். பேசினாளே ஒழிய வார்த்தைகள் சரியாக வெளிவந்ததாகத் தெரியவில்லை.

"என்னட்டையா... சொல்லுங்க..." அவனது வார்த்தைகளும் தட்டுத்தடுமாறி வந்தன அவளை நோக்கி.

அதனால் அவள் சற்று தைரியமானாள்...

"உங்க நோட்ஸ் கொப்பி..." குறிப்பு புத்தகத்தை நீட்டினாள்.

அவன் பெற்றுக்கொண்டு திரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு மேற்கொண்டு எதுவும் பேச வரவில்லை..., அவன் தன்னிடம் ஏதாவது பேசுவான் அதன் பின் அந்த குறிப்புப் புத்தகத்துக்குள் இருக்கும் விடயம் பற்றி சொல்லுவோம் என்று எண்ணியிருந்தாள். ஆனால் அவன் கொப்பியை பெற்றுக்கொண்டு பேசாமல் திரும்பிச் செல்லவே இவளும் பேசாதிருந்தாள்.

புத்தகத்தை தந்துதவியதற்கு ஒரு நன்றி கூட சொல்லவில்லையே என்று புத்திக்குப் படவே மீண்டும் தைரியத்தை ஏற்படுத்திக்கொண்டு "எக்ஸ்கியூஸ்மீ..." என்றாள் அவனை நோக்கி.

அவன் திரும்பினான்.

"தாங்ஸ்" என்றாள் அவள் மொட்டையாக.

"எதற்கு" என்றான் அவன்.

"இல்ல... கொப்பி தந்ததுக்கு."

"பரவால்ல..."

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

அவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான், அவள் குனிந்து மண்ணைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் புறப்பட ஆயத்தமானான்...

"அந்த புக்குக்குள்ள ஒன்டு எழுதி வச்சிருகிறன் அத வாசிச்சுப்பார்த்திட்டு சொல்லுங்க..." என்று வேகமாகச் சொல்லிவிட்டு விறுவிறு என திரும்பி வந்துவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று தூரத்தே காத்துக்கொண்டு நின்ற தோழிகளை "வாங்கடி போகலாம்" என்று அவசர அவசரமாக அழைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்.

அவன் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்த சம்பவம் நடந்து கிட்டதட்ட இரண்டு கிழமைகள் ஆகிறது. அதன் பின் அவள் ஊருக்குச் செல்லவேண்டி வந்துவிட்டது. ஊருக்குப் போனவள் முன்னைநாள் மாலைதான் வந்து சேர்ந்தாள். அதுதான் இன்று பாடசாலை விடும்வேளை அவனைப் பார்க்க முடியுமா என்ற ஏக்கத்துடன் சாரதா வீதி திருப்பத்தில் நின்றிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 21

# காத்திருப்பு

"வாள்அற்றுப் புற்குஎன்ற கண்ணும் அவர்சென்ற நாள்ஒற்றித் தேய்ந்த விரல்."

-திருவள்ளுவர்-

அவனது வரவை எதிர்நோக்கிக் காத்திருந்து அவளது கண்கள் சோர்ந்து போயிருந்தது. அவனைப் பார்க்காத நாட்களை எண்ணி எண்ணி அவளது விரல்கள் தேய்ந்துபோயின... நிலோஜனியின் நிலையும் அதுதான். நீண்ட நாட்களின் பின் இன்றாவது அவனைப் பார்க்க மாட்டோமா என்று அங்கே காத்து நிற்கிறாள்.

ஆறு ஏழு மாணவர்கள் எதிரே வந்து கொண்டிருந்தார்கள். வருகிறவர்களில் அனேகமானோர் இவள் வகுப்பைச் சார்ந்தவர்கள். அவர்கள் இவளைக் கண்டுவிட்டார்கள். நிரோஷனைப் பார்ப்பதற்காகத்தான் அவள் அதிலே நிற்கிறாள் என்பதும் அவர்களுத் தெரியும். அதில் ஒருவன்,

"டேய்... இன்டைக்கு நிரோஷன் ஸ்கூலுக்கு வரல்லயேடா..." எனறான். அதற்கு மற்றொருவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமடா... அவனுக்கு காய்ச்சலாம். போய்ப் பார்க்க வேணும்..." என்று கூறிக்கொண்டே அவளைப் பார்த்தார்கள்.

அன்றலர்ந்த அல்லி போல் இருந்த அவளது முகம் வாடிப்போனது.

அவர்கள் ஜாடை மாடையாக தனக்குத்தான் இந்த விஷயத்தை சொல்கிறார்கள் என்பதை அவள் விளங்கிக் கொண்டாள்.

அவன் உடல் நிலைபற்றி அறிந்துகொள்ள ஆவலாயிருந்தது. எனினும் யாரிடம் கேட்பது, இவர்களை மறித்து அவன் பற்றிக் கேட்டால் பரிகாசம் செய்வார்கள். என்ன செய்வது என்று தெரியாது மௌனமாக வீடு வந்து சேர்ந்தாள்.

சாப்பாடு சரியாக இறங்கவில்லை...

கோப்பையில் போட்டெடுத்த சோற்றையும் 'பிறௌனி'க்கு போட்டு விட்டு கைகளை அலம்பிக் கொண்டு அறைக்குள் வந்தாள். மூலையில் சாத்தி வைத்திருந்த பாயை எடுத்து கீழே போட்டுப் படுத்து விட்டாள்.

மாலை ஐந்து மணிக்கு ஒரு வகுப்பு இருக்கிறது, அது முடிந்ததும் மீரா ரீச்சரைப் பார்க்கப் போகவேண்டும் என்று 'ஐடியா' போட்டிருக்கிறார்களே... என்ன செய்வது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரோஷனுக்கு காய்ச்சல் என்றார்களே... வகுப்புக்கு வரமாட்டாரோ. எப்படிச் சந்திப்பது. என் கடிதத்துக்கு பதில் என்ன...? நான் அவரை விரும்புவது பிழையா...? அல்லது தெரிவித்தது பிழையா...? என்னைப்பற்றி ஏதும் தவறாக நினைப்பாரோ, எதுவென்றாலும் எனக்கு தெரிவித்திருக்கலாமே. என்று அவளது மனது பலவிதமான குழப்பத்தில் இருந்தது.

இவ்வாறான வேளைகளில் சூரியன் எப்.எம் வானொலி கேட்டால் அவள் மனதுக்கு சற்று ஆறுதலாயிருக்கும். அதுவும், இலங்கை நேயர்கள் மட்டுமல்லாது, அனைத்து நாடுகளிலுமுள்ள தமிழ் பேசும் நேயர்கள் விரும்பும் அறிவிப்பாளரான மதுரக் குரலோன் தரணிதரனின் குரலைக் கேட்டால் மனதிலுள்ள அனைத்து பாரங்களும் நீங்கி இதயம் இலவம் பஞ்சாகிவிடும்.

மதியம் மூன்று மணியிலிருந்து ஐந்து மணிவரை சூரியன் எப்.எம்மில் ஒலிப்பரப்பகும் கும்மாளம் நிகழ்ச்சி கேட்டால் மனதில் உற்சாகம் பொங்கி வழியும். இதை அவள் அனுபவரீதியாக உணர்த்திருகிறாள்.

படுத்திருந்தவள் எழுந்து, அக்காவின் வானொலிப் பெட்டியை எடுத்து நூற்றி மூன்று தசம் ஆறு பண்பலையை ஒழுங்குப்படுத்திக்கொண்டாள். பின் வானொலிப் பெட்டியை தலையணைக்கு அருகில் வைத்து விட்டு பாயில் சாய்ந்துகொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடித்தேடி பலதரப்பட்ட விடயங்களையும், அதிகமாக வனொலிகளில் ஒலிபரப்பபடாத பாடல் களையும் ஒலிபரப்பிக்கொண்டும், தனது இனிமையான குரலால் அனைவரையும் வசீகரித்துக்கொண்டும் இருந் தார் அறிவிப்பாளர் தரணிதரன், அவருக்கு இணையாக ஈடுகொடுத்து பேச சற்று சிரமப்பட்டுக் கொண்டிருந்தார் சக அறிவிப்பாளர் கிரி.

வானொலியை கேட்டுக்கொண்டே அவனது நினைவுகள் நெஞ்சத்தை நிறைக்க அசந்து போனாள்.

"யாமும் உளேம்கொல் அவர் நெஞ்சத்(து) எம்
நெஞ்சத்து ஓஓ உளரே அவர் "

-திருவள்ளுவர்-

அவர் மனதில் யாமும் உள்ளோமோ? எமது மனதில் எப்பொழுதும் அவர் இருக்கின்றார்.

திடீரென திடுக்கிட்டு விழித்துக்கொண்டவள், மணி நான்கைக் கடந்து பத்து நிமிடங்கள் ஆகிவிட்டதைப் பார்த்து அரக்கப்பறக்க எழுந்துகொண்டாள்.

முகம் கைகால்களை அலம்பி துடைத்துக் கொண்டு மாற்றுடையை அணிந்துகொண்டு, தன்னை சற்று அலங்கரித்துக்கொண்டு, புத்தகப்பையிலிருந்து சில கொப்பி புத்தகங்களை எடுத்து மற்றுமொரு பையில் வைத்துக்கொண்டு புறப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் நிலையத்தை வந்தடைந்தவள் கையடக்கத்தொலைபேசியை எடுத்து நேரத்தை பார்த்தாள். இன்னமும் பத்து நிமிடங்கள் இருக்கிறது பிரத்தியேக வகுப்பு ஆரம்பிக்க. அவளது தோழிகளையும் இன்னும் காணவில்லை... வேறு சில மாணவிகளும், வந்திருந்தார்கள். அவள் காத்துக்கொண்டு நின்றாள்.

சற்று நேரத்திற்குள் அவள் தோழிகளும் வந்துவிட்டார்கள். ஏனைய மாணவர்களும் ஒன்றொன்றாக வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் அவனைக் காணவில்லை. அவனோடு கூடவே திரியும் அவன் நண்பன் ரிஷிகாந் வந்துவிட்டான். அவன் ஒருவன்தான் கதைக்கக்கூடிய ஒருவன், மற்றைய சக மாணவர்களைப் போல் கேலி, கிண்டல் எதுவும் பேசாதவன், மிகவும் அமைதியானவன், மரியாதையான பையன்.

சற்று மனதை ஆசுவாசப்படுத்திக்கொண்டு தோழி வதனலோஜியை அழைத்துக்கொண்டு அவனை நோக்கிச் சென்றாள்.

அவர்கள் இருவரும் தன்னை நோக்கி வருவதைக் கண்ட அவன் சற்று பின் நோக்கிச் சென்று மற்றைய நண்பர்கள் பின் மறைந்துகொள்ளப் பார்த்தான். ஆனாலும் அவள் நேரே அவனை நோக்கி வந்தாள்.

"ரிஷி... உங்களைத்தான் சந்திக்க வந்தனான்."

நின்று அவளை நிமிர்ந்து பார்த்தவன்
"சொல்லுங்க" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிரோஷன் ஏன் வரல்ல"

"அவனுக்கு காய்ச்சல்... அதுதான்."

"கனநாளா காய்ச்சலா..."

"இல்ல இப்ப இரண்டு நாளாத்தான்."

"மருந்து எடுத்தவரா..."

"நானும் அவனும் தான் போய் எடுத்தனாங்கள். இப்ப கொஞ்சம் பரவாயில்ல. நாளைக்கு வருவான். நீங்க யோசிக்காதீங்க..." என்று படபடவெனக் கூறிவிட்டு வகுப்பறைக்குள் செல்ல எத்தனித்தவனிடம் மீண்டும் வினவினாள் நிலோஜனி.

"அவர இண்டைக்கு சந்திப்பீங்களா..."

"டியுசன் முடிய போவன்."

"என்ட நம்பர குடுத்து விடுவீங்களா... உங்களிட்ட இருக்குத்தானே..."

அவன் சற்று யோசித்தான்...

"இல்லாட்டி அவரிட நம்பரயாவது தாங்களேன்..."

அவன் மீண்டும் யோசித்தான்...

அவள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"உங்களிட்ட 'வைபர்' இருக்கா..." அவன் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்ல 'வட்ஸ்அப்' தான் இருக்கு..."

"சரி அப்ப அவன்ட 'வட்ஸ்அப்' நம்பரத்தாரன் பிறகு எடுத்துப் பாருங்க..."

என்று கூறிக்கொண்டே 'சம்சுங் S8' கையடக்கத் தொலைபேசியை எடுத்து, அவனது 'வட்ஸ்அப்' நம்பரைப் பார்த்துச் சொன்னான். அவள் பதிவு செய்துகொண்டாள்.

"சரி கிளாசுக்குப் போவம் வாங்க" என்று கூறிக் கொண்டே அவள் வகுப்பறைக்குள் சென்று விட்டான்.

அவள் கேட்க நினைத்த விடயங்கள் பலதை அவனாகவே சொல்லிச் சென்றது அவளுக்கு மகிழ்சியா கவும், ஆறுதலாகவும் இருந்தது. மனதிலிருந்த பாரம் சற்று குறைந்தது போலிருந்தது. அவளும் தோழியும் வகுப்பறைக்குள் சென்றார்கள். ஆசிரியர் பாடத்தை ஆரம்பித்தார்.

ஆசிரியர் கற்பித்த பாடம் அவளுக்கு மனதில் பதிந்ததாக தெரியவில்லை, அவளது மனது வேறு ஏதோ சிந்தனையில் ஆழ்திருந்தது. அது அவனைப் பற்றிய தாகவே இருந்தது என்று செல்லித் தெரிய வேண்டிய தில்லை.

இதை வள்ளுவர் இவ்வாறு சொல்கிறார்.

"உள்ளினும் தீரா பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது."

-திருவள்ளுவர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மால் காதலிக்கப்பட்டவரை நினைத்தாலும், அது நீங்காத பெருங்களிப்பைத் தரும், எனவே, கள்ளி னும் காமம் இனியது ஆகும்.

அவனைப்பற்றி எண்ண எண்ண அவள் உள்ளம் மகிழ்ச்சியில் திளைத்தது.

"கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்
தின்னும் அவர்காணல் உற்று."

-திருவள்ளுவர்-

ஆனால் அவனைப் பார்க்க முடியவில்லை என்று எண்ணும்போது மனம் சோகத்தில் ஆழ்ந்தது.

பிரத்தியேக வகுப்பு முடிந்து வெளியே வந்தவள், அவன் நண்பன் ரிஷிகாந்திடம், "நான் கேட்டதா சொல்லி விடுங்க" என்று கூறிக்கொண்டே சைக்கிளை மிதித்து விரைந்து வீடு வந்து சேர்ந்து விட்டாள்.

படிக்கிற மேசையில் இருந்து புத்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள்... வாசித்தது எதுவும் நினை வில் நிற்கவில்லை. செய்யவேண்டிய வீட்டுப் பாடங்கள் ஒன்றிரண்டை மட்டும் செய்து முடித்துவிட்டு எழுந்து அறையைவிட்டு வெளியே வந்தாள் நிலோஜனி.

'ஹோலில்' சோபாவில் அமர்ந்திருந்து மும்முர மாக புத்தகம் வாசித்துக்கொண்டிருந்தாள் பவித்திரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதை ஒரு நிலைப்படுத்தி படிக்க முடியாது மீண்டும், மீண்டும் அவனது நினைவுகள் வந்து போவதனால் புத்தகத்தை மூடி வைத்து விட்டு வெளியே வந்தவள் அக்காவிற்கு முன் இருக்கையில் போய் அமர்ந்து கொண்டாள்.

அவள் வந்து அமர்ந்த சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் புத்தகத்தின் பக்கங்களில் மூழ்கினாள் அக்கா.

சோபாவில் அமர்ந்தவள் அக்கா பவித்திராவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

யாரோடும் அளவுக்கதிகமாக ஒட்டுறவு இல்லாமல் தானும், தன் வேலையும், வீடுமாக எப்படி இவரால் இருக்க முடிகிறது. அதிகமான மகிழ்ச்சியோ, அதிகமான துக்கமோ, கோபமோ, அமைதியோ, எந்தவொரு உணர்வுகளையும் வெளிப்படையாக தெரியப்படுத்தாமல் எப்படி இவரால் வாழ முடிகிறது.

சந்தோஷம் வந்தால் குறைந்த பட்சம் ஒரு மெல்லிய புன்னகை, துன்பம் வந்தால் சற்றே வாட்டம் கண்ட முகம், கோபம் வந்தால் ஒரு கூரிய பார்வை, இவைதான் அவள் உணர்வுகளின் அதிகபட்ச வெளிப்பாடாய் இருக்கும்.

மகிழ்ச்சியான தருணங்களில் வாய் விட்டு சிரிப்பதோ..., துன்பம் வரும் போது 'ஓ' என்று கதறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுவதோ..., கோபம் வரும் போது மற்றவரைத் திட்டித்தீர்ப்பதோ..., என்று எந்தவொரு உணர்வுகளையும் வெளிப்படுத்தத் தெரியாதவள் அல்லது வெளிப்படுத்த விரும்பாதவளாக அக்கா ஏன் ஆனாள். இவள் அடிக்கடி யோசிப்பதுண்டு.

ஆரம்பத்தில் பவித்திரா இவளோடு அதிகம் கதைக்காவிட்டாலும், இந்த ஒன்றரை வருடங்களின் பின் இப்பொழுது நிலோஜனியோடு இடைக்கிடை வந்து கதைக்கிறாள், இவளைப் பற்றி அக்கறையோடு விசாரிக் கிறாள், கடைகளுக்கோ, சந்தைக்கோ செல்லும் போது இவள் வீட்டில் இருந்தால் இவளையும் அழைத்துச் செல்கிறாள். இவள் மீது கொஞ்சம் அக்கறை செலுத்து கிறாள்.

நிலோஜனிக்கு அது ஆச்சரியமாகத்தான் இருந் தது. ஆனாலும் அக்கா மற்றவர்களை விட தன் மீது அன்பு செலுத்துகிறாள், தன்னை அவளது சகோதரிபோல் எண்ணுகிறாள் என்பதை அவள் சமீபகாலமாக உணர்ந்து கொண்டாள்.

அக்காவின் கடந்த காலம் பற்றி 'அன்ரி' சொல்லக் கேட்டிருந்ததனால், அவளும் அக்கா பற்றியும், அவள் சுபாவம் பற்றியும் நன்கு அறிந்திருந்தாள். அதனால் அவளும் அக்காவிற்கேற்றாற்போல் அவளோடு பழகக் கற்றுக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபகாலமாக அக்காவிற்கு தன் மீது ஒரு இனம் புரியாத பாசம் ஏற்பட்டிருப்பதை அவள் அவதானிக்காமல் இல்லை. அதனால்தான் அவளும் அக்காவுடன் தைரிய மாகக் கதைக்க ஆரம்பித்திருக்கிறாள்.

முன்னர் போல் இல்லாமல் இப்பொழுதெல்லாம் பவித்திரா அக்கா கொஞ்சமாக சிரிக்கிறாள், இடைக்கிடை அழுகிறாள், கோபம் வந்தால் சத்தம் போடுகிறாள், பொறுமையாக நின்று கதை கேட்கிறாள், அதை விட பொறுமையாக நின்று பதில் சொல்கிறாள். இவையெல் லாம் ஆச்சரியங்களில் ஒன்றுதான், ஆனாலும் நடக்கிறது.

அதற்குக் காரணம் நிலோஜனி..., நிலோஜனியை தனது தாயாக, தந்தையாக, தன் தமையனாக பார்க்கி றாள் பவித்திரா.

புத்தகத்தின் குறித்த ஒரு அத்தியாயம் முடிந்ததும் அதற்கு அடையாளம் வைத்து மூடி வைத்துவிட்டு எதிரே அமர்ந்திருந்த நிலோஜனியை பார்த்தாள் பவித்திரா.

வழமைக்கு மாறாக சற்று கவலை தோய்ந்த முகத்துடன் நிலோஜனி காணப்படுவதாகத் தெரியவே,

"என்ன, படிக்கலையா..." என்று கேட்டாள்.

"இல்லக்கா 'போரா' இருக்கு... அதுதான் கொஞ்ச நேரம் மொட்டமாடியில போய் இருக்கலாம் என்டு வந்தனான்..." என்றாள் நிலோஜனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப போய் இருக்கிறதுதானே..."

"பூட்டி இருக்கே அக்கா..."

"சாவி என்ட 'லாச்சிக்குள்ள' இருக்கு போய் எடு..."

படிக்கட்டால் ஏறி மொட்டைமாடிக்குள் நுழையும் வாசலில் ஒரு கதவு போடப்பட்டிருக்கிறது. அந்தக் கதவு பூட்டப்பட்டு அதன் சாவி எப்பொழுதும் அக்காவின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். 'அன்ரி' போவதென்றால் கூட அவளிடம் அனுமதி பெற்றுத்தான் போக வேண்டும். அது 'அன்ரி'க்கு பழகிவிட்டது. ஆரம்பத்தில் இவளுக்கு இந்த விடயம் தெரியாது.

ஒரு நாள் மொட்டைமாடிக்குச் சென்று காற்றாட உலாவிக்கொண்டிருக்கும் போது, அக்காவிடம் ஏச்சு வாங்கிக் கட்டியிருக்கிறாள். அதனால் இன்று அக்காவிடம் அனுமதி கேட்டே மொட்டைமாடிக்குச் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 22

## மயக்கம்

இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் சிறிய வலி ஒன்றை உணர்ந்தாள் நிலோஜனி. காதலால் ஏற்படும் வலி வாழ்நாள் முழுவதும் ஏதோ ஒரு இடத்தில் வலித்துக்கொண்டே இருக்கும். ஆனாலும் இயற்கை அந்த வலியை மறக்கடிக்கச்செய்துவிடும்.

இரண்டு தென்னை மரங்களுக்கிடையே பிரகாசமான வெள்ளொளியைப் பரப்பி வளர்ந்து கொண்டிருந்தான் சந்திரன். தூய பசும்பாலை யாரோ வானிலிருந்து வாளியால் அள்ளி பூமியில் ஊற்றியது போலிருந்தது... அந்த பால்ஒளி தென்னை மரத்தின் உச்சியிலிருந்து அடிவரை வழிந்தோடியது.

இரண்டு தென்னை மரங்களும், அதற்கிடையில் பிரகாசித்த சந்திரனும் வானமாதேவியின் இரு கண்களையும், நெற்றிப்பொட்டையும் போல் தோற்றமளித்தது அவளுக்கு. வானமாதேவி தன்னோடு கதைப்பதைப் போல் கற்பனை செய்துகொண்டாள்.

தேவியின் தலையில் அணிந்திருந்த கிரீடத்தில் பதிந்திருந்த நட்சத்திர மணிகள் "மினுக் மினுக்" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னியது... அது அவளைப்பார்த்து கண்சிமிட்டியது. பதிலுக்கு அவளும் இமைகளை மூடித்திறந்தாள். கண்களை மூடித்திறக்கும் போது அந்தக் காட்சியோடு அவனது ஞாபகமும் வந்து போனது.

புத்தகங்களுக்குமேல் வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசியை எடுத்து அதற்கு உயிர்கொடுத்தாள். அழகிய குழந்தை ஒன்று சிரித்தது... பதிலுக்கு இவளும் புன்னகை புரிந்துவிட்டு வலையமைப்பு "ஐக்கனை" அழுத்தி அதனை அலையவிட்டாள்... ஒன்று, இரண்டு, மூன்று என கட்டம்கட்டமாக அது முழுமைபெற்றது. தொடர்ந்து தொலைபேசி பலமுறை சத்தங்களை எழுப்பியதோடு அதிர்ந்து அதிர்ந்து அடங்கியது. அலைபேசியை இலாவகமாக உள்ளங்கைக்குள் அடக்கிக் கொண்டு பெருவிரலால் அதன் "ஸ்கின்னை" அங்கும் இங்குமாக அலைக்கழித்தாள். அதில் தெரிந்த சில சமூக வலைத்தளங்கள் ஏதோ தகவல் இருப்பதாகத் தெரிவித்தன. முதலில் முகப்புத்தகத்தை திறந்து அதிலுள்ள தகவல்களைப் பார்த்தாள். சிலதை "லைக்" பண்ணிக் கொண்டு, ஒரு சிலதிற்கு "கொமன்ட்" எழுதிக்கொண்டும் போனாள். சிறிது நேரத்தில் அதனை நிறுத்தி வெளியே வந்தவள் என்ன செய்வது என்று யோசித்தாள்.

அவனது கையடக்கத் தொலைபேசி எண்ணை எழுதி வைத்திருந்த கொப்பியை எடுத்துப் புரட்டி நிரோஷன் இலக்கத்தை ஒருதடவை பார்த்துக்கொண்டாள். 'என்ன செய்வது அவனுக்கு அழைப்பு எடுப்பதா...? எடுத்தால் கதைப்பானா...? என்ன நினைப்பான்...? ஏதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாக நினைப்பானோ...?' என்றது அவள் மனது 'வேண்டாம் வேண்டாம், அழைப்பை எடுக்காதே.' என்றது உள்மனது. 'வைபர்', அல்லது 'வட்ஸ்அப்' எதிலாவது குறுந்தகவல் அனுப்பிப்பார் என்றது அது.

அது நல்ல 'ஐடியா'வாக இருக்கிறதே என்று நினைத்தவள் 'வட்ஸ்அப்'பில் அவனது தொடர்புகளை தேடிப்பார்த்தாள். சிறிது நேரத்தில் அவனது பெயருடன் படமும் வந்தது. 'நிரோஷன் நிரோ...' அதன்மேல் அவள் ஆட்காட்டி விரலை மெல்லப் பதித்தாள். நிரோஷனது 'வட்ஸ்அப்' தளத்தினுள் அது நுழைந்தது. அவனது பெயருக்குக் கீழே 'ஒன்லைன்' என்ற எழுத்து மிளிர்ந்து கொண்டிருந்தது. அது அவன் இணையத்துடன் இணைந் துள்ளான் என்பதைக் காட்டியது.

இதயம் படபடத்தது, நிலோஜனியின் விரல்கள் பரபரத்தன... ஏதாவது குறுந்தகவல் அனுப்பினால் அது அவனைச் சென்றடையும் என்று அவளுக்கு தெரிந்தது. குறுந்தகவல் அனுப்பலாமா, என்ன அனுப்புவது. 'ஹாய்...', 'ஹாலோ...', 'சுகமா...' எப்படி அனுப்புவது.

சிறிதுநேரம் சிந்தித்தாள். குழப்பம் தீரவில்லை. கடைசியில் எல்லோரும் பொதுவாக அனுப்பும் 'ஹாய்...' என்ற வார்த்தையை 'டைப்'செய்து அனுப்பிவைத்தாள். அது அவன் கையடக்கத்தொலைபேசியை அடைந்து விட்டதை இரண்டு சரிகள் விழுந்ததில் கண்டுகொண்டாள். சந்தோஷமும், பயமும் ஒருவித பதட்டமும் மாறிமாறி ஏற்பட்டது அவளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரமாக கையடக்கத்தொலைபேசியை பார்த்துக்கொண்டிருந்தவள், அதனை புத்தகம் ஒன்றின் மேல் வைத்துவிட்டு வேறொரு புத்தகம் ஒன்றை எடுத்துப் புரட்டினாள்.

கண்கள் வெறுமனே புத்தகத்திலுள்ள எழுத்துக் களை வாசித்ததே ஒழிய மனதில் அவை எதுவும் பதிய வில்லை. தான் அனுப்பிய தகவலுக்கு பதில் வரவில்லை யே... ஏன்... என்ற எண்ணமே மனதில் ஓடிக்கொண்டி ருந்தது. குறுந்தகவல் ஏதேனும் வந்தால் தொலைபேசி சமிக்ஞை தரும் என்பது தெரிந்திருந்தாலும் அடிக்கடி அதை எடுத்து ஒளி கொடுத்துப் பார்த்தாள். 'ம் கூம்...' எதுவும் வரவில்லை. மீண்டும் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினாள். சோர்வாக புத்தகம் வாசித்துக் கொண்டி ருந்தவள் கையடக்கத் தொலைபேசி அதிர்வுடன் அலறுவ தைக் கண்டு உற்சாகமாகி சந்தோஷத்துடன் அதை எடுத்துப் பார்த்தாள். உள்ளே நுழைந்து தேடினாள்... வந்திருக்கிறதுதான். குறுந்தகவல் ஒன்று. ஆனால் அது அவனுடையதல்ல... அவளது தோழி வதனலோஜினியிட மிருந்து வந்திருக்கிறது. ஒருபக்கம் அவளுக்கு எரிச்சலாயு மிருந்தது, மறுபக்கம் கவலையாயுமிருந்தது. அவளது 'வட்ஸ்அப்'பினுள் சென்று அந்த குறுந்தகவலை வாசித்தாள். 'ஹாய்' என்றிருந்தது. பதிலுக்கு 'ஹாய்' போட்டுவைத்தாள். சற்று நிமிடத்தில் அதற்குள் மீண்டும் ஒரு தகவல் வந்துசேர்ந்தது.

'கணக்கீட்டுப் பாட கணக்கு செய்துவிட்டாயா' அந்த தகவலைப் பார்த்த பின் தான் அவளுக்கு மண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் உறைத்தது, கணக்கீட்டு ஆசிரியர் இராசரெத்தினம் ஐயா அவர்கள் செய்து வரச்சொல்லி இரண்டு கணக்கு கள் தந்துவிட்டது. அதை நாளைய வகுப்பில் செய்து காட்ட வேண்டும்.

அருகில் இருந்த புத்தகப் பையினுள் துழாவி கணக்கீட்டு கொப்பியை எடுத்துப் பார்த்தாள். ஆம் செய்யவேண்டிய பாடம் எழுதப்பட்டிருந்தது. அதனைச் செய்வதற்கு ஆயத்தமாகிக்கொண்டே தோழிக்குத் தகவல் அனுப்பினாள்.

'இன்னும் இல்லை இப்போதுதான் செய்கிறேன்' பதில் வந்தது.

'செய்து முடித்ததும் எனக்கும் அனுப்பிவிடு'

சுத்த சோம்பேறி இவள்... என்று எண்ணிக்கொண் டாள். இது வழமையாக நடப்பதுதான். வீட்டுப்பாடங்களை ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கும் பரிமாறிக்கொள் வது வழக்கம்தான்... தொலைபேசியை ஓரமாக வைத்து விட்டு கணக்கைச் செய்ய ஆரம்பித்தாள் நிலோஜனி.

இந்தக் கையடக்கத்தொலைபேசி, 'ஐபாட்', 'டப் லட்', 'லப்டொப்' போன்ற நவீன தகவல் பரிமாற்ற சாதனங்களும், வலையமைப்புகளும் கண்டு பிடிக்கப் பட்டது மனித இனத்தின் வளர்ச்சிக்கு அபரிமிதமான ஒரு உந்து சக்தியாக இருப்பதை எவராலும் மறுக்க முடியாது. உலகத்தை அது கைப்பிடிக்குள் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டது மட்டுமல்லாது அண்டவெளியையும் அருகில் காட்டுகிறது எமக்கு... இச்சாதனங்கள் மூலம் மனிதகுலத்திற்கு நன்மைகள் பலகோடி... ஆனாலும்...

ஆனாலும் இவை மூலம் தீமைகளும் நடக்கத்தான் செய்கிறது. குறிப்பாக இந்த சமூகவலைத்தளங்கள். சமூக வலைத்தளங்களை நல்ல வழிகளில் பயன்படுத்தாமல் தீய வழிகளில் பயன்படுத்தும் ஒரு சிலராலேயே இப் பிரச்சனைகள் பெரிதாகின்றன.

சமூக வலைத்தளங்களிலிருந்து தேவையான வற்றை பெற்றுக்கொண்டு தேவையற்றவற்றை விட்டுவிடு வோமானால் பாவனையாளர்களுக்கு எந்தப் பிரச்சனை யும் இல்லை. குறிப்பாக இதில் இளைஞர்களே சிக்கிக் கொள்கிறார்கள். என்ன செய்வது அவர்கள் வயது அப்படி.

பாடம் செய்வதில் மும்முரமாய் இருந்தவள் தொலைபேசி ஒருமுறை சிணுங்கி நின்றதை கவனிக்க வில்லை.

ஒருவாறு கணக்கை முற்றாக செய்து முடித்து விட்டு தோழிக்கு தகவல் அனுப்புவோம் என்று கையடக் கத்தொலைபேசியை கையில் எடுத்தவள் முகப்பில் அவனது படத்துடனான 'வட்ஸ்அப்' பகுதியிலிருந்து தகவல் ஒன்று வந்திருப்பதை கண்டு பரபரப்பானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றும் தாமதியாது அதனைத் திறந்து பார்த்தவள் 'ஹாய்' என்று இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தாள். பதிலுக்கு,

'காய்ச்சல் எப்படி.' என்று கேட்டு அனுப்பினாள்.

உடனடியாக பதில் வந்தது.
'இப்ப பரவாயில்ல...'

மேற்கொண்டு என்ன எழுதி அனுப்புவது என்று அவளுக்குத் தெரியவில்லை, தயங்கித் தயங்கி 'சாப்பிட 'டாச்சா.' என்று டைப்செய்து அனுப்பினாள்.

'ஓம்... நீங்க...' என்று பதில் வந்தது.

'ஓம்... என்ன செய்றீங்க...'

'படிக்கிறன்... நீங்க...'

'நானும் படிக்கிறன்...'

அவனுடனான குறுந்தகவல் தொடர்பை வளர்ப்பதற்காக தொடர்ந்து எழுதினாள்.

'என்ன படிக்கிறீங்க...'

'எக்கவுண்ட்ஸ்'

'நானும்தான்...'

'..........'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கணக்கு செய்திட்டீங்களா...'

'ஓம்...'

'பலன்ஸ் பண்ணிட்டா'

'ம்'

அந்தப் பதிலோடு அவனிடமிருந்து வேறு எதுவும் வரவில்லை. இவளுக்கும் என்ன எழுதுவதென்று தோண வில்லை. கையடக்கத்தொலைபேசியை ஒரு பக்கமாக வைத்துவிட்டு இருந்துவிட்டாள். மனதெல்லாம் மகிழ்ச்சி ததும்பி வழிந்தது. முகத்தில் அதன் ரேகைகள் படர்ந்தி ருந்தது.

சிறிது நேரத்தில் மீண்டும் கையடக்கத் தொலை பேசி ஒளிவிட்டுப் பிரகாசித்தது. மீண்டும் அதேவித பதட்டமும், பயமும் அவளைத் தொற்றிக் கொள்ள அதனை எடுத்துப் பார்த்தாள்.

அப்பாடா... அவனிடமிருந்து எந்தக் குறுந்தகவலும் வந்திருக்கவில்லை. ஒருபக்கம் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டாலும் ஒருபக்கம் கவலையாகத்தான் இருந்தது அவளுக்கு. இன்னுமொரு தடவை அவனுக்கு தகவல் ஏதும் அனுப்பிப் பார்ப்போமா... 'சேச்சே', 'வேண்டாம் வேண்டாம்' இனி அவன் ஏதும் அனுப்பி னால் மட்டுமே பதில் போடவேண்டும் அதுவரை ஏதும் அனுப்பக்கூடாது. இப்பொழுது தோழி அனுப்பியிருக்கும் தகவலை மட்டும் பார்ப்போம் என்று தோழியின் பக்கத் திற்கு போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்னடி கணக்க முடிச்சிட்டியா... அனுப்பன்டி... யாரோடையாவது கடல போட்டுக்கொண்டிருக்கிறியா...?'

தோழியின் கேள்வி அவளுக்கு எரிச்சலைக் கொடுக்கவில்லை மாறாக கொடுப்புக்குள் ஒரு சிரிப்பைக் கொடுத்தது. அந்த கள்ளச்சிரிப்போடு தான் செய்து முடித்த கணக்கீட்டுக் கணக்கை புகைப்படம் எடுத்து அதனை தோழி வதனலோஜினியின் 'வட்ஸ்அப்' புக்கு அனுப்பி வைத்தாள். சில வினாடியில் அது உரியவரின் பகுதிக்கு சென்றடைந்துவிட்டதை காட்டியது.

தோழியிடமிருந்தும் உடனடியாக பதில் வந்தது.

'தாங்ஸ்டி'

'ஓ... குட்நைட்' என்று அவளுக்கு விடைகொடுத்து விட்டு அவ்விடத்திலேயே சாய்ந்துகொண்டாள்... தூக்கம் கண்களை சுழற்றியது... கண்ணயர்ந்துவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 23

## கிளிப்பேச்சு

மொட்டமாடிக்கு வந்த அன்பரசி, வடக்கே சற்று தூரத்தே நின்ற சோபை இழந்துபோன தென்னை மரத்தைப் பார்த்தாள். அதன் வடலிக்குக்கீழே அமைந்திருந்த பொந்து ஒன்றிலிருந்து கிளி ஒன்று தலையை நீட்டி எட்டிப்பார்த்தது.

கழுத்திலே கருமையான ஆரம் நிரம்பிய, அழகிய சிவந்த சொண்டையுடைய அந்தப் பச்சைக்கிளி தூரத்தே மொட்டைமாடியில் நின்ற இந்த பஞ்சவர்ணக்கிளியைப் பார்த்து 'கீ...கீ...' என்று கத்தியது. பின்னர் அது பொந்திலிருந்து வெளியே வந்து ஓலை ஒன்றின்மேல் அமர்ந்து அவளையே உற்றுப்பார்த்தது. அவள் வதனத்தை தூர இருந்து பார்த்த அந்தப் பச்சைக்கிளி அதில் ஏதோ மாற்றம் இருப்பதைக் கண்டுகொண்டதோ என்னவோ மெல்லப் பறந்து வந்து மொட்டைமாடிக்கு முன்நின்ற மரத்தின் கிளை ஒன்றில் அமர்ந்துகொண்டது.

அது பறந்து வந்து அமர்ந்ததைப் பார்த்தஅவள் மகிழ்ச்சியடைந்தாள்... கிளைகளுக்குள் மறைந்திருந்த அந்தக் கிளியைத்தேடினாள்... அது அவளது நீண்டநாட் தோழி. அவள் எப்பொழுது மொட்டைமாடிக்கு வந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பறந்து வந்து மாமரத்தில் அமர்ந்துகொள்ளும். அன்றும் அப்படித்தான். அவளைக் கண்டதும் பறந்து வந்து மரக்கிளையில் அமர்ந்துகொண்டது.

"ஏய் கள்ளி... எங்கே ஒளிந்திருக்கிறாய்... வா... வெளியே..." குரலில் சற்று கோபத்தைக் காட்டி அந்தக் கிளித்தோழியை அழைத்தாள் அன்பரசி.

அது வழமைபோல் வராமல் ஒளிந்து நின்றது.

"நீ எங்கே ஒளிந்திருக்கிறாய் என்று நான் கண்டுகொண்டேன்... இனியும் ஒளிந்திருக்கத் தேவையில்லை வெளியே வா... உன்னிடம் நிறையப் பேசவேண்டியிருக்கிறது." என்று அன்பரசி அதனை அழைத்தாள்.

உடனே அந்தக்கிளி மறைந்துநின்ற மரக்கிளை யிலிருந்து வெளியே வந்து அவள் பார்வைக்கு நன்கு தெரியும்படியாக மொட்டைமாடியை நோக்கி நீண்டிருக் கும் கிளையின் நுனியில் வந்தமர்ந்தது.

அவள் உதடுகள் மெல்லிதாகப் புன்னகைத்தது. அந்தக் கிளியும் அவளை நிமிர்ந்து பார்த்து கண்களால் சிரித்தது.

சிறிதுநேரம் அங்கே மௌனம் நிலவியது... அந்தப் பச்சைக்கிளிதான் அந்த மௌனத்தைக் கலைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் அரசி முகம் இவ்வளவு வாட்டமாக இருக்கிறது..." என்று வினவியது கிளி.

அவள் அதற்கு பதிலேதும் சொல்லாமல் அந்தத் தென்னை மரத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் பதிலேதும் சொல்லாததையிட்டு கவலையடைந்த பச்சைக்கிளி...

"நான் உங்களை நீண்ட நாட்களாகப் பார்க்க வராதது கோபமா அரசி..." என்று வினவியது.

கிளி தன்னை சந்திக்கவராதது ஒருபக்கம் கோபம் என்றாலும் தற்பொழுது அந்தக் கோபத்தை சாதிப்பதில் அர்த்தமில்லை... மேலும் தனது நிலமையைச் சொல்லி ஆறுவதற்கு இருக்கும் ஒரு தோழியையும் அவள் இழக்க விரும்பவில்லை, அதனால் தனது மௌனத்தை அதிக நேரம் நீடிக்காமல் தனது திருவாய் மலர்ந்தாள் அன்பரசி.

"ம்... உன்னோடு எனக்கு நிறையக் கோபம்தான்..., இத்தனை நாட்கள் எங்கு போயிருந்தாய்... ஏன் என்னைப் பார்க்க வரவில்லை... நான் உன்னிடம் பேசுவதற்கு எவ்வளவு விடயங்கள் வைத்திருக்கிறேன் தெரியுமா..." என்று முகத்தை கோபமாக வைத்திருப்பதாக பாவனை செய்தாள்.

அவளது கோபத்தை பார்த்து அஞ்சிய கிளி, "இல்லை அரசி... என்னை மன்னித்துவிடுங்கள், போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் திடீரெனப் பெய்த கடும் மழையினாலும், காற்றினாலும் எனது இருப்பிடம் சேதமடைந்தது உங்களுக்குத் தெரியும்தானே. நானும் குஞ்சுகளும் எவ்வளவு அவதிப் பட்டோம் என்றும் உங்களுக்குத் தெரியும்தானே. அது தான், புதியதொரு இடம்தேடி அலைந்ததில் உங்களைச் சந்திக்க வரமுடியவில்லை."

"அதுதான் நான் சொல்லியிருந்தேனே. கூடுதேடி எங்கும் அலைய வேண்டாம் நீங்கள் எல்லோரும் என்னுடன் வந்து இருந்துவிடுங்கள் என்று."

"அது எப்படி சாத்தியமாகும் அரசி... நாங்கள் பறவைகள் உங்களைப் போன்று ஓரிடத்தில் இருப்பது எங்களுக்கு முடியாத காரியம்... அதுபோக உங்களுக்கு எங்களால் சிரமம் வேறு."

"எனக்கொன்றும் அதில் சிரமம் இருக்கவில்லை, நீங்கள்தான் என்னோடு வந்து இருக்க விரும்பவில்லை..."

இப்பொழுது கிளி மௌனமானது.

"அதுவும் சரிதான்... சுதந்திரமாகத் திரியும் உங்களை கூண்டுக்குள் அடைத்து வைத்து அழகு பார்ப்பது பிழைதானே."

"ஐயோ அப்படி இல்லை..." என்று கிளி ஏதோ சொல்ல முனைந்து நிறுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குத் தெரியும்..., உங்களுக்கு உள்ள சுதந்திரம் மனிதர்களாகிய எங்களுக்கு இருப்பதில்லை. எல்லாவற்றிற்கும் ஒரு நெறிமுறை, கோட்பாடு, சட்டதிட்டம், ஒழுங்குமுறை, ஒழுக்கம் அப்பப்பா..." என்று அவள் அலுத்துக்கொண்டாள்.

"அதுசரி அரசி... என்னோடு ஏதோ பேசவேண்டும் என்றீர்களே... என்ன அது..."

"மனசு சரியில்லை, அதுதான் உன்னோடு பேசினால் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும் என்று பார்த்துக் கொண்டிருந்தேன்."

"மனசுக்கு என்ன அப்படி வந்தது."

"அது விரும்பியது கிடைக்கவில்லை."

"விரும்பியது எல்லாம் கிடைத்துவிட்டால் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்காதே... அப்படி நீங்கள் என்ன விரும்பினீர்கள்."

"சுந்தரேசனை விரும்பினேன்... சிறுவயதிலிருந்தே என் உள்ளத்துள் புகுந்துவிட்டார் அவர்... அவரைப் பார்க்கும் போதெல்லாம் என்னுள் பரவசம் ஏற்படுகிறது. அவரோடு கதைப்பதற்கும், பழகுவதற்கும் ஏங்கிக் கிடந்தேன்..., அவரை நான் அதிகமாக நேசிக்கிறேன். அவரோடு சேர்ந்து வாழ ஆசைப்பட்டேன். ஆனால்..." அன்பரசியின் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது மேலும் பேசமுடியாமல் அவள் மௌனமானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைப் பார்க்க பரிதாபமாயிருந்தது அந்தக் கிளிக்கு. சுந்தரேசனை அன்பரசி விரும்புவது பற்றிய விடயம் அந்தக் கிளிக்கு முன்னமே தெரிந்ததுதான். அவளை அடிக்கடி சந்திக்கும் போதெல்லாம் அவன் பற்றியே சலிக்காமல் அதிகநேரம் அவள் கதைத்துக் கொண்டிருப்பாள், கிளியும் பொறுமையாக அதைக் கேட்டுக்கொண்டிருக்கும்.

கிளி முன்னமே எதிர்பார்த்ததுதான்... சுந்தரேசனை இவள் ஒருதலைபட்சமாகவே விரும்புவதும், அதுபற்றி சிறிது கூட அவனுக்கு அவள் தெரியப்படுத்தாததும் அறிந்ததுதான். அதனால் சுந்தரேசன் இதை ஏற்றுக்கொள் வானா என்பதில் கிளி அச்சம் கொண்டிருந்ததுதான். ஆனாலும் முதற்காதல் முற்றுப்பெறாததால் ஏற்படும் வலியை அந்தக்கிளி அவள் மூலமாக உணர்ந்து கொண்டது.

"அன்புக்கு அரசியே உங்கள் அன்பைப் பெறுவ தற்கு அவர் கொடுத்து வைக்கவில்லை... இனி அதைப் பற்றி சதா சிந்தித்துக்கொண்டிருப்பதிலும் அர்த்தமில்லை... உங்கள் நல்ல உள்ளத்திற்கு உங்களை மணப்பதற்கு மகாராசர்களே காத்துக்கொண்டிருப்பார்கள்... நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம்." என்று சொன்னது.

கிளி சொல்வது தன்னை ஆறுதல்படுத்த என்று அவளுக்குத் தெரிந்திருந்தாலும் அடிமனதில் ஒரு வலி இருக்கத்தான் செய்தது அவளுக்கு. இனி காலம் காலமாக அந்தவலி ஒரு மூலையில் இருந்துகொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்... அந்த வலி அதிகரிப்பதும் எப்பவாவது வருவதும் அவளுக்கு வரப்போதும் வாழ்க்கைத் துணையைப் பொறுத்தது.

கண்களில் வழிந்த கண்ணீரை புறங்கையால் துடைத்துக்கொண்டு, தான் கையில் கொண்டுவந்த அப்பிள் பழத்தை கிளியிடம் நீட்டினாள்.

"நான் வருவேன் என்று தெரியுமா அரசி உங்களுக்கு."

"நிச்சயமாக... நீ வருவாய் என்றுதான் இவற்றை யெல்லாம் வாங்கி வைத்திருந்தேன். இந்தா சாப்பிடு..." என்று கையை நீட்டினாள்.

நீட்டிய இடப்பக்கப் புறங்கையில் வந்து அமர்ந்த அந்தப் பச்சைக்கிளி, வலக்கையில் அவள் வைத்திருந்த பழத்தை கொத்தித் தின்றது. பின் கழுத்தைத் திருப்பி தன் கூட்டைப் பார்த்தது.

"ம்... சரி சரி... உனக்கு நேரம் போகிறது... உன் குஞ்சுகள் உன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும். என் சோகத்தை சொல்லி உன்னையும் கவலையடையச் செய்துவிட்டேன்... நீ புறப்படுவதானால் புறப்படு..." என்றாள் அன்பரசி அந்தக்கிளியின் தவிப்பைப் பார்த்து.

"இல்லை அரசி... இன்பங்களும், துன்பங்களும் மனிதர்களுக்குத்தான்... எம்மைப்போன்ற ஐந்தறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த உயிரினங்களுக்கு இருப்பதில்லை. எமக்கு எல்லாமே ஒன்றுதான். தங்கள் துன்பத்தை என்னுடன் பகிர்ந்து கொள்வதில் தாங்கள் ஆறுதலடைவீர்கள் என்றால் அது எனக்கும் மகிழ்ச்சிதான்".

அவள் அதை ஏற்றுக்கொள்வது போன்று மௌன மாக புன்முறுவல் பூத்தாள்.

கிளி தொடர்ந்தது,

"தோழி... எனது குஞ்சுகள் பசித்திருக்கும்... நான் தங்களிடமிருந்து விடைபெற அனுமதி தாருங்கள்."

"ம்... சென்று வா... அடிக்கடி என்னை வந்து பார்த்துவிட்டுச் செல்... இந்தப் பழங்களை குஞ்சுகளுக்கும் எடுத்து செல்." என்று அதற்கு விடைகொடுத்தாள் அன்பரசி.

அந்தப் பச்சைக்கிளி அவளைக் கனிவோடு பார்த்து கண்களால் நன்றி சொல்லிப் பறந்து சென்றது.

அது பறந்து செல்வதையே பார்த்துக்கொண்டிருந் தவள் மீண்டும் வெறுமையை உணர்ந்தாள்.

கிழக்கு வானிலிருந்து பூரண சந்திரன் தென்னை மர ஓலைகளினூடாக மெல்ல மேலே எழுந்துகொண்டி ருந்தான். கார்த்திகை மாதம் சற்று தண்மையாக காற்று வீசியது. அது உடலுக்கும், உள்ளத்திற்கும் புத்துணர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியை ஏற்படுத்தியது. மனதிலிருந்த பாரம் கொஞ்சம் குறைவது போலிருந்தது அவளுக்கு.

தான் விரும்பியவன் தனக்கு கிடைக்காவிட்டாலும், அவன் விரும்பியவள் அவனுக்குக் கிடைக்கவேண்டும் என்று பிராத்தனை செய்தாள்.

வானத்து நட்சத்திரங்களையும், நிலவையும் நீண்ட நேரமாக இரசித்துக்கொண்டிருந்தவளுக்கு தூக்கம் கண்களை வருட மொட்டைமாடியிலிருந்து கீழிறங்கி அவள் அறைக்குள் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 24

## காதல்வலி

அறையிலிருந்து வெளியே வந்தவள் மாடிப் படிகளில் ஏறி நேரே மொட்டைமாடிக்கு வந்து நின்றாள்.

மெல்லிய குளிர்காற்று வீசியது... எங்கோ மழை பெய்வது தெரிகிறது... வட்டநிலவு அவ்விடமெங்கும் ஒளிபரப்பிக்கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் அங்கங்கே மின்னிக்கொண்டிருந்தன. மேற்கு வானில் வெள்ளி பூத்திருந்தது. ஆனால் அவள் மனம் இவை எதையும் இரசிக்கவில்லை... இரசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. அவள் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது.

கிழக்கு வானின் அடிப்பகுதியில் கறுத்து உருண்டு திரண்ட மேகக்கூட்டங்கள் மலைத்தொடர் போன்று மேலெழுந்து வருவது தெரிந்தது... இன்னும் சற்று நேரத்தில் மழை பெய்யக்கூடும். மேல்வானை நோக்கி வந்த மேகக்கூட்டங்கள் பூரண நிலவை மறைத்துக் கடந்து சென்றது. அவ்வேளை எங்கும் இருள் ஆக்கிரமித்துக் கொண்டது.

துன்பமெனும் மேகக்கூட்டம் இதயத்தைக் கடந்து சென்றதனால் அவள் மனமெங்கும் அஞ்ஞான இருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது. இந்த உலகில் எதுவுமே நிரந்தரமில்லை என்பதை அவள் உள்ளம் உணர்ந்திருக்க வில்லை. எண்ணியவையெல்லாம் நிறைவேறுவதுமி ல்லை என்பதை அவள் அறிந்திருக்கவில்லை. அதுதான் துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்று அவள் புரிந்து கொள்ளவுமில்லை.

திருக்கோணமலை நகரிற்கு கல்வி கற்பதற் காகவே அவள் வந்திருந்தாள்... கல்வியோடு காதலும் வளர்ந்ததுதான் இத்துன்பத்திற்கு காரணம்.

உயர்தரப் பரீட்சை நெருங்கிக்கொண்டிருக்கிறது இன்னும் ஒருசில மாதங்களே அதற்கு இருக்கிறது. படிப்பதற்கு இன்னும் நிறையவே இருக்கின்றன. படிப்பது எதுவும் மனதில் பதிவதாகத் தெரியவில்லை. எப்பொழு தும் அவன் நினைவாகவே இருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் அவளது முதற் பாடசாலை நாளன்று அவள் அவனைச் சந்தித்தி ருக்கவே கூடாது. அன்று அவள் கண்களுள் ஊடுருவி மனிதில் பதிந்த அந்த உருவம் அவளை ஆக்கிரமித்துக் கொண்டது.

பல தடவைகள் அவன் மீதான அன்பை அவள் வெளிப்படுத்தியிருந்தாள். அவன் அதை ஏற்றுக்கொண்ட தாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நேரம் அப்படியே நின்று கொண்டிருந்த நிலோஜனி, பின்னால் யாரோ வரும் சத்தம்கேட்டு கன்ன ங்களில் படிந்திருந்த கண்ணீர்த்துளிகளை உள்ளங்கை யால் துடைத்துக்கொண்டு திரும்பினாள்.

மெல்லிய புன்னகையை உதிர்த்துக்கொண்டே அவளருகில் வந்தாள் பவித்ரா அக்கா.

இரண்டு வினாடிகள் நேருக்கு நேர் பவித்ராவின் கண்களைப் பார்த்த நிலோஜனி, அக்காவின் கூரிய பார்வை தன் உள்ளம் வரை ஊடுருவி ஆராய்வதை உணர்ந்து கண்களை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள். எங்கே தான் அழுதுவிடுவேனோ என்ற அச்சம் அவளு க்கு.

தான் ஒருவனை நேசிப்பதை அக்கா அறிந்திரு ந்தார் என்பதை அவளும் அறிந்திருந்தாள்... நேரடியாக அவளிடம் எதுவும் கேட்காவிட்டாலும், பவித்ரா அவள் பேச்சுக்களையும், நடை, உடை, பாவனைகளையும் பார்த்து அவள் பற்றி அறிந்துகொண்டாள். அவளில் ஏற்படும் எந்தவொரு சிறு மாற்றத்தையும் முதலில் உணர்ந்து கொள்வது பவித்ராதான். அதற்குக் காரணம் நிலோஜனியை அவள் தனது சகோதரியாக, தோழியாக பார்த்ததுதான். அதுமட்டுமல்லாமல் அவளும் அந்த வயதை, அந்த வயது அனுபவங்களை, காதலை, காதல் ஏமாற்றங்களைக் கடந்து வந்தவள்தானே... அதனால், நிலோஜனியின் ஒவ்வொரு அசைவின் அர்த்தங்களையும் புரிந்துகொண்டாள். ஆனாலும் அவள் எதையும் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவில்லை, அல்லது கண்டு கொள்ளாதது போல் இருந்துவிட்டாள்... நல்லதோ, கெட்டதோ எதையும் அவளே பட்டு உணர்ந்துகொள்ள வேண்டும், அப்பொழுதுதான் எதிர்காலத்தில் நல்லது எது கெட்டது எது என்று பிரித்தறிந்து நடக்கும் பக்குவம் அவளுக்கு வரும் என்று பவித்ரா நம்பினாள். மேலும் இந்தக்கால இளைஞர்களுக்கு அறிவுரை சொன்னால் சுத்தமாகப் பிடிக்காத ஒன்றாயிற்றே... அதனால் அவள் எதற்கும், எதையும் அறிவுரையாகச் சொல்லில்லை. ஆனாலும் நிலோஜனியின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அவள் அவதானித்தும், அறிந்தும் கொண்டுதான் இருந்தாள். அவள் செல்லும் பாதை பிழையானது அல்ல தவறானது. ஒரு நாள் அந்த தவறை அவளாக உணர்ந்து திரும்பி வரும்போது சரியான பாதையை தேர்ந்தெடுக்கும் வழியை அவளுக்குச் சொல்லிக் கொடுப்போம் என்று எண்ணி இருந்துவிட்டாள். இன்று அதற்கான தருணம் வந்திருக்கிறது.

தலைகுனிந்து நின்றவளின் தாடையை கைகளால் ஏந்தி மெல்ல நிமிர்த்திப் பார்த்தாள் பவித்திரா.

நிலோஜனியால் இனியும் அழுகையை அடக்க முடியவில்லை... பவித்ராவின் கைகளில் தனது முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதாள்... சத்தமாக அழுதாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல நிலோஜனியை நெருங்கி தனது தோளோடு சாய்த்துக்கொண்டாள் பவித்திரா. அவளை அணைத்து முதுகை வருடிக்கொடுத்தாள்.

அவள் தோளில் முகம் பதித்து விம்மி விம்மி அழுதாள் நிலோஜனி.

அவள் அழுகையை நிறுத்தும்வரை மௌனமாகவே இருந்தாள் பவித்திரா.

கொஞ்சங் கொஞ்சமாக அழுகையை நிறுத்திக் கொண்டாள் நிலோஜனி.

நீரில் அமிழ்ந்த பஞ்சைப்போல் பாரமாய் இருந்த அவள் மனது, புதிதாய் வெடித்துச் சிதறிய இலவம் பஞ்சைப்போல் இலேசாய் ஆனது... ஆனாலும் அக்காவின் அந்த அரவணைப்பிலிருந்து அவள் மனம் விடுபட விரும்பவில்லை. தாயுள்ளம் கொண்ட அக்காவின் அந்த அணைப்பு அவள் அன்னையை நினைவு படுத்தியது.

நிலோஜனியின் தோள்களைப் பிடித்து நிமிர்த்தியவள், அவள் கண்களைத் துடைத்துவிட்டு, அருகில் இருந்த கதிரையில் அவளை அமரச்செய்து மற்றைய கதிரையில் தானும் அமர்ந்துக்கொண்டாள் பவித்திரா.

சிறிது நேரம் அவர்கள் இருவரும் சிந்தனைவயப் பட்டிருந்தார்கள்... பின் பவித்திராவே ஆரம்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லு... என்ன பிரச்சினை உனக்கு..."

மௌனம்.

"நீ ஒண்டும் சொல்லாம இருந்தா என்னால ஒண்டும் செய்யமுடியாது... சொல்லு... என்ன விஷயம்..."

அவள் தனது மௌனத்தைக் கலைத்து பேசத் தொடங்கினாள்.

"என்ன நிரோஷன் வேணாம் எண்டுட்டான்..."

இப்பொழுது பவித்திரா மௌனமானாள்.

"அக்கா உங்களுக்குத் தெரியும்தானே... நான் அவன எவ்வளவு விரும்பினான் எண்டு... ஆனா அவன் என்ன விரும்பல்ல..., என்ன நேசிக்கேல்ல..., அவன் என்னோட பழகினது எல்லாம் பொய்..." மீண்டும் நிலோஜ னியின் கண்கள் பனித்தன.

"சரி... சரி... திரும்பவும் அழ ஆரம்பிச்சிடாத... நீ அவன விரும்பினத அவனுக்கு தெரியப்படுத்தினியா.?"

"நிறையத் தடவ நிறைய வழிகள்ள சொல்லி யிருக்கிறன்".

"அதுக்கு அவன் என்ன சொன்னவன்..."

"அது எதுக்கும் அவன் சரியான பதில் சொன்ன தில்ல..."

"அப்ப என்னதான் சொன்னவன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யோசிச்சுச் சொல்லுறன் எண்டுதான் சொன்னவன்"

"இப்ப என்ன சொல்லுறான்."

"அவனுக்கு என்னப் பிடிச்சிருக்குத்தானாம்... ஆனா என்மேல காதல் இல்லையாம்... அவன் என்ன விரும்பேல்லையாம்."

"அப்ப என்னவாம் நினைச்சுக் கொண்டிருக்கிறான்."

"என்ன ஒரு நல்ல தோழியாத்தான் எண்ணிப் பழகினவனாம்... எத்தனையோ தடவ எனக்குச் சொல்லியும் நான்தான் புரிஞ்சுகொள்ளேல்லையாம்..."

"அவன் சொல்லி நீ புரிஞ்சுகொள்ளேல்லையா...?"

அவள் மௌனம் சாதித்தாள்.

"ம்... சொல்லு... அவன் எப்பவாவது உன்ன விரும்புறன் எண்டு சொல்லியிருக்கிறானா...?"

"இல்ல..." அவள் இழந்தாள் வார்த்தைகளை.

"அப்ப நீயாத்தான் உனக்குள்ள அவன் மேல ஒரு காதல வளர்த்து வந்திருக்கிறாய்..."

"..............."

"அவன் உன்ன காதலிக்காததுக்கு ஏதாவது காரணம் சொன்னவனா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்...."

"என்ன..."

"எனக்கு படிக்கிறதுதான் முக்கியமாம்... நான் நல்லாப் படிக்கிறதால அதக் கெடுத்துக்கொள்ள வேணா மாம்... படிப்பில மட்டும் முழுக் கவனத்தையும் செலுத்தி படிச்சு நல்ல பெறுபேறுகளை எடுக்கட்டாம்... அகில இலங்கையிலேயே முதலிடத்தைப்பெற அவன் வாழ்த்தி றானாம்... தனக்கும் படிப்புத்தான் முக்கியமாம்... தானும் நல்ல பெறுபேறு பெற முயற்சி செய்யிறானாம்... எப்பவும் போல அவன் எனக்கு ஒரு நல்ல நண்பனா இருப்பா னாம்."

இதைச் சொல்லும்போது குரல் தழுதழுத்தது அவளுக்கு, வார்த்தைகள் ஒழுங்காக வரவில்லை.

அதைக்கேட்ட பவித்திரா சிந்தனைவயப்பட்டாள். இது நிலோஜனியின் புரிந்துகொள்ளலில் ஏற்பட்ட தவறு தானே ஒழிய அவனில் பிழை சொல்ல நியாயமில்லை... அவன் தெளிவாகத்தான் இருந்திருக்கிறான். இவள்தான் வீணாக மனதைபோட்டு குழப்பிக்கொண்டாள். முதல் முதலில் அவனைப் பார்த்ததும் ஏற்பட்ட கவர்ச்சி... தொடர்ந்து அவன் மேல் ஏற்பட்ட ஈர்ப்பு அவளது அறிவை மழுங்கடித்துவிட்டது. அவள் மனது அவள் அறிவை ஆட்சி செய்ய தொடங்கிவிட்டது... அதனால்தான் அவனது ஒவ்வொரு அசைவுகளும் அவள் மனதை அவன்பால் கொண்டு சென்றிருக்கிறது. அவன் கூறிய எதுவும் அவள் அறிவுக்கு அன்று எட்டவில்லை. இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மனது தனது தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டது. அதனால்தான் அது அழுகிறது. அறிவு இப்பொழுதுதான் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது... இதுதான் தருணம் அவளுக்கு சரியான பாதையை அமைத்துக்கொடுக்க என்று எண்ணினாள் பவித்திரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 25

# நிலாசோதயன் மடை

மிகக் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டுக் காட்சி யளித்துக்கொண்டிருந்தது நாயன்மார்திடல் வளாகம். என்றைக்கும் இல்லாமல் அன்று திருவிழாக்கோலம் பூண்டிருந்தது அந்தப்பகுதி. அதற்குக் காரணம் இல்லா மலும் இல்லை.

நாயன்மார்திடல் முன்றலிலிருந்து மேற்குப் பக்க மாக இரண்டு இரண்டரை கிலோமீற்றர் கிராமத்தை நோக்கிச் செல்லும் பாதை வழியெங்கும் கம்பிகள் நடப் பட்டு குழாய் விளக்குகள் பொருத்தப்பட்டும், வெவ்வேறு வர்ண குமிழ் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டும், "பொலித்தீன்" கடதாசிகளினால் செய்யப்பட்ட தோரணங் களும், கொடிகளும் நீள நீளமாக தொங்கவிடப்பட்டும் இருந்தன. அத்தோடு அரைக்கிலோமீற்றருக்கு ஒரு இடைவெளியில் இருக்கும் மின்கம்பத்தின் மேற்பகுதியில் இரண்டு இரண்டாக ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு மாரியம்மன் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிரு ந்தன.

நாயன்மார் திடலில் கோயிலுக்கு முன்பாக இருந்த பரந்தவெளி துப்பரவு செய்யப்பட்டு ஆங்காங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்விளக்குகளும், அலங்கார வளைவுகளும், அலங் காரக் கடதாசிகளும், தோரணங்களும் தொங்கவிடப்பட்டி ருந்தன. ஒவ்வொரு சீரான இடைவெளிகளில் கம்புகள் இருமருங்கிலும் நடப்பட்டு அதில் வாழை மரங்களும் தென்னோலைகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. அவற்றிற்கு மத்தியில் வெண்மணல் பரப்பி அப்பகுதியும் மாவிலை தோாரணங்களால் அலங்கரிக்கப்பட்டு வாழை மரங்கள் கட்டப்பட்டு தெய்வ வழிபாட்டிற்கு ஏற்றவிதத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஊர் இளைஞர்கள் பெரியவர்கள் சிலரின் வழி காட்டலில் பரபரப்பாக அங்கும் இங்குமாக ஓடித்திரிந்து வேலைகளை செய்து கொண்டிருப்பதை காணக் கூடிய தாயிருந்தது. அவர்களுக்கு மத்தியில் நமது சுந்தரேசனும் நின்றிருந்தான்.

கோயிலின் முன்றலில் நிற்கும் ஆலமரத்திற்கு அடியில் மோட்டார் சைக்கிள்களும், துவிச்சக்கர வண்டிக ளும் நிறுத்தப்பட்டிருந்தன. ஒன்றிரண்டு மோட்டார் வாகன ங்களும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. கனரக வாகனம் ஒன்றிலிருந்து பொருட்கள் இறக்கப்பட்டு ஆலய வளாகத் திற்குள் கொண்டு செல்லப்பட்டது. கூடைகளில் எடுத்துச் செல்லப்படும் அவை பாக்கு, வெற்றிலைகளாக இருக்க லாம். தார் தாராக வாழைக்குலைகளும் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

ஆலயத்தின் ஒருபக்கத்தில் கட்டாடியார் எனப் படும் பூசாரியாரும், கோணேசர் ஆலய வைராவியாரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானத்தார், அடப்பன்மார்கள், மறிகாரர்கள், கங்காணம் ஆகியோரும் நின்று ஒழுங்குகளைப்பற்றி கதைத்துக்கொண்டிருந்தார்கள். அதிலே எங்கள் தங்கராசா ஐயாவும், மாணிக்கராசா அண்ணனும், மேலும் சில பிரமுகர்களும் நிற்பதைக் காணக்கூடியதாயிருந்தது.

நாயன்மார்திடல் இத்தனை கோலாகலமாக காட்சியளிப்பதும், இத்தனை பிரமுகர்களும் அங்கே கூடிநிற்பதும் ஏன் என்று நீங்கள் சிந்திக்கக்கூடும்... அதிகநேரம் உங்களை சிந்திக்கவைக்காமல் நாமே சொல்லிவிடுகிறோம். இன்று நாயன்மார்திடல் மடை வேள்வி அங்கே அரங்கேற இருக்கின்றது.

தம்பலகாம மரபிலே ஐந்து மடை வேள்விகளை நாம் அவதானிக்க முடிகிறது... அவையாவன, நாயன்மார் திடல் மடை, கள்ளிமேடு பத்தினியம்மன் மடை, மகாமம், கந்தளாய், நெருஞ்சித்தீவு மடை என்பனவே. இதில் முதலில் நிறைவேற்றப்படுவது நாயன்மார்திடல் மடை தான். அருவ வழிபாட்டுத் தளமான நாயன்மார்திடலில் முன்பு நயன்மார் வழிபாடு இருந்திருக்கிறது. பொதுவாக தம்பைநகரை எடுத்துக்கொண்டால் முன்னைய காலத்தில் அங்கே வைஷ்ணவ வழிபாடு அதிகளவில் இருந்திருக்கிறது என்பதற்கு பல சான்றுகள் உண்டு.

அங்கே கூடியிருக்கும் பிரமுகர்களில் முக்கியமானவர்களில் ஒருவர் கட்டாடியார் என்று அழைக்கப்படும் பூசாரி. இங்கே நாம் கட்டாடியாரைப்பற்றி சொல்லியே ஆகவேண்டும். இந்த மடையின் சிறப்புப் பூசாரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாடியார் என்று அழைக்கப்படுகிறார். கட்டுக்களை சாமியாடியவாறே கூறுவதால் இவரை கட்டாடியார் என்று வட்டார மக்கள் அழைப்பதாகவும் கூறுகிறார்கள்.

'கிழக்கிலங்கை கண்ணகை அம்மன் பத்ததிகளும் பாக்களும்' எனும் நூலிலே பேராசிரியர் சி.மௌனகுரு கட்டாடியார் பற்றி சில குறிப்புக்களை கூறுகிறார். அதற்கு முன் அவர்கூறும் பத்தாசிகள் அல்லது பத்ததிகள் பற்றிப் பார்ததுவிடுவோம். ஆரம்ப காலத்தில் வாய்மொழியாக வந்த இந்த சடங்குக்கல்வி பிற்காலத்தில் எழுத்துவடிவம் பெற்றதாகவும், இவ் அம்மன் பத்ததிகளில் ஆலய அமை ப்பு, கும்பங்கள், நிவேதனப் பொருட்கள், அடையாளப் பொருட்கள், வாத்தியக் கருவிகள், வேண்டுதல் நிறை வேற்றும் முறைகள், கன்னிமார் பூசை, தெய்வமாடுதல், பூசைமுறைகள் என்பன விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள் ளதாகவும், இந்த சடங்கு விதிகளை ஒழுங்குமுறைப்படி செய்பவர்களே கட்டாடியார் என்றும் பூசாரி, குருக்கள் எனவும் அழைக்கப்படுகிறார்கள். மேலும் கட்டாடியார் தெரிவு முன்னுரிமை தாய்வழி மாமனுக்கும் பின் மருமகன் என்ற கேரளத்து மருமக்கள் தாயத்தை நினைவுபடுத்துகின்றது என்றும் கூறுகிறார்.

அவ்வாறான வழித்தோன்றலில் வந்த எமது மடையின் சிறப்புப் பூசாரி, கட்டாடி என்று அழைக்கப்படும் காளிக்குட்டியார் சம்பூரிலிருந்து அழைத்து வரப்பட்டு ள்ளார். ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் சம்பூரிலிருந்து நாயன்மார்திடல் மறிகாரர்களால் பல்லக்கில் வைத்து தூக்கி அழைத்துவரப்பட்டார். ஆலயத்துக்கு அண்மித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அழைத்துவரப்பட்ட போது நிலப்பாவாடை விரித்து வரவேற்கப்பட்டார். சம்பூரிலிருந்து, மூதூர், கிண்ணியா வழியாக தம்பலகமத்துக்கு ஊர்வலமாக கட்டாடியார் அழைத்து வரப்படுவது ஒரு மரபு. அவ்வாறு அழைத்துவரப்பட்ட கட்டாடி காளிக்குட்டி உத்தரியம் அணிந்து, தலைப்பாகை கட்டி, ஏகவடம் பூண்டு பத்தாதி விதிகளில் கூறப்பட்டுள்ளது போன்று சிறப்புடன் தோற்றமளித்தார்.

காட்டிற்குச் சென்று மறிகாரர்களால் பிடிக்கப்பட்ட பன்னிரெண்டு குழுமாடுகளும் அங்கே மடை நிகழவிருக்கும் மேடைக்கு அருகாமையில் கட்டிவைக்கப்பட்டிருந்தன. அவை குளிப்பாட்டி நன்கு அலங்கரிக்கப்பட்டு, மாலை அணிவித்து, மூக்கணாங்கயிறு கட்டி மரங்களில் கட்டப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அந்த மாடுகளை பிடித்து வந்த மறிகாரர்களும் அங்கே வேட்டி சட்டை அணிந்தும், சிலர் 'சறம்' அணிந்தும் நின்றிருந்தார்கள்.

இந்த மறிகாரர்கள் எனப்படுபவர்கள் தம்பலகாமத்தில் அதிகமாகப் பேசப்பட்ட வதனமார்களான நூற்றியொருவராக சித்தரிக்கப்படுவதும் உண்டு.

கிழக்கிலங்கை வரலாற்றில் அதிகம் மறக்கப்பட்ட வரலாற்று நாயகன் நீலாசோதயன். கோணேசர் கல்வெட்டின் இருபத்தியெட்டாம் பாடல், நீலாசோதயன் படையணி குளக்கோட்டன் விருப்பப்படி கந்தளாய்க் குளத்தைக் கட்டியதாக விபரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எட்டிசை மண்வெட்டிக் கொண்டே ஏழரைச்
சுற்றாம் இனதாவெட்டி
தட்டி ஒரு குளம் சமைத்து எற்றி அது
வீழ்முன்னம் தரணி மீதில்
ஒட்டி ஒரு குளம் சமைத்து ஆங்கு உறுநீரும்
கொண்டு அருளையுற்று வீரன்
அட்டதிக்கும் புகழ்ந்தருளும் நீலாசோதயன்
படையும் அரசர்மாரும்.'

'நீலாசோதயன் குறித்த எழுத்துத்தகவல்கள் அதிகம் இல்லாத சூழலில் நாட்டார் கதைகளும், முரண்பாடான தகவல்களும் நினைவுகூறப்படுகின்றன' என்கிறார் கலாநிதி கனகசபாபதி சரவணபவன் அவர்கள்.

ஆனால் ஆடகசௌந்தரியின் வரலாற்றோடு இணைக்கப்பட்ட நீலாசோதயன் படையணி பூதங்களாக சித்தரிக்கப்படுவதால் நீலாசோதயன் படைகள் மிகவும் பலமான பெரும்படையாக இருந்திருக்க வேண்டும் என்றும், ஒருபுறம் நீலாசோதயன் மட்டக்களப்பை ஆட்சி செய்த ஆடகசௌந்தரியின் படைத்தலைவன் என்றும், குளக்கோட்டன் ஆடகசௌந்தரியை மணந்தபின் இப்படைகளை குளக்கோட்டன் குளம் கட்டப் பயன்படுத்தினான் என நாட்டார் கதைகள் கூறுவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

ஆனால் தம்பலகாமம் மரபின்படி நீலாசோதயன் மகாபாரதத்தில் வரும் துரியோதணனாகச் சித்தரிக்கப் படுகிறான். அவன் நூற்றியொரு தோழர்களும் மகாபாரத கௌரவர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள். அதேபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனமார்கள் நூற்றியொருவர் என்பதால் இவர்களை மகாபாரதத்தில் வரும் கௌரவர்களாகவும், நீலாசோத யனை துரியோதனனின் மறுபிறப்பாகவும் அடையாளப்ப டுத்தும் நாட்டார் கதைகளும் உண்டு.

இதேபோல் இன்னுமொரு நாட்டார் கதை வதனமார் பற்றி இவ்வாறு கூறுகிறது.

'அயோத்தி நகரில் வாழ்ந்த பிராமண சமூகத்தைச் சேர்ந்த நூற்றியொரு வதனமார்கள் காடுகளில் காளைக ளையும், யானைகளையும் பிடிப்பதை பொழுதுபோக்கு விளையாட்டாக கொண்டிருந்தார்கள். ஒருநாள் வதனமார் களின் கனவில் நாராயணன் தோன்றி கந்தளாய் நீர்த்தேக் கத்திற்கு காவல் புரியவேண்டும் எனக் கூறினார். அத னால் நூற்றியொரு வதனமார்களும் கந்தளாய் வந்தார் கள். இந்த நூற்றியொரு வதனமாருக்கு தலைமைவகித்த நீலாசோதயன் மிகவும் ஆற்றல் படைத்தவன். தம்பலகா மம்பற்றில் தங்கியிருந்த வதனமார்கள் காட்டுக்காளை களைத் தேடி அலைந்தார்கள். வதனமார்கள் தம்பலகா மம்பற்றில் கிண்ணியாவிற்கு தெற்கேயுள்ள கங்கைக்காடு என அழைக்கப்பட்ட இடத்தில் தங்கினார்கள். சோர்வுற்ற வதனமார்கள் இளைப்பாறத் தங்கிய இடத்தில் ஒரு இடையன் வந்து சேர்ந்தான். வதனமார்களின் நோக்க த்தைப் புரிந்துகொண்ட இடையன் பேசத் தொடங்கினான்.

"உங்களுக்கு ஒரு வேட்டை காத்திருக்கிறது. ஒரு வெள்ளைக் கடாவும், அதனோடு காட்டுக் காளைக் கூட்டமும் மகாவலி ஆற்றின் கிளையாறான சாவாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீந்துகின்றன. தாமதிக்காமல் விரைந்து செல்லுங்கள்" என்றான்.

இடையன் பேச்சை நிறுத்தியவுடன் வதனமார்கள் சாவாறு நோக்கி விரைந்தார்கள். அவர்களுடன் இடையனும் கூடச் சென்றான். இடையன் கூறியது போன்றே சாவாற்றின் கரையில் ஐந்நூறு காட்டு மாடுகள் காணப் பட்டன. வெள்ளைக் கடாவைப் பிடிக்க முயன்றபோது வதனமார்கள் கண்ட காட்டு மாடுகள் ஆற்றின் கரையிலிருந்து வதனமார்களை நோக்கி வரத் தொடங்கின. வதனமார்களும் அவர்கள் கொண்டுவந்த மான்தோல் கயிற்றினால் மாடுகளைப் பிடிக்க முயன்றார்கள். எனினும் மாடுகள் வதனமார்களை சூழ்ந்து தாக்கத்தொடங்கின. காட்டு மாடுகளின் தாக்குதலைத் தாக்குப்பிடிக்க முடியாமல் வதனமார்கள் நூற்றியொருவரும் நிலத்தில் வீழ்ந்து உயிர் துறந்தார்கள். நிலத்தில் வீழ்ந்து உயிர்த்த வதனமார் மத்தியில் இடையனாக வந்த நாராயணன் விஸ்வரூபம் எடுத்து காட்சியளித்தார். 'வதனமார்களே! இன்றுமுதல் நீங்கள் இறைவனுடன் இணைந்து காவலர்களாக விளங்குவீர்கள். உங்களுக்காக மக்கள் ஆண்டுதோறும் தரும் வேள்விகளையும், மடைகளையும் ஏற்று அவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றுங்கள்'. என நாராயணன் கூறினான் என வதனமார் குறித்த தம்பலகாமம் நாட்டார் கதைகளை அங்கே பல பெரியவர்கள் ஒருவருக்கொருவர் கதைத்துக் கொள்வதையும், இளையவர்களுக்கு அதை சுவாரஸ்யமான கதைகளாகச் சொல்வதையும் நாம் கேட்கக்கூடியதாயும், பார்க்கக் கூடியதாயும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட எங்கள் சிறப்புப் பூசாரியாரால் பூசையில் வைக்கப்பட்ட மான்தோலாலான கயிறு, அல்லது வெளுகயிறு எனப்படும் மந்திரிக்கப்பட்ட கயிறு பன்னிரெண்டு மறிகாரர்களிடமும் கொடுக்கப் பட்டிருந்தது. அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு காட்டிற்குச் சென்று பன்னிரெண்டு குழுமாடுகளை பிடித்து வந்திருந்தார்கள். கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் காட்டிலேயே தங்கியிருந்து பிடிபட்ட குழுமாடுகளுடன் நேற்றைக்கு முன்தினமே ஊரிற்குள் வந்திருந்தார்கள்.

அவர்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த கட்டாடியார், ஊர்பெரியவர்கள், மற்றும் கோணேசர் ஆலயத்தொழும்பாளர்களும் ஒன்றுகூடித் தீர்மானித்து இன்றைய தினம் மடை வைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்கள்.

மடை நிகழ்வுகள் இனிதே ஆரம்பமாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 26

## உறவுகள்

ஒவ்வொரு மனிதனையும் ஒரு பண்பாட்டிற்குரிய குழுவாக ஒன்று சேர்ப்பதில் சடங்குகளே மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றன. சடங்குகள், சம்பிரதாயங்கள் மூலமாகவே ஒவ்வொரு குழுவும் தங்களது தனித்துவத் தையும், அடையாளத்தையும் வெளிப்படுத்த முயல்கின் றன. இது ஆதிகாலம் தொட்டு இன்றுவரை நிகழ்ந்து வரும் ஒரு வாழ்க்கை முறையாகும்.

அன்று குளக்கோட்ட மன்னனால் பணிக்கப்பட்ட சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் நாம் இன்றும் கடைப்பிடித்து வருகிறோம். அதனாலேயே எமது சமுதா யம் தனித்துவமான ஒரு அடையாளத்தைக்கொண்டு திகழ்கிறது. இது குளக்கோட்டன் சமூக நம்பிக்கையாகும்.

ஆண்டுதோறும் ஒரு ஆண்டு பாற்பொங்கல் மடையும், அடுத்த ஆண்டு பழம், பாக்கு, வெற்றிலை என்பவற்றால் மடைவைத்து திருவிளக்கு ஏற்றி, தூபமிட்டு வழிபடுவோமானால் வேளாண்மை பாதிப்படையாமல் இருக்கும் என்பது ஐதீகம். அதோடு இந்த மடையானது வேண்டும்போது மழையை வரவழைக்க அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையை நிறுத்துவதற்காகவும் செய்யப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது.

இன்றைய தினமும் அந்த முழுமையான நம்பிக்கையோடே மடை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பூசைக்கான அனைத்து ஆயத்தங்களையும் செய்து முடித்துவிட்டு பூசையை ஆரம்பிப்பதற்காக அங்கே காத்துக்கொண்டிருக்கிறார் பூசாரி காளிக்குட்டியார்.

ஆதிகோணேசர் கோயிற் பக்கமாக இருந்து ஒரு பெருந்திரளான கூட்டம் ஊர்வலமாக வந்துகொண்டிருந்தது.

அந்த ஊர்வலத்தைப் பார்க்கும்போது அது ஒரு மன்னனின் வரவேற்பு ஊர்வலம் போன்று மேளதாள இசையுடன் பட்டுக்குடை தாங்கிய வண்ணம், கோணேசர் கோயிற் தொழும்பாளர்கள் தலைமையில் வந்துகொண்டிருந்தது. அங்கே பொன்னாலை அடப்பன் காவியம் பாடிக் கொண்டு வர, வைராவியார், தானத்தார், ஏவி அடப்பன், பொன்னாலை அடப்பன் பங்காளர்கள், மறிகாரர்கள் தர்மகத்தா குழு என கோயிற் தொழும்பாளர்களும், ஊர்ப்பிரமுகர்களும் கூடிவர... கோணேசர் கோயிற் கங்காணம் மேற்பார்வை செய்துவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலத்தின் நடுவே மன்னனின் அனைத்து சிறப்புக்களையும் பெற்று தம்பலகாமம் கோணேசர் ஆலயத்திலிருந்து "மடைப்பெட்டி" என்று அழைக்கப்படும் சிறப்புப்பெட்டி எடுத்துவரப்படுகிறது. இந்தப் பெட்டிக்குள் இருக்கும் பொருட்கள் வதனமார் காலத்திற்குரியது என்று கருதப்படுகிறது. அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

ஏனெனில் அப்பெட்டிக்குள் வாள், கேடயம், கண்டக்கோடாலி, கத்தி, பொல், வெளுக்கயிறு போன்ற பொருட்களே காணப்படுகின்றன. இவை வதனமார்கள் மாடுபிடிப்பதற்காகப் பயன்படுத்திய பொருட்களாக இருக்கலாம் என்று ஊர்மக்கள் நம்புகிறார்கள்.

மடைப்பெட்டி ஊர்வலத்தோடு எமது மரகதமும் நடந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

மதியம் இரண்டு மணியைக் கடந்து விட்டதனால் வெய்யிலின் தாக்கம் உக்கிரமாயிருந்தது. கால்களில் பாதணிகள் அணிந்திராததினால் பக்தர்கள் பலர் சூடுதாங்க முடியாமல் சற்று விரைவாக நடக்க முனைந்தார்கள். சிலர் கால்களை தூக்கித் தூக்கி எட்ட வைத்து நடக்க முயன்றார்கள். மரகதமும் தலைப்புச் சேலையை தலையில் போட்டுக்கொண்டு 'கோணேசா... கோணேசா...' என்று கோணேசர் நாமத்தை உச்சரித்துக் கொண்டு பதட்டத்துடன் துள்ளித் துள்ளி நடந்து வந்தாள். அவள் அருகில் நிர்மலா நடந்து வந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கால்களைப் போல் நெஞ்சமும் பதட்டத்துடனேயே இருந்தது.... அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

விட்டுப் போன தனது கணவனின் உறவுகளை மீண்டும் புதுப்பிக்க அவள் வைத்திருந்த துருப்புச் சீட்டை இப்பொழுது பயன்படுத்தும் நேரம் வந்து விட்டதனால் அதனை சரியான வேளையில் நகர்த்துவதற்கான ஆயத்த ங்களைச் செய்திருந்தாள்... அந்தக் காய் நகர்த்தல் எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்ற பதட்டமே அவளுள் காணப்பட்டது.

சுந்தரேசன் தனது மகள் நிலேஜனியை விரும்பு வது அவளுக்குத் தெரிந்ததுதான். அவர்கள் இருவருக் கும் திருமணம் செய்து வைத்தால் விட்டுப் போன உறவுகள் மீண்டும் இணைந்து கொள்ளலாம்.... அதனால் அவள் மகளின் எதிர்காலம் சிறப்பாக அமையும், என்று ஒரு தாய்க்கே உரிய உள்ளத்தோடு அவள் கணக்குப் போட்டிருந்தாள். அதற்கான சரியான சந்தர்ப்பத்தைத்தான் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

அவள் எதிர்பார்த்தது போல் கடந்த திருவிழாவில் அவள் கணவன் கோணாமலையின் தங்கை மற்றும் உறவினர்களை சந்தித்ததில், அவர்களுக்கு அவள்மீதான கோபம் குறைந்திருக்கிறது அல்லது இல்லாமல் போயி ருக்கிறது என்பதை அறிந்துகொண்டாள். அத்தோடு அவள் மாமன் அதாவது கோணாமலையின் தகப்பன் கனகசுந்தரத்திற்குக்கூட தன்மீதுள்ள கோபம் தணிந் துள்ளது என்றும், தன் மகளை அதாவது அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேத்தியை பார்க்க அந்த கிழம் ஆவலாக இருப்பதையும் அவர்கள் மூலமாக அறிந்துகொண்டாள்.

பிறகென்ன பழம் நழுவி பாலில் விழுந்த கதை தானே. அவர்கள் இருவருக்கும் நெருக்கமான சொந்தக் காரர்களைக்கொண்டு பெரியவர் கனகசுந்தரத்திடம் பேசி இவளை சந்திக்கும்படியாகப் பண்ணினாள்... அவர் காலில் விழுந்து அவள் மன்னிப்புக் கேட்டாள்... அவரும், இவ்வளவு நாட்களாக அவர்களை தம் உறவுகளோடு சேர்க்காமல் தள்ளிவைத்ததை எண்ணி மனம் வருந்தினார். அவளும் மனம் வெதும்பி அழுதாள்.

அவரும் கண் கலங்கினார். பேத்தியை அழைத்து வராததற்கு மரகதத்தைக் கடிந்துகொண்டார். பின் அவள் மலைக்கு படிக்கப் போயிருக்கிறாள் என்று அறிந்து சந்தோஷப்பட்டார். மரகதத்தை ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார். அடுத்தமுறை சந்திக்கும்போது பேத்தியுடன் வரவேண்டும் என்று கட்டளையிட்டு அனுப்பி வைத்தார்.

வயதான பின்புதான் பலருக்கு ஞானம் பிறக்கிறது போலும்.

அதன் பின்னர் அரசல் புரசலாக சுந்தரேசன் நிலோஜனிமேல் விருப்பம் கொண்டிருப்பதை அறிந்துக் கொண்ட பார்வதி வீட்டார், சொந்தங்களை பலப்படுத்த இருவரது திருமணமும் நடைபெற்றால் நல்லது எனக் கருதி அதை பெரியவருக்குத் தெரியப்படுத்தி அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதத்தைப் பெறுவதற்கான நேரத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஊரின் நன்மைக்காய் நடக்கவிருக்கும் மடையின் போது தமது வீட்டிலும் நல்லது நடக்கவேண்டும் என்று எண்ணினார்கள். அதனால் மடைக்கு முன்னர் பெரியவ ரிடம் கதைத்து சம்மதம் பெற்றுக்கொண்டு மடையன்று நல்லசேதியோடு வருவதாக பார்வதி கூறியிருந்தாள். அதுதான் மரகதத்திற்கு படபடப் பாயிருந்தது... என்ன செய்தியோடு பார்வதி வருகிறாளோ தெரியாது. வரும் போது மகளையும் அழைத்துவரச் சொல்லியிருந்தார்கள். ஏனென்றால் பெரியவரும் மடைக்கு வருவதாகச் சொல்லியிருந்தாராம்.

அது வேறு மரகதத்திற்கு மனக்கிலேசத்தை ஏற்படுத்தியது. ஏனென்றால் மகள் நிலோஜனியிடம் இவ்விடயத்தை அவள் முன்னமே தெரியப்படுத்தி யிருந்தாள், தன் சொல்லுக்கு அவள் எதிர்ச்சொல்லு சொல்லமாட்டாள் என்றாலும்... பட்டணத்தில் படிப்பவளா யிற்றே அதுதான். இன்று மதியம் பன்னிரெண்டு மணி பஸ்சிற்கு புறப்பட்டு வருவதாகக் கூறியிருந்தாள். இன்னேரம் வீட்டிற்கு வந்திருப்பாள்... வந்தவுடன் சாப்பிட்டு வெளிக்கிட்டுவருமாறும் நேற்றைய தினம் கதைக்கும்போது மகளுக்கு அறிவுறுத்தியிருந்தாள் மரகதம். எனினும் இன்னும் அவளைக் காணாதது சற்று மனதிற்கு கலக்கமாகத்தான் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 27

## நல்வரவு

'புகையிரத நிலையம் தம்பலகாமம்' என்ற பதாகையைக் கடந்து பிரதான கண்டி வீதியிலிருந்து தம்பலகாமப் பட்டிணத்து வீதியூடாகத் திரும்பியது அரச பேருந்து.

பேருந்தின் உள்ளே நடுப்பகுதியில் இரண்டு இருக்கைகளில் எமக்குத் தெரிந்த மூவர் அமர்ந்திருந்தார்கள். இடப்பக்க பின் இரண்டு இருக்கையிலும் நிலோஜனியும், வதனலோஜினியும் அமர்ந்திருக்க அதன் முன் இருக்கையில் பவித்திரா அமர்ந்திருந்தாள்.

'போலிஸ்' நிலையத்தைக் கடந்து இரயில்வே கடவையை அண்மித்தபோது பேருந்து பெரு மூச்சொன்றை விடுத்து நிறுத்திக்கொண்டது. முன்னே ஒரு சில வாகனங்கள் நின்றிருந்தன. புகையிரதக் கடவையின் பாதுகாப்புக் கதவு மூடப்பட்டிருந்தது. பாதுகாப்புமணி ஒலித்து ஓய்ந்திருந்தது. ஒருசில வினாடிகளில் 'சிக்குபுக்கு' 'சிக்குபுக்கு' 'கூ...' என்ற சத்தத்துடன் கறுத்த சரக்கு வண்டி அக்கடவையைக் கடந்து சென்றது. புகையிரதம் முற்றாக கடந்து சென்றாலும் அதன் சத்தம் மட்டும் காதுகளை கடந்து செல்லவில்லை. சிறிது வினாடிகளில் பாதுகாப்புக் கதவு திறக்கப்பட முன்னால் நின்ற வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னங்கள் 'சர்பர்' என்று வேகமெடுத்துச் சென்றது. ஏதோ கோட்டையைப் பிடிக்கப் போவது போன்று. விடுவாரா எமது பேருந்து ஓட்டுனர் கேதீஸ் 'தடார்புடார்' என்று கியரை போட்டு அக்சிலேட்டரை ஏறிமிதித்து பேருந்தை உருட்டிக்கொண்டு சென்றார். இன்று பேருந்தில் கூட்டம் அதிகமாயிருந்ததாலும், அதிலும் பெண்கள் கூட்டம் அதிகமாயிருந்ததாலும் நடத்துனர் கொஞ்சம் குஷியா ய்தான் காணப்பட்டார்.

பலவிதமான சிந்தனைகளுடனும் எண்ண ஓட்டங்களுடனும் யன்னலுக்கு வெளியே பார்வையை ஓடவிட்டிருந்தாள் நிலோஜனி. கண்விழித்திரையில் பிம் பங்கள் மாறிமாறி வந்தும் போயும் கொண்டிருந்ததே ஒழிய அவை எதுவும் கருத்தில் பதியவில்லை அவளு க்கு. எதையுமே தீர்மானமாக அவளால் எண்ணிவிட முடிவில்லை.

ஆனால் அதற்கு எதிர்மாறாக நிலோஜனியின் அருகில் இருந்த வதனலோஜினி 'வளவள' என்று கதைத்துக்கொண்டும் அவளிடம் அவ்விடங்களைப் பற்றி ஏதாவது கேள்விகளைக் கேட்டுக்கொண்டும் வந்தாள்.

அவள் கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லாவிட்டாலும் ஒன்றிரண்டிற்கு ஒரு வார்த்தையில் பதிலளித்துக்கொண்டும், 'ம்' கொட்டிக்கொண்டும் இருந்தாள் நிலோஜனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டுபேரின் சமநிலையற்ற செயற் பாடுகளுக்கு மத்தியில் அமைதியாகவும். சாந்தமாகவும், தெளிவாகவும் பயணித்துக்கொண்டிருந்தாள் பவித்திரா. அவளும் யன்னலுக்கு வெளியே தெரியும் காட்சிகளை யும், இடங்களையும், கண்களால் பிரதி எடுத்து மூளைக்கு அனுப்பிக்கொண்டிருந்தாள்.

தற்பொழுது பேருந்து நாற்சந்திப் பிள்ளையாரை கடந்து சென்றுகொண்டிருந்தது. பேருந்தில் இருந்த சில பக்தர்கள் இருக்கையைவிட்டு எழுந்து தலையில் மூன்று முறை குட்டிக்கொண்டார்கள். அதனைத் தாண்டி சிறிது தூரம் சென்றதும் குஞ்சியப்பு சைக்கிள் திருத்தும் கடை தென்பட்டது.

அந்த சைக்கிள் திருத்தும் கடை சிதிலமடைந்து காணப்பட்டது. அதனருகே 'காங்கேசன் பல்பொருள் அங்காடி' என்ற பெயரோடு கடைத்தொகுதி ஒன்று இருந்தது. ஒருகாலத்தில் அந்த இடமும் பெயரும் பிரசித்திபெற்றிருந்தது. பேருந்து வந்து அதனருகே நின்றுகொள்ள சிலர் இறங்கிக்கொண்டார்கள், வேறு சிலர் ஏறிக்கொண்டார்கள். எமது வாழ்க்கைப் பயணத் திலும் சிலர் வருவார்கள், சிலர் போவார்கள். எவரும் நிரந்தரமாக இருந்துவிடுவதில்லை.., இந்த உண்மை பலருக்குத் தெரிவதில்லை.

"குளக்கோட்டன்ல இறங்கிறவங்க இறங்குங்க..." என்ற நடத்துனரின் குரல்கேட்டு, யன்னலுக்கு வெளியே குத்திட்டு நின்ற அவள் விழிகளைத் திருப்பி இடப்பக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் பதியவிட்டாள் நிலோஜனி. அவள் சாதாரணதரம் வரை படித்த, பல விடயங்களை கற்றுக்கொண்ட அவள் பாடசாலை. "குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயம்" புதுப் பொலிவுடன் காணப்பட்டது.

அப்பாடசாலையின் அதிபர் திரு இலங்கேஸ்வ ரனின் வழிக்காட்டலில் அப்பாடசாலை தரத்தில் ஒருபடி மேலுயர்ந்து நிற்கின்றது, அதற்கு அங்கு கற்பிக்கும் பல நல்ல ஆசிரியர்களும் உறுதுணையாக இருந்து வருகிறார்கள்.

பாடசாலையைப் பார்த்ததும் பழைய ஞாபகங்கள் நினைவலைகளில் வந்து போனது, அவளுக்கு பிடித்த துஷ்சாந்தி ரீச்சர் அவள் கண்முன்னே வந்துபோனார். எனினும் அதனை மீட்டுப்பார்க்க அவள் இப்பொழுது தயாராக இல்லை. மீண்டும் யன்னலுக்கு வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள். மரங்களும், மனிதர்க ளும், கட்டடங்களும், பொருட்களும் அவளை விட்டு ஓடுவது போலிருந்தது. சற்றுநேரத்தில் கூட்டாம்புளி சந்தி வந்தது. அவர்கள் இறங்கவேண்டிய தரிப்பிடம் அது. மூவரும் இறங்கிக்கொண்டார்கள்.

அவர்கள் மேல் புழுதியை வாரி இறைத்துக் கொண்டு முக்கி முக்கி கோவிலடியை நோக்கிப் புறப்பட்டது பேருந்து. கதவின் கைப்பிடியை இறுகப் பற்றிக்கொண்டு எட்டிப்பார்த்துக்கொண்டே போனார் நடத்துனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுக்கொரு பைகளோடு கீழே இறங்கியவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்... மூவரது உதடுகளும் புன்னகைத்துக்கொண்டன. அந்த பஸ்தரிப் பிடக் கட்டடம் வெள்ளைக்காரன் காலத்தில் கட்டியதாயி ருக்கலாம் என்று எண்ணத் தோன்றியது. அதனுள்ளே மாடு ஒன்று படுத்துக் கிடந்தது. சுற்றிவர கோசலமும், கோமேதகமும் பரப்பிக் கிடந்தன. அந்த நறுமணத்தை சுவாசிக்க நிலோஜனியைத் தவிர மற்றைய இருவரும் கஷ்டப்பட்டார்கள்.

வதனலோஜினி ஓரிடத்தில் நிற்காமல் அங்கும் இங்குமாக ஓடினாள். சுற்றிவரத் தெரிந்த பச்சைப்பசேல் என்ற வயல்வெளி அவள் மனதை கட்டிப்போட்டது. காற்றிற்கு அசைந்து ஆடும் நாணல்களோடு அவளும் சேர்ந்து ஆடினாள்.

"அடியேய்.. என்ன அழகா இருக்கு, நான் இங்கையே இருந்திர்ரண்டி..." என்று குதுகலித்தாள் வதனலோஜினி. அத்தோடு நில்லாமல் வயல்காட்டை நோக்கி ஓடினாள்.

"அடியேய் நேரம்போகுது... வா... கோயிலுக்குப் போய் வந்த பிறகு நீ இங்கேயே இருக்கலாம்" என்று வதனலோஜினியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தாள் நிலோஜனி.

பவித்திரா இவற்றைப் பார்த்து சந்தோஷித்துக் கொண்டே சென்றாள். மூவருமாக அங்கே ஸ்ரீ சாரதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர் கி/மு சங்கத்திற்கு முன் நின்ற முச்சக்கர வண்டி ஒன்றில் ஏறி வீடு நோக்கிச் சென்றார்கள்.

செல்லும் வழியெங்கும் அவர்களை தலைசாய்த்து வரவேற்றுக்கொண்டிருந்தன நெற்கதிர்கள். அந்தப் புதிய நெல்லின் வாசம் மூக்கின் வழியாக மூளைக்குச் சென்று மனதில் ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியது. முச்சக்கர வண்டிக்கு வெளியே தலையை நீட்டி அந்த அழகை இரசித்துக்கொண்டு குதுகலமாக வந்தாள் வதனலோ ஜினி. இன்றும் பல புதுமைகள் அவளுக்காக காத்தி ருப்பதை அவள் அறிந்திருக்க நியாயமில்லைத்தான்.

ஆட்டோ ஓட்டுனருக்கு நிலோஜனியை தெரிந்தி ருந்தமையால் அவள் வீட்டு வாசலிலேயே கொண்டுவந்து நிறுத்தினார். கிராமப்புறங்களில் அப்படித்தான் ஊரிலுள்ள அனைவரையும் ஏதோவொரு விதத்தில் ஒவ்வொருவ ருக்கும் தெரிந்திருக்கும். பட்டணத்தில் தான் பக்கத்து வீட்டுக் காரரைக்கூட அயலவருக்குத் தெரிந்திருக்காது.

"இதுதானாடி உன்ட வீடு" என்று கேட்டுக் கொண்டே மூன்றாவதாக இறங்கினாள் பவித்திரா.

"ஓம் அக்கா... இதுதான் நிலோட வீடு..." என்று பதிலுரைத்தாள் வதனலோஜினி. ஏனென்றால் அவள் முன்னொருதடவை இங்கு வந்து போயிருக்கிறாள்.

மூவருமாக படலையைத் திறந்து வீட்டிற்குள் சென்றார்கள். வீட்டு வாசற்கதவு சும்மாதான் மூடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தது. அதனைத் தள்ளித் திறந்துகொண்டு நிலோஜனி உள்ளே சென்றாள்.

"வாங்க அக்கா, உள்ள வாங்க..." என்று பவித்தி ராவை வரவேற்றாள்.

பவித்திராவைத் தொடர்ந்து வதனலோஜினியும் உள்ளே வந்தாள். இருவரும் பைகளை இறக்கி வைத்து விட்டு கீழே அமர்ந்துகொண்டார்கள்.

"அக்கா அம்மா சமைச்சு வச்சிட்டுப் போயிருக் கிறா... சாப்பிட்டு வெளிக்கிடுவமா." என்று அடுக்களையி லிருந்து குரல் கொடுத்தாள் நிலோஜனி. "எனக்கு பசிக்கேல்ல நீங்க சாப்பிடுங்க..." என்றாள் பவித்திரா.

"ஐயோ" எனக்கெண்டா சரியாப் பசிக்குது... நான் சாப்பிட்டுத்தான் வருவன்." என்று வதனலோஜினி அடுக்க ளைக்குள் சென்றாள்.

அம்மா ஆக்கி வைத்திருந்த சோறுகறிகளை தட்டில் போட்டு அவளிடம் கொடுத்தாள் நிலோஜனி. நிலோஜனியின் அம்மாவின் சாப்பாடு என்றால் வதனலோ ஜினிக்கு அவ்வளவு விருப்பம்.

"நீ சாப்பிடு நான் அக்காவப் பார்த்திட்டு வாறன்." என்று விறாந்தைக்கு வந்தாள் நிலோஜனி. அங்கே பவித்திரா கீழே அமர்ந்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா வாங்க உள்ள..." என்று தன் அறைக்குள் கூட்டிச் சென்றாள்.

மிக விசாலமான அறை, செங்கல், மற்றும் சுண்ணாம்பால் கட்டப்பட்ட சுவர்கள். ஒரு ஆள் படுக்கக் கூடிய அளவுக்கு அகலமான சுவர்கள். நிலமட்டத்திலிருந்து மிகவும் உயரத்திலே கூரை அமைக்கப்பட்டிருந்தது. தேக்கு மரத்தாலான பலகையில் செய்யப்பட்ட குறுக்குக் கம்புகளும், வளைகளும் போடப்பட்டிருந்தன. பழைய காலத்து சித்தோடால் கூரை வேயப்பட்டிருந்தது. எந்நேரமும் அந்த வீடு குளுமையாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. மின்விசிறியோ குளிரூட்டியோ எக்காலத்திலும் தேவைப்படாது.

வீட்டின் அமைப்பைப் பார்த்து வியந்து கொண்டிருந்தவளை வினவினாள் நிலோஜனி.

"அக்கா எத்தன மணிக்குப் போறது?"

"இப்பதானே வந்தது... கொஞ்சம் இருந்திட்டு வெளிக்கிடுவமா...? எத்தன மணிக்குப் பூச..."

"அது இப்பவே தொடங்கியிருக்கும் அக்கா... இரவிரவா நடக்கும்... முடிய இரவு பதினொன்று, பன்னெண்டு மணியாகிவிடும். நாங்க கொஞ்சம் லேட்டா போவம்... நீங்க அந்தப் பாய விரிச்சிட்டு கொஞ்சம் சாயுங்க. நான் அவளப் பார்த்திட்டு வாறன்." என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலோஜனி, வதனலோஜினியைப் பார்ப்பதற்காக குசினிக் குள் சென்றாள்.

"என்னடி சாப்பிட்டாச்சா..."

"ம்... நல்ல சாப்பாடு..."

என்று கூறிக்கொண்டே கைகளையும் அலம்பிக் கொண்டு கோப்பையையும் கழுவி வைத்துவிட்டு இரு வரும் வெளியே வந்தார்கள்.

"அடியேய் நான் கொஞ்சநேரம் படுக்கப்போறன் நீ என்ன செய்யப் போறாய்..."

"எனக்கு நித்திர வராது... நான் உங்கட ஏரியாவ சுத்திப்பாத்திட்டு வாறன்..."

"தனியாய் போவியாடி..."

"நான் டவுண்ல பிறந்து வளர்ந்தனான்... என்ன யாரும் ஒண்ணும் செய்ய முடியாது..."

"அடியேய் எங்கட ஊர் ஆக்கள் நல்லவங்க... ஆனா மோசமானவங்க, ரொம்ப கோபக்காரங்க... பார்த்து ஊரச்சுத்திட்டு வா. நான் படுக்கப்போறன்." என்று கூறிக் கொண்டே அறைக்குள் சென்றாள் நிலோஜனி.

வதனலோஜினி குதூகலமாக படலையைத் திறந்து வீதிக்கு வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சர்...' என 'பிரேக்' அடித்து ஒரு துவிச்சக்கர வண்டி அவள் அருகாமையில் வந்து திரும்பியது.

"ஐயோ..." எனப் பயந்து போய் சட்டெனப் பின் வாங்கினாள் வதனலோஜினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 28

# சந்திப்பு

பயத்திலே பின்வாங்கிய வதனலோஜினியின் அருகிலே துவிச்சக்கரவண்டியிலே நின்ற அந்த இளை ஞன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். சற்று ஒல்லி யான, உயரமான, திடகாத்திரமாக அந்த இளைஞனை அவளது நாகரீகமான உடையும், எடுப்பான தோற்றமும், மறைத்து வைக்க முடியாத அழகும் கவர்ந்துவிட்டது என்பதில் ஐயமில்லை.

திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீண்ட வதனலோஜினி இந்த இளைஞன் தன்னை மேலும் கீழும் பார்ப்பதை அறிந்து நாணினாள்... எனினும் அதை வெளிக்காட்டாமல்.

"இப்படித்தான் சைக்கிள்ள வருவீங்களா... பார்த்து வரமாட்டீங்களா...?" என்று ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"நாங்க பார்த்துத்தான் வாறம்... நீங்க வளவுக்க இருந்து வரேக்க பாத்து வரோணும்..." என்று அவன் சற்று கோபமாகக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்க பாத்துத்தான் வாறம்... நீங்க பாத்துப் போங்க" என்று அவள் பதில் கூறிக்கொண்டே அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனது கண்களில் கோபத்திற்குப் பதிலாக குறும்புதான் தெரிந்தது. அவன் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை அறிந்த அவள், நிலோஜனி சொன்னது சரிதான் இந்த ஊர்க்காரங்க ரொம்ப மோசமானவங்கதான் போல என்று எண்ணினாள்.

"என்ன பாக்கிறீங்க...?" என்று குரலைக் கடுமையாக்கிக் கேட்டாள்.

அவன் அதற்கு சட்டென,

"அழகா இருக்கிறீங்களா... அதுதான் பாக்கிறன்..." என்று கூறியது மட்டுமல்லாமல்,

"நீங்க வெளியூர் போல இருக்கு... எங்க இருந்து வாறீங்க...?" என்று கேட்டான்.

"நான் எங்க இருந்து வந்தா உங்களுக்கு என்ன?" என்று அவள் துடுக்காகப் பதில் சொன்னாள்.

"இல்ல...தெரிஞ்சுகொள்ளலாம் எண்டுதான்..." என்று அவன் பணிந்தான்.

"நீங்க ஒண்டும் தெரிஞ்சுகொள்ளத் தேவையில்ல... போங்க" என்று அவள் குரலை உயர்த்தினாள்.

அவன் அவ்விடத்தை விட்டு நகராமல்,

"உங்கட பேர் என்ன" என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் இப்ப உங்களுக்கு என்ட பேர்" என்றாள் பதிலுக்கு அவள்

"சும்மாதான்..." என்றான் அவன்

"சொல்லமுடியாது..." என்றாள் அவள்

"பிளீஸ் சொல்லுங்களேன்..." என்றான் அவன், தற்பொழுது அந்த இளைஞன் அவளிடம் சரணடைந்து விட்டான். அது அவளுக்கு உள்ளூர சந்தோஷமாயிருந்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டாமல் பேசினாள்.

"எல்லோருக்கும் நான் என்ட பேரச் சொல்லுறதில்ல... ஆனாலும் உங்களுக்குச் சொல்லுறன்... வதனலோஜினி" என்றாள்.

"நல்லபேர்..." என்று கூறியவன் சற்றுத் தயங்கித் தயங்கி... "சரிவாறன்" என்று கூறிக்கொண்டு துவிச்சக்கர வண்டியில் ஏறி வேகமாகச் சென்றுவிட்டான். செல்லும் போது இரண்டு மூன்று தடவைகள் அவளை திரும்பிப் பார்த்துச் சென்றான்.

அவன் மீண்டும் மீண்டும் திரும்பி பார்த்துசென்றது அவள் உள்ளத்துள் ஒருவித கிளர்ச்சியை ஏற்படுத்தியது. 'யாரிவன் இந்த ஊர்தானா..., பாக்க நல்லாதான் இருக்கிறான்...' என்று அவள் மனம் அவனை அசைபோட்டது. 'இன்னும் கொஞ்சநேரம் அவனோட கதைச்சிருக்கலாமோ...' என்று அது ஏங்கியது. 'இனி அவனை சந்திக்க முடியுமா,' என்று கவலை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது தலைக்கறுப்பு மறைந்ததும் மெல்ல அடி எடுத்து வைத்து முன்னால் இருக்கும் வளைவால் திரும்பி நடந்தாள்.

ஒரு கிராமத்துக்கே உரிய அத்தனை சிறப்புகளுடனும் காணப்பட்டது அந்தப் பிரதேசம். ஒரு காலத்தில் நாகரீகத்தின் வளர்ச்சியில் இருந்திருக்கிறது என்பதையும் அது பறைசாற்றியது. வீடுகளையும், வளவுகளையும், மாடுகளையும், கோழிகளையும், மரங்களையும், செடிகளையும் பார்த்து இரசித்துக்கொண்டே கொஞ்சத் தூரம் வந்தவள் சைக்கிள் மணி ஒலிகேட்டு திரும்பினாள். அங்கே அந்த இளைஞன் வந்துகொண்டிருந்தான். அவள் அவனைப் பார்த்தும் பாராதது போல் திரும்பிவிட்டாள்.

மீண்டும் ஒருமுறை அவன் அவளருகில் வந்து 'சர்...' என 'பிரேக்' போட்டு நிறுத்தினான்.

அவள் மீண்டும் பயந்தது போல் பின்வாங்கினாள்.

"என்னங்க... எங்க சுத்திக் கொண்டிருக்கிறீங்க..."

"நான் எங்க சுத்தினா உங்களுக்கென்ன..."

"இல்ல புது இடத்தில வழிமாறிப் போயிருவீங்களே அதுதான்..."

"நாங்க ஒண்டும் வழி மாறமாட்டம்... நீங்க போய்ட்டு வாங்க..."

"சரி... சரி எப்ப இனி உங்களப் பாக்கிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்...?"

"தெரியல்ல... உங்களப் பாக்கோணும்..."

"பாப்பம்... பாப்பம்."

"எங்க...?"

"நான் மலைக்கு போயிடுவன்..."

"நீங்க மலையிலையா இருக்கிறீங்க"

"ம்..."

"பச்... எப்ப போறீங்க..."

"இரவைக்கு."

"அதுவரைக்கும்."

"கோயில் திருவழாவுக்கு போறம்."

"நானும் வருவன், கதைப்பீங்களா..?"

"பாப்பம்."

"கட்டாயம் கதைக்கவேணும்." என்று கூறிக் கொண்டே மீண்டும் துவிச்சக்கரவண்டியில் ஏறிச் சென்று மறைந்து விட்டான்.

அவன் போவதைப்பார்த்துக்கொண்டிருந்த வதன லோஜினி, போன பாதையிலேயே திரும்பி நடந்து வந் தாள். எங்கே அவன் தன்னைப் பார்க்க மீண்டும் வருகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனா என்று திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே வந்தாள். ஆனாலும் அவனைக் காணவில்லை. சிறிது நேரத்தில் அவன் நினைவுகள் அவளிடமிருந்து தற்காலிக மாக இல்லாமற் போனது.

வயல் வெளிகளையும், இயற்கை அழகையும் இரசித்துக்கொண்டே வீடு வந்து சேர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தியாயம் 29

## நம்பிக்கை

முப்பெரும் தேவியரும் ஒன்றாகக் காட்சியளித் ததைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியது அவர்கள் மூவரும் நாயன்மார்திடல் வேள்வி வளாகத்தை அடைந்தபோது. அங்கிருந்த அனைவரும் குறைந்த பட்சம் ஒரு தடவையேனும் திருப்பிப் பார்க்கத் தவற வில்லை.

பவித்திராவிற்கு சேலை கட்டிப் பழக்கம் இருந்த தால் அவள் நடையில் எந்த மாற்றமும் தெரியவில்லை. ஆனால் நிலோஜனியும், வதனலோஜினியும் அத்தி பூத்தாற்போல்தான் சேலை கட்டுவதனால், மொறமொறப் பான அந்த சேலை நேர்த்தியாகக் கட்டப்பட்டிருந்தாலும் அவர்களால் தட்டுத்தடுமாறாமல் நடத்துவர முடிய வில்லை. அவர்கள் சேலை கட்டிய அழகைப் பார்க்க அவர்களுக்கே ஆச்சரியமாயிருந்தது.

பார்க்கும் இடமெங்கும் சனக்கூட்டமாகவே இருந் தது, அந்தக் கூட்டத்துள் கலந்து அவர்கள் மூவரும் மறைந்து போனார்கள். இனி அவர்களை இப்போ தைக்கு தேடிக் கண்டுபிடிப்பது கடினம், வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மரகதம் மற்றும் பார்வதி குடும்பத்தார் அமர்ந்தி ருக்கும் பக்கம் செல்வோம்.

அதற்கு முன் மடைப்பெட்டியோடு வந்த மரகத மணி, பார்வதி குடும்பத்தாரை எப்படிச் சந்தித்தாள் என்று பார்த்துவிடுவோம்.

காற்சூடு தாங்க முடியாமல் மடைப்பெட்டி ஊர்வலத்தோடு ஓடி, ஓடி வந்த மரகதம் அதனோடு மடைமேடைக்கு அருகில் வந்து நின்றாள்.

கோவிலிலிருந்து கொண்டுவரப்பட்ட மடைப் பெட்டி ஆதிகோணசர் ஆலய நிர்வாக உறுப்பினர் களாலும், தொழும்பாளர்களாலும் கட்டாடியிடம் ஒப்படைக் கப்பட்டது. அந்த மடைப் பெட்டியானது இதற்கென்று அமைக்கப்பட்ட மடைமேடையில் வைக்கப்பட்டு பூசைகள் ஆரம்பிக்கப்பட்டன. வைதீக விதிகளுக்கு அமைய சரியாக எண்ணப்பட்டு பன்னீராயிரம் வெற்றிலை, பழம், பாக்கு என்பனவும், எண்ணப்படாமல் ஒரு உத்தேசமாக பன்னீராயிரம் வெற்றிலை, பழம், பாக்கு என்பனவும் அங்கே மடையிலே வைக்கப்பட்டிருந்தன.

இராச மேளமும், நட்டுவாங்க மேளமும் முழங்க நாதஸ்வரம் இசைக்க பூசைகள் நடைபெற்று வந்தது.

அவற்றை பக்தியோடு பார்த்துக்கொண்டிருந் தாலும் மரகதத்தின் மனம் அமைதியாக இருக்கவில்லை. ஒருபக்கம் மகள் கோயிலுக்கு இன்னமும் வந்து சேரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்லை என்ற தவிப்பும், மறுபுறம் பெரியவரின் குடும்பத்தைக் காணவில்லை, பார்வதியின் பதில் இன்னமும் வந்து சேரவில்லை என்ற பரிதவிப்பும், கைகள் இரண்டையும் கூப்பியவண்ணம் கோணேசா, கோணேசா என்று உச்சரித்துக்கொண்டே நின்றிருந்தாள்.

அருகிலே "மாமி, மாமி" என்ற குரல் கேட்கத் திரும்பியவள் சுந்திரேசன் நிற்பதைக் கண்டு நிம்மதியடைந்தாள்.

"என்ன மாமி யோசனை..." என்ற சுந்திரேசனின் கேள்விக்கு,

"ஒன்றுமில்ல மருமகன் சும்மாதான்" என்றாள்.

"அம்மாவையும், பெரியய்யாவையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீங்க போல..." என்று புன்னகைத்தான் அவன்.

அவன் கேட்டது போல் அவர்கள் வருகையைத்தான் அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாலும், அப்பொழுது அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் இப்படி பதில் சொல்லிச் சமாளித்தாள்.

"இல்ல மருமகன் இவள் நிலோஜனிய வேளைக்கு வரச்சொன்னனான்... இன்னும் காணேல்ல அதுதான்."

நிலோஜனி வருவாள் என்று அவன் எதிர்பார்த்திருந்தாலும், மரகதம் மாமி அதை உறுதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியது அவனுள் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அன்றைய நாள் அவனது வாழ்நாளில் ஒரு மறக்க முடியாத நாளாக அமையப்போகிறது என்பதை எண்ணி அவன் குதூகலித்தான்.

"பஸ்ல வந்த களைப்பில படுத்திருப்பா மாமி... இனித்தான் வெளிக்கிட்டு வருவா. நீங்க யோசிக்காதீங்க.... வாங்க... அம்மாவும் மற்றவங்களும் வந்து கொண்டிருக்காங்க, வடக்கு வீதிப் பக்கமாத்தான் நிக்கிறெணெண்டவங்க. அங்க போய் இருப்பம்." என்று அவன் மரகத மணியை அழைத்துச்சென்று இருத்திய இடத்திற்கு சொல்லி வைத்தாற்போல் பார்வதி குடும்பம் வந்து சேர்ததுதான் அந்தக்கதை.

இதற்கிடையில் சுந்தரேசனும் மரகதமணியும் வரும் வழியில் கோயில் வளாகத்தில் ஓரிடத்தில் மாணிக்கராசா அண்ணனும், அவர் மனைவியும், மகள் அன்பரசியும் அமர்ந்திருந்து மடைநிகழ்வுகளையும் பூசையையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அன்பரசியின் முகத்தில் கவலைகள் குறைந்து மகிழ்ச்சி ரேகைகள் படர்ந்திருப்பதாகத் தெரிந்தது. சுந்தரேசனின் நினைவுகள் அவளை முழுமையாக ஆக்கிரமித்திருந்தாலும் பிற மகிழ்ச்சியான கொண்டாட்ட நிகழ்வுகளுக்கும் அவள் மனம் இடமளித்திருப்பது தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு நல்ல முன்னேற்றமாக மாணிக்கராசா கருதினார், அவளுக்கும் இது ஒரு மாற்றமாக இருக்கும் என்று எண்ணினார்.

இந்த வேளையில்தான் சுந்தரேசன் அவர்கள் எதிரே வருவது அவருக்கு மனக்கிலேசத்தை உண்டாக்கியது. கடவுளே மகள் அன்பரசி சுந்தரேசனைப் பார்த்துவிடக்கூடாது. கொஞ்சமேனும் மகிழ்ச்சியாக இருக்கும் அவள் சுந்தரேசனைப் பார்த்தால் கவலைகொள்ளத் தொடங்கிவிடுவாளே... அவனும் எங்களைப் பார்த்துவிடக் கூடாது. பார்த்தால் மரியாதை நிமித்தமேனும் ஒருதடவை வந்து கதைத்துவிட்டுத்தான் போவான். அப்பொழுது அன்பரசி அவனைச் சந்திக்க நேரிடும்... அதுவும் தற்போதைய சூழலில் அது அவ்வளவு நல்லதாக அவருக்குப் படவில்லை. அதனால்தான் இறைவனை வேண்டியிருந்தார்.

அவர் வேண்டுதல் தற்காலிகமாக நிறை வேறியிருந்தது. சுந்தரேசன் அவர்கள் அமர்திருப்பதைக் கவனிக்கவில்லை. அவன் மாமி மரகதமணியுடன் கதைத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

மாணிக்கராசா பெருமூச்சு விட்டார்... கூடவே மகளை ஏதேட்சையாகப் பார்ப்பதுபோல் பார்த்துப் புன்னகைத்தார், அவளும் பதிலுக்கு புன்னகைத்தாள். தகப்பன் பார்வை மறுபக்கம் திரும்பியதும் ஓரக்கண்ணால் சுந்தரேசனைப் பார்த்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர்போல் இல்லை அவள் மனது இப்பொழுது... அது பக்குவமடைந்து விட்டது. அவனைப் பார்த்ததும் மனதில் வலி ஏற்படவில்லை மாறாக மகிழ்ச்சியே ஏற்பட்டது. இது ஒன்றும் ஆச்சிரியமல்லத்தான், மனித மனதின் இயல்பே அதுதானே...!

இவர்களைப் பாராது கடந்துவந்த சுந்தரேசன் மடைமேடைக்கு வடக்குபக்கமாக ஓரிடத்தில் மரகத மணியை இருக்கச் செய்துவிட்டுச் சென்ற அந்த இடத்திற்குத்தான் மற்றைய அனைவரும் வந்து சேர்ந்தார்கள்.

இராசமேளம் சத்தமாக ஒலித்துக்கொண்டிருக்க கட்டாடி பயபக்தியுடன் மடைப்பொங்கலை ஆரம்பித்து வைத்தார். பொங்கல்பானை கல் அடுப்பில் வைக்கப்பட்டு அக்கினி வளர்க்கப்பட்டது. பானைநிறைய எருமைப்பால் விடப்பட்டிருந்தது. தொண்டர்கள் சுற்றிவர நின்று அதனைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு ஓரமாக ஒருசில இளைஞர்கள் கைகளை மார்புக்குக் குறுக்காக கட்டியவண்ணமும், ஒருசிலர் அச்சம் நிறைந்த பார்வையோடு அந்த பொங்கல் பானையையும், தீச்சுவாலையையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த இளைஞர்கள் தேவராட்டம் ஆடுபவர்களாக இருக்கவேண்டும். மேற்சட்டை அணியாமல் வேட்டியைக் கட்டிக்கொண்டு சால்வை ஒன்றை போர்த்திக்கொண்டும் நின்றார்கள்.

இந்த தேவராட்டம் அல்லது சாமியாட்டம் எனப்படுவது தொல்குடியினரின் பண்பாட்டில் உருவானவையே. தொல்குடியினரின் வாழ்க்கை மரபுகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடுகளையும் புரிந்துகொள்ள இவை உதவுகின்றன. இந்து மதம் போன்ற இயற்கை மதம் ஒன்றில் பின்பற்றப் படும் ஆசாரங்களுக்கும், சடங்குகளுக்குமான, நோக்கங் களும், நம்பிக்கைகளும் மிகத் தெளிவாக இருந்திருக் கிறது.

சிறுதெய்வ வழிபாட்டு முறையிலேயே இந்த தேவராட்டம் அல்லது சாமியாட்டம் எனப்படும் வெறியா ட்டம் தோற்றம் பெற்றிருக்கிறது.

ஆரம்ப காலங்களிலே மனிதன் இந்த சாமியாட் டத்தை சக்தியை வெளிப்படுத்தவும், நோய்களைத் தீர்க்கவும், வழிபாட்டின் ஒரு கருவியாகப் பயன்படுத்தி வந்திருக்கிறான் என்று வரலாறு கூறுகிறது. கடவுளின் சில நிமிடப் பேச்சாளராக மாறி அருள்வாக்குக் கூறுதல் சாமியாடிகளின் சிறப்பாகப் பார்க்கப்படுகிறது. சாமியா டிகள் நேருக்கு நேர் பதில்கூறும் தெய்வப் பிரதிநிதிக ளாகப் பார்க்கப்படுகிறார்கள்.

இங்கும் சில பிரதிநிதிகள் தெய்வத்தின் கட்டளைக்காக காத்திருக்கிறார்கள் போல் தெரிகிறது.

வாருங்கள் நாம் எமது கதைக்கு ஒரு எதிர் பார்ப்பை ஏற்படுத்தியிருந்த அந்த சந்திப்பு அங்கே நிகழவிருக்கிறது அல்லவா...! அதைப் போய்ப் பார்ப் போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகதம் அங்கே காத்திருக்க சற்றுநேரத்தில் மற்றையவர்கள் அனைவரும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

பெரியவர் கனகசுந்தரம் கைத்தடி ஒன்றை ஊன்றிக்கொண்டு மெதுவாக நடந்துவர ஒருபக்கம் மகள் பார்வதியும், மறுபக்கம் பேத்தி இளவேணியும் அவரை கைத்தாங்கலாக அழைத்து வந்தார்கள். சற்று தொலைவில் வரும்போதே மரகதம் அங்கே நிற்பதைக் கண்டு புன்முறுவலுடன் அருகில் வந்தார்கள். பதிலுக்கு மரகதமும் பெரிதாய்ச் சிரித்து அவர்களை வரவேற்றாள்.

"வாங்க மாமா... வாங்க மதினி... வாடி என் மருமகளே..." என்று வாஞ்சையோடு அழைத்தாள்.

"என்ன மச்சாள் எப்படி இருக்கிறீங்க..." என்றாள் பார்வதி.

"நான் நல்லா இருக்கிறன்." என்று கூறியவள் மாமனாரின் கால்களைத் தொட்டு வணங்கினாள். அவர் அவளை ஆசீர்வதித்தார்.

"எங்க... என்... பேத்தி..." என்று ஒவ்வொரு வார்த்தைகளாக உச்சரித்து விசாரித்தார்.

"அவள் இப்பதான் மாமா மலையில இருந்து வந்தவள், இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடுவாள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்... அவளப் பாத்து எத்தன வருசங்களாயிற்று." என்று பெருமூச்சு விட்டார் கனகசுந்தரம்.

எல்லோரும் சிறிது நேரம் மௌனமானார்கள், பார்வதியே ஆரம்பித்தாள்.

"அப்பா பொங்கலுக்கு பானை வச்சிட்டாங்க, வாங்க போய்ப் பூசையப் பாப்பம். உங்களுக்கும் கன நேரம் நிக்கமுடியாது."

அதற்கு அவர் தலையாட்டினார், எல்லோரும் மடைமேடை நோக்கிச் சென்றார்கள். செல்லும் போது மரகதம் பார்வதியிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"மாமாட்ட கதைச்சீங்களா மதினி."

"ஓம் மச்சாள் கதைச்சனான்."

"மாமா என்ன சொன்னவர்."

"அவரும் எங்க இரண்டு குடும்பமும் ஒண்ணா சேர்ரதத்தான் விரும்பிறார்."

"சுந்தரேசனுக்கு அவள பிடிச்சிருக்கிறதப்பத்தி சொன்னீங்களா."

"சொன்னனான்."

"அதுக்கு என்ன சொன்னவர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் விரும்பினாமட்டும் போதாது... பேத்தி என்ன சொல்லுறாள் எண்டு பாத்திட்டுத்தான் மிச்சத்த யோசிக்க வேணும் எண்டு சொல்லிட்டார்."

மரகதத்திற்கு உள்ளூர சற்று பயம் பிடித்துக் கொண்டது. தன் மகள் தன் சொல்லுக்கு கட்டுப்பட்டவள் தான் என்றாலும்... பட்டணத்துக்குப் போய் படித்தவளா யிற்றே. மேற்கொண்டு அவள் எதுவும் கதைக்கவில்லை. மௌனமாகவே நடந்துவந்து பொங்கல் நடைபெறும் இடத்தை அடைந்தார்கள்.

அங்கே சுந்தரேசன் மும்முரமாக பொங்கல் வேலைகளை கவனித்துக்கொண்டு நின்றான்.

பெரியவர் கனகசுந்தரத்தைக் கண்டதும் ஏனைய ஒருசில ஊர்ப் பிரமுகர்களும், கோயிற் தொழும்பாளர்க ளும் விரைந்து வந்து அவரை வரவேற்று ஒரு கதிரை கொண்டுவரச் சொல்லி ஏற்பாடு செய்து அதில் அமரச் செய்தார்கள். ஒவ்வொருவரும் அவரிடம் நலம் விசாரித்தார்கள். நடைபெறும் மடை நிகழ்வுபற்றி பிரஸ்தா பித்தார்கள். அவரிடம் ஆலோசனை கேட்டார்கள். அவரும் சலிக்காமல் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஐயய்யோ...

என்ன...

நாங்க அந்த மூன்று இளம் பெண்களையும் கூட்டத்துக்குள் தவறவிட்டு நீண்ட நேரம் ஆகிறதே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்களோ தெரிய வில்லையே... ஓடோடி வாருங்கள் இவர்களை விட்டு விட்டு, நாம் போய் அவர்களைப் பார்ப்போம்.

'அரக்கபறக்க' கூட்டத்துள் உள்ளும் புறமுகமாக நுழைந்து, பலரோடு முட்டி மோதி, எம்பிக்குதித்து அவர்களைத் தேடி ஒருவாறு கண்டுபிடித்து விட்டோம்.

ஆனால் நாம் எதிர்பார்த்தது போல அவர்கள் கூட்டத்தில் சிக்கி கஷ்டப்படவில்லை. கூட்டம்தான் அவர்க ளிடம் சிக்கித் தவிக்கிறது போல் தெரிகிறது, வாருங்கள் அவர்கள் அருகில் சென்று பார்ப்போம்.

குச்சி ஐசை வாங்கி சூப்பிக்கொண்டே மூவரும் மடை வைபவம் இடம்பெறும் அந்த சுற்றுவட்டாரத்தையே ஒரு சுற்று சுற்றி வந்துவிட்டார்கள். போகிற வழிகளில் கிடைத்த நொறுக்குத் தீனிகளையெல்லாம் வாங்கி வயிற்றுக்குள் கொட்டிக்கொண்டார்கள்.

நிலோஜனியைத் தெரிந்தவர்கள், அவள் உறவி னர்கள், நண்பர்கள், படித்த நண்பர்கள் எனப் பலர் அவர்களை நிறுத்தி குசலம் விசாரித்தும் அவள் படிப்புப்பற்றி விசாரித்ததுமாயிருந்தார்கள்.அதிலும் வதன லோஜினியைப் பற்றி விசாரிக்காதவர்களே இல்லை.

அத்தோடு பட்டணப் பளபளப்பு வேறு அவர்க ளிடம் ஒட்டிக்கொண்டிருந்ததால் பலர் அவர்களைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருந்தார்கள். அதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியம் வதனலோஜினியுடன் மோதிய அந்தப் பையனும் வந்திருந்தான். அவன் அவள் வருவதை எதிர்பார்த்து வந்திருந்தான் போல்தான் தெரிகிறது. அவளும் அவனை எதிர்பார்த்திருப்பாள் போலிருக்கிறது. அவள் போகுமிட மெல்லாம் அவனும் அவன் நண்பர்களுடன் பின் தொடர்ந்து கொண்டே இருந்தான். அது அவளுக்கு உற்சாகத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அவளது நடவடிக்கைகளில் சிறியதொரு மாற்றத்தை அவதானிக்க முடிந்தது.

அக்கா வழமைபோல் விறைப்பாகவும், எல்லோர் மனதையும் ஆழம் பார்த்துவிடும் ஒரு கூரிய பார்வை யோடும், எதையும் உடனடியாக நம்பிவிடாது ஆராய்ந்து அறியும் புத்தியோடும், எதற்கும் இளகிவிடும் ஒரு மென்மையான மனதோடும் உலவிக் கொண்டிருந்தாள்.

நிலோஜனிதான் ஒருவர் பக்கமும் சாயாமல் இரண்டு பேரிடமும் சரிசமமாகக் கதைத்துக்கொண்டும், தனது ஊரின் பெருமைகளையும், கோயிலின் பெருமைக ளையும், மடைபற்றியும் அதன் வரலாறு பற்றியும் எடுத்துக் கூறிக்கொண்டும் வந்தாள். இருந்தாலும் அவள் மனது நிம்மதியாக இருக்கவில்லை. எதையோ விட்டுவிட்டு இங்கே வந்திருப்பது போல் இருந்தது அவளுக்கு. இன்று, தனது வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கான காய் நகர்த்தல் ஒன்று தனது சம்மதம் இருக்கிறதோ இல்லையோ இடம்பெறப் போகிறது என்பதை அவள் நன்கு அறிந்திருந்தாள். இதில் தனது நன்மையை மட்டும் கருதி அவள் எதுவும் செய்துவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது என்பது அவளுக்குத் தெரியும். அப்பா போன பின்னர் இத்தனை நாட்களும் கண்ணும் கருத்துமாக தன்னை வளர்த்தெடுத்து ஆளாக்கிய தாயின் மனதை அவள் வேதனைப்படுத்த முடியாது. தனக்கென எந்த வொரு சந்தோஷத்தையும் அனுபவிக்காது அவளது மகிழ்ச்சிக்காக பல துன்பங்களை அனுபவித்தும், சகித்துக் கொண்டும் தன்னை படிக்கவைத்து இந்தளவுக்கு கொண்டுவந்துவிட்ட அன்னையின் ஒரேயொரு மகிழ்ச் சியை அவள் இல்லாமற் செய்துவிடமுடியாது. இரண்டு குடும்பங்களையும் ஒன்று சேர்க்க தான் காரணமாயிருக்க வேண்டும் என்று அவள் தாய் எடுத்த பெருமுயற்சிக்கு அவள் ஒருபோதும் தடையாக இருக்க முடியாது. யோசித்தாள்... ஒன்றுக்கு பலதடவைகள் யோசித்து அவளுள் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

அடிக்கடி நிலோஜனி சற்றுகவலையாகக் காண ப்படுவதும், பின் சந்தோஷத்தில் தானாகச் சிரிப்பதுமாக இருப்பதை மற்றைய இருவரும் கவனித்துக் கொண்டு தான் வந்தார்கள். அவர்கள் இருவருக்கும் அவள் பற்றி நன்கு தெரியுமாதலால் அவளுடைய மனநிலையை அவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது. அதனால் இருவரும் அவளை அவளுடைய போக்கிலேயே விட்டுச் சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 30



## சூறி

மடை மேடைக்கு அருகில் பெருந்திரளான மக்கள் அமர்ந்திருந்து மடை நிகழ்வுகளையும், பூசைகளையும் பார்த்து புளகாங்கிதம் அடைந்தும், வணக்கம் செலுத்திக் கொண்டுமிருந்தார்கள். ஒரு சிலர் கூட்டத்திற்கு இடையில் நின்றுகொண்டும், சிலர் அங்குமிங்குமாகத் திரிந்து கொண்டுமிருந்தார்கள்.

நமது முப்பெரும் தேவிகளும் இராசமேள ஒலி கேட்டு மடை மேடைக்கு அருகே வந்து சேர்ந்தார்கள்.

மடை மேடையிலே கும்பம் வைக்கப்பட்டு பூசைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. கட்டாடியார் பத்ததி முறைப்படி பூசைகளை நடாத்திக் கொண்டிருந்தார்.

நிலத்திலே மண்ணிலே வரையப்பட்டிருந்த சூத்திரத்தின் மேல் நீர் தெளித்து, பூச் சொரிந்து, கற்பூரம் கொழுத்தி, பத்திரங்கள் உச்சரித்து, தீபம் காட்டி பூசை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலும் நிறைவுபெற்று பொங்கல்பானையும் மடைமேடைக்கு கொண்டுவரப்பட்டது.

நாம் முன்னர் பார்த்த அந்த இளைஞர்கள் கொஞ் சம் கொஞ்சமாக மடைமேடைக்கு அருகில் முன்னேறிச் சென்றார்கள். கட்டாடி காளிக்குட்டி அவர்கள் அருகில் சென்று ஏதோ மந்திரங்கள் சொல்லி நீர் தெளித்து, அவர்கள் நெற்றியில் திருநீறு பூசிவிட்டார்.

நிலத்திலே வரைந்த அந்த கோலத்திற்கு அருகில் ஒரு பலகையைப் போட்டு அமர்ந்த அந்தக் கட்டாடி தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை வைத்து மீண்டும் பூசைகளை ஆரம்பித்தார்.

இராசமேளம் சத்தமாக அடிக்கப்பட்டது. அனை வரது கவனமும் அங்கேயே குத்திட்டு நின்றது.

திடீரென அந்த இளைஞர் கூட்டத்தில் நின்ற ஒருவன் "கூய்..." எனக் கத்திக்கொண்டு இரு கைகளை யும் தலைக்குமேல் உயர்த்திப் பிடித்த வண்ணம், ஒரு காலை நடனமாடும் வகையில் உயர்த்திக்கொண்டு ஓடோடி வந்து கட்டாடி அருகில் நின்றுகொண்டான். அவனருகில் நின்ற ஒரு சிலர் சற்றுப் பயந்துதான் போனார்கள்.

இந்தச் சத்தத்தைக் கேட்டு எமது பெண்கள் மூவரும் ஆவல் கொண்டு மேலும் அருகே சென்றார்கள். பக்தர்கள் அதிகமாக இருந்ததால் இருப்பதற்கு இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கவில்லை. சுற்றும், முற்றும் பார்த்தார்கள். நிலோஜனி, தனது தாயரும் ஏனைய உறவினர்களும் சற்றுத் தொலைவில் அமர்ந்திருப்பதைக் கண்டு கொண்டாள்.

"வதனா... அங்க அம்மாவும், மற்றையவங்களும் இருக்கிறாங்க.... வாங்க அங்க போய் இருப்பம்." என்று அக்காவையும் அழைத்துக்கொண்டு அவர்கள் அருகில் சென்றாள்.

இம் மூவரும் வருவதை முதலில் கவனித்தவள் இளவேணிதான்.

"அம்மா... அங்க பாருங்க மச்சாள் வாரா..." என்றாள் உற்சாகமாக.

எல்லோரும் ஏக காலத்தில் திரும்பினார்கள்.

மாலை மயங்கிய வேளையில் ஒரு முழுநிலவு நடந்து வருவது போல் நிலோஜனி நடந்து வந்தாள். முழு நிலவின் வதனத்தில் ஒரு கவலைக் கறை படிந்திருப்பது தெரிந்தது.

எல்லோரும் அவளையும் மற்றையவர்களையும் அன்பாக வரவேற்றார்கள்.

"அப்பா உங்கட பேத்தி வந்திருக்கா..." என்று பிளாஸ்டிக் கதிரையில் அமர்ந்திருந்த கனகசுந்தரத்திடம் நிலோஜனியை அழைத்துச் சென்றாள் பார்வதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக் கண்டதும் என்றுமில்லாத ஒரு மகிழ்ச்சி அவர் முகத்தில் படர்ந்தது. கைகளை நீட்டி அவளை அருகே அழைத்தார்.

நிலோஜனி அருகில் சென்று பாதங்களை தொட்டு வணங்கினாள்.

அவர், அவள் தலையில் கைவைத்து ஆசீர்வதித்து, உச்சி முகர்ந்தார்.

"என் பேரனுக்கு ஏத்த ஜோடிதான்" என்று வாய்க்குள் முணுமுணுத்தார்.

அவளை அருகில் அழைத்து அவள் படிப்புப் பற்றியும், தங்கியிருக்கும் இடம் பற்றியும் விசாரித்தார். பின் மற்றைய இருவரையும் கூப்பிட்டு ஆசீர்வதித்து அனுப்பனார். அவர்களும் சந்தோஷமாக வந்து ஓரிடத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

வதனலோஜினிக்கு எதிரே சற்றுத் தொலைவில் அந்த சைக்கிள் பையனும் அவன் தோழர்களும் அமர்ந்திருந்தார்கள்.

இராசமேளத்தோடு உடுக்கைச் சத்தமும் சேர்ந்து கொண்டது. இரண்டுபேர் உடுக்கை அடித்துக்கொண்டு அம்மன் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாடி மந்திர உட்சானங்களை உச்சரித்துக்கொ ண்டிருந்தார். கலைவந்து ஆடுபவர்கள் நான்கைந்து பேர் மடை மேடைக்கு முன் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

ஒருவர் மேல் அம்மன் சாமி வந்திருக்கும் போல... அந்தக் கலையாடியைச் சுற்றி நான்கைந்து இளைஞர்கள் கும்மிப் பாடல் பாடிக்கொண்டிருந்தார்கள். ஒருவர் தாளலயத்துடன் உடுக்கை அடித்துக்கொண்டி ருந்தார். அம்மன் கலை வந்தவர் அதற்கேற்றாற்போல் ஆடிக்கொண்டிருந்தார். அவர் கண்கள் சிவந்திருந்தன..... உடல் விறைப்பாயிருந்தது.... ஒரு கையில் வாளும், மறுகையில் வேப்பம் பத்திரியும் வைத்திருந்தார். இடைக் கிடை 'ஆ... ஆ..." என்று நாக்கை வெளியே நீட்டி கூச்சலிடுவதும், தலையைத் தடவி மஞ்சள் நீர் ஊற்றச் சொல்லி குளிர்ச்சியடைவதுமாக இருந்தார். கண்களை அகலவிரித்து சாமி சுற்றும் முற்றும் பார்த்தது, ஒரு கையை உயர்த்தி பாடலை நிறுத்தச் சொல்லிவிட்டு அங்கும் இங்குமாகப் பார்த்தது.

அருகில் இருந்த எல்லோர் மனதிலும் திகில் குடிகொண்டது. சாமியாரை அழைக்கப்போகிறதோ... என்ன சொல்லப் போகிறதோ என்ற பயமும், எதிர்பார்ப் பும்தான் அதிகரித்திருந்தது.

கையிலே வைத்திருந்த வாளை நிலத்திலே ஊன்றி உடலை வளைத்து, தலையை மட்டும் நிமிர்த்தி சுற்றிவரப் பார்த்தது. திடீரெனப் பார்வை ஓரிடத்தில் குத்திட்டு நின்றது. கையை நீட்டி மரகதமணியை சுட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி அழைத்தது சாமி. அதன் கையில் அணிந்திருந்த சலங்கை "கல கல" என ஆர்ப்பரித்தது.

மரகதத்தை சாமி அழைத்ததை பார்த்த மற்றைய அடியவர்களுக்கு தம்மை அழைக்கவில்லையே என்ற ஏக்கம் இருந்தாலும் மனதில் பயமும் இருக்கத்தான் செய்தது.

மரகதமணியும் மனதில் கிலியுடன் கைகளைக் கூப்பி வணங்கிக்கொண்டு மெதுவாக சாமியாடியின் அருகே சென்றாள்.

கையில் வைத்திருந்த வேப்பிலைத் துளிரைப் பிய்த்து அதில் நீர் ஊற்றிக் கழுவி மரகதமணியின் தலையில் வைத்து அழுத்தி ஆசீர்வதித்த சாமியாடி அவளது கண்களை குறுகுறுவெனப் பார்த்தது.

"என் குஞ்சு... எதையோ நினைச்சு... வருந்தது... எல்லாம் நல்லபடியா நடக்கும்... யோசிக்காத... இண்டைக்கு நீ நினைச்ச காரியம் நல்லபடியா நடக்கும்... ஒவ்வொரு நாளும் எனக்கு... வெள்ளப்பூ... வச்சுக் கும்பிடு... எல்லாம் சரியாகும்..." என்று சாமியாடி தனக்குள் உருக்கொண்டிருக்கும் அம்மனின் பிரதிநிதியாக அவளுக்கு அருள்வாக்குச் சொல்லியது. பின் அவளுக்கு மட்டும் கேட்கக் கூடிய வகையில் ஒரு சில பரிகாரங்களைக் கூறி மீண்டும் வேப்பம் துளிரைக் கொய்து அவள் தலையில் வைத்து ஆசீர்வதித்து அனுப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுக்கத்துடனும், பதட்டத்துடனும் பழைய இடத்திற்கு வந்து நின்றாள் மரகதம். நீண்டநேரமாக அவள் பதட்டம் தணியவில்லை. அவள் சென்றதும் மீண்டும் இவர்கள் பக்கம் பார்வையைத் திருப்பியசாமியாடி அமர்ந்திருந்த கனகசுந்தரத்தைக் கண்டுகொண்டது.

விறுவிறு என சலங்கை சப்திக்க பக்தர்களை விலத்திக்கொண்டு அவர் அருகில் வந்தது சாமி. பின்னாலேயே ஒரு தொண்டன் மஞ்சள் நீர்ச்செம்போடு வந்து கொண்டிருந்தான்.

சாமியாடி தன்னைநோக்கி வருவதை அவதானித்த கனகசுந்தரம் பதட்டத்தில் எழுந்து நிற்கமுயன்று தள்ளாடினார். உடனே அருகில் நின்ற பார்வதி அவரைத் தாங்கிப் பிடித்து இருக்கையில் அமர்த்தினாள்.

மஞ்சள் நீரோடு அருகில் நின்ற தொண்டனை நோக்கி இரு கைகளையும் நீட்டியது சாமி. அவன் செம்பில் இருந்த நீரை கைகளுக்கு ஊற்றினான். பின் சாமி திருநீறு கேட்டது சைகையால். அவன் அருகில் தட்டில் தயாராக வைத்திருந்த திருநீற்றுக் குவளையை எடுத்து நீட்டினான். ஐந்து விரல்களையும் அதற்குள் வைத்து திருநீற்றை அள்ளி எடுத்து அதை சொரிந்து ஆசீர்வதித்தது சாமி. பின் அவருக்கும் அருள் வாக்குச் சொல்லியது.

"உன்ட மனசில... நீண்ட நாளா ஒரு குறை... இருக்கு... அத போக்கிறதுக்கு காலம் கூடி வந்திருக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சுகள சேத்து வச்சா இரண்டு குடும்பமும்... ஒண் ணாச் சேரும்..." என்று கூறிய சாமி வாளை நிலத்தில் ஊன்றிய வண்ணம் அடுத்த பக்கம் திரும்பிச் சென்றது.

பெரியவர் கனகசுந்தரத்திற்கு கடவுளே நேரில் வந்து அருள் கொடுத்தது போல் இருந்தது. அளவில்லா மகிழ்ச்சிப் பிரவாகம் எடுத்தது அவருக்கு.

அவருக்கு மட்டுமல்ல அந்த ஊர் மக்கள் அனை வருக்கும் மகிழ்ச்சியான நாளாகத்தான் அமைந்திருந்தது அன்றைய நாள்.

மூன்று மாதங்களுக்கு மேலாக காத்திருந்து எதிர் பார்த்த இந்தத் திருவிழா இன்று நடைபெற்றுக் கொண்டி ருக்கிறதல்லவா... மடை ஏற்பாட்டில் சிறு தவறு ஏற் பட்டாலோ, அல்லது ஒருதுளி மழை விழுந்தாலோ மடை மீண்டும் புதிதாக வாங்கிய பொருட்களோடு ஆரம்பிக்கப் பட வேண்டும் என்பது தம்பலகாமம் ஐதீகங்களில் ஒன்று.

சுற்றி நிற்கும் அடியவர்கள் அனைவரும் கட்டாடி எனும் பூசகரின் அடுத்தகட்ட நிகழ்வையே உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருந்தார்கள்.

இறக்கிவைத்த பொங்கற்பானை பத்ததி சடங்குக ளுக்கமைய மண்ணில் புதைத்து வைக்கப்பட்டு மீண்டும் வெளியே எடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி வெளியே எடுக்கப்பட்ட பொங்கற் பானையைச் சுற்றி தேவராட்டம் ஆடுபவர்கள் உச்ச உக்கிரத்துடன் கலையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் பிரதான கலையாடி கையில் வைத்திருந்த நாராயணர் சிலையால் பொங்கற் பானையில் கோடு வரைந்தார். ஊர்ப்பெரியவர்களும், ஊர்மக்களும் அதை ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பொங்கற் பானையில் கோடு கீறும் இடத்தைப் பொறுத்து இந்த வருடம் மழை பெய்யுமா இல்லையா என்பதை தீர்மானித்துக்கொள்வார்கள். இது குளக் கோட்டன் காலத்திலிருந்து ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கை.

இதே போல் பச்சைப்பட்டு, சிகப்புப் பட்டு நேர்தல் என்பதும் குளக்கோட்டன் மரபுக்குரிய ஒரு முறையாகக் கருதப்படுகிறது. இன்றும் இவ்வழக்கம் வழக்கிலிருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

தேவராட்டம் ஆடி, வாக்குச் சொல்லி முடிந்து சாமிகள் மலையேறியதும் பூசாரி மடைநிகழ்வின் இறுதிச் சடங்கை நிகழ்த்துவதற்கு ஆரம்பித்தார். நேரமும் ஒன்பது முப்பதைக் கடந்திருந்தது. சில அடியவர்கள் வீடு திரும்பியிருந்தார்கள்... சிலர் அரைத்தூக்கத்தில் நிகழ்வுகளை அவதானித்துக்கொண்டிருந்தார்கள்... எங்கள் பார்வதி குடும்பத்தாரும் புறப்பட ஆயத்தமாகிவிட்டார்கள். பெரியவர் கனகசுந்தரத்தால் இனியும் இருந்து அந்நிகழ்வுகளைப் பார்க்க அவர் உடல் நிலை இடம்கொடுக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மரகதம், நிலோஜனி மற்றும் மற்றைய வர்களிடமும் விடைபெற்றுச் சென்றார்கள்.

"பேத்தி... உன்ன எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... உன்ட படிப்பு முடியட்டும்.... நீதான் என்ட வீட்டு மருமகள்..." என்று நிலோஜனியைப் பார்த்து வாஞ்சையோடு கூறிச் சென்றார் கனகசுந்தரம். அனைவரது உள்ளத்திலும் மகிழ்ச்சி.

ஆனால் நிலோஜனியால் எந்த உணர்வையும் வெளிக்காட்ட முடியவில்லை... ஒப்புக்குப் புன்னகைத்தாள். ஆனாலும் அவளுக்கு ஒன்றுமட்டும் தெரிந்திருந்தது. அவர்கள் அனைவரும் தனது சம்மதத்திற்காகத்தான் காத்திருக்கிறார்கள் என்றும், தான் சம்மதித்தால் தன்னைவிட அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள் என்றும்.

அதைவிட அவளது தாய்க்கு இத்தனை நாளும் ஏற்படாத சந்தோஷமும், நிம்மதியும் அவள் சம்மதிப்பதனால் ஏற்படும் என்பதனால் அவள் மறுப்புத் தெரிவிப்பது பற்றி ஒருக்காலும் சிந்திக்க முடியாது.

மறிகாரர்களால் பிடித்து வரப்பட்ட குழுமாடுகளில் ஒன்று தெரிவுசெய்யப்பட்டு சம்பிரதாயத்திற்காக அதன் காதில் மிகமிகச் சிறிய துண்டு ஒன்று வெட்டி எடுக்கப்பட்டு இதற்கென வைக்கப்பட்டிருந்த நீர்க்குடத்தில் அது இடப்பட்டு பூசாரியால் எடுத்துச் செல்லப்பட்டு வெகுதொலைவில் அதை சொரிந்துவிட்டு வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடை நிகழ்வுகள் சிறப்பாக நிறைவு பெற்ற மனநிறைவோடு அடியவர்களும், ஊர்ப் பெரியவர்களும் நமது மரகதம் குழுவினரும் கோயிலை விட்டு வீடு நோக்கிச் சொன்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அத்தியாயம் 31

# தொடரும்

மன நிறைவுடன் அவளை வழியனுப்பி வைத்தார்கள் மங்களேஸ்வரி அம்மாவும், பவித்திரா அக்காவும்.

அவர்கள் இருவரது கால்களிலும் வீழ்ந்து வணங்கி அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டாள் நிலோஜனி. அவளது கண்கள் கலங்கியிருந்தன.

மங்களேஸ்வரி அம்மா அவளை உச்சிமுகர்ந்தாள்.

"நீ எங்க இருந்தாலும் நல்லா இருக்கவேணும்... உன்ட நல்ல மனசுக்கு நீ நல்லா வாழுவாய்... எப்பவும் போல அம்மாட சொல்லக்கேட்டு நல்லபிள்ளையாய் இரு. என்று அறிவுறுத்தினாள்.

அருகிலிருந்த பவித்திராவின் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது. நிலோஜனியை ஆரத் தழுவிக் கொண்டாள். தனது கண்களிலிருந்து கன்னம் வழியே வழிந்த கண்ணீரை விரல்களால் அழுத்தித் துடைத்துக் கொண்டு சட்டெனப் புன்னகை பூத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவ்வளவு நாளா எனக்கு ஒரு தங்கச்சிபோல நீ இருந்து எல்லாம் செய்தாய்... இனி பழைய படி நான் தனியாளாகிட்டன்." என்று நிறுத்திக்கொண்டவள் தொடர்ந்தாள்.

"நாம நினைச்ச மாதிரி வாழ்க்க ஒரு போதும் அமையிறதில்ல, அமையிற வாழ்க்கைய எமக்கு ஏத்த மாதிரி மாத்த பழகிக்கொள்ளவேணும்... உனக்கு ஒரு நல்ல வாழ்க்க காத்திருக்கு, இன்னும் நீ நிறையப் படிக்கவேணும்... எங்கள நீ மறந்திறாத... 'டவுணுக்கு' வாரநேரம் எங்களையும் வந்து பாத்திட்டு போ..." என்று கட்டளையிட்டாள்.

நிலோஜனி எதுவும் பேசுவதற்கு வார்த்தைகள் வராதவளாய் மௌனமாக நின்றாள். அவள் தாய் மரகதம் விடைபெற்று வாசல் வரை சென்று காத்திருந்தாள். ஒருவாறு பிரிவுத்துயரை புறந்தள்ளி அவர்களிடம் விடைபெற்று திரும்பி நடந்தவளை வழிமறித்தது பிரவுணி.

அந்த நன்றியுள்ள ஜீவன் அவள் போவதை உணர்ந்துகொண்டது. அவளை ஒரு அடி எடுத்துவைக்க விடாமல் காலைக் காலைச் சுற்றி வட்டமிட்டது. அவள் இடுப்புக்கு மேல் தன் முன்னங்கால்களை உயர்த்தி விறாண்டியது... 'வள்வள்' எனக் குரைத்தது. 'ஊ...' என அழுதது. அதன் கண்களின் ஓரங்களும் நனைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் போய்ட்டு வாறன்டா... அழாத... அடிக்கடி உன்ன வந்து பாக்கிறன் என்ன..." என்று அதனிடம் விடைபெற்று விறுவிறு என வெளியே வந்து கதவை விரைவாக சாத்தி கொழுக்கியைப் போட்டுவிட்டு வீதிக்கு இறங்கினாள் நிலோஜனி, அது முன்னங்கால்கள் இரண்டையும் உயர்த்தி இரும்புக் கதவில் ஊன்றி நின்றுகொண்டு தலையை வெளியே நீட்டி அவளைப் பார்த்துக் குரைத்தது.

அவள் திரும்பிப் பார்காமல் "தெக்ஷிண கான சபா" தாண்டி வித்தியாலயம் வீதியின் வலப்பக்கமாக திரும்பினாள். தாய் மரகதம் முன்னே சென்று கொண்டிருந்தாள். ஒரு கையில் சிகப்புப் பிளாஸ்டிக் கூடையையும் மறுகையில் 'சூட்கேஸ்' பெட்டியையும் காவிக்கொண்டு. பிரபல தனியார் வைத்தியசாலையைக் கடந்து காளி கோயில் கல்யாண மண்டபத்தை அடைந்தார்கள் இருவரும்.

மண்டபத்தின் கிழக்கு வாசலுக்கு அருகில் இருந்த தண்ணீர் குழாயில் நீர் சொட்டுச் சொட்டாக விழுந்துகொண்டிருந்தது. நிலோஜனி அதனைக் கவனி யாது தொடர்ந்து நடந்தாள்.

மரகதமணி சற்று முன்னே காளி கோயிலின் பிரதான வாயிலின் முன் நின்று வணங்கிக்கொண்டி ருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டரை வருடங்களுக்கு மேலாக தனது வாழ்கையின் முக்கிய காலகட்டத்தை வாழ்ந்து கழித்த இந்த ஊரை விட்டுச் செல்வதும், அவளது இன்பதுன்ப ங்களை பகிர்ந்துகொண்ட நண்பர்கள், சொந்தங்கள், நலன்விரும்பிகள் என அனைவரையும் விட்டுச் செல்வ தும், தனக்கு வாழ்க்கையை வாழக் கற்றுத்தந்த இந்த இடங்களைவிட்டுச் செல்வதும் அவள் மனதிற்கு வேத னையைக் கொடுத்தது.

காளி கோயிலின் இராஜ கோபுரத்தை அண் மிக்கையில் அவளது கண்களில் நீர் முட்டியது.

புதுப் பொலிவுடன் பிரமாண்டமாக உயர்ந்து நின்றது இராஜகோபுரம். அதன் உச்சியில் ஐம்பொன்னால் செய்யப்பட்ட ஏழு கலசங்கள் கிழக்குச் சூரியனின் ஒளிபட்டு மின்னின. ஒவ்வொரு பக்கமும் வடிவமைக்கப் பட்ட வெவ்வேறு சிலைகளுக்கு வெவ்வேறு வர்ணங்கள் பூசப்பட்டு அவை பார்ப்பதற்கு தத்ரூபமாகவும், அழகாக வும் காட்சியளித்தன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு கதைகளை கூறி நின்றன.

இவை எதையும் கவனத்திற்கொள்ளும் மனநிலை யில் அவள் இல்லை. மனதில் கொண்ட வேதனையால் புத்தி மழுங்கி, சிந்திக்கும் திறன் குறைந்து செயல்கள் ஒழுங்கின்றிப் போனதில், பாதை மாறிப் பயணித்து எதிரே வந்த ஒருவருடன் மோதிக்கொண்டாள். மோதியதில் இவள் கையில் வைத்திருந்த புத்தகப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே விழுந்தது. அதனுள்ளிருந்து ஒருசில புத்தகங்கள் மண்ணிலும் வீழ்ந்துவிட்டது.

எதிரே இவளோடு மோதுண்டவள் சட்டெனக் குனிந்து அந்தப் புத்தகப்பையை தானும் ஒருகையால் பற்றி எடுத்துக்கொண்டாள். பின் நிமிர்ந்து இவளைப் பார்த்து புன்னகைத்தாள்.

"மன்னிச்சிடுங்க, தெரியாம இடிச்சிட்டன்..." என்று மன்னிப்புக் கோரினாள்.

நிலோஜனி பதிலேதும் சொல்லாமல் மெல்லிய புன்னகை ஒன்றை உதிர்த்துக்கொண்டு புத்தகங்களை வாங்கி புத்தகப் பையினுள் திணித்துக்கொண்டே அவளைக் கடந்து வந்தாள். இவள் கண்களில் சோகம் நிரம்பியிருந்ததை அந்தப் பெண் உணர்ந்திருக்கக்கூடும்.

காளி ஆச்சியின் பிரதான வாயிலைக் கடந்து பிள்ளையார் வாசலை அடைந்த அவளும் தாயும் பிள்ளையாரை வணங்கித் திரும்புகையில், தம்பலகாமம் செல்லும் அரச பேருந்து ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தின் முன் வந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி

இலங்கையில் முதன் முதல் மெல்லிசைப் பாடல் இசைத்தட்டை வெளியிட்டவர்கள் திருக்கோணமலையைச் சேர்ந்த பரமேஸ், கோணேஸ் ஆகியோரே. இப்படிப் பல பெருமைகளை சொல்லிக்கொண்டே போகலாம்.

வ.அ.இராசரத்தினம், பாலேஸ்வரி, அருள் சுப்பிரமணியம், கேணிப்பித்தன் ச.அருளானந்தம் என திருக்கோணமலையின் நாவல் இலக்கிய கர்த்தாக்களை நீண்ட பட்டியலாகத் தரமுடியும்.

கல்கியின் சரித்திர நாவல்களை வாசித்து இரசித்து கிட்டத் தட்ட அதேபாணியில் நாவல் இலக்கியம் படைக்க முன்வந்துள் ளார் திரு.இ.அசோக்.

திருமலை இ.மதன் என்ற புனை பெயரில் "பாதை மாறிய பயணங்கள்", "கூ.... கூ.... காகம்" ஆகிய தலைப்புக்களில் இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்ட இவர், இந்த நூல் மூலம் நாவலாசிரியராக அறிமுகமாகிறார்.

நல்லபொருத்தமான எழுத்து நடை. குழப்பம் இல்லாமல் சீராகச் செல்லும் கதை. நல்ல வகையில் வடிக்கப்பட்ட பாத்திரங் கள். சமூகத்துக்கான புத்தி சொல்லல்கள். என நல்ல ஒரு மண் வாசனை யதார்த்த நாவலைப் படைத்த திருமலை. இ.மதன் அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள் பாராட்டுக்கள்.

**கலாநிதி.தமிழ்மணி அகளங்கன்.**

ISBN 978-955-53160-1-9
9 789555 316019
SS DIGITALS - Trinco - 0777 695 635

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org